இலங்கை:
மனித உரிமைகள் நிலை
2002

THE LIBRARY
343.4 (058)
LST
L.S.T.

சட்டத்துக்கும் சமூகத்துக்குமான அறநிலையம்

006415
CLASS NO: 343.4 (058)
ACC. NO 6415

இலங்கை:
மனித உரிமைகள் நிலை 2002

இலங்கை:
மனித உரிமைகள் நிலை
2002

2001 ஆம் ஆண்டு தை - மார்கழி
வரையுள்ள காலப்பகுதியை இவ்வறிக்கை
உள்ளடக்குகின்றது.

சட்டத்துக்கும் சமூகத்துக்குமான அறநிலையம்
3, கின்சி ரெறஸ்
கொழும்பு - 8
இலங்கை

© சட்டத்துக்கும் சமூகத்துக்குமான அறநிலையம்

ஐப்பசி 2002

ISBN 955-9062-82-4

பொருளடக்கம்

விடயங்கள் சமர்ப்பித்தோர் *viii*

முன்னுரை *x*

I சுருக்க நோக்கு **1**

1. அறிமுகம் 1
2. யுத்தம் 2
3. தேர்தல் வன்முறை 4
4. சிறுவர் உரிமைகள் 8
5. சித்திரவதையும் ஒருதலைப்பட்சமான தடுத்துவைப்பும் 11
6. பெண்களின் உரிமைகள் 14
7. பேச்சுச் சுதந்திரம் 16
8. உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் 18
9. மனித உரிமைகள் ஆணைக்குழு 22
10. மனித உரிமைகளைப் பாதுகாத்தல் 23
11. சர்வதேச மனித உரிமைக் கடப்பாடுகள் 23

II இலங்கையின் அரசியலமைப்பிற்கான 17 ஆவது திருத்தம் **26**

1. அறிமுகம் 26
2. திருத்தத்திற்கான பின்னணி 27
3. 17 ஆவது திருத்தம் மீதான மேல் நீதிமன்றத்தின் தீர்மானம் 31
4. 17 ஆவது திருத்தத்தின் முனைப்பான அம்சங்களும், ஆணைக்குழுக்களின் அதிகாரங்களும் 34
5. சுதந்திர ஆனைக்குழுக்கள் 44
6. 17 ஆவது திருத்தமும் வடக்குக் கிழக்கு பிணக்கும் 56
7. முடிவுரை 58

III 2001 இல் நீதித்துறை **60**

1. அறிமுகம் 60
2. பிரதம நீதியரசரின் நியமனத்தை எதிர்த்தல் 61
3. பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை 64
4. நிலையியற் கட்டளை 78(A) இன் அரசியலமைப்புத் தகைமை 67

5. நீதிபதிகளும் பக்கச்சார்பும் 69
6. சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் அறிக்கை 76
7. நீதித்துறை உறுப்பினர் ஒருவருக்கெதிரான குற்றச்சாட்டு 79
8. அரசியலமைப்பிற்கான 17 ஆவது திருத்தம் 80
9. முடிவுரை 80

IV சமூக, பொருளாதார உரிமைகள் மற்றும் நிலைபேண் அபிவிருத்தியின் மீதான மின்சார நெருக்கடியின் தாக்கம் 82
1. அறிமுகம் 82
2. சமூக, பொருளாதார உரிமைகளும் நிலைபேண் அபிவிருத்தியும் 86
3. மின்சார நெருக்கடி 93
4. சமூக, பொருளாதார உரிமைகளின் மீது மின்வலு நெருக்கடியின் தாக்கம் 101
5. ஆட்சியியலும் மின்சாரத்துறை ஒழுங்குபடுத்தலும் 105
6. முடிவுரையும் பரிந்துரைகளும் 122

V மனித உரிமைகளின் நீதிமுறைப் பாதுகாப்பு 128
1. அறிமுகம் 128
2. உறுப்புரைகள் 11, 13(1), 13(2) இன் கீழான வழக்குகள் 129
3. உறுப்புரை 12 இன் கீழான வழக்குகள் 133
4. உறுப்புரை 14 இன் கீழான வழக்குகள் 139
5. நிர்வாக /நிறைவேற்றுச் செயற்பாடு 149
6. பிரதம நீதியரசருக்கு எதிரான மனுக்கள் 151
7. நிவாரணம் 156
8. முடிவுரை 159

VI இலங்கையின் பொதுச் சேவை 161
1. ஆறிமுகம் 161
2. சேவையின் வரலாற்றுப் பரிமாணம், அமைப்பு மற்றும் அதன் அரசியல் மயமாக்கம் 162
3. 2001 ஆம் ஆண்டில் சேவையின் நிலை 165
4. பொதுச் சேவையினைச் சீர்திருத்தும் முயற்சிகள் 171
5. சீர்திருத்தத்தின் விளைவுகள் 172

6. பொதுத்துறைச் சேவையினால் ஏற்படுத்தப்பட்ட துஷ்பிரயோகங்களும் பொதுத்துறைச் சேவையின் துஷ்பிரயோகங்களும் 173
7. பொதுத்துறை ஊழியர்களின் வகைசொல்நிலைமை 176
8. நீதித்துறை மீளாய்வும் பொதுத்துறைச் சேவையும் 179
9. அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தம் 181
10. முடிவுரை 183

அட்டவணை I: இலங்கையினால் பின்னுறுதிப்படுத்தப்பட்ட மனித உரிமைச் சாதனங்கள் (மார்கழி 2001) 187

அட்டவணை II: இலங்கையினால் பின்னுறுதிப்படுத்தப்படாத சில மனித உரிமைச் சாதனங்கள் 195

அட்டவணை III: 2001 இல் தீர்மானிக்கப்பட்ட அடிப்படை உரிமை வழக்குகள் 197

வழக்குகளின் அட்டவணை 200

உசாத்துணைகள் 204

விடயங்கள் சமர்ப்பித்தோர்

- **சுருக்க நோக்கு**
  ராதிகா குமாரசுவாமி
  சவுந்தரி டேவிட

- **இலங்கையின் அரசியலமைப்புக்கான 17 ஆவது திருத்தம்**
  ருக்ஷான நாணயக்கார

- **2001 இல் நீதித்துறை**
  ஷிராந்தி ஜயதிலக்க

- **சமூக, பொருளாதார உரிமைகள் மற்றும் நிலைபேண் அபிவிருத்தி மீதான மின்சக்தி நெருக்கடியின் தாக்கம்**
  சொனாலி ஆர். தயாரெட்ன

- **மனித உரிமைகளின் நீதிசார் பாதுகாப்பு**
  சுமுது அத்தபத்து

- **இலங்கையின் பொதுச்சேவை**
  எம். சி. எம். இக்பால்

ஒருங்கிணைப்பாளர்
ஷிராந்தி ஜயதிலக்க

பதிப்பு
சுமுது அத்தபத்து

நிர்வாகி
டமாறிஸ் விக்கிரமசேகர

ஒப்பு நோக்குனர்கள்
ஹரன்ய விக்கிரமசேகர, ஷிராந்தி ஜயதிலக்க, பிரியதர்ஷினி தங்கராஜா, சுரேன் பெர்னாண்டோ, தினேஷா சமரரெட்ண.

மூலாதார உதவி

சுமுது அத்தபத்து. ஜானகி தர்மசேன, அச்சலா பெர்னாண்டோ. டில்கர பத்திரண, கல்யாணி திருச்செல்வம். பிரியதர்ஷினி தங்கராஜா, சுரேன் பெர்னாண்டோ. தினேஷா சமரரெட்ண. பிரசன்ன கஜவீர. மிகிரி சிறிமானே, சுயேந்திரா விக்கிரமசேகர.

கட்டுரைகள் மீள்பார்வை

சுமுது அத்தப்பத்து. ரமணி முத்தேத்துவெவகம. ஆர்.கே.டபிள்யூ. குணசேகர. தீபிகா உடகம. மாலதி நைற்-ஜோன். நீதிபதி ஏ.ஆர்.பி. அமரசிங்க. கலாநிதி பி.எஸ். விஜேவீர.

அட்டை

சுமங்கலி அத்துலுகம

அச்சுப்பதிவு

யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட்

முன்னுரை

இவ்வறிக்கை இலங்கையில் மனித உரிமைகளின் நடைமுறை நிலைமையை விளக்குவாக இருப்பதுடன் இலங்கை தனது பிரசைகளின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான கடமைகளை நிறைவு செய்வதில் சர்வதேசக் கடப்பாடுகளுடன் எந்தளவுக்கு இணங்கிச் சென்றுள்ளது என்பதையும் மதிப்பிடுகின்றது. எனவே இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பாக சில முக்கிய அம்சங்களை இவ்வறிக்கை வெளிப்படுத்துகின்றது. அரசியலமைப்புரீதியான உத்தரவாதங்கள், சட்டவாக்கங்கள், அடிப்படை உரிமைகளின் செயற்பாடு, நடைமுறையில் அவற்றின் அமுலாக்கம் பற்றிப் பரிசீலனை செய்யப்படுவதுடன் அவைகள் கொண்டுள்ள வரையறைகளின் தாக்கங்களும் ஆராயப்படுகின்றன. இவ்வறிக்கையில் அரசியலமைப்புக்கான 17 ஆவது திருத்தம், 2001 இல் நீதிமுறை, சமூக, பொருளாதார உரிமைகள் மற்றும் நிலைபேண் அபிவிருத்தி தொடர்பாக மின்சார நெருக்கடியின் தாக்கம், மனித உரிமைகளின் நீதிமுறைப் பாதுகாப்பு மற்றும் இலங்கையில் பொதுச்சேவை போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்வறிக்கையின் உருவாக்கம் சட்டத்துக்கும், சமூகத்துக்குமான அறநிலையத்தினாலேயே ஒருங்கிணைக்கப்பட்டது. பொருத்தமான விடயங்களில் விசேட தகைமைகளைக் கொண்ட தனிநபர்களுக்குத் தனித்தனி அத்தியாயங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து அவற்றின் செம்மை, நோக்கு, விடயத் தெளிவு என்பவற்றைப் பரிசீலிப்பதற்காக மீள்பார்வை செய்யப்பட்டது. அதன் பின்னள் முடிந்தளவுக்கு அணுகுமுறையிலும், மொழி நடைமுறையிலும் ஒரே சீரான போக்கு அமைய வேண்டுமென்பதைக் கருத்திற் கொண்டு வரைவுகள் ஒன்று சேர்க்கப்பட்டு விரிவாகத் திருத்தம் செய்யப்பட்டன. எனினும், அத்தியாயங்களுக்கிடையில் கூறியது கூறலும், சில தலைப்புக்கள் ஏனைய தலைப்புக்களை விட விரிவாக ஆராயப்பட்டுமிருப்பது தவிர்க்க முடியாதது. மேலும் இலங்கை ஒப்பந்ததாரியாக விளங்கும் சர்வதேச மனித உரிமைகள் சமவாயங்களின் பட்டியலொன்றும், இலங்கையினால் பின்னுறுதிப்படுத்தப்படவிருக்கின்ற சாதனங்களின் பட்டியலொன்றும் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. 2001 இல் உயர் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமை வழக்குகளின் பட்டியலொன்றும் இவ்வறிக்கையில் ஓர் அட்டவணையாக இணைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமைகளைப் பயனுறுதிவாய்ந்த முறையில் பாதுகாப்பதையும், மேம்படுத்துவதையும் உறுதிப்படுத்துவதற்கு இவ்வறிக்கை குடியியல் சமூக நிறுவனங்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் தொடர்ச்சியானதொரு கருத்துப் பரிமாற்றத்துக்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கலாம்.

"அரசாங்கத்தின் எல்லா அமைப்புக்களும். அரசியல் அமைப்பில் பிரகடனம் செய்யப்பட்டும், அங்கீகரிக்கப்பட்டும் உள்ள அடிப்படை உரிமைகளை மதித்தும், பாதுகாத்தும் முன்னெடுக்கும்" என இலங்கை அரசியலமைப்பு ஆணையிடுகின்றது. இலங்கை பல சர்வதேச மனிதவுரிமைச் சமவாயங்களின் ஒப்பந்ததாரியாக இருப்பதுடன் அதனது உள்நாட்டுச் சட்டங்களும். கொள்கைகளும், செயற்பாடுகளும் அதனது சர்வதேசக் கடப்பாடுகளை உறுதி செய்வதாகவும் இருக்க வேண்டும். இவ்வறிக்கை (இவ்வறிக்கையில் உண்மையான பரிசீலனைக்கு உட்பட்டுள்ள அரசுசார்பற்ற பங்காளிகளும்) மனித உரிமைகளை மதித்தும், பாதுகாத்தும் நடப்பதற்கான தமது சர்வதேச மற்றும் அரசியலமைப்பின் கடப்பாடுகளை உயர்வாகப் பேணி நடப்பதை அரசு உறுதி செய்யும் தொடர்ச்சியான போராட்டத்தில் ஒரு பணிவுடைமையான நடவடிக்கையே.

சட்டத்துக்கும் சமூகத்துக்குமான அறநிலையம்
கொழும்பு
ஐப்பசி 2002

I

சுருக்க நோக்கு

ராதிகா குமாரசுவாமி *
சவுந்தரி டேவிட் **

1. அறிமுகம்

இலங்கை இராணுவப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் (LTTE) இடையில் மீண்டும் ஆரம்பித்த சண்டைகளும், கொழும்பில் நீண்டகாலமாக இருந்துவந்த அக முரண்பாடுகளும் கொலைகள், காணாமற் போதல், சித்திரவதை, சிறுவர்களை இராணுவத்தில் சேர்த்தல், பாரபட்சமற்ற முறையிலான விமானத் தாக்குதலும் எறிகணை வீச்சுக்களும் உள்ளிட்ட ஒட்டுமொத்தமான மனித உரிமை மீறல் சூழ்நிலையை உருவாக்கியது. இது ஏனைய அபிவிருத்திகளையும் பாதித்ததுடன் மிக மோசமான துஷ்பிரயோகங்களையும் உருவாக்கியது.

வடக்கின் யுத்தம் மனித உயிர்களைத் தொடர்ச்சியாகப் பலிகொண்டதுடன் உள்நாட்டில் புலம்பெயர்ந்த மக்களை ஆயிரக்கணக்கில் உருவாக்கியது. வடக்கிலும் கிழக்கிலும் மேற்கொள்ளப்பட்ட கட்டுப்பாடுகளினால் இடம்பெயர்ந்தவர்களில் பெரும்பாலானோர் பாடசாலை செல்லவோ அல்லது அவசர மருத்துவ சேவைகளைப் பெறவோ, வாழ்க்கைச் செலவுக்காக

---

* பெண்களுக்கெதிரான வன்முறை பற்றிய ஐக்கிய நாடுகள் சிறப்பு அறிக்கையாளர், பணிப்பாளர், இனத்துவ ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையம், கொழும்பு.

** ஆய்வாளர், இனத்துவ ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையம், கொழும்பு.

வேலையிடங்களுக்குச் செல்லவோ முடியாதிருந்தது. எல்.ரி.ரி.ஈ. யுடன் தொடர்புகள் இருக்கின்றது என்னும் சந்தேகத்தின் பேரில் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தன்னிச்சையான கைதுகள் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இடம்பெற்றன. கொடுமையான பாதுகாப்புச் சட்டங்கள், தன்னிச்சையாகக் கைதுசெய்யவும், விசாரணையின்றி சந்தேக நபர்களை நீண்ட காலத்திற்குத் தடுத்து வைக்கவும் தொடர்ந்தும் ஊக்குவித்து வந்தன.[1] மார்கழி பாராளுமன்றத் தேர்தல் நாளன்றும் அதற்கு முன்னரும் பரந்தளவான வன்முறைகள் இடம்பெற்றன.[2]

ஒக்டோபர் 10 ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னுள்ள நாட்களிலிருந்து நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்து முடியும் வரையுள்ள காலத்தில் இலங்கையின் அரசியல் நிலைமைகளில் பல மாற்றங்களைக் காணக்கூடியதாக இருந்தது. இச்சந்தர்ப்பத்தில் பல்வேறு நபர்கள் தமக்கொரு இடத்தைப் பெறுவதற்காக புதிய அரசியல் தொடர்புகளையும் கூட்டணிகளையும் ஏற்படுத்திக் கொண்டனர். இதன் விளைவாக தேர்தலுக்குப் பிற்பட்ட காலப்பகுதி சிக்கல்களை எதிர்நோக்கியது.

ஆட்சியியலில் ஒரு நெருக்கடி இருப்பது தெளிவாகத் தெரிந்ததுடன் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும், குறிப்பாக, ஆடி 24 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் மீதான தாக்குதலுக்குப் பின்னர் இயல்பு நிலைக்கு வந்து கொண்டிருக்கும், ஏலவே நலிவுற்ற நிலையில் காணப்பட்ட பொருளாதாரம் உட்பட சகல வாழ்க்கை அம்சங்களும் பாதிப்புக்குள்ளாகின. துணை இராணுவ மற்றும் விழிப்புக் குழுக்களின் நடவடிக்கைகளும் பெருமளவு அதிகரித்திருந்தன. மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பானவர்களை நீதியின் முன் கொண்டு வருவதில் ஏற்பட்ட தோல்வியே இவ்வருடத்தின் மிக முக்கிய அக்கறை கொள்ள வேண்டிய ஒரு விடயமாக இருந்தது.

2. யுத்தம்

வருடத்தின் ஆரம்பத்தில் எல். ரி. ரி. ஈ. யினால் யுத்த நிறுத்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. ஆனால் 2001 சித்திரை 24 இல் எல். ரி. ரி. ஈ. தலைமைப் பீடமானது நான்கு மாதமாக நீடித்த பழைய யுத்த நிறுத்தத்தினை ஒருதலைப்பட்சமாகத் தொடர்ந்தும் நீடிக்கப்படமாட்டாதெனப் பிரகடனம் செய்தது.[3] இதனைத் தொடர்ந்து இலங்கை இராணுவம் யாழ்ப்பாணக்

---

1 Human Rights Watch World Report 2002, www.hrw.org/wr2k2/asia10.html, 20.06.2002 இல் அடையப்பட்டது.

2 பார்க்க. CMEV 2001 பொதுத்தேர்தல் அறிக்கை.

3 "LTTE ends Ceasefire", in the *Daily Mirror*, 24 சித்திரை 2001.

குடாநாட்டின்மீது தனது கட்டுப்பாட்டினை விரிவாக்குவதனை நோக்கமாகக் கொண்டு ''தீச்சுவாலை'' (Agni Khiela) இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது. சண்டையின் மத்தியில் பொதுமக்கள் சிக்கியதினால் கடினமான நிலைமைகள் மீண்டும் தோன்றின. இரு சாராரையும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வருவதற்கான நோர்வேயின் முயற்சிகள் ஆனி மாதம் வரை தொடர்ந்தது. 2001 இல் பூர்வாங்க சமாதானப் பேச்சுவார்த்தைகள் எதுவும் இடம்பெறவில்லை.

இவ்வருடத்தில் இரு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஐப்பசி 30 ஆம் திகதி பிரதம மந்திரி இரத்தினசிறி விக்கிரமநாயக்க மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் இருந்து மயிரிழையில் உயிர் தப்பினார்.

இத்தாக்குதலில் இரண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டு 13 பேர் காயமடைந்தனர். பாராளுமன்றத் தேர்தலுக்கு நாடு தயாராகிக் கொண்டிருக்கும்பொழுதே இத் தாக்குதல் இடம்பெற்றது. மட்டக்களப்பில் தற்கொலைக் குண்டுதாரியினால் கார்த்திகை மாதம் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவில் பணியாற்றிய இராணுவப் படைப்பிரிவைச் சேர்ந்த (paramilitary group) முன்னைநாள் அங்கத்தவர் மூவர் கொல்லப்பட்டதுடன் மற்றொருவரும் காயமடைந்தார். இத்தாக்குதலில் ஒரு பொதுமகன் கொல்லப்பட்டு எட்டுப்பேர் காயமடைந்தனர்.

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் மீது எல். ரி. ரி. ஈ. மேற்கொண்ட தாக்குதலே கடந்த வருடம் ஆடி மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய தாக்குதலாகும். இத்தாக்குதலில் இரண்டு பொதுமக்கள், ஏழு பாதுகாப்புப் படையினர், 14 எல். ரி. ரி. ஈ. அங்கத்தவர்கள் கொல்லப்பட்டனர். இலங்கையின் ஒரேயொரு சர்வதே விமான நிலையத்தின் மீதான இத்தாக்குதல் அரசியல் மற்றும் நிதியியல் தொடர்பாகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.[4] இத்தாக்குதல் நாட்டின் வர்த்தக கப்பற் போக்குவரத்துக்களை அரைவாசியாகக் குறைத்ததுடன் ஏற்றுமதிக்கான காப்புறுதிக் கட்டனங்களையும் அதிகரித்தது. உல்லாசப் பயணக் கைத்தொழில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது.

2.1 இன வன்முறை

கடந்த வருடம் வைகாசி மாதத்தில் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் மாவனெல்லையில் ஏற்பட்ட இனரீதியான முறுகல்களினால் இரண்டு பேர் கொல்லப்பட்டதுடன் முஸ்லிம்களின் பெருமளவு

---

4 *Supra* n 1.

கடைகளும் அழிக்கப்பட்டன. களஞ்சிய லிகிதரான முஸ்லீம் ஒருவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக பொலிஸார் உரிய முறையில் செயற்படவில்லையென முஸ்லிம் சமூகத்தினர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். இதற்குப் பதிலாக சிங்களவர்கள் ஒரு கூட்டமாக முஸ்லீம் எதிர்ப்பாளர்களைத் தாக்கினர். முரண்பாடு தீவிரமடைந்ததினால் இரண்டு முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர். பெருமளவு கட்டிடங்களும், வாகனங்கள் சிலவும் அழிக்கப்பட்டன. கட்டுப்படுத்த முடியாத பல நிகழ்வுகள் கொழும்பில் இடம்பெற்றன. வன்முறையை அடக்குவதற்கும் கூட்டத்தினரைக் கலைந்து செல்லச் செய்வதற்கும் பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பயன்படுத்த வேண்டியிருந்ததுடன் இராணுவப் பிரிவையும் அழைக்க வேண்டியிருந்தது.[5] ஊர்வலத்தினைப் பலாத்காரமாகப் பொலிசார் கலைத்ததுடன்[6] கொழும்பு நகரத்தில் ஊரடங்குச் சட்டத்தினையும் அமுலாக்கினர். மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு (Human Rights Commission- HRC) மாவனெல்ல குடியிருப்பாளர் பலரினால் செய்யப்பட்ட முறைப்பாடுகளில் பொலிஸாரின் செயலற்ற நிலையே நிலைமை மோசமடைவதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.[7] அரசாங்கம் தொடர்ந்தும் மாவனெல்ல சம்பவத்தினை விசாரணை செய்கின்றதென வருட இறுதியில் தெரிவித்ததுடன் இன்றுவரை உறுதியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

முஸ்லீம் காங்கிரசின் தலைவரான ரவூப் ஹக்கிம் கலவரங்களுக்குப் பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கு அரசாங்கம் தவறிவிட்டதாக குற்றம் சுமத்தினார். சனாதிபதிக்கு சமர்ப்பித்த அறிக்கையில் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த முன்னணி அரசியல்வாதிகளின் தொடர்ச்சியான ஆதரவு பெற்ற குற்றவாளிகளே இத் துன்பகரமான நிகழ்வுகளுக்கு முதன்மைக் காரணமாக இருந்தனர் என்பதில் பொதுவான அபிப்பிராயம் உள்ளதென ஹக்கிம் குறிப்பிட்டிருந்தார்.[8]

3. தேர்தல் வன்முறை

கூட்டமைப்பிலிருந்து மேலும் பலர் விலகியமையினால் சனாதிபதி ஐப்பசி 10 ஆம் திகதி பாராளுமன்றத்தினைக் கலைத்ததுடன் மார்கழி 5 ஆம்

---

5 *Weekend Express*, 6 வைகாசி 2001.

6 http://web.amnesty.org/web/ar2002.nsf/asa/sri+lanka, 20 ஆனி 2002 இல் அடையப்பட்டது.

7 *Daily Mirror*, 7 வைகாசி 2001.

8 'Spotlight', *Sunday Leader*, 13 வைகாசி 2001.

திகதி தேர்தலை நடத்தும்படி கோரினார். மார்கழி 5 ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் காலம் வரையிலும் அரசியல் செயன்முறையைப் பாதிக்கும் வன்முறைகள் தொடர்ந்து நிகழ்ந்தன. தேர்தல் பிரசாரக் காலத்தில் (ஐப்பசி 27 - மார்கழி 2) வெளியிடப்பட்ட சுருக்க அறிக்கையொன்றில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டது.

> *இதுவரையும் இடம்பெற்றுவந்த பரந்தளவான, மிகவும் பாரதூரமான வன்முறைகளானது 2000 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் பிரசாரம், 1999 ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தல், 1994 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் ஆகியவற்றிலும் பார்க்க அதிகளவாகக் காணப்பட்டது. 2000 ஆம் ஆண்டு பிரசாரம் மேற்கொள்ளப்பட்ட 39 நாட்களில் சி. எம். ஈ. வி. 2044 சம்பவங்களைப் பதிவு செய்திருந்தது. ஆனால் 2001 ஆம் ஆண்டு மார்கழி 1 ஆம் திகதி வரைப்பட்ட 37 நாட்களில் வன்முறைகளின் மொத்த எண்ணிக்கை 2205 ஆக இருந்தது. இதனுடன் 2001 மார்கழி 2 இல் பதிவு செய்யப்பட்ட 110 சம்பவங்களுடன் சேர்த்து 2315 என மதிப்பிடப்பட்டது.*[9]

2001 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் சட்டத்தின் 17 ஆவது திருத்தம் தேர்தல் ஆணையாளருக்கு சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல்களை உறுதிப்படுத்துவதற்கான அவரின் பொறுப்பினையும் கடமைகளையும் குறிப்பிட்டது. பாராளுமன்ற பிரதிநிதிகளின் தேர்தல் தொடர்பான எல்லாச் சட்டங்களின் செயற்பாட்டினை உறுதிப்படுத்தும் மேலதிக அதிகாரங்களையும் வழங்கியது.[10] 2001 ஆம் ஆண்டு சித்திரை 3 ஆம் திகதி *எகொடவல மற்றும் ஏனையோர்* எதிர *தயானந்த திசாநாயக்கா மற்றும் ஏனையோர்*[11] தொர்பான வழக்கில் வழங்கப்பட்ட உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இதனை மேலும் தெளிவுபடுத்தியது. இந்தத் தீர்ப்பானது தேர்தல் ஆணையாளர் ஏதேனும் வாக்குச் சாடிகளில் வாக்குகள் சுதந்திரமாக, சமத்துவமாக, இரகசியமான முறையில் வாக்களிப்பு நடைபெறவில்லையாயின் அங்கு நடைபெற்ற வாக்களிப்பை இரத்துச் செய்து மறுவாக்கெடுப்புக்கு கட்டளையிட அவர் கடமைப்பட்டவர்.[12]

---

9 CMEV பத்திரிகைச் செய்தி வெளியீடு, 3 மார்கழி 2001.

10 பார்க்க. இத்தொகுதியில் 'அரசியலமைப்புக்கான 17 ஆவது திருத்தம்' என்ற ருக்ஷானா நாணயக்காரவின் கட்டுரை.

11 உ. நீ. விண்ணப்ப இல. 412/99, உ. நீ. அறிக்கைகள் 3.4.2001.

12 மேலும் பல விபரங்களுக்கு பார்க்க, இத் தொகுதியில் சுமுது அத்தபத்து, ''மனித உரிமைகளின் நீதிமுறைப் பாதுகாப்பு''.

உயர் நீதிமன்றம் பின்வருமாறு பிரகடனம் செய்தது:

> *....... வாக்கெடுப்பு என்பது இரு போட்டியாளர்களுக்கிடையே உண்மையில் எவர் தெரிவு செய்யப்படுவார் என்பதை நிர்ணயிக்கும் ஒரு நடைமுறையாகும். இத்தகைய வாக்கெடுப்பானது எத்தகைய முறையற்ற செல்வாக்கு அல்லது நிர்ப்பந்தத்திலிருந்து விடுபட்டு சுதந்திரமானதாக இருத்தல் வேண்டும். அதிலுள்ள சமத்துவ அம்சத்தின்படி வாக்களிக்க உரித்துள்ள யாவரும் கட்சிகளுக்கும் வேட்பாளருக்கும் இடையேயான தமது தெரிவை வெளிப்படுத்த அனுமதிக்கப்பட்டிருப்பதைக் குறிக்கும். வாக்களிப்பில் இரகசியம் பேணப்படுதலும் முக்கியமானது. வாக்களிப்பு நடைபெற்றதாக அறிகுறி தென்பட்டால் மட்டும் போதாது. சட்டத்தின் விரிவான பல ஏற்பாடுகள் குறிப்பாக. பகுதி 3 இன்படி பாராளுமன்றம் உண்மையான வாக்களிப்பையே கருத்திற் கொண்டுள்ளது என்ற முடிவுக்கு வரமுடியும். அத்தகைய வாக்களிப்பானது ''தொடர்ந்து''இருத்தல் வேண்டும். அதாவது வாக்களிப்பது எதுவித தடையுமின்றி ஆரம்பத்திலிருந்து முடிவுவரை முறையாக நடைபெற வேண்டுமேயொழிய அவ்வப்போது நடைபெற முடியாது.*

வாக்களிப்பு முகவர்களைக் கலைத்தல், கள்ளமாக வாக்குப் பதிவு, வன்முறை, வன்முறை அச்சுறுத்தல் மற்றும் மிரட்டல் ஆகியவற்றினைக் குறிப்பிட்ட உயர் நீதிமன்றம், பிரசைகள் தமது வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதையும், தமது வாக்குரிமையைப் பயன்படுத்துவதையும் இவை தந்துவிடுகின்றது எனவும், சுதந்திரமானதும், சமத்துவமானதும், இரகசியமானதுமான தேர்தல் செயற்பாடுகளை வாக்கு அட்டைகளைப் பறித்தல், பாரியளவிலான கள்ள வாக்குப் பதிவுகள் ஆகிய காரணிகள் தரங்குறைத்து விடுகின்றன எனவும் குறிப்பிட்டது தேர்தல் ஆணையாளரினால் தேர்தலை மீண்டும் நடத்த உத்தரவிடப்படுவதற்கான தீர்மானத்தை எடுப்பதற்கு இவை நியாயம் கற்பிக்கின்றன. தேர்தல் ஆணையாளரின் அதிகாரங்கள் தொடர்பாக அறிக்கையில் பின்வருமாறுகுறிப்பிடப்பட்டுள்ளது:

> *எவ்வாறிருப்பினும். திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அதன் கீழ் எடுத்துரைக்கப்பட்ட பிரிவுகள் உருவாக்கப்படவில்லை. ஊக்கம் தரும் விடயம் என்னவெனில், தேர்தல் ஆணையாளர் தனக்களிக்கப்பட்ட அதிகாரங்களையும், செயற்பாடுகளையும் சட்டம் இடம்பெறுவதற்கு முன் உடனடியாக செயற்படுத்தவும்,*

அமுலாக்கவும் இல்லை என்பதுடன் அப்பிரிவை அமைக்கும்வரை புதிதாகப் பரிந்துரைக்கப்பட்ட தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை. மாறாக, சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு[13] வலுவளிக்கும் தேர்தல் ஆணையாளரின் முயற்சியானது தேர்தல் பிரச்சாரக் காலத்தில் தடைப்பட்டு விட்டது.[14]

பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியானது (UNP) ஐக்கிய தேசிய முன்னணி என்ற பெயரில் போட்டியிட்டது. இம்முன்னணியில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (CWC), மலையக மக்கள் முன்னணி என்பன இணைந்திருந்தன. இலங்கை முஸ்லீம் காங்கிரசைச் (SLMC) சேர்ந்த அங்கத்தவர்கள் சிலர் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டனர். பொதுசன முன்னணியிலிருந்து (People Alliance) அமைச்சர் எஸ். பி. திசாநாயக்க மற்றும் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தலைமையில் பிரிந்து சென்றோர் ஐக்கிய தேசிய முன்னணியில் (UNF) இணைந்தனர்.[15]

வன்முறை நிகழ்ந்த மார்கழி மாத பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியினால் வழிநடத்தப்பட்ட கட்சிகளின் கூட்டமைப்பான ஐக்கிய தேசிய முன்னணி பாராளுமன்றத்தின் பெரும்பான்மையை அடுத்த ஆறு வருடங்களுக்குப் பெற்றுக் கொண்டது. ஐக்கிய தேசிய முன்னணி 96 ஆசனங்களை வென்றதுடன் 13 போனஸ் ஆசனங்களுடன் 225 பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்தில் 109ஆசனங்களைப் பெற்றது.[16] தேர்தல் வன்முறையைக் கண்காணிக்கும் மையம் (The Centre for Monitoring Election Violence - CMEV) ஐப்பசி 10 ஆம் திகதிக்கும் மார்கழி 5 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காத்தில் 4208 சம்பவங்களும், 73 இறப்புக்களும்[17] நிகழ்ந்ததாக அறிக்கைப்படுத்தியது. தேர்தல் ஆணையாளருக்கு இம் மையம் அனுப்பிய அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது:

2001 மார்கழி 5 ஆம் திகதி பிற்பகல் நான்கு மணிவரை எமது தேர்தல் கண்காணிப்பாளர்களின் வலைப்பின்னலிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கைகளின்படி இன்றைய

---

13 அரசியலமைப்புக்கான 17 ஆவது திருத்தம்.

14 இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியங்களின் அவதானிப்புக் குழுவின் இறுதி அறிக்கை, 5 மார்கழி 2001, பாராளுமன்றத் தேர்தல்கள்.

15 Ranatunge, D. C., "*The Twelve Parliaments of Sri Lanka*". (Sarasavi Publishers, Colombo 2002) p. 55.

16 *மேற்படி.*

17 CMEV 2001 பொதுத்தேர்தல் இடைக்கால அறிக்கை, www.cpalanka.org/pdf/Interim_Report.pdf

தேர்தலானது பரந்தளவான வன்முறைச் சம்பவங்களினாலும். ஆள் மாறாட்டம் மற்றும் ஏனைய தேர்தல் குளறுபடிகளினாலும் மிகக் கடுமையாகக் குழப்பப்பட்டுள்ளதென நாம் கருதுகிறோம். பல பகுதிகளில் குடிமக்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்வது தடைசெய்யப்பட்டுள்ளதுடன் அடிப்படையான சட்ட ஒழுங்குப் பொறிமுறையானது நிலைகுலைந்தது. மேலும் வடக்கு கிழக்கில் உள்ள விடுவிக்கப்படாத பகுதிகளில் வாக்காளர்கள் கொத்து வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதை ஆயுதப் படையினர் தடை செய்தனர். நாட்டின் பல பகுதிகளில் சனாதிபதி பாதுகாப்புப் பிரிவு (PSD) மற்றும் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகளினால் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்தது.[18]

மக்கள் பயமின்றி சுதந்திரமாகத் தமது வாக்குரிமையைப் பயன்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. இவ்வாக்களிக்கும் உரிமை எந்த சனநாயக செயன்முறையிலும் ஓர் அடிப்படை அம்சமாக உள்ளது.

4. சிறுவர்களின் உரிமைகள்

எல்.ரி.ரி.ஈ. யினால் சிறுவர்கள் தொடர்ந்தும் ஆட்திரட்டலுக்கு உள்ளாவதே இலங்கையில் சிறுவர்களின் உரிமைகளின் மிக மோசமான மீறலாக விளங்குகின்றது.

1998இல் இலங்கைக்கு விஜயம் செய்தபோது சிறுவர் மற்றும் ஆயுதப் பிணக்குக்கான செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியான ஒலாரா ஒட்டுணு. அரசாங்கத்திலிருந்தும் எல்.ரி.ரி.ஈ. இடமிருந்தும் சிறுவர்களைச் சேர்த்துக் கொள்ளும் நிலைமையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் உத்தரவாதங்களைப் பெற்றுக் கொண்டார். இருப்பினும், அதனையடுத்த வருடங்களில் நிலைமை மோசமாகியது. இவ் உறுதிப்பாடுகள் வழங்கப்பட்ட போதும் எல்.ரி.ரி.ஈ. யினால் சிறுவர் சேர்த்துக் கொள்ளப்படல் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது. அறிக்கைகளின்படி குடும்பங்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளன.[19] ஐக்கிய நாடுகள் முகவரகங்கள், குறிப்பாக யுனிசெவ்

---

18 CMEV பத்திரிகைச் செய்தி அறிக்கை, 25 கார்த்திகை 2001.

19 மனித உரிமை நடைமுறைகள் மீதான நாடுகளின் அறிக்கை 2001.ஐக்கிய அமெரிக்கா இராஜாங்கத் திணைக்களம், இலங்கை, பக். 46.

எல்.ரி.ரி.ஈ. பினர் தொடர்ச்சியாக படைகளுக்கு சிறுவர்களைத் திரட்டுதல் பற்றி கண்டனம் தெரிவித்தது. சில சிறுவர்கள் 12 வயதில் கூட சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.[20]

2001ஆம் ஆண்டு மாசியில் யுனிசெவ் பிரதித் தலைவரான "அந்ரே ரொபர்புறொயிட்" (Andre Roberfroid) என்பவர் வட இலங்கையில் எல்.ரி.ரி.ஈ. இன் உயர் அதிகாரிகளைச் சந்தித்து ஐக்கிய நாடுகளின் ஆழ்ந்த கரிசனையைத் தெரிவித்துக் கொண்டார். ஐக்கிய நாடுகளினால் பிரேரிக்கப்பட்ட ஒழுங்கு முறைகளை அமுலாக்குவதற்கு எல்.ரி.ரி.ஈ. இணங்கிக் கொண்டது. ஆட்திரட்டலுக்கான ஆகக் குறைந்த வயது. பாடசாலைகளிலோ அல்லது அதற்கு அருகிலோ ஆட்சேர்ப்பு நடத்தப்படக் கூடாது. ஆட்திரட்டலுக்கு உட்பட்ட சிறுவர்கள் பற்றி அறிவிக்கப்பட்ட எல்லாவற்றையும் விசாரணை செய்தல் போன்றவை இவ் ஒழுங்கு முறையில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

யுனிசெவ், யு. என். எச். சி. ஆர் சமூகமளிக்காத சிறுவர்களை அடையாளம் செய்வதற்கு பாடசாலையில் தினவரவுப் பதிவேடுகளைப் பார்வையிடுவதற்கும் ஒழுங்காகக் கண்காணிப்பதற்கும் ஐக்கிய நாடுகளை அனுமதிக்க எல்.ரி.ரி.ஈ. ஏற்றுக் கொண்டது. இத்தகைய முன்னைய கடப்பாட்டிலிருந்து எல்.ரி.ரி.ஈ. மீறிக் கொண்டது.[21]

சிறுவர்களின் உரிமைகள் பற்றிய சமவாயம் (CRC) மனித உரிமைகளை முழு அளவில் குறிப்பாக சிறுவர்களுடன் தொடர்பான சமூக. பொருளாதார, கலாசார உரிமைகள் போன்ற குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளை உள்ளடக்குவதற்கான சட்டரீதியாக அமைக்கப்பட்ட முதலாவது சர்வதேச கருவியாக விளங்கியது. ஆயுதப் பிணக்குகளில் சிறுவர்களை ஈடுபடுத்தல் மற்றும் சிறுவர்களினை விற்பனை செய்தல், சிறுவரைப் பாலியலுக்குப் பயன்படுத்தல், சிறுவரை படமெடுத்தல் (Pornography) ஆகிய இரு விடயங்களில் சமவாயத்தின் ஏற்பாடுகளை உறுதி செய்யும் வகையில் இரண்டு விருப்புரிமைப் பின்னேடுகள் (Optional Protocols 2000இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.[22]

2001 இல் அங்கீகரிக்கப்பட்ட ஆயுதப் பிணக்குகளில் ஈடுபடும் சிறுவர்கள் பற்றிய ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானமானது[23] சிறுவர்களைப் பாதுகாப்பதில் சமாதான உடன்படிக்கைகளில் கூட தனக்குள்ள

---

20 *Supra* n 1.

21 யுனிசெவ் விடுத்த பத்திரிகைச் செய்திக் குறிப்பு, 24.01.2001, கரோல் பெலாமியின் கூற்று, நிறைவேற்றுப் பணிப்பாளர் யுனிசெவ்.

22 சிறுவர்களை விற்றல், சிறுவர் விபச்சாரம் மற்றும் சிறுவர் பாலியல் படம் எடுத்தல் பற்றிய விருப்புரிமைப் பின்னேடு, 18.01.2002 இல் நடைமுறைக்கு வந்ததுடன் 28.05.2002 இல் இலங்கை அதன் ஒப்பந்ததாரியாக மாறியது.

23 பிரகடனம் 1379, 2001.

கடப்பாட்டினை அழுத்திக் கூறியது. சமாதான உடன்படிக்கைகளின் பிரிவு 8(உ) இல் அங்கத்துவ அரசுகளுக்கு பின்வருமாறு வேண்டுகோள் விடப்பட்டது.

சமாதான உடன்படிக்கைகளில் சிறுவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். உடன்படிக்கையில் ஆயுதங்களைக் களைதல் தொடர்பான ஏற்பாடுகள், படைப்பிரிவுகளைக் கலைத்தல், மீள ஒன்றிணைத்தல் மற்றும் சிறுவர் இராணுவத்தின் புனர்வாழ்வு, குடும்பங்களுடன் மீண்டும் இணைதல் ஆகிய தொடர்பான ஏற்பாடுகள் பொருத்தமான இடங்களில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் சிறுவர்களின் கருத்துக்களையும் இச் செயன்முறைகளில் முடியுமானால் சேர்த்துக் கொள்ளல் நன்று.

2001 ஐப்பசியில் எல்.ரி.ரி.ஈ. தலைமைப் பீடத்துக்கு சிறுவர்களைச் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஒரு முடிவைக் காணுமாறு வலியுறுத்தல் சர்வதேச மன்னிப்புச் சபையினால் விடுக்கப்பட்டது. வேண்டுகோள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது:

பலாத்காரமாகவோ அல்லது வேறுவழிகளிலோ சிறுவர்களைச் சேர்த்தல் முக்கியமன்று. ஆனால் யுத்தத்தில் அவர்களுக்கு எந்தவித பங்கும் இல்லை. சிறுவர் இராணுவத்தைப் பயன்படுத்துவதில்லை என்ற உறுதியை எல்.ரி.ரி.ஈ. வழங்க வேண்டும். ஆட்திரட்டலை உடனடியாக நிறுத்தி சிறுவர்களை உடனடியாக அவர்களது குடும்பங்களுக்கு அனுப்புதல் வேண்டும்.[24]

திரு. றொபர்புறொய் சுட்டிக்காட்டிய இரண்டாவது முக்கிய விடயம் வடக்கு கிழக்கில் பாடசாலைகளிலிருந்து இடைவிலகும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகும். இதற்கு இரண்டு காரணங்கள் கூறப்பட்டன. முதலாவது, பாடசாலைகளில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவியமை. இரண்டாவது, பிள்ளைகள் தமது பெற்றோரின் குடும்ப வருமானத்துக்காக உதவி செய்ய வேண்டியிருந்தமை. சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் அடிப்படைக் கல்வி ஒவ்வொரு பிள்ளையினதும் உரிமையாகும். இலங்கையில் 5-14 வயதுப் பிள்ளைகள்

---

24 சர்வதேச மன்னிப்புச்சபையின் செய்தி அறிக்கை, 11.10.2001.

பாடசாலைக்குச் செல்ல வேண்டும்.[25] யுனிசெவ் நிறுவனம் பிள்ளைகள் விடயத்தில் கரிசனை காட்டியது. பிள்ளைகள் பற்றிய சகல விடயங்களிலும் கவனம் செலுத்துமாறு அது விடுதலைப் புலிகள் இயக்கத்தைக் கேட்டுக் கொண்டதோடல்லாமல் ஆயுதப் பிணக்குகளில் சிறுவர்களின் ஈடுபாடு குறித்த சிறுவர் உரிமைச் சமவாயத்தின் விருப்புரிமைப் பின்னேட்டுக்கு பணிந்தொழுகுமாறும் வற்புறுத்தியது.[26] விருப்புரிமைப் பின்னேட்டின் பங்காளியாக மாறுமிடத்து அதன் உறுப்புரை 3(3) க்கிணங்க பணிபுரிவதற்கான ஆகக் குறைந்த வயது மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த ஒரு பிரகடனத்தைச் செய்ய வேண்டும். இந்தப் பிரகடனமானது எப்போதும் வலிமை பெறுமே தவிர பலவீனமடைய மாட்டாது.[27] அத்துடன் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்குத் தடையாகவுள்ள பிரவேசக் கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டுமெனவும், பிணக்கினால் பாதிப்புற்ற இடங்களிலுள்ள பாடசாலைகளிலிருந்து இராணுவ பிரசன்னத்தை வாபஸ் பெற வேண்டுமெனவும் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டது.[28] முறையில் துறையிலும் குடும்ப தொழில் முயற்சிகளிலும் சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படுகின்றனர். இத்தகைய பிள்ளைகளை வேலைக்கமர்த்துவதை அரசாங்க பரிசோதனைகளால் நிறுத்த முடியவில்லை.

5. சித்திரவதையும் ஒருதலைப்பட்சமான தடுத்து வைப்பும்

மார்கழி 1999 - மார்கழி 2000 காலப் பகுதிக்கான தனது அறிக்கையில் சித்திரவதை மீதான விசேட அறிக்கையாளர் சித்திரவதை தொடர்பாக அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளைக் குறிப்பிடுகின்றார். சித்திரவதை மற்றும் ஏனைய கொடுமையான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துதல்கள் அல்லது தண்டனைக்கு எதிரான சமவாயம் உள்ளூர் சட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் உயர்நீதிமன்றம் நட்டஈடுகள் வழங்கியதோடு, சித்திரவதை தொடர்பாக ஐக்கிய நாடுகள் முகவரகங்கள் உள்ளிட்ட ஏனைய அமைப்புகளின் முறைப்பாட்டினைப் புலனாய்வு செய்யுமாறு பொலிசார் பணிக்கப்பட்டுள்ளனர். விசேட அறிக்கையாளர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

---

25 கல்வி கட்டளைச் சட்டத்துக்கான ஒழுங்கு விதி, அரசாங்க வர்த்தமானி, 25 கார்த்திகை 1997.

26 2000 புரட்டாதி 8ஆம் திகதி பின்னுறுதிப்படுத்தப்பட்ட விருப்புரிமைப் பின்னேடுட்டுக்கு இலங்கையும் ஒரு பங்காளி.

27 உறுப்புரை 3

28 2001 தை 24 இன் யுனிசெவ் பத்திரிகை அறிக்கை

``தண்டனையிலிருந்து விலக்குப்பெறும் பிரச்சினையைக் காத்திரமாக அணுகுவதற்கு இன்னும் கூடிய அரச சட்டவாதமும், குற்றச்சாட்டுகளும் தேவையென்பது தெரிகிறது. எனினும் நட்டஈட்டுக்கான தனிப்பட்ட பொறுப்பு சட்டப் புத்தகத்திலிருந்து நீக்கப்படல் வேண்டும். சித்திரவதையைத் தடுப்பதற்கு தடுத்து வைக்கப்படும் இடங்களைக் கண்காணிப்பதற்கு தீவிரமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.''[29]

இவ்வாண்டில் பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படைகளினால் ஒருதலைப்பட்சமான தடுத்து வைப்பும், கைதிகளை மோசமாக நடாத்துதலும் பொதுவாகக் காணப்பட்டன. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் (PTA-Prevention of Terrorism Act) ஏற்பாடுகள் மற்றும் பாதுகாப்புப் படையினர் அதனை அமுல்படுத்தல் ஆகியவற்றின் கடுமை எமது கவனத்திற்குரியது. பயங்கரவாதத் தடைச் சட்டம் சர்வதேசரீதியாக குற்றவியல் நடவடிக்கைகளில் பின்பற்றப்படும் நியமங்களை மீறுகின்றது. மனித உரிமைகளை மேம்படுத்துவதில் தடையாக இருப்பதால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பல ஏற்பாடுகள் விமர்சிக்கப்பட்டன. இச்சட்டத்தின் அடிப்படையிலும், அவசரகால விதிகளின் அடிப்படையிலும் பாதுகாப்புப் படைகள் சந்தேக நபர்களை நீதிமன்ற அனுமதி இல்லாமல் தடுத்து வைக்க முடியும்.[30]

விசாரணை, புலனாய்வு என்னும் பெயரில் இச்சட்டமானது சித்திரவதையை அனுமதிக்கிறது. பாதுகாப்பு படையினர் விசாரணையின் போது தடுத்து வைக்கப்பட்டோர் மற்றும் சிறைக் கைதிகளைச் சித்திரவதைக்குட்படுத்துவதோடு மோசமாகவும் நடத்துகின்றனர். மின்னதிர்ச்சி, அடித்தல், மணிகட்டுக்களிலும், பாதங்களிலும் தொங்கவிடுதல் போன்றவைகள் சித்திரவதை முறைகளாக இருந்தன.[31] இவற்றின் காரணமாக தமது எலும்புகள் முறிக்கப்பட்டதாகவும், கடுமையான காயங்களுக்கு உட்பட்டதாகவும் பலர் தெரிவித்தனர். இதற்கு நல்ல உதாரணம் திவ்வியன் கிருஷ்ணசாமி விடயமாகும். இவர் யாழ்ப்பாணத்தில் இலங்கை இராணுவத்தின் செயற்பாடுகளுக்கு எதிராகத் தீவிரமாக குரல் எழுப்பிய மாணவ தலைவராவார். அவரது அரசியல் செயற்பாடுகளுக்காகவே அவர் கைது செய்யப்பட்டார் என மனித

---

29 சித்திரவதை மீதான விசேட அறிக்கையாளர், சேர் நைகெல் ரொட்னியின் அறிக்கை, ஆணைக்குழுவிற்கான 8ஆவது அறிக்கை. (E/CN.4/2001/66).

30 *Supra* n. 19. பக். 16.

31 *மேற்படி.,* பக்கம் 13.

உரிமையாளர்களும் அவருக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு உள்ளது என படையினரும் கூறினர். அவர் ஆடி 24ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அவர் ஆவணி மாதம் நீதிமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டபோது தான் சித்திரவதை செய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார்.[32] திரும்பவும் அவர் 18ஆம் திகதி நீதிமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டபோது விசாரணை 2002ஆம் ஆண்டு முற்பகுதிக்கு பின்போடப்பட்டது.

2001இல் தடுப்புக் காவலிலிருந்து இறந்து போன இன்னொருவர் கந்தையா உதயகுமார். இவர் தடைசெய்யப்பட்ட பொருட்களை மன்னாருக்கு கடத்தினார் என கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மாசி 28இல் மரணமானார். கைது செய்த அதிகாரி அவரை அடித்து துன்புறுத்தியதாக நேரில் கண்ட அவரது பிள்ளைகள் கூறினர்.[33] பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சுமார் 18,000 பேர் கைது செய்யப்பட்டனர். அச்சட்டத்தின் பல பிரிவுகள் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேசக் கட்டுறுத்துகளுக்கு (ICCPR) எதிரானவை.[34]

நிர்வாக நடவடிக்கைகளின் காரணமாக அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படின் அல்லது பாதிக்கப்படக் கூடுமெனில் உறுப்புரை 26 இன் கீழ் உயர் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கப்படும்.[35] வழக்குகளில் தீர்ப்பு கிடைக்க இரண்டு அல்லது அதற்கு அதிகமான ஆண்டுகள் ஆகலாம். சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்களின் சார்பாக பேசும் அரசுசாரா நிறுவனங்கள் 1999 புரட்டாதியில் நியமிக்கப்பட்ட பிரதம நீதியரசர் மிகவும் அதிர்ச்சியூட்டும் வழக்குகளை மட்டும் விசாரணைக்கு எடுத்துக் கொண்டார்[36] எனக் குற்றம் சாட்டியிருந்தன.

கடந்த 18 வருடங்களில் பெரும்பாலும் நடைமுறையிலிருந்த நாட்டின் அவசரகால விதிகள் ஆடி 4ஆம் திகதி நீக்கப்பட்டன. நாட்டின் பாதுகாப்பு நிலைமைகளின் காரணமாக சனாதிபதி இந்த விதிகளை அமுலுக்குக் கொண்டு வந்தார். இவர் இந்த அவசரகால விதிகளின் நீக்கத்தை சனநாயகத்துக்கும், மக்களின் உரிமைக்கும் கிடைத்த வெற்றி எனக் கூறினாலும் பாதுகாப்புத் தொடர்பாக புதிய விதிகளின் காத்திரமான தன்மை குறித்து சிலர் வினாவெழுப்பினர்.[37] தண்டனை வழங்காதிருத்தல் இன்றுவரை

---

32 *மேற்படி.*, பக்கம் 14.

33 *Supra* n 1.

34 *Sri Lanka: State of Human Rights Reports* (Law & Society Trust, Colombo) என்ற முன்னைய அறிக்கைகளில் "Integrity of Person" பற்றிய அத்தியாயங்களைப் பார்க்க.

35 உறுப்புரை 17: இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல்யாப்பு.

36 *Supra* n 19, பக். 14.

37 *Sunday Times*. 8 யூலை 2001.

ஒரு பிரச்சினைதான். அரசாங்கத்தில் பொறுப்பானவர்களை இனங்கண்டு நீதியின் முன் நிறுத்த முடியவில்லை. 2000 ஆவணி மாதத்தில் 5 நபர்கள் கொண்ட குழுவொன்றைச் சித்திரவதை மீதான ஐக்கிய நாடுகள் குழு இலங்கைக்கு அனுப்பி வைத்தது. வருட இறுதியில் இக்குழு சனாதிபதி குமாரதுங்கவுக்கு ஓர் இரகசிய அறிக்கையைச் சமர்ப்பித்தது. அவ்வறிக்கை இன்று வரை பகிரங்கப்படுத்தப்படவில்லை.

சித்திரவதை என்பது இன்றுவரை ஒரு முக்கிய பிரச்சினையாகவே இருந்து வந்துள்ளது. எனவே சித்திரவதை மேற்கொள்வதற்கான அடிப்படைக் காரணிகளைக் கண்டறிய அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டமானது முக்கியமான சட்டப் பாதுகாப்புகளை நீக்குகிறது. இரகசியமான இடங்களில் அனுமதி இல்லாமல் தடுத்து வைக்க வாய்ப்பளிக்கிறது. கிளர்சிகளை அடக்குவதற்கு இந்த சட்டம் உண்மையில் உதவுகிறதா என்னும் கேள்வி எழுகிறது. இந்த கடுமையான சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும். தடுத்து வைக்கப்பட்டிருப்போர் மீது மனிதாபிமானம் காட்டப்பட வேண்டும்.

இவற்றைச் செய்ய முடியாவிட்டாலும் சர்வதேச சட்டத்துடன் இலங்கைக்கு முரண்பாடு ஏற்படுத்தும் ஏற்பாடுகளையேனும் நீக்க வேண்டும். இதன் மூலம் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேசக் கட்டுறுத்து (ICCPR) மீது இலங்கைக்கு இருக்கும் கடப்பாடுகள் பாதுகாக்கப்படும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது மற்றும் தடுத்துவைத்தல் தொடர்பான விசேட சட்டங்கள் துஷ்பிரயோகத்துக்கு எதிரான பாதுகாப்புகளையும், கண்காணிப்பதற்கான விசேட பொறிமுறைகளையும் குறைந்தபட்சம் கொண்டிருக்க வேண்டும். விடுதலைப் புலிகளும் வழமையாக சித்திரவதையை மேற்கொண்டிருக்கிறார்கள்.

6. பெண்களின் உரிமை

பாலியல் பலாத்காரம், தாக்குதல், கணவனால் துன்புறுத்தப்படல் ஆகியவை தொடர்ந்து வரும் முக்கிய பிரச்சினைகளாக உள்ளன. பாதுகாப்பு படையினரால் நாட்டின் பல பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பாலியல் பலாத்கார சம்பவங்கள் 2001இல் கவனத்தை ஈர்த்தன. கொழும்பில் ஒரு பரிசோதனை நிலையத்தில் 28 வயதுள்ள ஒரு தமிழ் பெண் மீது ஆனி 24 இல் மேற்கொள்ளப்பட்ட குழு பாலியல் வல்லுறவுக்கு எதிராக தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் பரவலாக எதிர்ப்புக் காட்டின. இதனைத் தொடர்ந்து ஊடகங்களில் வெளிவந்த செய்திகள் காரணமாகப் பாதுகாப்பில் இருக்கும் போது நடத்தப்படும் பாலியல் வல்லுறவு சம்பவங்கள் புதிய கவனத்தைப் பெற்றன.[38] ஒரு பாரதூரமான வல்லுறவுச்

[38] *The Island*, 2 யூலை 2001 மற்றும் *Daily News*, 10 யூலை 2001.

சம்பவத்துக்கு உள்ளான பெண் ஒருவர் விடுதலை செய்யப்பட்டார்.[39] முதல் ஆறு மாதத்தில் பொலிஸார் அறிக்கைப்படுத்திய 36 வல்லுறவு சம்பவங்களில் ஐந்து பாதுகாப்பு படையினர் சம்பந்தப்பட்டவை.[40] இதில் 19ஆம் திகதி மன்னாரில் கைது செய்யப்பட்ட குழுவானது இரண்டு பெண்களைக் குழு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய சம்பவமும் அடங்கும். தாம் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு தொடர்ச்சியாக கடற்படை, மற்றும் பொலிஸ் அதிகாரிகளினால் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாக அப்பெண்கள் தெரிவித்தனர். இவை யாவும் பாதுகாப்புப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெறும் பிணக்கின் பின்னணியிலேயே நடத்தப்பட்டன.

மன்னார், மட்டக்களப்பு, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பாதுகாப்பு படையினரால் மேற்கொள்ளப்பட்ட வல்லுறவு சம்பவங்களைத் தொடர்ந்து இதனை நிறுத்துமாறும் குற்றவாளிகளை நீதிக்கு முன் கொண்டு வருமாறும் சனாதிபதி குமாரதுங்கவை சர்வதேச மன்னிப்புச் சபை கோரியது.[41] எனினும் நடவடிக்கைகள் மிகவும் தாமதமாகவே நடந்தன. மருத்துவப் பரிசோதனையில் உள்ள சான்றுகளை மூடி மறைக்குமாறு சம்பந்தப்பட்ட மருத்துவ அதிகாரிகளின் மீது அழுத்தம் பிரயோகிக்கப்பட்டதாகவும் சில செய்திகள் வெளியாகின.

பங்குனி 19ஆம் திகதி நடைபெற்ற வல்லுறவுச் சம்பவத்தில் (மேலே கூறப்பட்ட) வல்லுறவு நடந்தமைக்கான எவ்வித தடயமும் இல்லை என மாவட்ட மருத்துவ அதிகாரியின் ஆரம்ப அறிக்கை கூறியது. பொது மக்களின் முறையீடு காரணமாக இரண்டாவது முறை வேறொரு வைத்தியரினால் நடத்தப்பட்ட பரிசோதனையிலேயே அப்பெண் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட விடயம் அம்பலமானது.

இவ்வாறான புலனாய்வுகள் தோல்வியுறுவதற்கான சில காரணங்கள் கீழே தரப்படுகின்றன:

(1) குற்றம் புரிந்தோர் பாதிக்கப்பட்டவரை அல்லது சாட்சிகளைப் பயமுறுத்தல்

(2) விசாரணை மேற்கொள்வோர் மீது அரசியல் அல்லது வேறு அழுத்தங்களைப் பிரயோகித்தல்

(3) வல்லுறவு பற்றிய அவமானம் காரணமாகப் பாதிப்புக்குள்ளானவர் முறைப்பாட்டை வாபஸ் வாங்கிக் கொள்ளல்.

---

39 *Supra* n 1

40 *Supra* n.19, பக். 37.

41 AI Index ASA 37/006/2001.

பாதிப்புக்குள்ளானோரைப் பாதுகாக்க சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். வல்லுறவு, சித்திரவதை போன்றவற்றுக்குப் பொறுப்பான அல்லது அவற்றைத் தூண்டும் பாதுகாப்புப் படையினர் நீதிக்கு முன்னால் நிறுத்தப்பட வேண்டும்.

6.1 அரசியலில் பெண்கள்

புதிய யாப்புக்கான அரசாங்க முன்மொழிவில் உள்ளூராட்சி மட்டத்தில் 25% ஆசனங்களைப் பெண்களுக்கு ஒதுக்க வேண்டுமெனக் கூறப்பட்டது.[42] அரசாங்கத்தின் இந்த முன்மொழிவுக்கு நாட்டின் பெண்கள் அமைப்புகள் ஆதரவு தெரிவித்தன. ஆனால் 2000ஆம் ஆண்டு ஆவணியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட யாப்பு சீர்திருத்த முன்மொழிவில் இது உள்ளடக்கப்படவில்லை.[43] 2001 மார்கழி தேர்தலில் போட்டியிட்ட 115 பெண்களில் 9 பெண்கள் மாத்திரமே பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். இலங்கையின் சனத்தொகையில் பெண்களின் பங்கு 51% என்பதால் பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்த இது போதுமானதல்ல எனத் தேர்தல் வன்முறைக் கண்காணிப்புக் குழு கூறியது.

7. பேச்சு சுதந்திரம்

பேச்சு மற்றும் கருத்து சுதந்திரம் அரசியல் யாப்பினால் உறுதிப்படுத்தப்பட்ட போதும் இவ்வுரிமைகள் நடைமுறையில் பாதுகாப்பைக் காரணம் காட்டி அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்றன. ஆனி மாதத்தில் அரசாங்கம் தணிக்கையை நீக்கி விட்டாலும் தனியார் தொலைக்காட்சி நிலையங்கள் தம்மளவில் தமது செய்திகளைத் தணிக்கை செய்யவே செய்கின்றன.

கடந்த காலங்களில் அரசாங்கம் கடுமையான தணிக்கையை அமுல்படுத்தியது. பல சந்தர்ப்பங்களில் ஊடகவியலாளர்கள் துன்புறுத்தப்பட்டதோடு அரசாங்கத்தை விமர்சிக்கும் பல பத்திரிகைக் காரியாலயங்கள் மூடப்பட்டன.[44] இதற்கு உதாரணம் *சண்டே லீடர்* வழக்காகும். 1999 ஆனி 27ஆம் திகதி இதழில் "ஊழலின் உச்சக்கட்டத்தில்"

---

42 வரைபு, ஐப்பசி 1997.

43 *Voice of Woman* இல் சூலனி கொடிகார எழுதிய "Quotas for Women" ஏப்பல், 2002.

44 பார்க்க, Pinto Jayawardene, K., "Freedom of Expression and Media Freedom" in *Sri Lanka: State of Human Rights 2001* (Law & Society Trust, Colombo 2001).

(Height of Corruption) என்னும் கட்டுரையை சனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்காவை இழிவுபடுத்தும் விதத்தில் பிரசுரித்தமையால் சட்டமா அதிபர் பத்திரிகை ஆசிரியருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார். வருட முடிவிலும் அவ்வழக்கு முற்றுப் பெறவில்லை.

பாதுகாப்பு அமைச்சின் தணிக்கை விதிகள் பத்திரிகையாளர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தின. தணிக்கை செய்யப்படாத இராணுவ விடயங்களைப் பிரசுரிப்பதிலிருந்து சகல செய்தி தாபனங்களும் தடை செய்யப்பட்டது. ``ஊடகச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதாக இந்த அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அளித்த வாக்குறுதியை வெளிப்படையாக மீறி விட்டது என கொழும்பிலுள்ள சுதந்திர ஊடக இயக்கம் குற்றம் சாட்டியது. நியூயோர்க்கிலுள்ள பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கும் குழுவும் இவ்விதிகளைக் குறை கூறியது.[45]

2001 வைகாசி மாதத்தில் போர் விடயங்களைப் பிரசுரிப்பதிலிருந்த தடை தளர்த்தப்பட்டது.[46] இது வெகுவாக வரவேற்கப்பட்டது எனினும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்குச் செல்வதற்கான தடை தொடர்ந்தும் இருந்தது. 2001 சித்திரை மாதத்தில் அரசாங்கத் தடையை மீறி விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் நுழைந்த லண்டன் சண்டே ரைம்ஸ் பத்திரிகையாளர் சுடப்பட்டு கடுமையான காயங்களுக்குள்ளானார்.

தனியார் ஊடகவியலாளர்கள் அரசாங்க அதிகாரிகளின் பயமுறுத்தலுக்கும் துன்புறுத்தலுக்கும் உள்ளானதற்கு நம்பத்தகுந்த ஆதாரங்கள் உள்ளன. இலங்கைக்கு குறுகிய விஜயத்தை மேற்கொண்ட சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம் (IBA – International Bar Association) குற்றவியல் சட்டத்தை நீக்குமாறும் பேச்சு சுதந்திரத்தை ஊக்குவிக்குமாறும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துக்கு விதந்துரை செய்தது. ஒரு கற்றறிந்த நவீன சனநாயகத்தில் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி ஆகிய ஊடகங்களைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியமில்லை. இவற்றை அரசாங்கம் உரிமை கொண்டு கட்டுப்படுத்தலும் நிச்சயமாக கூடாததாகும். எந்தவொரு அரசாங்கமும் ஊடகங்களை தனது நன்மைக்கு பயன்படுத்தும் என்பது தெரிந்த விடயம் தான் என்றாலும் அதனை நியாயப்படுத்த முடியாது.[47]

---

45 Columbia Journalism Review July/Aug, 1998. www. cpj. org/protests/001trs/ Sri Lanka.

46 *Supra* n

47 IBA அறிக்கை – 28 ஆவணி 2001–31 ஆவணி 2001 காலப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்த IBA மனித உரிமை நிறுவனத்தின் தூதுக் குழுவினரின் முடிவுகளும் விதந்துரைகளும் www.envoynews.com/iba/e_article 000057701. cfm#conclusion.

சர்வதேச சட்டத்தரணிகள் சங்க அறிக்கையானது குற்றவியல் அவதூறுச் சட்டம் யாப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு முரணானது என்றும் சுதந்திர ஊடகத்துக்கு அகௌரவமானது என்றும் கூறியது. பேச்சு சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பு படையினர் விசாரிப்பதையும் துன்புறுத்துவதையும் இவ்வறிக்கை கண்டித்தது.[48]

குற்றவியல் அவதூறுச் சட்டம் தொடர்பாகத் தண்டனைச் சட்டக் கோவையில் திருத்தம் கொண்டுவர எத்தணிப்பது நம்பிக்கை அளிக்கும் விடயமாகும். வருட இறுதியில் சட்டவரைபு நீதி அமைச்சினால் தயாரிக்கப்பட்டது. இதன்படி தண்டனைச் சட்டக் கோவையிலும் பத்திரிகை பேரவை சட்டத்திலும் பல பிரிவுகளை மாற்றிப் புதிய பிரிவுகள் சேர்க்கப்பட்டன. சனாதிபதியை இழிவுபடுத்தல் மற்றும் குற்றவியல் அவதூறு தொடர்பான ஏற்பாடுகளும் சேர்க்கப்பட்டன.

வரைபின் 3ஆம் பிரிவு பிரதான சட்டத்தின் (தண்டனைச் சட்டக் கோவை) 19ஆம் அத்தியாயத்தைத் திருத்துகின்றது. இதன்படி திருத்தப்பட்ட பிரிவு சட்ட ஏற்பாடு குற்றவியல் அவதூறுகளின் ஏற்பாடுகளை நீக்குகிறது. இதே விடயத்தில் குற்றவியல் நடவடிக்கைக் கோவையின் 135ஆம் பிரிவை நீக்குவதற்கு 4ஆம் பிரிவு கொண்டு வரப்பட்டது.

8. உள்நாட்டில் இடம் பெயர்ந்த நபர்கள்

தமது இல்லங்களை விட்டு நீங்கி உள்நாட்டில் இடம் பெயரச் செய்யப்பட்டோர் பாரிய மனித உரிமை மீறல்களுக்கு உள்ளாகினர். நகரும் உரிமை, கருத்து வெளிப்பாட்டுரிமை, நீர், அடிப்படைச் சுகாதாரம் மற்றும் கல்வி உரிமை ஆகியவை அவர்களுக்கு மறுக்கப்பட்டன.

உலகெங்கிலும் 20 மில்லியன் இடம்பெயர்ந்தோர் உள்ளனர். இவர்களைப் பாதுகாத்து உதவி செய்வதற்காக உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் மீதான வழிகாட்டற் கோட்பாடுகள் (The Guiding Principles on Internal Displacement) ஐக்கிய நாடுகளினால் உருவாக்கப்பட்டன. பிணக்குகள் மற்றும் நெருக்கடி நிலைமைகளில் இவர்களைப் பாதுகாக்கும் அடிப்படைப் பொறுப்பு அரசாங்கம் மற்றும் உள்ளூர் அமைப்புகளுக்கே உரியது. எனினும் சர்வதேச சமூககமும் இவ்விடயத்தில் இவர்களுக்கு உதவி

---

48 *Sunday Times*, 2nd December 2001.

செய்ய வேண்டும்.[49] இவர்கள் விடயத்தில் அரசாங்கச் சட்டகம் ஒன்று இல்லாமையே பெருங் குறைபாடாகும். இவர்களைப் பற்றிய அரசாங்கக் கொள்கை தெளிவற்றது. அத்துடன் அடிக்கடி மாறிக் கொண்டுள்ளது.

பல இடங்களில் மலசலகூட வசதி கூட இருக்கவில்லை. 2001 ஆம் ஆண்டு ஆனியின் ஆரம்ப பகுதிகளில் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் ஆகிய இடங்களிலிருந்து இடம் பெயர்ந்தோர் தற்காலிகமாக மீண்டும் குடியேறினர். விடுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தப் பிரகடனத்தைத் தொடர்ந்து குண்டுத் தாக்குதல் நடத்தப்படாததே இதன் காரணம்.[50] வன்னியிலிருந்து வவுனியா நோக்கிப் பெருமளவில் இடம் பெயர்ந்த மக்கள் வரத் தொடங்கினர். விடுவிக்கப்படாத பிரதேசத்திலிருந்து தை மாதத்தில் மட்டும் 3756 பேர் வவுனியாவுக்கு வந்தனர்.[51] இடம் பெயர்ந்தோர் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். அவர்களில் பலர் ''நலன்புரி நிலையங்களில் (Welfare Centres)'' வசிக்கின்றனர். இங்கு அவர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு, இடவசதி போன்றவை போதுமானவையாக இல்லை. அத்துடன் சுகாதாரப் பாதிப்பும் உள்ளது. இடம்பெயர்ந்தோரில் வேறு சிலர் கைவிடப்பட்ட வீடுகளில் அல்லது நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் வசிக்கின்றனர்.

8.1 சுகாதாரமும் உடல் நலமும்

2001 வைகாசி, ஆடி மாதங்களில் Action Contre la Faim[52] என்னும் நிறுவனம் திருகோணமலையிலுள்ள நலன்புரி நிலையங்களில் ஆய்வொன்றினை மேற்கொண்டது. மதிப்பீட்டு நியமங்களுக்காகப் பல வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. ''பிரதான குறிக்காட்டி''களைப் பயன்படுத்தி நீர், சுகாதார வசதிகள் மதிப்பிடப்பட்டன. இந்த ஆய்வின்படி போதுமான நீர் வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் நீரின் உயிரியல் தரமானது விதந்துரைக்கப்படும் மட்டத்தை விட குறைவானது. 75 சத வீதமான நலன்புரி நிலையங்களில்

---

49 மனிதாபிமான விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நாயகம், திரு. செர்ஜியோ வியரா டி. பி. மெல்லோ அவர்கள் வழிகாட்டற் கோட்பாடுகளுக்கு எழுதிய முன்னுரை.

50 CHA செய்தி அறிக்கை. மாதாந்த நிலைமை பற்றிய அறிக்கை – யாழ்ப்பாணம் தை/மாசி 2001.

51 CHA செய்தி அறிக்கை மாதாந்த நிலைமைபற்றிய அறிக்கை – வன்னி தை/மாசி 2001.

52 மனிதாபிமானப் பிரச்சினைகள் தொடர்பாகப் பணிபுரியும் ஒரு சர்வதேச அரசுசாரா நிறுவனம்.

பயன்படுத்தக்கூடிய நிலையிலுள்ள மலசலகூடங்கள் குறைவாகவே இருந்தன.[53] விடுவிக்கப்படாத பிரதேசங்களில் போதுமான மருத்துவ வசதிகள் இருக்கவில்லை. சாதாரண வைத்தியசாலைகளை அமைக்கக் கூடிய வசதிகள்[54] இருப்பினும் வைத்தியர்கள் அங்கு போக விரும்பவில்லை.

8.2 பெண்களும் பிள்ளைகளும்

நலன்புரி நிலையங்களில் போஷாக்கின்மை மற்றும் சுகாதாரமின்மையினால் பிள்ளைகள் பாதிக்கப்பட்டனர். பல பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் செல்லவில்லை. பெண்கள் பாதுகாப்பு படையினர் மற்றும் ஊர்காவல் படையினரின் பாலியல் துன்புறுத்தலுக்கும், வல்லுறவுக்கும் உள்ளாகினர். முகாம்களில் குடும்ப வன்முறைகள் பொதுவாக நிகழ்ந்தன. பெண்களும், பிள்ளைகளும் பணத்துக்காக பாலியல் தொடர்புகளில் ஈடுபட்டனர். பிள்ளைகள், கர்ப்பிணிகள், இளந்தாய்மார்கள் முதலான பலவீனமான குழுக்களின் தேவைகள் குறித்து வழிகாட்டற் கோட்பாடுகள் அழுத்தமாகக் குறிப்பிடுகின்றன.[55] எனினும் இன்றுவரை பலவீனமான குழுக்களின் பாதுகாப்புத் தொடர்பாக எமது சட்டங்களில் எந்த ஏற்பாடும் சேர்க்கப்படவில்லை.

உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். அவர்களது நிலைமைகள் சர்வதேச மனித உரிமை நியமங்களுக்குக் கொஞ்சமும் ஏற்புடையதாக இல்லை. அவர்களது குடும்ப வாழ்வும், சமூக வாழ்வும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. சில சந்தர்ப்பங்களில் அவர்களது அடையாளமும் ஆபத்துக்குள்ளாகியது. வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களின் நிலைமை இவ்வாறு தான் உள்ளது. ஒரு கலாசார அடையாளத்துக்கான வாய்ப்பு கொஞ்சமேனும் இல்லை. தொழில்புரியும் ஆற்றலும் திறனும் பாதிக்கப்பட்டுள்ளன. அரசியல் தீர்மானம் மேற்கொள்ளலில் பங்குபற்றலும் அதில் செல்வாக்கு செலுத்துதலும் முற்றாக நீக்கப்பட்டுள்ளன. அவர்களது அசைவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய கட்டுப்பாடுகள் பல அர்த்தமற்றவைகளாகவும் எதிர்மறையாகவும் அமைந்துள்ளன. பாதுகாப்பு இலக்குகளை அடைய இவை துணை புரியவில்லை. ஆனால் இடம்

---

53 வழங்கப்படுகின்ற சேவைகள் பற்றிய மதிப்பீடு: நலன்புரி நிலையங்களில் நீர் மற்றும் சுகாதார நிலைமைகள். ஐவர் கொண்ட நாட்டின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர், Action Contre La Faim.

54 CHA செய்தி அறிக்கை, மாதாந்த நிலைமை பற்றிய அறிக்கை – மட்டக்களப்பு, பங்குனி/சித்திரை 2001.

55 வழிகாட்டற் தத்துவம், இலக்கம் 3.

பெயர்ந்தோரை மேலும் சிரமத்துக்குள்ளாக்குவதோடு அவமானப்படுத்தவும் செய்கின்றன. 'யுத்தம்சார்ந்த' விடயங்களின் மீதான தடை இம்மக்களை மேலும் பாதிக்கின்றது. மருந்துகளும், மருத்துவ உபகரணங்களும் கூட தடைப்படுத்தப்பட்டிருந்தன. அத்துடன் அவற்றைப் பெறுவதில் தாமதமும் பற்றாக்குறையும் ஏற்பட்டன.[56] அவர்களது பல குடியியல், கலாசார, பொருளாதார, அரசியல், சமூக உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன.

2001ஆம் ஆண்டின் இறுதியில் 800,000 இலங்கையர் இடம் பெயர்ந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர், றிப்யூஜிஸ் இன்டர்நஷனல் (Refugees International) என்பன மதிப்பீடு செய்தன. 144,000 பேர் இந்தியாவில் அகதிகளாக தஞ்சம் கோரி இருந்தனர். இடம் பெயர்ந்தோரில் பெரும்பாலானோர் தமிழர்களாவர். எனினும் ஆயிரக்கணக்கான முஸ்லிம்களும் சில சிங்களவர்களும் கூட இதில் அடங்குவர். கடந்த பல ஆண்டுகளாக நடைபெறும் யுத்தத்தினால் வன்னியில் சுமார் 340,000 பேர் அகதிகளாக உள்ளனர். இலங்கை அரசாங்கம் சுமார் 705,000 உள்நாட்டில் இடம் பெயர்ந்தோருக்கு உணவு உதவி அளிப்பதாகக் கூறியது. இதில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசமும் அடங்கும். மிஞ்சிய 100,000 பேருக்கு உணவளிக்க சர்வதேச உதவி தேவைப்படுகின்றது.

2001இல் அரசாங்க உதவி பெற்ற இடம் பெயர்ந்தோரில் 528,000 பேர் நண்பர்கள், உறவினர்கள் இல்லத்தில் தங்கியிருந்தனர். ஏனைய 172,000 பேர் நலன்புரி நிலையங்களிலும். குடியிருப்புகளிலும் வாழ்ந்தனர்.[57] இவர்களுக்கு சர்வதேச, தேசிய, உள்ளூர் உதவி வழங்கும் அமைப்புகள் தொடர்ந்தும் உதவி செய்தன.

8.3 உள்நாட்டில் இடம் பெயர்ந்தோரின் மாவட்ட ரீதியான பரம்பல் (சனவரி, 2002)

2002 சனவரியில் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அவர்களினால் வழங்கப்பட்ட விபரங்களின் அடிப்படையில் பின்வரும் வரைபடம் அமைக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்திடமிருந்து உணவு உதவி பெறுவோர் மட்டுமே இதில் அடங்கியுள்ளதால் முழு நாட்டிலுள்ள இடம் பெயர்ந்தோர் அனைவரும் இதில் உள்ளடங்கவில்லை. விடுவிக்கப்படாத பிரதேசங்களில் வசித்தல் அல்லது உணவு உதவி பெறாத சுமார் 100,000 பேர் இதில் அடங்காமல் இருக்கலாம்.

---

56 CHA செய்தி அறிக்கை, மாதாந்த நிலைமை பற்றிய அறிக்கை, ஆடி/ஆவணி 2001.

57 *Supra* n. 19, பக். 31.

மாவட்டரீதியாக உள்நாட்டில் புலம்பெயர்ந்த நபர்களின் பரம்பல் (தை 2002)



9. மனித உரிமைகள் ஆணைக்குழு

யாப்பில் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது அவற்றை விசாரித்துப் பொருத்தமான பரிகாரம் வழங்கவென ஒரு நிரந்தர தேசிய நிறுவனமாக மனித உரிமைகள் ஆணைக்குழு (HRC) 1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டது.[58] தடுத்து வைக்கப்பட்டோர் பல்வேறு தடுப்பு முகாம்களுக்கிடையே மாற்றப்படுவதைக் கணக்கில் வைப்பதற்காக மனித உரிமை ஆணைக்குழு ஒரு பதிவேட்டைப் பேணுகின்றது. ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தடுப்பு முகாம்களுக்கு கிரமமாக விஜயம் செய்த போதும் இன்னும் கூடிய விஜயங்கள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும். 2001 பங்குனி மாதத்தில் உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் குறித்த ஆய்வில் உதவுவதற்காக மூன்று உள்ளூர்

58 சற்குணநாதன், A., "மனித உரிமைகள் ஆணைக்குழு", *இலங்கை: மனித உரிமைகள் நிலை, 2000* (சட்டத்துக்கும் சமூகத்துக்குமான நிதியம், கொழும்பு 2000).

அரசுசாரா நிறுவனங்களைத் தெரிவு செய்தது.[59] அதே வருடத்தில் உள்நாட்டில் இடம் பெயர்ந்தோரின் உரிமைகளில் கூடுதல் கவனம் செலுத்தவும் அவர்களது தனிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள உதவி வழங்கவும் தனது இயலளவை மேம்படுத்திக் கொள்வதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழு யு.என்.எச்.சி.ஆர். உடன் ஓர் ஒத்துழைப்பு உடன்படிக்கையைச் செய்து கொண்டது.[60]

10. மனித உரிமைகளைப் பாதுகாத்தல்

உள்ளூர் மனித உரிமை அமைப்புக்கள் பெண்களுக்கெதிரான வன்முறை உட்பட உத்தியோகரீதியான பாராமுகம், பாதுகாப்பில் துஷ்பிரயோகம் ஆகியவற்றுக்கெதிராக தொடர்ந்து குரல் கொடுத்தன. இனவாதத்துக்கெதிரான டர்பன் உலக மாநாடு (Durban World Conference) மற்றும் சிறுவர்களை யுத்தத்தில் ஈடுபடுத்துவதற்கு எதிரான இயக்கம் ஆகியவற்றில் சர்வதேச ரீதியாக அவர்கள் தீவிரமாகச் செயற்பட்டனர்.

விடுதலைப் புலிகளுக்கெதிரான தடையை நீக்குமாறு கோரும் சமாதான இயக்கத்திலும் இவர்கள் ஏனைய கல்வியாளர்களுடன் இணைந்து பாடுபட்டதோடு அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டுமெனவும் கோரினர். போரை நிறுத்துவதற்கான சிவில் நடவடிக்கையாக இலங்கையின் முக்கிய வர்த்தகப் பிரமுகர்கள் ஏனைய தேசிய வர்த்தக நிறுவனங்களுடனும் விளம்பர நிறுவனங்களுடனும் இணைந்து "Sri Lanka First" என்னும் பிரசார இயக்கத்தைத் தொடங்கினர்.

11. சர்வதேச மனித உரிமைக் கடப்பாடுகள்

1981இல் பெண்களுக்கெதிரான எல்லா வகையான பாரபட்சங்களையும் அகற்றுதல் பற்றிய சமவாயத்துக்கான விருப்புரிமைப் பின்னேட்டினை (CEDAW) இலங்கை அங்கீகரித்தது. குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேசக் கட்டுறுத்துக்கான (ICCPR) முதலாவது விருப்புரிமைப் பின்னேட்டின் நடைமுறை போன்றே இதுவும் CEDAW குழுவுக்கான தனிநபர்

---

59 CPA (Centre for Policy Alternatives). LST (Law & Society Trust). CHA Consortium of Humanitarian Agencies) ஆகியன "உள்நாட்டில் இடம் பெயர்ந்த நபர்கள் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு" பற்றிய ஆய்விற்கு ஒன்றிணைந்த பொறுப்பினை ஏற்றுக் கொண்டது.

60 UNHCR பூகோள அறிக்கை இலங்கை 2001.

மனுக்களை அங்கீகரிக்கின்றது. இது உடன்பாடானதொரு நடவடிக்கை எனினும் இலங்கை தான் பங்காளியாக உள்ள பல ஒப்பந்தங்களின் கீழ் அறிக்கைகளை இன்னும் சமர்ப்பிக்கவில்லை. ஒப்பந்தங்களின் பங்காளி அரசுகள் தமது நிலைமை குறித்து கிரமமாக அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டுமென்பது ஓர் ஒப்பந்தக் கடப்பாடாகும். தற்போதுள்ள நிலைமையை கீழே உள்ள அட்டவணை காட்டுகிறது:

ஒப்பந்தம்	திகதி	அறிக்கை	நிலைமை
CAT	01.02.99	இரண்டாம் காலப்பகுதி	சமர்ப்பிக்கப்படவில்லை
CCPR	01.09.96	நான்காம் காலப்பகுதி	சமர்ப்பிக்கப்படவில்லை
CEDAW	10.09.01	ஐந்தாம் காலப்பகுதி	சமர்ப்பிக்கப்படவில்லை
CEDAW	04.11.98	ஐந்தாம் காலப்பகுதி	சமர்ப்பிக்கப்படவில்லை
ICESCR	30.06.00	மூன்றாம் காலப்பகுதி	சமர்ப்பிக்கப்படவில்லை

மூலம்: UNHCR Website

பாரதூரமான மனித உரிமைத் துஷ்பிரயோகங்களுக்கு முடிவு கட்ட வேண்டுமெனில் இலங்கை தனது சர்வதேசக் கடப்பாடுகளை நிறைவேற்ற வேண்டும். வகைகூறல் முறைமை கட்டி எழுப்பப்பட வேண்டும். அதே நேரத்தில் அரசாங்கமானது மனித உரிமைப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். வற்புறுத்தப்பட்டு அல்லது தானாகவே காணாமற் போனோர் மீதான ஐக்கிய நாடுகள் பணிக்குழு (WGEID – Working Group on Enforced and Voluntary Disappearances) மற்றும் காணாமற் போனோர் மீதான சனாதிபதி ஆணைக்குழு உள்ளிட்ட பல்வேறு நிபுணத்துவ அமைப்புகள் முன்வைத்த விதந்துரைகள் பற்றி இலங்கை மீண்டும் கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசாங்கம் மீளாய்வு செய்ய வேண்டும். மனித உரிமை மீறலுக்குக் காரணமானவர்களை நீதியின் முன் நிறுத்த வேண்டியது முக்கியமானதாகும். இத்தகைய வழக்குகளில் ஏதேனும் முன்னேற்றமேற்பட்டதாகத் தெரியவில்லை. பாதாள உலகத்தினர் அரசியல் சக்திகளோடு தொடர்ந்தும் தொடர்புகளைப் பேணி வருகின்றனர். மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் இனரீதியான முறுகல் நிலைக்கு இவர்களே காரணமாக உள்ளனர். மனித உரிமை தொடர்பான சர்வதேச நியமங்களுக்கு அமைவாகச் செல்வதன் முக்கியத்துவத்தை நாம் நிராகரிக்கக் கூடாது. முன்னைய மனித உரிமை மீறல்களுக்கான ஒரு வகைக்கூறல்

பொறிமுறை உருவாக்கப்படல் வேண்டும். புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படும் என்ற பொதுமக்களின் எதிர்பார்ப்புடனேயே கடந்த ஆண்டு முடிவடைந்தது. புதிய அரசாங்கம் இனத்துவப் பிணக்குகளுக்கு ஒரு நல்ல முடிவு காணும் என எதிர்பார்க்கப்பட்டது. எனவே இந்த ஆண்டினைப் போலல்லாது எதிர்வரும் ஆண்டுகள் பாரிய மனித உரிமை மீறல்கள் ஏதும் இடம்பெறாத ஆண்டுகளாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

6415

II

இலங்கை அரசியலமைப்புக்கான 17ஆவது திருத்தம்

ருக்ஷானா நாணயக்கார*

1. அறிமுகம்

இலங்கையின் அண்மைக்கால அரசியலமைப்பு வரலாற்றில் 2001ஆம் ஆண்டு முக்கியமான அபிவிருத்தியைக் குறித்து நிற்கின்றது. 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பில், பெரும் வரவேற்பினைப் பெற்ற 17ஆவது திருத்தமானது இந்த ஆண்டிலேயே மேற்கொள்ளப்பட்டது. புதிய அரசியல் யாப்பு ஒன்றினை அறிமுகம் செய்வதற்குரிய பொதுசன அபிப்பிராயத்தை மதிப்பீடு செய்யும் பொருட்டு மக்களின் ஆணையைப் பெறும் சனாதிபதியின்[1] அறிவித்தல் பாரிய கருத்துப் பரிமாற்றங்களை ஏற்படுத்தியதன் காரணமாகப் பொதுசன வாக்கொடுப்பு கைவிடப்பட வேண்டியதாயிற்று. இலங்கையின் அரசியலமைப்பு வரலாற்றில் இன்னொரு திருத்தம், 1988 இல் மேற்கொள்ளப்பட்ட 16ஆவது திருத்தம் நிகழ்வதற்கு ஏறக்குறைய 11 ஆண்டுகள் எடுத்தன.

---

* விரிவுரையாளர், சட்ட பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்; ஆய்வாளர், சட்டம் மற்றும் சமூகத்துக்கான அறநிலையம், கொழும்பு.

1 இலங்கை அரசாங்க வர்த்தமானியின் மூலம் சனாதிபதியினால் அறிவிக்கப்பட்ட பொதுசன வாக்கெடுப்பு இல. 1192/16, 10 ஆடி 2001.

பாராளுமன்றத்தில் ஆளுங் கட்சியானது அரசியல் யாப்பினைத்[2] திருத்துவதற்கு தேவைப்படும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறாத காரணத்தினால் அத்தகைய திருத்தம் எவையும் சாத்தியமாகவில்லை.

இப்பிரச்சினை காரணமாக, 2000ஆம் ஆண்டில் புதிய அரசியல் யாப்பினை அறிமுகம் செய்யும் முயற்சியும் தோல்வியில் முடிந்தது. எனவே தான் 17ஆவது திருத்தம் அண்மைக்கால அரசியலமைப்பு வரலாற்றில் முக்கியமமான அபிவிருத்தியாகக் கருதப்படுகிறது. இரு பெரும் அரசியல் கட்சிகளின்[3] உடன்பாடும் இதற்குக் கிடைத்தது. 17ஆவது திருத்தமும், குறிப்பாக அரசியலமைப்புச் சபையின் (Constitutional Council) அறிமுகமும் மக்கள் சமுதாயத்தின் வரவேற்பைப் பெற்றன. இவை நாட்டில் நல்லதொரு ஆட்சிக் கலாசாரத்தை உருவாக்கும் செயன்முறைகளுக்கு உதவுமென நம்பப்படுகிறது.[4]

2. திருத்தத்துக்கான பின்னணி

பொதுசன ஐக்கிய முன்னணி (PA) அரசாங்கம், தான் பாராளுமன்றத்தில் இழந்துபோன பெரும்பான்மைப் பலத்தை மீளப் பெறும் நோக்குடன் மக்கள் விடுதலை முன்னணியுடன் (JVP) 2001, புரட்டாதி 5 இல் புரிந்துணர்வு

---

2 பார்க்க, உறுப்புரை 82 (5) அத்தியாயம் XII, 1978 அரசியல்யாப்பு

3 திருத்தத்தில் முக்கிய பங்கினை வகித்த கட்சிகளாகப் பொதுசன ஐக்கிய முன்னணி (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, நவ சமசமாஜக் கட்சி) ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

4 நல்லரசாட்சி பற்றிய எண்ணக்கருவானது, ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் பணிகள் மூலம் தெளிவாக்கப்பட்டுள்ளது. 2000ஆம் ஆண்டின் அதன் தீர்மானத்தின் மூலம் E/CN.4/RES/2000/64 ஆணைக்குழுவானது நல்லரசாட்சியின் முக்கிய பண்புக் கூறுகளாகப் பின்வரும் விடயங்களை இனங் கண்டுகொண்டது.

- வெளிப்படைத்தன்மை
- பொறுப்புடைமை
- வகைசொல்லல்
- பங்கேற்றல்
- பொறுப்புக் கூறல் (மக்கள் தேவைகள் தொடர்பாக)

அதனுடைய புது நூற்றாண்டின் அறிக்கையில், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் சிறந்த ஆட்சி என்பது வகை கூறுதலுடன் இணைந்த மக்களின் பாரியளவிலான பங்கேற்றல் என வலியுறுத்தினார். இது தொடர்பான அறிக்கையின் முழு விபரங்களுக்குப் பார்க்க: http://www.un.org//millennium/sg/report/full.htm. மேலும் சக்தி நெருக்கடி பற்றிய சோனாலி டி. சில்வாவினால் இத்தொகுதியில் எழுதப்பட்ட அத்தியாயத்தையும் பார்க்க.

ஒப்பந்தம் (MOU) ஒன்றில் கைச்சாத்திட்ட பொழுதே திருத்தத்துக்கான யோசனை வெளிப்படுத்தப்பட்டது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அரசாங்கத்துடன் தனது கூட்டினை விலக்கிக் கொண்ட பொழுது அரசாங்கம் பாராளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை இழந்தது. அரசாங்கமும் மக்கள் விடுதலை முன்னணியும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தபோது, 10 ஆசனங்களைக் கொண்டிருந்த மக்கள் விடுதலை முன்னணி பல நிபந்தனைகள் மற்றும் உடன்படிக்கைகளின் அடிப்படையில் ஒரு வருட காலத்துக்கு அதனை மேற்கொண்டது. புரிந்துணர்வு ஒப்பந்தம் பல அரசியலமைப்பு மாற்றங்களை உள்ளடக்கியிருந்த போதிலும், அவற்றுள் மிகவும் முக்கியமான மாற்றங்கள் என, பல சுதந்திர ஆணைக்குழுக்களுடன் (Independent Commission) கூடிய அரசியலமைப்புச் சபையின்[5] அறிமுகம், புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஆறு மாத காலத்திற்குள் நிறைவேற்றுச் சனாதிபதி முறையை நீக்கி, நிறைவேற்று அதிகாரத்தினைப் பாராளுமன்றத்துக்கு வழங்குதலும், பாராளுமன்றத்தில் சகல இனக் குழுக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவம்[6] செய்வதை உறுதிப்படுத்தும் தேர்தல் முறையை உருவாக்குதலும் முக்கியமானவையாக இருந்தன. மிகக் குறுகிய காலம் மட்டும் நீடித்திருந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்[7] 5ஆவது பிரிவு மட்டுமே செயலுருவாக்கம் பெற்றதுடன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

> *5. பொதுசன ஐக்கிய முன்னணியானது எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல கட்சிகளினதும் ஒப்புதலின் பேரில் வரையப்பட்ட அரசியல் யாப்புக்கான உத்தேச17ஆவது திருத்தத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றச் சம்மதம் வழங்குகின்றது. ஒப்பந்தத்தின் பட்டியலில் இவ்வட்டனத்துக் கட்சிகளும் இடம் பெற்றுள்ளன. 17ஆவது திருத்தம் கீழ்வரும் நிறுவனங்களை அமைப்பது பற்றியதாயினும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் இரு தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய முக்கிய திருத்தங்களைக் கருத்திற் கொண்டு 2001, புரட்டாதி 24 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அந் நிறுவனங்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.*

---

5 புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 5ஆவது உப பிரிவு.

6 புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 7ஆவது உப பிரிவு.

7 பொதுசன ஐக்கிய முன்னணி உறுப்பினர் சிலர் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தாவியதினால், பாராளுமன்றத்தில் அரசாங்கம் தனது பெரும்பான்மையை இழந்தபோது, சனாதிபதியினால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதுடன், புரிந்துணர்வு ஒப்பந்தம் குறுகிய காலமே நீடித்தது.

(அ) அரசியலமைப்புச் சபை
(ஆ) சுதந்திர பொதுச் சேவை ஆணைக்குழு
(இ) சுதந்திர நீதிச் சேவை ஆணைக்குழு
(ஈ) சுதந்திர தேர்தல் ஆணைக்குழு
(உ) சுதந்திர பொலிஸ் ஆணைக்குழு

2001, ஒக்டோபர் 5ஆம் திகதிக்கு முன்னர் அரசியலமைப்புச் சபை உருவாக்கப்படுதல் வேண்டும்.[8]

புரிந்துணர்வு உடன்படிக்கையில் வலியுறுத்தப்பட்டிருந்த சுதந்திர ஆணைக்குழுக்கள் பற்றிய எண்ணக்கரு இலங்கை அரசியலமைப்பு வரலாற்றில் முற்றிலும் புதியனவன்று. 1947இல் சோல்பரி அரசியல் யாப்பின் மூலம் முதலாவது பொதுச்சேவை ஆணைக்குழுவும், நீதிச்சேவை ஆணைக்குழுவும் அறிமுகப்படுத்தப் பட்டிருந்ததுடன் 1972 இல் இலங்கையின் முதலாவது குடியரசு அரசியலமைப்பின் மூலம் அவை நீக்கப்பட்டிருந்தன. இக்காலத்திலிருந்து 17ஆவது திருத்தம் தொடர்பான நீண்டகாலச் செயன்முறைகள் இவ்விடயம் தொடர்பான கருத்துக்களின் விருத்தியின் பின் தொடர்ந்து இடம் பெற்று வந்துள்ளன. 1988-1989 காலப்பகுதியில் நிகழ்ந்த பிரச்சினைகளின் காரணங்களைக் கண்டறிவதற்கு காலஞ்சென்ற சனாதிபதி ஆர். பிரேமதாசவினால் நியமிக்கப்பபட்ட இளைஞர் ஆணைக்குழு (Youth Commission) ''*தெரிவத்தாட்சி பற்றிய சுதந்திர ஆணைக்குழுவினை*'' (an Independent Commission of nomination) அறிக்கையின்[9] முக்கிய அம்சமாகக் கொண்டிருந்தது. சுதந்திர ஆணைக்குழு என்னும் கருத்து, இளைஞர் ஆணைக்குழுவுக்கு எடுத்துரைக்கப்பட்ட விடயங்களிலிருந்து தோற்றம் பெற்ற போது, சமூகத்தில் பரவலாகக் காணப்பட்ட அரசியல் முனைவாக்கமானது அளவுக்கு அதிகமான பிரிவினை என்னும் பரிமாணத்தை அடைந்திருந்தது.[10]

இளைஞர் ஆணைக்குழு அரசியல் மயப்படுத்தலை நான்கு தலைப்புக்களின் கீழ் வகைப்படுத்தியிருந்தது.[11]

---

8 புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 5ஆவது உப பிரிவு தொர்பாக பொதுசன ஐக்கிய முன்னணியின் சார்பாக அதன் செயலாளர் டி. எம். ஜெயரத்தின அவர்களுக்கும் மக்கள் விடுதலை முன்னணி சார்பாக அதன் செயலாளர் ரில்வின் சில்வாவுக்கும் இடையில் 2001 புரட்டாதி 5ஆம் திகதியன்று கொழும்பில் இணக்கம் காணப்பட்டது.

9 பருவப் பத்திரம் இல. I-1990 இளைஞர் பற்றிய சனாதிபதி ஆணைக்குழு அறிக்கை, பங்குனி, 1990. 2.3.1990 அன்று அரசினால் பிரசுரிக்கப்பட்டது.

10 மேற்படி அத்தியாயம் 1.

11 மேற்படி, பக்கம் 1.

- அரச சேவைக்கு ஆளணியினரைத் திரட்டும் போது அரசியலதிகாரத்தின் துஷ்பிரயோகம்.

- ஆளுங்கட்சியின் ஆதரவாளர்களுக்கு அரசாங்க ஒப்பந்தங்களையும், அனுமதிப் பத்திரங்களையும் வழங்கும் போது அரசியல் அதிகாரத்தைத் தவறாக பிரயோகித்தல்.

- தற்போது காணப்படும் சனநாயக நிறுவனங்களைக் குறைத்து மதிப்பிடும் வகையில் அரசியல் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தல்.

- அரசாங்கத்தின் அல்லது அரசாங்க நிறுவனங்களின் நாளாந்த நிருவாகத்தில் அரசியல் தலையீடு.

ஆணைக்குழு உறுப்பினர்கள், நியமன ஒழுங்குமுறையொன்றின் தேவையை உணர்ந்து கொண்டதுடன், அவை போதியளவுக்குப் புறவயமானதாகவும் பக்கச்சார்பற்றதாகவும், பொதுமக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவும் இருக்க வேண்டும் எனவும் உணர்ந்து கொண்டனர்.

இதனால் இளைஞர் ஆணைக்குழுவானது ''தெரிவத்தாட்சி ஆணைக்குழு'' வொன்றின் உருவாக்கத்திற்குரிய பிரேரணைகளை வழங்கியதுடன் அதற்கு நியமிக்கப்பட வேண்டிய நபர்களின் பெயர்களையும் சனாதிபதிக்கு விதந்துரைத்தது.

- சில முக்கியமான பிரிவுகளுக்குரிய ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு, இடமாற்றம் மற்றும் பதவி விலகல் போன்றவற்றுக்கு முக்கிய ஆணைக்குழுக்கள் பொறுப்பாக இருக்கும்.

- விதிவிலக்காக முக்கியத்துவம் வாய்ந்த தெரிவு செய்யப்பட்ட சில விடயங்கள் மற்றும் குறுங்கால அல்லது ஒரு பிரிவினருக்கான நலன்களைக் கருத்திற் கொள்ளாத துறைகள் தொடர்பான கொள்கைகளை வகுப்பதற்குப் பொறுப்பான ஆணைக்குழுக்கள்.[12]

அரசியலமைப்புச் சபையின் தோற்றமாக இதனைக் கருதுவதுடன் 1994இல் பொதுசன ஐக்கிய முன்னணியின் (PA) விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டு இருந்ததுடன் ஐப்பசி 1997[13] மற்றும் 2000 இல் பொதுசன ஐக்கிய முன்னணி அரசினால் சமர்ப்பிக்கப்படவிருந்த அரசியலமைப்பு வரைவிலும் முக்கியத்துவம்

---

12 *Ibid.*, பக். 5

13 பார்க்க, Dattatreya, C. S., ' The Proposal for constitutional Council'. *The draft Constitution of Sri Lanka, Critical Aspects.* (Panditaratne, D. and Ratnam, P. eds.) (Law & Society Trust, Colombo, 1998)

பெற்றிருந்தது. 2000 ஆண்டின் அரசியலமைப்பு சட்டவரைவின் 14 ஆம் (XIV) அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளினால் குறிப்பிடப்பட்ட அரசியலமைப்புச் சபை 17ஆவது திருத்தத்தின் கீழ் சொல்லப்பட்டவற்றில் இருந்தும் சிறிதளவு வேறுபட்டுக் காணப்பட்டது. ஆவணி 2000இல் அரசாங்கம் அரசியலமைப்பு வரைபினை வாபஸ் பெற்றுக் கொண்டதினால் அரசியலமைப்புச் சபையினை உருவாக்கும் முயற்சியும் கைவிடப்பட்டது.

3. 17ஆவது திருத்தம் மீதான மேல் நீதிமன்றத்தின் தீர்மானம்

அமைச்சரவையானது, அரசியலமைப்புக்கான 17ஆவது திருத்தம் மீதான வெள்ளையறிக்கையை 2001 புரட்டாதி 19 இல் அங்கீகரித்தது. சனாதிபதி அதனைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததும், அரசியலமைப்பின் இயல்பினைத் தீர்மானிப்பதற்குமான மசோதாவாகக் கருதி மறுநாள் நீதிமன்றிற்குச் சமர்ப்பித்திருந்தார். இவ்விடயம் பிரதம நீதியரசர் சரத். என். சில்வா, நீதியரசர் எதுஸ் சூரியா, நீதியரசர் ஹெக்டர் எஸ். யாப்பா ஆகிய மூவரைக் கொண்ட குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.

பொதுசன ஊடகங்களின் சுதந்திரம் தொடர்பான மசோதாவில் உள்ள உறுப்புரைகளுக்கு எதிரான ஐந்து மனுக்கள் உயர் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அத்தகைய மனுதார்களில் உபாலி செய்தித்தாள் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம், லீடர் வெளியீட்டாளர், விஜயா வெளியீட்டாளர், விக்டர் ஐவன், ராவய வாராந்தப் பதிப்பாசிரியர் மற்றும் சுதந்திர ஊடக அமைப்பினைச் சேர்ந்த வருண கருணாதிலக்க முதலியோர் அடங்குவர். சகல மனுக்களும் ஊடகச் சுதந்திரத்துடன் தொடர்புடைய அரசியலமைப்பு ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன. அத்தகைய ஏற்பாடுகள் குறிப்பாக ஊடகச் சுதந்திரத்தை அடக்க முற்பட்டிருந்தன.

மசோதாவின் பிரச்சினைக்குரிய உறுப்புரை 104 B 5 (அ) பின்வருமாறு:

> *ஆணைக்குழுவானது, (தேர்தல் ஆணைக்குழு) எந்தத் தேர்தலையோ அல்லது பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பையோ நடத்துவதைப் பொறுத்தவரையில், ஆணைக்குழு பொருத்தமானது எனக் கருதும் அறிவுறுத்தல்களை விடுக்கும் அதிகாரம் கொண்டது. இந்த அறிவுறுத்தல்களை நியாயமானதும் சுதந்திரமானதுமான தேர்தல் ஒன்று நடைபெறுவதனை உறுதிப்படுத்தும் முகமாக யாதேனும் ஒலிபரப்பினை அல்லது ஒளிபரப்பினைச் செய்பவர்*

அல்லது ஒரு செய்திப் பத்திரிகை உரிமையாளர் அல்லது வெளியீட்டாளருக்குக் காலத்துக்குக் காலம் விடுப்பதற்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இருக்கும்.

உறுப்புரையின் 6 ஆவது பந்தி பின்வருமாறு கூறுகின்றது:

ஒரு தேர்தலின்போது வேட்பாளர்கள் நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கும் திகதிக்கு அல்லது பொதுசன வாக்கெடுப்பு நடைபெற இருப்பது பற்றிப் பிரகடனம் செய்யப்படும் திகதிக்கு ஏழு நாட்களுக்கு முன்னர் பிரசுரகர்த்தாவோ அல்லது உரிமையாளரோ அல்லது ஒரு இயக்குனரோ தாம் எந்தக் குறிப்பிட்ட வேட்பாளரையும் அல்லது எந்த அரசியல் கட்சியையோ அல்லது சுயேட்சைக் குழுவையோ அடுத்த தேர்தலில் அல்லது பொதுசன வாக்கெடுப்பின்போது முன்வைக்கப்படும் கருத்தை எதிர்ப்பதும் ஆதரிப்பதும் தமது ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்பு நிலையத்தின் கொள்கையென ஆணைக்குழுவிற்கு ஏழு நாட்களுக்கு முன்னர் அறிவிக்குமிடத்து அப்பிரசுர கர்த்தா அல்லது உரிமையாளர் அல்லது இயக்குனரைப் பொறுத்தவரையில் உறுப்புரை 104 (ஆ) இன் 5 ஆம் பந்தியின் (அ) துணைப்பந்தியின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படலாகாது.

உறுப்புரையின் 7ஆவது பந்தி கூறுவதாவது:

இந்த உறுப்புரையின் 6ஆவது பந்தியில் கூறப்பட்டுள்ளவாறு, தகவலைப் பெற்ற பின்னர், ஆணைக்குழு அதனைப் பற்றிப் பொது மக்களுக்கு அறிவுறுத்தும் முகமாக, கிடைக்கப்பெற்ற தகவலுக்குப் போதுமான விளம்பரத்தைக் கொடுக்க வேண்டியது ஆணைக்குழுவின் கடமையாயிற்று.

மேற்கூறிய உறுப்புரைகள் பற்றி மனுதாரரின் வழக்கறிஞர்கள் விவாதித்த பொழுது, செய்தித் தாள்களை வெளியிடும் உரிமையாளர்கள் தமது அரசியல் இணைப்பினை வாக்கெடுப்புப் பற்றி அறிவிக்கப்பட்டு ஏழு நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும் என்னும் விடயம் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் என்ற அத்தியாயத்துடன் முரண்பட்டுள்ளது எனத் தெரிவித்தனர்.

இத்தகைய ஏற்பாடுகள் அரசியல் யாப்பின் 3[14], 10[15] மற்றும் 12 (1)[16] ஆகிய உறுப்புரைகளுடன் முரண்பட்டவை.

ஆகவே, இங்கு இடம் பெற்ற வாதங்கள் மேலே எடுத்துக் காட்டப்பட்ட மசோதாவில் உள்ள பிரிவுகள், தேர்தல் ஆணைக்குழுவுக்கு பக்கச் சார்பான, எல்லையற்ற மற்றும் நிபந்தனையற்ற அதிகாரங்களின் மூலம் செய்தித் தாள்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை வழங்கியிருந்தன என எடுத்துக் காட்டின. ஆகவே தமது கட்சிக்காரர்கள் உத்தேச அரசியலமைப்புச் சபையை உருவாக்குதல் அல்லது 17ஆவது திருத்தத்தின் கீழ்க் கூறப்பட்டுள்ள சுதந்திர ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுவதை எதிர்ப்பதைத் தவிர வழியில்லை என வாதிட்டனர்.

மேற்கூறிய வாதங்களைக் கருத்திற் கொண்டு பிரதம நீதியரசர் குறிப்பிட்ட உறுப்புரையை நீக்குமாறு சட்டமா அதிபருக்கு விதந்துரைத்ததுடன், சுதந்திர ஊடகங்கள் ஏதாவது அரசியல் பின்னணியைக் கொண்டிருக்கலாம் என்றும் எடுத்துக் காட்டினார். அத்தகைய ஏற்பாட்டினை வாபஸ் பெறுவதற்கும் சட்டமா அதிபர் இணங்கிக் கொண்டார். ஆயினும் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை உறுதி செய்வதற்கு உதவும் வகையில், தேர்தலின் போது சனநாயகரீதியில் நடந்து கொள்ளக் கூடிய விதத்திலான குறிப்புகளைப் பிரதம நீதியரசர் எடுத்துக் காட்டியிருந்தார். மேலும், தேர்தல் ஆணையாளரால் வழங்கப்பட்ட குறிப்புகள் முரணானவை எனக் கருதப்படுமானால் அவை சட்டத்தின் முன் கொண்டு வரப்படலாம் என்றும் நீதியரசர் குறிப்பிட்டார்.[17] ஆகவே மசோதாவைப் பாராளுமன்றம் அங்கீகரிக்க மூன்றிலிரண்டு பெரும்பான்மை அவசியம். இந்தத் தீர்மானத்தைச் சபாநாயகருக்கு அறிவிப்பது தொடர்பான தனது அவதானிப்பில் உயர் நீதிமன்றம், அரசியலமைப்புச் சபைக்கு நியமனங்களை மேற்கொள்ளும் அதிகாரம் சனாதிபதியிடம் இருப்பதினால், நிறைவேற்று சனாதிபதியின் அதிகாரங்களில் தேய்மானங்கள் இருக்காது எனக் கூறியது.

---

14 இலங்கை குடியரசில் இறைமை என்பது மக்களில் தங்கியிருக்கின்றது. அத்துடன் அது பராதீனப்படுத்த முடியாதது. இறைமையானது அரசாங்கத்தின் அதிகாரங்களையும் அடிப்படை உரிமைகளையும் வாக்குரிமையையும் உள்ளடக்கும்.

15 ஒவ்வொரு மனிதனும் சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சியும் சமயமும், ஒரு சமயத்தைப் பின்பற்றும் சுதந்திரமும் அல்லது விரும்பிய அடிப்படையில் நம்பிக்கை கொள்ளவும் உரித்துடையவன்.

16 சட்டத்தின் முன் எல்லா நபர்களும் சமமானவர்கள் என்பதுடன் சட்டத்தின் மூலம் சம பாதுகாப்பைப் பெறும் உரித்துடையவர்.

17 அரசியலமைப்புத் திருத்தங்களுடன் தொடர்பான 1978 அரசியலமைப்பின் XII ஆவது அத்தியாயத்தினைப் பார்க்க. அதே அத்தியாயத்தில் உறுப்புரை 83இன் கீழ் உள்ள உறுப்புரைகள், திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டுமெனில் அல்லது அவற்றினை இரத்துச் செய்வதாக இருந்தால் பொதுசன வாக்கெடுப்பு மூலம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

இறுதியாக, மசோதா மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேறியதுடன், சுதந்திரத்தின் பின்னருள்ள இலங்கையின் நீண்ட அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வினையும் கொணர்ந்தது. சபையில் இறுதி வாக்கெடுப்புக்கு விடுமுன்னர் அரசாங்கம் பல்வேறு அரசியல் கட்சிகளினதும் திருத்தங்கள் பலவற்றுக்கு இடமளித்தது. ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் பொதுசன ஐக்கிய முன்னணி ஆகியவை மசோதாவுக்கு வாக்களித்தன. எனினும் சிகல உறுமய வாக்களிப்பிலிருந்தும் விலகிக் கொண்டது. இந்த மசோதாவுக்குக் ஆதரவாக 208 வாக்குகள் கிடைத்தன. தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) வாக்கெடுப்பு நேரத்தில் சபையில் பிரசன்னமாக இருக்கவில்லை. பத்திரிகைச் செய்தி வெளியிட்ட நேரத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) யானது தான் சிறுசிறு அரசியலமைப்புச் சீர்திருத்தங்களில் பங்கெடுத்துக் கொள்ளாது என அறிவித்தது. தமிழ்த் தேசியப் பிரச்சினைகளுக்குக்கான 18 தீர்வினை இது மேலும் பின்னடையச் செய்யும் என்பதுவே அதற்குக் காரணமாக இருந்தது.[18] சிகல உறுமய, சபையில் சிறுபான்மைச் சமூகங்களுக்கென உள்ள ஒதுக்கீட்டினை எதிர்த்தது. (5இல் மூன்று இடங்கள்) இதனால், சிகல உறுமய உறுப்பினர் சம்பிக்க ரணவக்க வாக்களிப்பில் பங்கு பற்றவில்லை. எனினும் திருத்தத்தில் அரசியல் இணக்கப்பாடு பற்றிய விடயங்கள் காணப்படுவதாக குடியுரிமைச் சமூகங்கள் புகழ்ந்துரைத்துள்ளன.[19]

4. 17ஆவது திருத்தத்தின் முனைப்பான அம்சங்களும் ஆணைக்குழுக்களின் அதிகாரங்களும்

4.1 அரசியலமைப்புச் சபை

அரசியலமைப்புச் சபையின் அதிகாரம் மீதான ஏற்பாடுகள், நிறைவேற்று அதிகாரத்தினைப் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளிலிருந்தும் தெரிவு செய்யப்படுபவர்களைக் கொண்ட அமைப்பொன்றுக்கு மாற்றம் செய்வதாகவே அவதானிக்கப்பட்டது. திருத்தத்தின் 41A உறுப்புரையின்படி அரசியலமைப்புச் சபையானது பின்வருவோரைக் கொண்டிருக்கும்.

---

18 2001 புரட்டாதி 25ஆம் திகதியன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் (TULF) மத்திய குழுவினால் விடுக்கப்பட்ட பத்திரிகைச் செய்தி.

19 உதாரணமாக, 2002 தை 24ஆம் திகதி *த ஐலண்ட்* பத்திரிகையில் வெளியிடப்பட்ட உயர் தொழிற்சங்க அமைப்பினால் விடுக்கப்பட்ட செய்திகளைப் பார்க்க.

(அ) பிரதம அமைச்சர்
(ஆ) சபாநயகர்
(இ) பாராளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவர்
(ஈ) சனாதிபதியால் நியமனம் செய்யப்படும் ஒருவர்
(உ) பிரதம மந்திரியாலும் எதிர்க்கட்சித் தலைவராலும் தெரிவு செய்யப்பட்டு சனாதிபதியால் நியமிக்கப்படும் 5 பேர்
(ஊ) அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரும்பான்மையினரின் உடன்பாட்டுடன் பிரேரிக்கப்படும் ஒருவர் அல்லது அரசியல் கட்சிகளைச் சாராத சுயேச்சைக் குழுக்களிலிருந்து ஒருவர் சனாதிபதியால் நியமிக்கப்படுவர்.[20]

முன்மொழியப்பட்டவர் (உ) மற்றும் (ஊ) வகையின்படி மூன்று வருட காலம் பதவி வகிக்கக் முடியும். ஆனால் மீண்டும் நியமிக்கப்படுவதற்கு அவர்கள் தகுதியற்றவர்கள்.[21] சனாதிபதியால் நியமனம் பெற்றவரும் மூன்று வருடம் பதவி வகிக்கலாம் எனினும் அவர் மீண்டும் தெரிவு செய்யப்படுவதனைத் தடைசெய்யும் ஏற்பாடுகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. மற்றைய உறுப்பினரிலும் பார்க்கச் சனாதிபதியினால் முன்மொழியப்படுபவர்களுக்குச் சலுகை வழங்குதல் சபையிலுள்ள எல்லா உறுப்பினர்களினதும் சம அந்தஸ்தைப் பாதிக்கக் கூடியது. சபைக்கு ஒருவரை நியமித்தல் தொடர்பாக சனாதிபதிக்கு அதிகாரமளிக்கும் ஏற்பாடுகள் பற்றி அதிகம் விமர்சிக்கப்பட்டது. நடைமுறையில் அநேகமான நாடுகளில் நாட்டின் தலைவர் அரசியலமைப்புச் சார்ந்த உயர் பதவிகளுக்கு ஒருவரை நியமிக்கும் தன் விருப்புரிமை இல்லை. அரசாங்கத்தின் தலைவர் மக்களால் நியமிக்கப்படுவதால் அவர் தனிப்பட்ட தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரமானது, வலுவேறாக்கம் என்னும் எண்ணக்கருவுடன் முரண்படுவதுடன், ஆட்சியின் ஏனைய அமைப்புகளிலும் தலையிடுவதற்கும் அது வழிகோலும் என்ற வாதம் முன்வைக்கப்படுகின்றது.[22]

17ஆவது திருத்தத்தின்படி, அரசியலமைப்புச் சபையின் விதந்துரையின் பேரில் ஆணைக்குழுக்களுக்கான நியமனங்களை சனாதிபதியே மேற்கொள்வார். அவ்வாறே அரசியலமைப்பு உயர் பதவிகளுக்கான

---

20 பார்க்க, 17ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் உறுப்புரை 41 A.

21 பார்க்க, உறுப்புரை 41A (7) மற்றும் (10)

22 ஐக்கிய அமெரிக்கா நாடுகளின் சனாதிபதி மக்களால் நியமிக்கப்படுகிறார். சமஷ்டி ஆட்சிக்கான முக்கிய பதவிகளுக்குரிய நபர்களைத் தெரிவு செய்வதற்கும், நியமிப்பதற்கும் காங்கிரசின் அங்கீகாரத்தை அவர் கட்டாயம் பெற வேண்டும். அத்தகைய நியமனங்களுக்கு யு. எஸ். சனாதிபதியினால் அனுப்பப்படும் பெயர்கள் காங்கிரசின் முழுமையான பரிசீலனைக்கு உட்படுவதுடன் சனாதிபதியின் விதந்துரைகள் காங்கிரசினால் மறுக்கப்பட்ட பல சந்தர்ப்பங்களும் உண்டு.

நியமனங்களும், சனாதிபதியின் விதந்துரையின்படி, அரசியலமைப்புச் சபையின் அனுமதியுடன் இடம் பெறுகின்றன. ஆகவே நியமனங்கள் பற்றிய நடைமுறைகளில் சனாதிபதியின் பிரசன்னம் தவிர்க்க முடியாதது. சபைக்குரிய ஆட்களை நியமனம் செய்வதில் சனாதிபதியினால் மேற்கொள்ளப்படும் தலையீடானது அரசியலமைப்புப் பேரவையின் சுதந்திரத்தில் ஏற்படுத்தும் தலையீடாகவே கருதப்படுகின்றது. மேலும் பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் பிரேரிக்கும் பெயர்களில் உடன்பாடின்மை காணப்படும் போதும், அது போல சிறுபான்மைக் கட்சிகளும் ஒருவரை நியமிப்பதில் உடன்பாடு காணப்படுதல் என்பதும் இலங்கை அரசியலில் ஒருவரையொருவர் எதிர்கொண்டு உடன்பாட்டுக்கு வரும் இயல்பினைத் தோற்றுவித்துள்ளது.

(ஈ), (உ) மற்றும் (ஊ) ஆகிய பிரிவுகளின் கீழ் நியமிக்கப்படும் அல்லது பிரேரிக்கப்படும் நபர்கள் சமுதாயத்தில் சிறப்பு மிக்கவர்களாகவும், கணிப்புள்ளவர்களாகவும், பொதுவாழ்வில் மதிக்கப்படுபவர்களாகவும் இருப்பதுடன் ஏதாவது அரசியல் கட்சியின் உறுப்பினரல்லாதவராகவும் இருத்தல் வேண்டும்.[23] அரசியலமைப்புப் பேரவையின் பிரிவினையற்ற இயல்பினை எடுத்துக் காட்டும் முயற்சியாக இருப்பதால் திருத்தத்தில் இது ஒரு மிக முக்கிய ஏற்பாடாக விளங்குகின்றது. இப்பேரவையில் பிரதம மந்திரி, எதிர்கட்சித் தலைவர், சபாநாயகர் ஆகியோர் உறுப்பினராக இருப்பது அச்சத்தைத் தோற்றுவிக்கலாம். அதாவது, பேரவையில் உறுப்பினராக இருக்கும் அரசியல் சார்பற்ற நபர்கள் பெரும்பான்மையாக இருப்பதினால் அவர்கள் சில பரிந்துரைகளைச் செய்ய முற்படுவர். ஆயினும் பிரச்சினைக்குள்ளாகும் பரிந்துரைகள் இறுதியில் அரசியல் கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையிலேயே தீர்க்கப்படும் என்பதே அவ்வச்சமாகும்.

நாட்டிலுள்ள சிறுபான்மைச் சமூகங்களுக்கு எண்சார்ந்த ஒரு கோட்டாவினைத் திருத்தமானது பேரவையில் வரையறுத்திருப்பதும் கவனத்திற்குரியது. உறுப்புரை 41 A (3) கூறுவதன்படி பிரதம மந்திரியும், எதிர்க்கட்சித் தலைவரும் தவிர்ந்த மற்றைய மூன்று பேரும் பாராளுமன்றத்திலுள்ள ஏனைய அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுடன் மேற்கொள்ளப்படும் கலந்தாலோசனையின்படி நியமிக்கப்படுவதுடன் அவர் சிறுபான்மைச் சமூகங்களைச் சார்ந்தவராகவும் இருத்தல் வேண்டும்.[24] சபையில் சிறுபான்மையினரின் நலன்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டும் என்பதுவே இந்த ஏற்பாட்டுக்கான பின்னணியாகும்.[25]

---

23 உறுப்புரை 41 A (4)

24 முஸ்லிம்கள், மலைநாட்டுத் தமிழர் மற்றும் யாழ்ப்பாணத் தமிழர்

25 இந்த உறுப்புரையே சிகல உறுமய உறுப்பினரால் வெகுவாக எதிர்க்கப்பட்டது.

17ஆவது திருத்தத்திலுள்ள, சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் பற்றிய ஏற்பாடு தொடர்பான மசோதாவின் வசன அமைப்பு உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து வேறுபடுகின்றது. ஆரம்பப் பதிப்புருவில், ஆணைக்குழுக்களின் உறுப்புரிமையானது பல்வேறு இனக்குழுக்கள் மற்றும் செல்வாக்குக் குழுக்கள் தொடர்பாக இயன்றளவு செயல்முறைக்கு உகந்ததாகவும் செயற்றிறன் வாய்ந்ததாகவும் இருக்க வேண்டும் எனக் கருதியது. இது பாராளுமன்றத்தில் சிறுபான்மைக் கட்சிகளின் கோரிக்கையின் விளைவாக, குறிப்பிட்டதொரு இனத்துவப் பங்கீட்டு அளவாக மாற்றப்பட்டது.

இலங்கையின் அண்மைக்கால அரசியலமைப்புப் பேச்சுவழக்கில் சிறுபான்மையினர் என்பது பொதுவாகத் தமிழர்களையும் (மலையகத் தமிழர் உட்பட) முஸ்லிம் சமூகத்தவர்களையும் கருதி நிற்கின்றது. ஆயினும் இத்தகைய கூற்று நாட்டில் வாழ்கின்ற சிறிய சிறுபான்மைக் குழுக்களான பறங்கியர், பார்சிகள் மற்றும் சீனர்கள் ஆகியவற்றைச் சார்ந்தவர்கள் சபையில் இடம் பெறுவதற்குத் தகுதியற்றவர்கள் என்னும் கேள்வியை எழுப்புகின்றது.

இவ்விடயத்தில் *இராமப்பிள்ளை எதிர் பெஸ்டஸ் பெரேரா*[26] என்னும் வழக்கில் உயர் நீதிமன்றம் பின்வருமாறு குறிப்பிட்டது:

> *இனத்துவரீதியான சலுகைகளும் அல்லது பங்கீட்டு அளவுகளும் சொந்த நலன்களுக்கு அனுமதிக்கக் கூடியவையன்று. ஏனெனில் சுதந்திர சனநாயகக் குடியரசில் குடிமகன் ஒருவர் இன்னொருவருக்குச் சமமானவர்; அவர் எந்தக் குழுவைச் சார்ந்தவராக இருந்தாலும் சமமாக மதிக்கப்பட வேண்டியவர். அது போலவே, இனத்துவப் பங்கீடுகளும் தற்போதுள்ள இனத்துவச் சமமின்மையைத் திருத்தியமைக்கும் நோக்குடன் இலகுவாகப் (வலிந்து) புகுத்தப்படக் கூடாது. சாதாரணமாகக் காணப்படும் இனச் சமமின்மைப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் நோக்குடன் இ்ாரீதியான அனுமதிப் பங்குகளை விதித்துவிட முடியாது. ஆயினும் கடந்த காலத்து பாரபட்சங்களை எடுத்துக்காட்டும் முறையில் மிகப் பாரதூரமான, மோசமான அதிக பிரதிநிதித்துவம் அல்லது குறைந்த பிரதிநிதித்துவம் இருக்கும் சந்தர்ப்பங்களில் இனத்துவ அனுமதிப் பங்குக்கு இடமுண்டு.*[27]

---

26 1991 1 Sri LR 11.

27 முன் கூறப்பட்டது. பக்கம் 14

இந்த வழக்கில், சுங்கத் திணைக்களத்தில் இனத்துவப் பங்கீட்டின் அடிப்படையிலான பதவியுயர்வுத் திட்டம் ஒன்றினை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. அவ்வாறே *ஷெரிப்டினும் ஏனைய இருவரும எதிர் செயலாளர் பொதுச் சேவை ஆணைக்குழு மற்றும் ஏனைய பதினேழு பேர்*[28] என்ற வழக்கில் உயர் நீதிமன்றமானது, இச் சுற்றறிக்கையைப் பொதுச் சேவைகளுக்கான ஆட்சேர்ப்புத் தொடர்பான இனத்துவப் பங்கீடு பற்றிய தத்துவங்களை வரையறுக்கும் பொதுநிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 15/90 என்பது அரசியலமைப்பின் உறுப்புரைகள் 12(1) மற்றும் 12 (2)[29] ஆகியவற்றினை மீறுகின்றது எனப் பிரகடணம் செய்தது.

ஆகவே, திருத்தத்தில் இனங்காணப்பட்டுள்ள குறிப்பான இனத்துவப் பங்கீடு, உயர் நீதிமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமத்துவ வாசகம் பற்றிய விளக்கத்திலிருந்து வேறுபடுகின்றது. உதாரணமாக, முஸ்லிம் (Muslims) என்பது சமய அடிப்படையிலானது எனின், அச் சொல், முஸ்லிம்கள் (moors), மலாயர் (Malays) மற்றும் இஸ்லாத்தினைப் பின்பற்றும் சிங்களவர் அல்லது தமிழர்களையும் உள்ளடக்கும். அல்லது இதுவொரு இனத்துவம் சார்ந்த அம்சத்தைக் கொண்டுள்ளதா? மேலும், மலையக அல்லது பெருந்தோட்டத்துறையைச் சார்ந்த தமிழர்கள் தனியான பிரதிநிதித்துவத்துக்குக் கோரிக்கை விடுத்தால், சிங்களவர்களும் தாழ்நாட்டு மற்றும் மலைநாடு என பிரிந்து கொள்வார்கள்?

இலங்கை போன்ற பல்லின சமுதாயத்தில் பன்மைத்துவம் (plurality) ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அது போலவே பொதுவான தேசிய அடையாளமும் தேசிய நோக்கங்களும் முக்கியமானவை. பத்து உறுப்பினர்களை மாத்திரம் கொண்ட சிறியதொரு அமைப்பான அரசியலமைப்புச் சபையில் இனரீதியான பிரதிநிதித்துவம் மிக முக்கியமானது எனின் தேசிய நலனைக் கருத்திற் கொண்டு மிகச் சிறந்த மற்றும் பொருத்தமான ஆட்களைத் தெரிவு செய்வதற்கு அது ஒரு தடையாக இருக்கும். ஆகவே மசோதாவில் இடம் பெற்ற சொல்லாட்சி ஏற்றுக் கொள்ளத்தக்கதொரு வாசகமாக இருக்கும். இது இனத்துவ பன்முகத்தன்மையை ஊக்குவிக்கின்றதாயினும், பால்வகை மற்றும் பிரதேச ரீதியான பிரதிநிதித்துவம் போன்ற ஏனைய வகை பன்மைத்துவத்திற்கு ஏற்ற வகையில் நெகிழ்ச்சித் தன்மையை உருவாக்கும்.

4.2 அரசியலமைப்புப் பேரவையின் அதிகாரங்கள்

அரசியலமைப்பு பேரவையானது ஒரு நியமன அதிகார சபை என விபரிக்கப்படுகின்றது. 17ஆவது திருத்தத்தின் கீழ் நியமிக்கப்பட்ட

---

28 SC Application No. 249/96, SC Minutes 19.11.1998.

29 அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தின் சமத்துவம் பற்றிய வாசகம்

ஆணைக்குழுக்களுக்கான ஆளணியினரை நியமிப்பதே பேரவையின் பிரதான செயற்பாடாகும். திருத்தத்தின் 14(1) B உறுப்புரிமையின்படி, எடுத்துக்காட்டப்பட்டுள்ள எந்தவொரு ஆணைக்குழுவுக்கும், பேரவையின் விதந்துரையில்லாமல் தலைவர் என்ற வகையில் சனாதிபதி எந்த நபரையும் நியமிக்கக் கூடாது. இத்தகைய ஆணைக்குழுக்கள் பின்வருமாறு:

(அ) தேர்தல் ஆணைக்குழு
(ஆ) பொதுச் சேவை ஆணைக்குழு
(இ) தேசிய பொலிஸ் ஆணைக்குழு
(ஈ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
(உ) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச் சாட்டுக்களை விசாரிக்கும் நிரந்தர ஆணைக்குழு
(ஊ) நிதி ஆணைக்குழு
(எ) தொகுதி நிர்ணய ஆணைக்குழு

2000 ஆம் ஆண்டு அரசியலமைப்பு வரைவில் அரசகரும மொழி ஆணைக்குழுவும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் உள்ளடக்கப்பட்டிருந்தன எனினும் 17 ஆவது திருத்த ஏற்பாடுகளில் அவை நீக்கப்பட்டிருந்தன.

17ஆவது திருத்தத்தின் 41 C (1) உறுப்புரையானது சபைக்கு சனாதிபதியினால் செய்யப்பட்ட விதந்துரையின் பேரில் சபையின் அனுமதியுடனன்றி உறுப்புரையின் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஏதாவது பதவிக்கும் சனாதிபதியினால் ஆட்களை நியமிக்க முடியாது. ஆகவே, சபையின் அனுமதியானது, சனாதிபதியினால் இனங் காணப்படும் பெயர்களுடன் மட்டுப்படுத்தப்படுகிறது. எனினும் ஏதேச்சாதிகார அதிகாரங்கள் எதுவும் சனாதிபதிக்கு வழங்கப்படவில்லை என்பதினால் பேரவையின் அங்கிகாரம் இன்றி எந்தவொரு நியமனமும் சாத்தியமற்றது.

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகள்[30]

(அ) உயர் நீதிமன்றின் பிரதம நீதியரசரும் நீதிபதிகளும்
(ஆ) மேம்முறையீட்டு நீதிமன்றின் தலைவரும் நீதிபதிகளும்
(இ) நீதிச் சேவை ஆணைக்குழுவின் தலைவர் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள்[31]
(ஈ) சட்ட மா அதிபர்
(உ) கணக்காளர் நாயகம்

---

30 இதன் பின்னர் அரசியலமைப்பு உயர் பதவிகள் எனக் குறிப்பிடப்படும்.

31 பிரதம நீதியரசரே நீதிச்சேவை ஆணைக்குழுவின் தலைவராவார்.

(ஊ) பொலிஸ் மா அதிபர்
(எ) நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஓம்புட்ஸ்மன்)
(ஏ) பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

உயர் நீதிமன்றத்துக்கான நீதிபதிகளையும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கான நீதிபதிகளையும் நியமனம் செய்வதில் பேரவையானது[32] பிரதம நீதியரசர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரின் கருத்துக்களைப் பெறுதல் வேண்டும்.[33]

இத்தகைய ஏற்பாடுகள் நன்கு வரவேற்கப்பட வேண்டும் என்பதுடன் அத்தகைய நிறுவனங்களிலும் காரியாலயங்களிலும் பொதுமக்களின் நம்பிக்கையானது அதிகரிக்கப்பட வேண்டும். நியமிக்கப்பட வேண்டியவர்கள் ஆற்றல் வாய்ந்தவர்களாக இருத்தல் வேண்டும். இந்தப் பட்டியலில் உயர்பதவிநிலை உத்தியோகத்தர்களான இராணுவத் தளபதி, கடற்படைத் தளபதி மற்றும் விமானப்படைத் தளபதி ஆகியோரின் பெயர்கள் இடம்பெறவில்லையாயினும் அவர்களின் நியமனங்களுக்கு பேரவையின் அங்கீகாரம் அவசியம். அவர்களின் நியமனங்கள் சனாதிபதியின் விருப்புரிமைக்கே விடப்பட்டுள்ளன.

மேற்கூறிய நியமனங்கள் அரசியலமைப்புப் பேரவையின் அனுமதியைப் பெறவேண்டும். ஏனெனில் அத்தகைய நிறுவனங்கள் பொதுமக்களுக்குரியவை. தேசிய நலன்களைப் பேணுவதற்கு வடிவமைக்கப்பட்டவை. ஒரு கட்சி அல்லது தனியாளின் நலன்களுக்கு ஏற்ப அதிகாரத்தைப் பயன்படுத்தும் விதத்தில் அமையவில்லை.

ஆயுதப்படைகளும் தேசத்துக்குச் சொந்தமானவை. அண்மைக் காலத்தில், நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் ஆயுதப் பிணக்குகள் நிலவியபோது, சகலவிதமான நடுநிலை விகிதாசாரங்களிலிருந்தும் விலகிச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். இராணுவ நடைமுறைகள் யாவும் ஆளுங் கட்சியின் நலன்களுக்கு ஏற்புடையதாக அமைந்திருந்தன என்ற பொதுவான விமர்சனமும் இருந்தது. பலவித பாதிப்புக்களும் செலவுமிகுந்த அழிவுகளையும் ஏற்படுத்திய போர் முயற்சிகளுக்குப் பின்னால், அரசியல்ரீதியான அல்லது இராணுவத் தலைமைத்துவங்களே பல சந்தர்ப்பங்களில் பொறுப்பாக இருந்துள்ளன. ஆகவே உயர் பதவிகளிலுள்ள ஆயுதப்படை உத்தியோகத்தர்களின் செயல்கள் தேசத்தின் நலன்கருதி வகைசொல்லக்கூடியதாக இருத்தல் அவசியமானது. தேசியப் பாதுகாப்புப் பிரச்சினையானது எதிர்வாதத்துக்குரிய விடயமாகத் தோற்றம் பெற்ற வேளையில், மேலே வலியுறுத்திக் கூறப்பட்டது போன்று அறிவுமிக்கதொரு ஆய்வு நிலையில் காணப்படவில்லை. ஆகவே தேசிய

32 இது ஒரு கட்டாயமான தேவையல்ல என்பதை மொழி எடுத்துக் காட்டுகிறது.

33 உறுப்புரை 41 C (4)

பாதுகாப்பு என்ற விடயம ஆயுதப்படையின் அரசியல்மயப்படுத்தலுடன் இணைந்து செல்லக்கூடியதல்ல என்ற பலமான விவாதம் முன்வைக்கப்பட்டாலும், உண்மையிலே அவை உறுதிப்படுத்தப்படல் வேண்டும். ஆயினும் இத்தகையதொரு சந்தர்ப்பம் இழக்கப்பட்டுவிட்டது.

4.4 பேரவையின் பணி நடைமுறைகள்

திருத்தத்தின் உறுப்புரை 41 E (5) இன்படி, பேரவையானது ஏகமனதாக சில தீர்மானங்களுக்கு வர முயற்சித்தல் வேண்டும்.[34] பேரவை பின்பற்றுவதற்கென இறுக்கமான வழிகாட்டல்கள் திருத்தத்தில் இடம்பெற்றுள்ளன. 41 (E) 1 இன்படி, பேரவையின் கூட்டங்கள் மற்றும் அக்கூட்டங்களில் இடம்பெறும் பரிமாற்றங்கள் தொடர்பான விடயங்களும் ஏதாவது நியமனங்களுக்குப் பொருத்தமான நபர்களுக்கான அனுமதி அல்லது சிபார்சுகள் உட்பட பேரவையினாலேயே அந்தக் கூட்டங்களில் நிர்ணயிக்கப்பட வேண்டும். ஆகவே பேரவை ஆலோசனை நடத்தும்போது, நடைமுறையினைப் பின்பற்ற உறுப்பினர்களுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறைகளை முன்வைக்கும் பொழுது வெளிப்படைத்தன்மை, வகைசொல்லல் போன்றவற்வற்றுடன் நல்லரசாட்சித் தத்துவங்களுக்கு பேரவை செயலுருவம் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. ஆணைக்குழுக்களுக்கும் உயர் பதவிகளுக்கும் நியமனங்களை மேற்கொள்வதே இதிலுள்ள முக்கியமான அம்சங்களில் ஒன்றாகும். அரசியலமைப்புப் பேரவையினால் இது மேற்கொள்ளப்படுதல் வேண்டும். பேரவையில் உள்ள சகல உறுப்பினர்களுக்கும் பெயர்களைப் பிரேரிக்கும் அதிகாரம் வழங்கப்படும்போது, கட்டுப்படுத்த முடியாத நிலைமைகள் ஏற்படலாம். மறுபுறத்தில் குறிப்பிட்ட உறுப்பினர் அல்லது பேரவை உறுப்பினர்களின், பெயர்கள் பிரேரிக்கப்படும்போது பேரவை உறுப்பினரின் சமத்துவம் இழக்கப்படும் நிலையும் ஏற்படும்.

ஆகவே, பேரவையின் பணியானது, நியமிப்பதற்கான தகுதி பற்றிய பரந்த வழிகாட்டல்களைக் கொண்டிருக்கும் 17 ஆவது திருத்தத்தைப் போன்று இலகுவானதன்று. உதாரணமாக, உறுப்புரை 41 (B) 3 குறிப்பிடுவது போன்று ஆணைக்குழுக்களின் தலைவரையும் உறுப்பினர்களையும் நியமிப்பதில், பல்வேறு இனக் குழுக்களையும் பிரதிபலிக்கும் வகையில் சபையின் சிபார்சுகள் இருத்தல் வேண்டும். இத்தகைய அரசியலமைப்புச்சார்ந்த வழிகாட்டல்களை

---

34 அதே உறுப்புரையின்படி, ஏகமனதான நிலைமை இல்லாதபோது, பேரவையின் தீர்மானங்களுக்கு, 5 உறுப்பினர்களுக்குக் குறையாதவர்களின் ஒப்புதல் வாக்குகள் அவசியமானவை.

வலுப்படுத்துவதற்கு வெளிப்படைத்தன்மை என்ற நியதி அவசியமானது. இத்தகைய நியதிகளை விருத்தி செய்யும்பொழுது, தமது கருத்துக்களைக் கூறுமாறு பல்வேறு பயன் பெறுவோரை பேரவை அழைக்கலாம். உதாரணமாக, அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரை, சட்டமா அதிபரை அல்லது சட்டவரைஞர்களை இத்தகைய ஆலோசனைகளில் பங்குகொள்ளுமாறு அழைக்கலாம், அல்லது அத்தகையதொரு முயற்சிக்குத் தேவைப்படும் நிலைமை ஏற்படுமிடத்து பல்வேறு பாராளுமன்றப் பிரதிநிதிகளை அல்லது பொதுசன உறுப்பினரையும் அழைக்கலாம். இருப்பினும் இதற்கு வலுவளிக்கும் வகையிலான எழுத்துமூல ஏற்பாடுகள் எவையும் திருத்தத்தில் இல்லை.

உறுப்புரை 41 B (4) இன்படி, அரசியலமைப்பு நடைமுறைகள் எதுவும் இல்லாத வேளையில் ஆணைக்குழுவின் தலைவரை அல்லது உறுப்பினர்களை நீக்குதல் பேரவையின் முன்னனுமதியுடன் சனாதிபதியால் மட்டுமே மேற்கொள்ளப்படலாம். இத்தகைய அரசியலமைப்பு ஏற்பாடுகள், ஆணைக்குழுவின் பணிகளை மதிப்பிடுவதற்கானதொரு பொறிமுறையை பேரவை உருவாக்குதல் வேண்டும் என்ற பொறுப்பைச் சுமத்துகின்றது. தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணிபற்றிய அத்தகையதொரு மதிப்பீடானது, பதில் கடமை தொடர்பான நியமனங்கள் மற்றும் ஆணைக்குழு உறுப்பினர்களை நீக்குதல் தொடர்பான தீர்மானங்களை எடுத்தல் தொடர்பான விடயங்களில் பேரவைக்கு உதவும்.

பேரவைக்கான[35] ஒரு செயலாளர் பேரவையினால் நியமிக்கப்படலாம். பேரவையின் தொழிற்பாடுகளை நிறைவேற்ற அவசியமெனக் கருதுமிடத்து பேரவைக்கு உதவும் அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது.[36]

பேரவையானது அதன் பணிகளில் இரகசியத் தன்மையைப் பேண வேண்டும். அதேவேளையில், அதன் செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் வெளிப்படைத் தன்மையையும் பின்பற்றுதல் வேண்டும். பிரேரணைகள் தொடர்பான கலந்துரையாடல்கள் வெளிச்செல்லுமாயின், சபையின் நடுநிலைத்தன்மைக்கும் அதில் உள்ளோரின் நற்பெயருக்கும் களங்கம் ஏற்படும்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நியமனங்கள் மற்றும் பதவியுயர்வுகள் தொடர்பான கலந்தாலோசனைகளில் இறுக்கமான இரகசியத்தன்மை பேணப்படுவதுடன், நியமனச்சபையின் உறுப்பினர்களும் இரகசியம் பேணல் பற்றிய உறுதியுரையை அத்தகைய கலந்தாலோசனை தொடங்கப்படுவதற்கு

---

35 உறுப்புரை 41 (D) 1

36 உறுப்புரை 41 (D) 2

முன்னர் வழங்க வேண்டும். பேரவையின் நம்பகத்தன்மை மற்றும் இரகசியத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு பேரவையினால் அதேபோன்றதொரு ஒழுங்குமுறை உருவாக்கப்படல் வேண்டும். இவை ஒழுக்கக் கோவையின் (code of ethics) பகுதியாக விளங்குவதோடு. பேரவையின் உறுப்பினர்கள் சபையின் மாண்பினையும் நம்பகத்தன்மையையும் உறுதிசெய்யும்வகையில் அவற்றினைப் பின்பற்ற வேண்டும்.[37]

அரசியலமைப்புச் சபையானது, ஆட்களை நியமனஞ் செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு சபையாகும். அடிப்படைச் சட்டத்தின் 41 F உறுப்புரையின்படி, பேரவையானது அதேபோன்ற ஏனைய கடமைகளையும் தொழிற்பாடுகளையும் நிறைவேற்றலாம் என்பது அரசியலமைப்பின் மூலம் பேரவைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. ஆனால் அத்தகைய அதிகாரம் திருத்தத்திலோ அல்லது ஏனைய பயன்பாட்டிலுள்ள சட்டங்களிலோ இடம்பெறவில்லை. ஆகவே, தற்பொழுது பேரவை உறுப்பினர்களின் ஒரேயொரு தொழிற்பாடு, ஆணைக்குழுக்களுக்கும் திருத்தத்தில் எடுத்துக் கூறப்பட்ட பதவிகளுக்கும் முன்மொழிவுகளை மேற்கொள்வதேயாகும்.

இளைஞர் ஆணைக்குழு பரிந்துரைத்த நியமன ஆணைக்குழுவின் அதிகார எல்லையின் இரண்டாவது அம்சம் மேலே ஆராயப்பட்டது.[38] இச் சம்பவமானது மிக புறநடையாக முக்கியத்துவம் வாய்ந்த சில குறிப்பிட்ட விடயங்களில் கொள்கையாக்கம் செய்யப் பொறுப்பான முக்கிய ஆணைக்குழுக்கள் தொடர்பானது மட்டுமன்றி குறுங்கால அல்லது பக்கச்சார்பற்றதாகவும் இவ்வம்சம் அமைந்தது.

அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தத்தில் இவை இடம்பெறவில்லை. அரசியலமைப்புப் பேரவையானது, பல்துறைகளைச் சேர்ந்த மிகத் திறமைவாய்ந்த ஆட்களைக் கொண்டிருக்கும் என்பதினால் கல்வி, சக்தி

---

37 2002 சித்திரை மாதம் BMICH இல் நடைபெற்ற அரசியலமைப்புப் பேரவைக் கலந்துரையாடலில் இது தொடர்பாக திரு. எஸ். எஸ். விஜயரெட்ன அவர்கள் முன்வைத்த இக்கருத்துக்கு ஆசிரியர் நன்றி தெரிவித்துக் கொள்கிறார். இதனைச் சட்டம் மற்றும் சமூகத்துக்கான அறநிலையம் ஒழுங்கு செய்தது.

38 *Supra* n 12.

மற்றும் சக்தித் திட்டமிடல் போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பாக அவர்களின் அபிப்பிராயத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.[39]

5. சதந்திர ஆணைக்குழுக்கள்

5.1 தேர்தல் ஆணைக்குழு

பாராளுமன்றத்தில் திருத்தத்திற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டதிலிருந்து மேற்கொள்ளப்பட்ட விரிவான கலந்துரையாடலின் மையக் குவிவாக தேர்தல் ஆணைக்குழுவே விளங்கியது. குறிப்பாக தேர்தல் ஆணைக்குழு தொடர்பான ஏற்பாடுகளின் அமுலாக்க நடைமுறைகள், மார்கழியில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின்போது கவனத்தைப் பெற்றன. கடந்த இரு தசாப்த காலத்தில் தேர்தல் தொடர்பான வன்முறைகளும் தவறான நடைமுறைகளும் இலங்கையின் தேர்தல் நடைமுறையின் ஒன்றிணைந்தவொரு பகுதியாக எதிர்பாராதவாறு மாற்றம் பெற்றுள்ளது.[40] தேர்தலின் சுதந்திரமான மற்றும் நியாயமான தன்மைகளைக் கவனிப்பதற்காக இரண்டு தேர்தலுக்கிடையே

---

[39] ஏனைய சில நாடுகளிலும் அரசியலமைப்புப் பேரவை எனும் எண்ணக்கரு இருக்கின்ற போதிலும், அப்பேரவைகளின் அதிகாரங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடும். பிரான்சின் அரசியலமைப்புப் பேரவையானது (*Le Counseil Constitutional*) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் சட்டங்களின் அரசியலமைப்புத்தன்மை தொடர்பாகவும் தேர்தல்கள் மற்றும் பொதுசன வாக்கெடுப்பின் தகுதி பற்றியே கவனம் செலுத்துகின்றது. இலங்கையில் இருப்பதைப் போன்று இதுவொரு நியமிக்கப்பட்ட அதிகாரசபையன்று. தென்னாசியாவின் உதாரணமொன்றை நேபாளத்தின் அரசியலமைப்பிலிருந்து அறிந்து கொள்ளலாம். அதில் உறுப்புரை 117 இன்படி அரசியலமைப்புப் பேரவையானது நாட்டின் அரசியலமைப்புக்கும் பொருந்துமாறே பரிந்துரைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது. அரசியலமைப்புப் பேரவையானது பிரதம மந்திரியைத் தலைவராகவும், பிரதம நீதியரசர், பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர், பொதுச்சபைத் தலைவர், பிரதிநிதிகள் சபையின் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரையும் கொண்டிருக்கின்றது. பிலிப்பைன்ஸ் அரசியலமைப்பின் உறுப்புரை IX யின் கீழ் அரசியலமைப்பு ஆணைக்குழுவொன்று அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அது சிவில் சேவை ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழு, கணக்குப் பரிசோதனை ஆணைக்குழு என வேறு மூன்று பிரிவுகளையும் கொண்டுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரை, திருத்தத்தினை அறிமுகம் செய்வதற்கு முன்னர் இந்த விடயம் பற்றிய சர்வதேச அனுபவங்களை மீள் நோக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டமை துரதிஷ்டவசமானது.

[40] பார்க்க, வாக்களிப்பிற்கான உரிமை: ஒக்டோபரின் பாராளுமன்றத் தேர்தல், குமுதினி சாமுவேல், அத்தியாயம் IX, *இலங்கை: மனித உரிமைகள் பற்றிய நிலை 2001* (Law & Society Trust, Colombo, 2001) and People's choice and Presidential Election 1999, A Report on the presidential Election of Sri lanka (law and Society Trust, Colombo. 2000)

நிலவிய வன்முறைச் செயற்பாடுகளின் எண்ணிக்கைகளை ஒப்பிடுமளவுக்கு நிலைமை மாற்றமடைந்தது. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணையாளர் பக்கச்சார்பற்ற முறையில் செயற்பட வேண்டுமென எந்தச் சட்டமும் தெளிவாகக் குறிப்பிடவில்லை. இத்தகைய அதிகாரங்களை ஆணையாளர் செயற்படுத்தவும், நிறைவேற்றவும், கடைப்பிடிக்கவும் சட்டத்தின் மூலம் இத்தகைய கடமைகளையும், செயற்பாடுகளையும் தமக்குரியதாக்கிக்கொள்ளவும் சட்டம் அவசியமானது.[41] சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான துரித ஏற்பாடுகள் எவையும் இருக்கவில்லை. இத்தகைய இடைவெளியை நிரப்புவதற்கு உச்ச நீதிமன்றம் பெரிதும் முயன்றது. 1999, 2000 ஆண்டுகளில் நடைபெற்ற தேசிய மற்றும் பிராந்திய ரீதியிலான தேர்தல்கள் பல உயர் நீதிமன்றத்தின் நுண்ணாய்வுக்கு உள்ளாயின. அவர்களது முயற்சியில், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை வலியுறுத்தும் வகையில், உயர் நீதிமன்றமானது, அரசியலமைப்பின் 93 ஆவது உறுப்புரையில் கூறப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்தியது. குடியரசின் சனாதிபதித் தேர்தல், பாராளுமன்ற உறுப்பினர் தேர்தல் மற்றும் ஏழாவது பொதுசன வாக்கெடுப்பு தொடர்பான தேர்தல்கள் யாவும் சுதந்திரமாகவும் சமத்துவமானதாகவும் இரகசிய வாக்களிப்பின் மூலமும் நடைபெற வேண்டுமென எடுத்துக் காட்டியிருந்தது.

எகொடவெல மற்றும் ஏனையோர எதிர் திசாநாயக்க மற்றும் ஏனையோர்[42] என்ற முக்கியமான வழக்கிலே (இது 1999 இல் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலின்போது கண்டி மாவட்டத்தில் இடம்பெற்ற சில சம்பவங்கள் தொடர்பானது) தேர்தல் ஆணையாளருக்கு சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவதற்கான அத்தியாவசியமான உதவிகள் மற்றும் ஆளணியினர் வழங்கப்படவில்லை என்பதனை நீதியரசர் மார்க் பெர்னான்டோ சுட்டிக் காட்டினார். அதே வழக்கின் தீர்ப்பினை வழங்கும்போது, தேர்தல் ஆணையாளர் போதியளவு வளங்களைக் கொண்டிருக்கவில்லை என்றும், போதிய பாகாப்புக்கான ஏற்பாடுகளை உறுதிப்படுத்த அவர் தவறிவிட்டார் என்றும் கூறியதுடன் ஆளணியினர், ஆயுதங்கள், தொடர்பாடல் சாதனங்கள், வாகனங்கள் போன்ற சொற்களை நீதிமன்றம் பயன்படுத்தியது. அத்தகைய சம்பவங்கள் பற்றி, நீதிமன்றின் அபிப்பிராயப்படி, சுதந்திரமானதும், நியாயமானதும் மற்றும் இரகசிய வாக்கெடுப்பினை நடத்த வேண்டியது தேர்தல் ஆணையாளரின் சட்டரீதியான கடமையாகுமென வலியுறுத்தியது.

எகொடவெல வழக்கில உயர் நீதிமன்றத்தினால் கூறப்பட்ட தத்துவங்கள் மற்றும் அவதானிப்புக்களுக்கான சட்ட வலுவை 17 ஆவது திருத்தம்

---

41 உறுப்புரை 104, 1978 அரசியலமைப்பு

42 SC Application No. 412/99, SC Minutes 3.4.2001

வழங்கியது. உறுப்புரை 103 (2) ஆனது, தேர்தல் ஆணைக்குழு சுதந்திரமான, நியாயமான தேர்தல்களையும் பொதுசன வாக்கெடுப்பினையும் நடத்த வேண்டும் எனக் கூறுகின்றது. சனாதிபதித் தேர்தல் தொடக்கம் உள்ளூராட்சித் தேர்தல் வரையிலுள்ள எல்லாவகையான தேர்தல்கள் தொடர்பான சகல சட்டங்களையும் நடைமுறைப்படுத்த வேண்டியது தேர்தல் ஆணைக்குழுவின் கடமையாகும்.[43] நாட்டிலுள்ள சகல அதிகாரம் பெற்றோரும் அத்தகைய சட்டங்களை நடைமுறைப்படுத்த ஆணைக்குழுவுடன் ஒத்துழைக்கும் வகையில் உறுதிசெய்யப்படுதல் வேண்டும்.[44] தேர்தல் ஆணைக்குழுவானது அரசுக்கு அல்லது அரச கூட்டுத்தாபனங்களுக்குச் சொந்தமான அசையும் அல்லது அசையாத சொத்துக்களை ஒரு வேட்பாளரை அல்லது அரசியற் கட்சியை அல்லது சுயேட்சைக் குழுவின் வேட்பாளரை ஊக்குவிக்கும் வகையில் அல்லது தடுக்கும் வகையில் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கு அதிகாரம் உண்டு.[45] இவ்விடயம் தொடர்பாக, ஆணைக்குழு எழுத்து மூலமான ஆணைகளை வழங்கலாம். தனியாள் அல்லது அலுவலர் ஒருவரின பராமரிப்பில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்கும் சொத்துக்களும் அத்தகைய நெறிப்படுத்தல்களுக்கு அமைய உள்ளனவா என்பதைக் கவனித்தலும் ஒவ்வொரு தனியாள் அல்லது அலுவலரின் கடமையாகும்.[46]

ஆணைக்குழுவானது, சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவதற்கு தடைகளை ஏற்படுத்தும் ஏதாவது செயல்களை அல்லது சந்தர்ப்பங்களைத் தடுக்க அல்லது கட்டுப்படுத்த ஆயுதப்படைகளைப் பயன்படுத்துவதற்கும் பரிந்துரை செய்யலாம்.[47] வாக்களிப்பு நிலையப் பொறுப்பதிகாரிகளை நியமித்தலும் ஆணைக்குழுவின் பணியாகும். அவ்வாறே தேர்தல் கடமையிலுள்ள ஏனைய எல்லா உத்தியோகத்தர்களுக்கும் ஆணைக்குழுவே பொறுப்பாக இருப்பதுடன் ஆணைக்குழுவுக்கு பதில்கூறும் பொறுப்புள்ளவர்களாகவும் அவர்கள் இருத்தல் வேண்டும். ஆணைக்குழு தனது அதிகாரங்களை தேர்தல் ஆணையாளர் நாயகத்துக்கும் (Commissioner General of Elections) பகிர்ந்தளிக்கலாம். (தேர்தல் ஆணையாளர் பதவியின் புதிய பெயர்) அவர் தமது அதிகாரங்கள், கடமைகள் அல்லது தொழிற்பாடுகளை நடைமுறைப்படுத்தலாம், நிறைவேற்றலாம், அவை ஆணைக்குழுவின் நெறிப்படுத்தலுக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டவை. தற்போதுள்ள தேர்தல் ஆணையாளர் போலன்றி, தேர்தல் ஆணையாளர் நாயகத்தை அரசியலமைப்புச் சபையின் அனுமதியின்றிச்

---

43 உறுப்புரை 104 B (1)

44 உறுப்புரை 104 B (2)

45 உறுப்புரை 104 B (4) (அ)

46 மேற்படி., (ஆ)

47 உறுப்புரை 104 D

சனாதிபதி நீக்க முடியாது. பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளுக்கமைய, ஆணைக்குழுவானது அதன் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நடைமுறைப்படுத்தவும், நிறைவேற்றவும், பிரயோகிக்கவும் பாராளுமன்றத்துக்கு பதில் கூறும் பொறுப்புடையது.[48]

இத்தகைய ஏற்பாடுகளிலிருந்து ஆணைக்குழுவானது சதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்குரிய பரந்த அதிகாரங்களைக் கொண்டிருக்கிறது என்பது தெளிவாகின்றது. ஆயினும் தேர்தலொன்றின்போது பொதுச்சொத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரமளிக்கும் ஏற்பாடுகள், ஒவ்வொரு தனியாள் அல்லது அலுவலரின் பராமரிப்பில் அல்லது கட்டுப்பாட்டிலுள்ள அத்தகைய சொத்துக்களை ஆணைக்குழுவின் கட்டளைக்கு உடன்படும் உறுதியற்ற நிலைமையை உருவாக்குகின்றது. அவ்வாறு இணங்கி நடக்க மறுக்கும் விடயம் தொடர்பாக, நிதிசார்ந்த வலியுறுத்தல் ஒழுங்குமுறைகள் எவையும் எதிர்பார்க்கப்படவில்லை. திருத்தம் பற்றிய இறுதி வரைவுகளில் ஒன்று, ஆணைக்குழுவின் நெறிப்படுத்தல்களுக்கு இணங்கிச் செல்லாத நேரத்தில் சட்ட விதிமுறைகளைக் கையாளும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது. தற்போதுள்ள சட்டத்தின்படி, தண்டிக்கப்படக்கூடிய சட்டம் குறிப்பான குற்றங்கள் இல்லையானால், ஆணைக்குழு அல்லது சட்டமா அதிபர், உயர்நீதிமன்றின் நியாயாதிக்கத்தை ஊக்குவிக்கலாம். அத்தகைய ஒரு குற்றத்திற்காக ஒருவன் குற்றவாளியெனக் காணப்பட்டால், கடும தண்டணைக்கு உள்ளாவான் என்பதனை வரைவு கொண்டுள்ளது. இத்தகைய தண்டனை ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத அபராதமாகவோ அல்லது, ஏழு வருடச் சிறைத் தண்டனையாகவோ அல்லது இரண்டு வருடமாகவோ இருக்கலாம். இத்தகைய ஏற்பாடு திருத்தத்தின் இறுதி வரைவில் திரிபுபடுத்தப்பட்டமை துரதிஷ்டவசமானதே. இந்த ஏற்பாடு பேணப்பட்டிருப்பின், ஆணைக்குழுவின் அதிகாரங்கள் கணிசமான அளவில் பலம் பெற்றிருக்கும்.

இது 17 ஆவது திருத்தத்தின் குறிப்பிடத்தக்க குறைபாடாக இருப்பதுடன் திருத்தத்தின் சரியான தொழிற்பாட்டுக்குப் பரிகாரம் தேடுவதும் அவசியமாகும். மனித உரிமைகள் நிறுவகமானது (IHR) பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல் பற்றிய நிகழ்ச்சித் திட்டத்தின் இறுதி அறிக்கையில், தேர்தல் ஆணையாளர் நாயகத்தின் அதிகாரங்களின் போதாத் தன்மை திருத்தத்தில் காணப்படும் முக்கிய குறைபாடு என்றே கருதியது.[49] இந்த அறிக்கையில் பொதுக் கட்டிடங்கள், வாகனங்களைப் பயன்படுத்துதல், பெருந்தொகையான அரச உத்தியோகத்தர்களைச் சேவைக்கு அமர்த்துதல் மற்றும் கூட்டுத்தாபனப

48 உறுப்புரை 104 B (3)

49 பொதுவளங்களின் துஷ்பிரயோகம் பற்றிய குழுவின் அறிக்கையைப் பார்க்க. மனித உரிமைகள் நிறுவகத்தினால் பிரசுரிக்கப்பட்டு, 2001 மார்கழி 21 இல் வெளியிடப்பட்டது.

பணியாளர்களை அன்றைய அரசாங்கம் 2001 மார்கழியில் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது பிரசாரத்துக்குப பயன்படுத்தியமை போன்றவற்றைக் குறிப்பிட்டிருந்தது. இந்த அறிக்கையானது, 17 ஆவது திருத்தத்தின 104 B உறுப்புரை, அத்தகைய நிலைமைகளைத் தடுபபதற்குப் போதிய அதிகாரங்களை தேர்தல் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கவில்லை. உதாரணமாக, தேர்தல் ஆணையாளரால் வழங்கப்பட்ட தடுப்புக் கட்டளையை மீறும் ஒரு நபரை அல்லது வாகனத்தைக் கைது செய்யும் அதிகாரம ஆணையாளர் நாயகத்துக்கு இல்லை. இதன்படி, அரசியலமைபபின் 104 B உறுப்புரை தொடர்பான திருத்தம் அல்லது விசேட ஏற்பாடுகள் சட்டமானது, ஒரு வேட்பாளர் அல்லது, அரசியற் கட்சிகள் தேர்தல் நோக்கங்களுக்காக பொதுச் சொத்தினைத் துஷ்பிரயோகம் செய்தால் அவரைப் பாதுகாப்பில் வைக்கும் அதிகாரம் தேர்தல் ஆனைக்குழுவுக்கு (அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரம் அளிக்கப்பட்ட ஏனைய நபர்) உண்டு.

உறுப்புரை 104 B (5) (அ) இன்படி, வானொலி, தொலைக்காட்சி அல்லது அச்சு ஊடக நிறுவனங்களுக்கும், சுதந்திரமான, நியாயமான தேர்தலை உறுதிப்படுத்தும் வகையிலான விடயங்களை அவசியமெனக் கருதுமிடத்து அதற்குரிய வழிகாட்டல்களை வழங்கும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு உள்ளது. ஆனால், இந்த ஏற்பாட்டின் விளைவுகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கும், இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்துக்கும் மட்டுமே பிரயோகிக்கப்படக் கூடியவை. ஏனெனில் இந்த இரண்டு நிறுவனங்களுமே அத்தகைய வழிகாட்டல்களுடன் இணங்கிச் செல்கின்றன. இத்தகைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களில் ஏதாயினும் மீறுகை ஏற்படுமிடத்து தேர்தல் தொடர்பான ஒலிபரப்புக்களை நிருவகிப்பதற்காக அதிகாரம் வாய்ந்த ஒருவரை நியமிக்கும் அதிகாரம் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய ஏற்பாடுகளுக்கான கொள்கை அடிப்படையாக, தேர்தல் காலத்தின்போது, சகல அரசியற் கட்சிகளுக்கும் சமசந்தர்ப்பத்தை வழங்கலாம். அரசாங்க ஊடகங்களான அவ்விரு நிறுவனங்களும் அரச நிதியில் இயங்குவதால் அவைமட்டுமே வகைசொல்ல வேண்டும். இரு நிறுவனங்களுக்குமான குறிப்பான அங்கீகாரமானது இத்தகைய உறுப்புரையின் நோக்கெல்லையிலிருந்து ஏனைய ஊடக நிறுவனங்களை விலக்கிக் கொள்கின்றன. ஏரிக்கரை, ITN, லக்கண்ட (சிங்கள மொழி வானொலி நிலையம்) போன்ற சில ஊடக நிறுவனங்கள் கொள்கையளவில் கம்பனிகளாக இருந்தாலும் அரசாங்க ஊடக நிறுவனங்கள் போலவே வினைத்திறனுடன் இயங்குகின்றமையால் அவ்வினைத்திறனைத் தவிர்த்தல் திருத்தத்தில் காணப்படும் குறைபாடாகும். ஊடக வசதிகளைப் பக்கச் சார்பின்றிச் சகல அரசியற் கட்சிகளுக்கும், சுதந்திரக் குழுக்களுக்கும் பொதுத்

தேர்தலின்போது பகிர்ந்தளிக்கும் விடயத்தில் திருத்தமானது உத்தரவாதமளிக்கவில்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது.

உறுப்புரை 104 C (1) இன்படி ஆணைக்குழுவானது, பொலிஸ் அதிபருக்கும் தேர்தலை நடத்துவதற்கு இவை தேவைப்படுவதால் அத்தகைய வசதிகளை அவருக்கு வழங்கலாம். இக் கோரிக்கைக்கு அவரும் இணங்கிப் போகக் கட்டுப்பட்டவர். இந்த உறுப்புரையின்படி ஒவ்வொரு பொலிஸ் உத்தியோகத்தரும் ஆணைக்குழுவுக்கு உதவ வேண்டும். தேர்தல் காலத்தில் ஆணைக்குழுவின் நெறிப்படுத்தல் மற்றும் கட்டுப்பாடுகளின்படி அவர்கள் நடந்து கொள்ள வேண்டும். ஆணைக்குழுவின் நெறிப்படுத்தலின்படி நம்பிக்கையோடு சட்டரீதியான நடவடிக்கையை அவர்கள் மேற்கொள்ளுமிடத்து அப்பொலிஸ் அலுவலருக்கு எதிராக எந்தக் குற்றச்சாட்டுக்களோ அல்லது சட்டரீதியான நடவடிக்கைகளோ எடுக்கப்படமாட்டாது.[50]

இத்தகைய ஏற்பாடானது மார்கழி மாதத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலிலே முரண்பாடான விடயமாக இருந்தது. பொதுத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் பொலிஸ் மாஅதிபர் 69 பொலிஸ் உத்தியோகத்தர்களை இடமாற்றும் கட்டளையைப் பிறப்பித்தார். பாராளுமன்றத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் அமுலாக இருந்த இடமாற்றங்கள் அனைத்தையும் நிறுத்திவைக்குமாறு தேர்தல் ஆணையாளர் பொலிஸ் மாஅதிபரை வேண்டிக்கொண்டார். பொலிஸ் மாஅதிபரின் நிலைப்பாடானது இவ்விடயத்தில் தேர்தல் ஆணையாளர் சுதந்திரமான, நியாயமானதொரு தேர்தலை நடத்துவதற்கு தேவையான பொலிஸாரை அமர்த்தலாம். அவருடைய அதிகாரமானது இந்த அளவுடன் வரையறுக்கப்பட்டுள்ளது. பொலிஸ்மா அதிபர் செய்கின்ற வழமையான இடமாற்றங்களில் அவர் தலையிட முடியாது.

17 ஆவது திருத்தத்தில் பொலிஸ் மாஅதிபரின் நிலை பற்றி நியாயப்படுத்தப்பட்டிருந்தாலும் தேர்தல் காலங்களில் பொலிஸாரைப் பணியிலமர்த்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு கணிசமான அளவு அதிகாரங்கள் உள்ளன. பொலிஸ் மாஅதிபரால் இடமாற்றம் செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பாக மாத்திரமே பொலிஸ் உத்தியோகத்தர்களை அமர்த்துவதில் ஆணைக்குழு வேண்டுகோள் விடுக்கலாம். எனவே பொலிஸ் மாஅதிபரால் இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் சுதந்திரமான, நியாயமான தேர்தலை நடத்துவதற்கு

---

50 பார்க்க, உறுப்புரை 104C (1), (2), (3), (4) மற்றும் (5)

தேர்தல் ஆணையாளருக்குத் தேவைப்படலாம். மேலும் பொலிஸ்மா அதிபரால் இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் தேர்தல் காலத்தின்போது தேர்தல் ஆணையாளரின் நெறிப்படுத்தல்கள், வழிகாட்டலின்கீழ் செயற்படும் பொறுப்புடையவர்கள். இந்த உறுப்புரையின் வல்லமை யாதெனில், பொலிஸ் மா அதிபரிடமிருந்து ஆணையாளரினால் கோரப்படும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் வசதிகள் தொடர்பாக எவ்வித கட்டுப்பாடும் கிடையாது. தேர்தல் ஆணையாளரின் நியாயமான வேண்டுகோளை நிராகரிக்கும் அதிகாரம் பொலிஸ் மாஅதிபருக்கு இல்லை.

சுதந்திரமான, நியாயமான தேர்தல் தொடர்பான ஏற்பாடுகள், 2001 மார்கழி மாதத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது பரீட்சிக்கப்பட்டது. இருப்பினும் அரசியல் யாப்புத் தேவையோ அல்லது தேர்தல் ஆணைக்குழுவோ ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆயினும் 17 ஆவது திருத்தத்தில் ஏற்பாடொன்று பெரிதும் வலியுறுத்தப்பட்டது. அதன்படி தற்போதைய தேர்தல் ஆணையாளர் உத்தேச தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரங்களைக் கொண்டிருப்பார் என்ற விடயத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது. திருத்தத்தின் 27 ஆவது உறுப்புரை பின்வருமாறு கூறுகின்றது:

> *இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த மறுநாளே தேர்தல் ஆணையாளராகப் பதவி வகிக்கும் ஒருவர், தேர்தல் ஆணையாளருக்குரிய அதிகாரங்களையும் கடமைகளையும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தலாம், மேற்கொள்ளலாம் என்பது சட்டம் நடைமுறைக்கு வருமுன்பே வழங்கப்படுகிறது. 103 ஆவது உறுப்புரையின்படி தேர்தல் ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படும்வரை இது இருக்கும். தேர்தல் ஆணைக்குழு நிறுவப்பட்ட நாளுடன் ஆணையாளரின் பதவி முடிவடைகின்றது.*

பொதுத் தேர்தலின்போது சுதந்திரமான, நியாயமான தேர்தலை நடத்துவதில் இத்தகைய அதிகாரங்கள் வினைத்திறன் மிக்க வகையில் பயன்படுத்தப்படவில்லை என்பது துரதிஷ்டவசமானது. மிக முக்கியமாக, திருத்தத்தில் சில குறைபாடுகள் எடுத்துக்காட்டப்பட்டன. குறிப்பாக. தேர்தலுடன் தொடர்புடைய சில தீய நடைமுறைகளை நியாயத்தைத் தக்கவைக்கும் வகையில் அவற்றைக் கட்டுப்படுத்தும் ஆற்றலின்றி ஆணையாளர் விளங்கினார். இருப்பினும் 103 (2) ஆம் உறுப்புரைக்கு அமைய, ஆணையாளரின் குறிக்கோள் சுதந்திரமான, நியாயமான தேர்தலை நடத்துவதாகும். இத்தகைய ஏற்பாடானது, ஆணையாளரின் நோக்கத்தினை நிறைவேற்றும் வகையில், திருத்தத்தில்

ஏனைய பிரிவுகளில் பரந்த விளக்கத்துடன் கூடியதாகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும். இந்திய அனுபவத்திலிருந்து முக்கியமானதொரு அனுபவத்தினை இங்கு எடுத்துக் காட்டலாம்.[51]

5.2 நீதிச்சேவை ஆணைக்குழு

திருத்தத்தின் 111 D உறுப்புரையின்படி, நீதிச்சேவை ஆணைக்குழுவானது (Judicial Service Commission) பிரதம நீதியரசர் ஒருவரையும் அரசியலமைப்புச் சபையின் விதந்துரையின் பேரில் சனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஏனைய இரு உயர் நீதிமன்ற நீதிபதிகளையும் கொண்டிருக்கும். பிரதம நீதியரசர் ஆணைக்குழுவின் தலைவராக இருப்பார். இந்த ஆணைக்குழு ஒரு சக்திவாய்ந்த அமைப்பாக விளங்குவதுடன் நியமனம் வழங்குதல், பதவியிறக்கம் செய்தல், இடமாற்றம் மற்றும் நீதவான் மற்றும் மாவட்ட நீதிபதிகள் போன்ற நீதிச்சேவையின் குறைந்த தரத்திலுள்ள அங்கத்தவர்கள் மீதான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு போன்ற பொறுப்புக்களையும் கொண்டிருக்கின்றது. [52]

இந்த ஏற்பாடு தொடர்பாக எழுந்துள்ள முரண்பாடு யாதெனில், நீதிச்சேவை ஆணைக்குழுவானது, உயர் நீதிமன்றத்தின் இரு சிரேஷ்ட நீதிபதிகளை ஆணைக்குழுவுக்கு நியமிப்பதற்கு மறுப்புத் தெரிவித்தமையாகும். கடந்த காலங்களில் நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக உயர் நீதிமன்றிலிருந்து கனிஷ்ட நீதிபதிகளை அரசாங்கம் நியமித்த சில சந்தர்ப்பங்களும் உண்டு. சில விடயங்களைப் பொறுத்து சிறப்பான காரணங்களும் இருந்தனவெனினும் இது ஒரு நம்பகரமான நடைமுறை என்ற எண்ணம் பொதுமக்கள் மனதில் தோன்றவில்லை. ஆகவே நீதிச்சேவை ஆணைக்குழுவுக்குரிய நியமனங்களைச் செய்வதற்கு மிகச் சிறந்த உயர் நீதிமன்ற நீதிபதிகளை இனங்காணும் பொறுப்பு அரசியலமைப்புச் சபைக்கு வழங்கப்பட்டது.

---

51 இந்திய அரசியலமைப்பின் 324 ஆம் பிரிவின் (1) வாசகம் இந்தியத் தேர்தல் ஆணைக்குழுவுக்கு, தேர்தலை நடத்தும்பொருட்டு மேற்பார்வையுடன், நெறிப்படுத்தல் மற்றும் கட்டுப்பாடுகளுடன் தேர்தல் தொடர்பான வகிபங்கினை வழங்குகிறது. பொலிஸ் தொடர்பாக அல்லது அரச வளங்களைப் பயன்படுத்துதல் தொடர்பாக விசேட அதிகாரங்கள் எவையும் குறித்துரைக்கப்படவில்லை. ஆயினும், இந்தியத் தேர்தல் ஆணைக்குழு தனது கடமைகளை நிறைவேற்றுவதற்காக அவ்வசதிகளைக் கோரும்போது, அவற்றினை அரசாங்கம் வழங்கலாம். *Mohinder Singh Gill* v. *Chief Election Commissioner* (AIR 1978, Supreme Court, 851) இந்திய உயர் நீதிமன்றில் நிகழ்ந்த வழக்கில் 324 ஆவது பிரிவின் வாசகம் (1) ஆணைக்குழுவின் அதிகாரக் களஞ்சியமாக விளங்கியது.

52 பார்க்க உறுப்புரை 111 H

5.3 தேசிய பொலிஸ் ஆணைக்குழு

17 ஆவது திருத்தமானது ஏழு பேர் கொண்ட தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினை உருவாக்குவதற்கு வலியுறுத்தியுள்ளது.[53] அரசியலமைப்புச் சபையின் விதந்துரையின்படி உறுப்பினர்களைச் சனாதிபதி நியமிப்பார் என்பதுடன் சபையானது பகிரங்க சேவை ஆணைக்குழுவினைக் கலந்தாலோசிப்பதன் பேரிலேயே அதன் விதந்துரைகளை மேற்கொள்ளும்.[54] பொலிஸ் அத்தியட்சகர் நாயகம் தவிர்ந்த ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்களின் நியமனங்கள், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள் மற்றும் பதவி நீக்கம் தொடர்பான அதிகாரங்கள் யாவும் ஆணைக்குழுவிடம் விடப்பட்டுள்ளது.[55] பொலிஸ் அத்தியட்சகர் நாயகம் பதவியுயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள் மற்றும் பதவி நீக்கம் தொடர்பான தமது அதிகாரங்களை ஆணைக்குழுவுடன் கலந்தாலோசனை செய்த பின்னரே மேற்கொள்ள வேண்டும்.

பொலிஸ் சேவையில் இடம்பெற்றுவந்த ஒழுங்கின்மைகள் இலஞ்சக் குற்றச்சாட்டுக்கள் காரணமாக நாட்டின் பொலிஸ் சேவையை ஒழுங்குபடுத்தும் நிறுவனம் ஒன்றை உருவாக்குதல் நீண்டகாலத் தேவையாக இருந்தது. பொலிஸ் ஆணைக்குழுவினை அமைக்கும் சிந்தனையானது நல்லரசாட்சி என்ற எண்ணக்கருவுடன் பின்பற்றக்கூடியதாகவும் நாட்டின் நீதிமுறையுடன் ஒன்றிணைக்கக்கூடிய சேவையாகவும் காணப்பட்டது. நாட்டின் பொலிஸ் சேவையானது பொதுமக்களின் நம்பிக்கையையும் ஏற்புடைமையையும் இழந்ததுடன் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அநேகமாக அரசியற் கட்சிகளுக்குச் சார்பானவர்களாகவும் குறிப்பாக ஆட்சியிலுள்ளவர்களுக்குச் சார்பானவர்கள் எனவும் இனங்காணப்பட்டிருந்தனர். ஆகவே பொலிஸ் ஆணைக்குழுவானது நாட்டில் சட்டத்தின் ஆட்சிக்கு உத்தரவாதம் அளிக்கவே உருவாக்கப்பட்டது. ஆயினும் ஆணைக்குழுவின் சேவை புவியியல் ரீதியாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதன் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும்போது மாகாண பொலிஸ் சேவை ஆணைக்குழுக்களுக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள், செயற்பாடுகள் ஆகியவற்றிலிருந்து தரம் குறைந்துவிடலாகாது. அரசியலமைப்பின் XVII A அத்தியாயத்தின் கீழ் ஆணைக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.[56]

---

53 பார்க்க, அதிகாரம் XVIII A இன் திருத்தம்.

54 உறுப்புரை 155 A

55 உறுப்புரை 155 G.

56 பார்க்க, உறுப்புரை 155 (G) (1) (ஆ)

பொலிஸ் சேவையின் குறைபாடுகள் பற்றிய பொதுமக்களின் புகார்கள் தொடர்பான ஆணைக்குழு அமைக்கப்பட்டதன் பின்னர் அத்தகைய முறைப்பாடுகளை ஏற்றுப் புலனாய்வுகளை மேற்கொள்ளலாம். ஆணைக்குழுவுக்குப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பான சகல விடயங்களையும் தீர்மானிப்பதற்கான ஒழுங்குமுறை அதிகாரங்கள் ஆணைக்குழுவுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரமானது, நியமனத் திட்டங்கள் உருவாக்குதல், பயிற்சி மற்றும் பொலிஸ் சேவையின் சுதந்திரத் தன்மை மற்றும் வினைத்திறனை மேம்படுத்துதல், ஆயுதங்களின் தன்மையும் வகையும், வெடிமருந்துகள் மற்றும் தேசியப் பிரிவிலும் மாகாணப் பிரிவுகளிலும் பயன்படுத்துவதற்குத் தேவையான கருவிகள், ஒழுக்காற்றுக் கோவைகள், மற்றும் பதவியுயர்வு மற்றும் இடமாற்றங்களின்போது பின்பற்றப்படவேண்டிய தராதரங்கள் போன்றனவாகும். இவற்றினை ஆணைக்குழு அவசியமெனக் கருதினால் காலத்துக்குக் காலம் உருவாக்கலாம்.[57] ஆணைக்குழுவானது அதன் அதிகாரங்களை ஒரு குழுவுக்கு அல்லது பொலிஸ் அத்தியட்சகர் நாயகத்துக்கு அல்லது அத்தகைய நிலையிலுள்ள ஒரு பொலிஸ் உத்தியோகத்தருக்கு ஆணைக்குழுவினால் எடுத்துரைக்கப்பட்டவாறு பகிர்ந்தளிக்கலாம். பொலிஸ் உத்தியோகத்தர் எவராவது அவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரக் கட்டளைகளால் துன்புறுத்தப்படுவாரானால் ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாம். அத்தருணத்தில் ஆணைக்குழுவானது அதிகாரத்தைத் திருத்தி, ஆராய்ந்து அத்தகைய உத்தரவை மாற்றலாம்.[58]

பொலிஸ் உத்தியோகத்தர் எவரேனும் ஆணைக்குழுவின் உத்தரவினால் பாதிக்கப்பட்டிருந்தால், நிருவாகரீதியாக முறைப்பாடு செய்யும் தீர்ப்புரிமைப் பீடத்துக்கு (Tribunal) முறையீடு செய்யலாம். திருத்தத்தின் 59 ஆவது உறுப்புரையின்படி இது ஆக்கப்பட்டுள்ளது.[59] ஆணைக்குழு பாராளுமன்றத்துக்கு மட்டுமே பதில் கூறும் பொறுப்புடையது.[60]

இத்தகைய பரந்த அதிகாரங்கள், சுதந்திர பொலிஸ் சேவையை உருவாக்கும் முயற்சி என்பதை எடுத்துக்காட்டுவதுடன் அங்கு அரசியல்வாதிகளுக்குரிய வகிபங்கு எதுவுமில்லை. பொலிஸ் மாஅதிபர் தொடக்கம் ஆணைக்குழு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டவர்கள் வரையிலுள்ள எல்லா நிலைகளுக்கும் சுதந்திரமான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டால் மாத்திரமே எதிர்பார்த்த விளைவுகளை அடைந்துகொள்ளலாம். பொலிஸ்

---

57 உறுப்புரை 155 G (2), (3).

58 பார்க்க, உறுப்புரை 155 H, 155 J, 155 K.

59 உறுப்புரை 155 L.

60 உறுப்புரை 155 N.

ஆணைக்குழுவினை ஆரம்பித்தலானது, பொலிஸ் அரசொன்றுக்கு வழிகோலும் என்றும் அங்கு எதிர்மறை விளைவுகள் இடம்பெறும் என்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் பொலிஸ் அரசொன்றின் நிலைமை தெளிவான வரைவிலக்கணங்களுடன் எடுத்துக் காட்டப்படவில்லை. அத்தகைய அரசொன்று Ceauscescu வின் கீழ் ரூமேனியா போலவும், முகாபேயின் (Mugabe) கீழ் சிம்பாபேயும் இருந்தது போன்ற நிலையை உருவாக்கும் என்றும் சிலர் கருத்துத் தெரிவித்தனர்.

லீ குவான் யூவின் (Le Kuan Yew) ஆட்சியின் கீழ் பொலிஸ் அரசாக இருக்கும் சிங்கப்பூரையும் எடுத்துக் காட்டினர். ஆனால் இத்தகையதொரு நிலைமை அந்நாடுகளில் அதிகாரத்திலிருந்த ஆட்சியினரால் கொண்டுவரப்பட்டதே ஒழிய பொலிஸாரினால் அல்ல. இங்கு யப்பானைச் சிறந்த உதாரணமாகக் குறிப்பிடலாம். அங்கு அரசாங்கத்தில் பாரிய ஊழல்கள் நிலவியபோதும் பொலிஸ் சேவை சமுதாய நட்புமிக்க சேவையாக இருப்பதைக் காணலாம்.

5.4 பொதுச்சேவை ஆணைக்குழு

திருத்தத்தின் 54 (1) உறுப்புரையின்படி, அரசியலமைப்புச் சபையின் விதந்துரையின் பேரில் சனாதிபதியால் நியமிக்கப்பட்ட 9 உறுப்பினர்களைக் கொண்ட பொதுச்சேவை ஆணைக்குழுவொன்று உருவாக்கப்படும். இந்த ஆணைக்குழுவுக்கு நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்கக் கட்டுப்பாடு, பதவிநீக்கம் போன்ற அதிகாரங்கள் உரித்தாக்கப்பட்டுள்ளன.[61] இது முன்னைய அரசியலமைப்பின் உறுப்புரையிலிருந்து வேறுபட்டுக் காணப்படுவதுடன் அங்கு நியமனங்கள், இடமாற்றங்கள், பதவி நீக்கங்கள், ஒழுக்கக் கட்டுப்பாடுகள் என்பன அமைச்சரவைக்கு உரித்தளிக்கப்பட்டிருந்தன. இருப்பினும் சகல திணைக்களத் தலைவர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்கக் கட்டுப்பாடு, மற்றும் பதவி நீக்கம் என்பன அமைச்சரவையிடமே இருந்தன. இவ்வாறான அதிகாரங்களை ஆணைக்குழுவின் கருத்தினை உறுதிப்படுத்திய பின்னர் நடைமுறைப்படுத்தலாம்.[62]

புதிய சட்டத்திலுள்ள குறிப்பிடக்கூடிய அம்சம் நிர்வாக மேன் முறையீடுகள் மன்றமொன்று (Administrative Appeals Tribunal) ஸ்தாபிக்கப்பட்டமையே. பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளை அல்லது தீர்மானத்தை மாற்றுகின்ற, வேறுபடுத்துகின்ற அல்லது நீக்குகின்ற அதிகாரத்தை இம் மன்றம் கொண்டுள்ளது. யாப்பின் முன்னைய 55 ஆம் உறுப்புரையின்படி ஒரு நீதிமன்றம் அல்லது மன்றம் அமைச்சரவை, அமைச்சர், பொதுச்சேவை

---

61 உறுப்புரை 55 (1).

62 உறுப்புரை 55 (3).

ஆணைக்குழு அல்லது ஓர் அரசாங்க அதிகாரியின் கட்டளையை அல்லது தீர்மானத்தை விசாரிக்கின்ற அல்லது கேள்விக்குட்படுத்துகின்ற அதிகாரம் அல்லது நியாயாதிக்கம் எந்தவொரு நீதிமன்றத்துக்கும், மன்றத்துக்கும் இல்லை. இவ்வாறான நியாயாதிக்கம் உயர் நீதிமன்றத்தின் அடிப்படை உரிமைகள் நியாயாதிக்கத்துக்கு மாத்திரமே உண்டு. பாரபட்சமான செயற்பாடுகள் பலவற்றுக்கு எதிராக இந்த நியாயாதிக்கம் பல சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சட்டத்தின் சமத்துவமான பாதுகாப்பைக் கொண்டுள்ள பொதுத்துறை ஊழியர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச நடவடிக்கைகள் எடுக்கப்பட முடியாது என உயர் நீதிமன்றம் தொடர்ந்து வலியுறுத்தியிருப்பது மகிழ்ச்சியளிக்கக்கூடிய விடயமாகும்.[63]

பொதுச்சேவை ஆணைக்குழு அதனுடைய அதிகாரங்களை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட நிபந்தனைகள், ஒழுங்குமுறைகளுக்கு அமைவாக ஒரு குழுவுக்கு[64] அல்லது ஓர் அரச உத்தியோகத்தருக்கு[65] வழங்கலாம். ஆணைக்குழுவின் ஏதேனும் அதிகாரங்கள் ஒரு குழுவிடம் அல்லது அரசாங்க அதிகாரியிடம் ஒப்படைக்கப்படுமிடத்து, அத்தகைய ஒப்படைப்பு நடைமுறையிலிருக்கும் பொழுது ஆணைக்குழுவானது அத்தகைய அதிகார ஒப்படைப்புடன் தொடர்புள்ள அரசாங்க ஊழியர்களைப் பொறுத்தவரையில் ஆணைக்குழுவானது தனது கட்டளைகளையோ, தொழிற்பாடுகளையோ செய்ய மாட்டாது.[66] அரசியல் யாப்பின் 158 ஆவது உறுப்புரைகளில் இதற்கு முரணான ஒரு நிலைப்பாட்டை இனம் காண முடிகின்றது. இதன்படி அரசியல் யாப்பின் ஏற்பாடுகளின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரபீடமோ அல்லது ஆட்களின் தொகுதியோ தனக்களிக்கப்பட்ட அதிகாரம், கடமை அல்லது தொழிற்பாடுகளை மற்றொரு அதிகார பீடத்திடமோ அல்லது ஆட்களின் தொகுதியிடமோ ஒப்படைக்க அதிகாரம் உள்ளது. அவ்வாறு அதிகாரம், கடமை அல்லது தொழிற்பாடு என்பவற்றை ஒப்படைக்கும் ஆள், அவ்வாறு அதிகாரம், கடமை அல்லது தொழிற்பாடு என்பவற்றை மற்றொரு அமைப்பிடம் ஒப்படைத்திருந்த போதிலும் எந்நேரமும் அத்தகைய அதிகார ஒப்படைப்பை மீளப் பெற முடியும். திருத்தத்தின் 60 ஆவது உறுப்புரையானது அரசியல் யாப்பின் 158 ஆவது உறுப்புரைக்குப் புறநடையானது என விதிக்கப்படவில்லை என்பதால் அரசியல் யாப்பில் இரு முரண்பாடான ஏற்பாடுகளை இனங்காண முடியும். திருத்தம் பற்றிய தனது

---

63 இத்தொகுதியில் எம். சி. எம். இக்பால் எழுதிய பொதுத்துறைச் சேவை பற்றிய அத்தியாயத்தினைப் பார்க்க.

64 உறுப்புரை 56.

65 உறுப்புரை 57.

66 உறுப்புரை 60.

தீர்ப்பில் உயர் நீதிமன்றமானது இந்த முரண்பாட்டைக் கருத்திற் கொள்ளவில்லை.

சோல்பரி அரசியலமைப்பின் கீழ் இயங்கிவந்த சுதந்திரமான பொதுச்சேவை ஆணைக்குழுவை மீண்டும் அமைத்தல் சரியான திசையில் எடுக்கப்பட்ட முடிவாகும். 1972 அரசியலமைப்பானது பொதுச்சேவை ஆணைக்குழுவினை முழுமையாக அமைச்சரவையின் கீழ்க் கொண்டுவந்தது. மக்களின் தேவையைப் பிரதிபலிக்கும் அரசாங்கக் கொள்கைகள் பணிக்குழுவாட்சியின் தடைகள் எவையுமின்றி நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கே அவ்வாறு செய்யப்பட்டது. 1972 மற்றும் 1978 அரசியலமைப்பு இரண்டினதும் சீர்திருத்த நடைமுறைகள், இந்த நோக்கம் எய்தப்படவில்லை என்பதை எடுத்துக்காட்டின. ஆகவே பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உருவாக்கமானது, நாட்டில் சுதந்திரமான மற்றும் வினைத்திறன்மிக்க பொதுச்சேவையை உறுதிப்படுத்தும் சிறந்த நடவடிக்கையாக இருக்கும்.[67]

5.5 ஏனைய ஆணைக்குழுக்கள்

மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை புலனாய்வு செய்யும் நிரந்தர ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு மற்றும் தொகுதி நிர்ணய ஆணைக்குழு என்பவற்றை வரையறை செய்யும் விளக்கங்கள் எவையும் திருத்தத்தில் எடுத்துக் காட்டப்படவில்லை. 17 ஆவது திருத்தத்தில் இதுவொரு இடைவெளியாக இருப்பதனால் அவற்றை வரையறை செய்வதற்குப் பொருத்தமான சட்டங்களும் ஏற்பாடுகளும் அரசியலமைப்பில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.[68]

6. 17 ஆவது திருத்தமும் வடக்கு கிழக்குப் பிணக்கும்

17 ஆவது திருத்தத்திற்கான வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் இடம்பெற்றபோது, தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ காங்கிரஸ், தமிழீழ விடுதலை இயக்கம் ஆகியவற்றைச் சேர்ந்த 15

---

67 *Supra* n . 63

68 1999 21 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் மனித உரிமைகள் ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய ஆணைக்குழு 1994, 19 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது. அரசியலமைப்பில் 13 ஆவது திருத்தத்தின் உறுப்புரை 155 R மற்றும் 95 ஆவது உறுப்புரை நிதி ஆணைக்குழுவுக்கான மற்றும் தொகுதி நிர்ணய ஆணைக்குழுவுக்கான சட்ட அடிப்படைகளை வழங்குகிறது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தாமாகவே வெளிநடப்புச் செய்தனர். திருத்தத்தினை அவர்கள் ஏற்றுக்கொள்ளாமைக்கான காரணம் நாட்டின் வடக்குக் கிழக்குப் பிணக்கினை எதிர்கொள்ளும் உறுதியான ஏற்பாடுகள் திருத்தத்தில் இடம்பெறவில்லை என்பதாகும். ஆகவே திருத்தத்துக்குச் சார்பாக இருக்கவில்லை என்பதுடன், மத்திக்கும் வடகிழக்குப் பிராந்தியங்களுக்கும் இடையில் ஆட்சியதிகாரங்களை வினைத்திறன் வாய்ந்த முறையில் பகிர்ந்து கொள்வதனை அது மேலும் தடைசெய்யும் எனக் கூறினர்.[69]

சில தமிழ்க் கட்சிகள் ஆணைக்குழுக்களின் உண்மையான வினைத்திறன் பற்றி எதனையும் கூறவில்லை. குறிப்பாக தேர்தல் மற்றும் பொலிஸ் ஆணைக்குழுக்கள் போர்ப் பிரதேசத்தில் பாதுகாப்புச் சூழலைப் பேணின. இந்தப் பிரதேசத்தில் இயங்கும் சட்டரீதியற்ற ஆயுதப் படைகளைக் கட்டுப்படுத்தும் வரையில் சுதந்திரமான, நியாயமான தேர்தலை நடத்த முடியாதென்பதைச் சுட்டிக்காட்டினர். பொலிஸ் ஆணைக்குழு தொடர்பாக நீதிமுறையற்ற கொலைகள், காணாமல் போதல், துன்புறுத்தல், மற்றும் சட்டத்துக்குப் புறம்பாக தடுத்து வைத்தல் என்ற முறையில் போர்ப் பிரதேசத்திலுள்ள ஆட்களின் மீதான ஒழுக்கக் கட்டுப்பாடுகள் பற்றிக் கேள்வியெழுப்பினர். இவை ஆணைக்குழுக்களின் கவனத்துக்குரிய அடிப்படைப் பிரச்சினைகளாகும். ஆணைக்குழுவானது அவர்களுடைய வழியில் அவர்களுடைய இலக்குளை அடைவதற்குரிய தடைகளை நீக்குவதற்கு முயற்சிகள் எடுத்தல் வேண்டும்.

நாட்டின் இனத்துவப் பிணக்குகளை எதிர்கொள்வதற்கு 17 ஆவது திருத்தத்தில் முயற்சிகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. 17 ஆவது திருத்தத்தின் நன்மைகளை நாடும் உணர்ந்திருத்தல் வேண்டும். அன்றேல் தமிழர் விடுதலைக் கூட்டணியினால் சுட்டிக்காட்டப்பட்டது போன்று நாட்டில் கொழுந்துவிட்டெரியும் பிரச்சினையைத் தீர்ப்பதன் அவசியத்தை சட்டவாக்கத்தினால் வெற்றிகொள்ள முடியாது. ஆகவே வடக்குக் கிழக்குக்கு கணிசமானளவு அரசியல் தன்னாதிக்கத்தை வழங்குவதன் மூலம் வினைத்திறனுடைய அதிகாரப் பகிர்வுக்கான ஒழுங்கினைக் கொண்ட அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றன.

---

69 *Supra* n 18.

7. முடிவுரை

17 ஆவது திருத்தமானது எவ்வித சந்தேகமுமின்றி சரியான பாதையில் முன்னெடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கை எனினும் முன்னைய அரசாங்கம் பாராளுமன்றத்தில் தனது அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கு, பாராளுமன்றத்தினூடாக அச்சட்டத்தைக் கொண்டுவர ஏனைய சக்திகள் அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்தியமை துரதிஷ்டவசமானது. இத்தகைய ஆணைக்குழுக்களை நிர்ப்பந்தத்தின் காரணமாகவன்றி அவற்றின் தேவையின் அடிப்படையில் இயல்பாகவும் தாமாகவும் உருவாக்கப்பட்டிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

17 ஆவது திருத்தத்தைப் பொறுத்தவரையில் மக்கள் விடுதலை முன்னணியும் அதனைச் சட்டமாக்குவதில் மிகுந்த அவசரத்தைக் காட்டியமையால் இவ்விடயம் பற்றிய கலந்துரையாடலில் குடியியல் சமூகம் பங்குபற்ற முடியாமல் போயிற்று. பல சந்தர்ப்பங்களில் குடியியல் சமூகங்கள் பலவிதமான ஆணைக்குழுக்களை நிறுவுவது பற்றி ஆராய்ந்தன. உயர் தொழில் தேர்ச்சிபெற்ற அமைப்பானது (OPA) இவ்வாணைக்குழுக்களின் தேவைபற்றி வலியுறுத்தியதுடன் இவ்விடயத்தில் தனது நிலைப்பாட்டினை அரசாங்கத்துக்கும் எதிர்க் கட்சிக்கும் அறிவித்தது. ஆயினும் இறுதிக் கட்டத்தில் கூட இத்திருத்தம் பற்றிய ஒரு தெளிவான வரைவை அரசாங்கம் பொதுமக்களிடம் சமர்ப்பிக்கத் தவறிவிட்டது. இதனால் சமூகத்தின் பல்வேறு பிரிவினரிடையே திருத்தம் தொடர்பான கருத்துக்களைப் பெற முடியாமற் போயிற்று. மேலும் உயர் நீதிமன்றம் இத்திருத்தம் பற்றி ஆராய்ந்தமை அதிக முக்கியத்துவத்தைப் பெறவில்லை. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த சட்ட வரைபினை ஆராய்வதற்கு பல நீதிபதிகளைக் கொண்ட முழுமையான குழுவொன்று நியமிக்கப்படவில்லை. துரதிஷ்டவசமாக இத்திருத்தம் பாராளுமன்றத்தில் ஓரேநாளில் விவாதித்து முடிக்கப்பட்டது. அத்துடன் பாராளுமன்றத்தில் முழுமையான வரைவொன்று சமர்ப்பிக்கப்படாமலேயே இச் சீர்திருத்தம் சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

17 ஆவது திருத்தத்தின் மற்றொரு வெளிப்படையான எதிர்மறை அம்சம் அதில் பால்ரீதியான பிரதிநிதித்துவத்தின் (gender representation) தேவைபற்றி எதுவுமே குறிப்பிடப்படாமையால் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் பற்றி வலியுறுத்திக் கூறப்பட்டாலும் அரசியலமைப்புச் சபையிலோ அல்லது மற்ற ஆணைக்குழுக்களிலோ பால் அடிப்படையிலான பிரதிநிதித்துவத்தின் தேவை திருத்தத்தின் வரைஞர்களால் முற்றாகவே கருத்திற்

கொள்ளப்படவில்லை. பாராளுமன்றத்தில் பெண் உறுப்பினர்களின் தொகை மிகக் குறைவாகவே இருந்தமையால் பாராளுமன்றம் கருத்தியல் ரீதியாகவே மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையை இக் குறைபாடு சுட்டிக்காட்டுகின்றது.

1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் கீழ் சட்டவாக்கம் சம்பந்தமான நீதித்துறை மீளாய்வுக்கான நடைமுறைகளில் உள்ள பிரதான குறைபாடுகளை 17 ஆவது திருத்தத்தின் பெரும்பாலான குறைபாடுகள் எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. சட்டவாக்கம் பற்றிய நீதித்துறை மீளாய்வுக்கு இடமில்லாத நிலைமை காரணமாக சட்டத்திலுள்ள குறைபாடுகளை நீதித்துறை அதிகாரத்தினூடாக திருத்துவதனைத் தடைசெய்கிறது. அத்துடன் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த மசோதாக்கள் 24 மணி நேரத்துக்குள் ஆய்வுக்குட்படுத்த வேண்டுமென்று மிகக் குறைந்த காலமே வழங்கப்பட்டுள்ளபடியால் உத்தேசச் சட்டவாக்கத்தை எச்சரிக்கையுடன் நுணுகி ஆராய்வது தடுக்கப்படுகின்றது. இருந்தாலும் திருத்தச் செயன்முறையில், அரசியற் கட்சிகளின் ஈடுபாடானது சாதகமாகவே இருந்தது. அரசாங்கமும் எதிர்க்கட்சியும் விரைவில் ஏற்படுத்திய திருத்தங்கள், 11 வருடங்களின் பின்னர், பாராளுமன்றத்தில் ஏற்படுத்தப்பட்ட திருத்தத்துக்கு குறிப்பிடத்தக்களவு பெரும்பான்மையைப் பெற்றுக்கொடுத்தது.

அரசியலமைப்புக்கான 17 ஆவது திருத்தமானது நாட்டில் நல்லரசாட்சிக் காலத்தை தோற்றுவிப்பதற்கான வரவேற்கத்தக்கதொரு பொருத்தமான நடவடிக்கை எனினும் இது பேரவைக்கு நியமிக்கப்படும் ஆட்களின் தரத்திலேயே பெருமளவில் தங்கியுள்ளது என்பதுடன், ஏனைய பதவிகளுக்கு அது விதந்துரைக்கும் ஆட்களின் தரம், அறிவு மட்டம் மற்றும் அர்ப்பணிப்பும் பேரவையின் முன்னோக்குக்கு உட்படுதல் வேண்டும். ஆகவே 17ஆவது திருத்தத்தின் உண்மையான விளைவுகளை எதிர்காலமே மதிப்பிடும். குடியியல் சமூகக் குழுக்கள் இத்தகைய நியமனங்களிலும் விழிப்புடன் இருத்தல் வேண்டும். பொதுமக்களின் நலன் கருதி அவசியமேற்படின் அவை பற்றி நீதிமன்றங்களிலும் சவால்விடுக்க வேண்டும்.

III

2001 ஆம் ஆண்டில் நீதித்துறை

சிராந்தி ஜயதிலக்க*

1. அறிமுகம்

2001 ஆம் ஆண்டில் நீதித்துறை தொடர்பான முக்கிய நிகழ்வுகளையும் அந் நிகழ்வுகள் தொடர்பான சட்டப் பிரச்சினைகளையும் இவ் அத்தியாயம் ஆய்வு செய்கிறது. ஏனைய வருடங்களைவிட இவ்வருடத்தில் நீதித்துறை தொடர்பான பல முரண்பாடான பிரச்சினைகள் ஏற்பட்டன. நீதிச்சேவை ஆணைக்குழு (Judicial Service Commission) அல்லது பிரதம நீதியரசரின் கோரிக்கையின் பேரில் ஒரு விசாரணையோ அல்லது ஒழுக்காற்று செவிமடுத்தலோ இல்லாமல் ஆறு நீதிபதிகள் தமது பதவியிலிருந்து விலகுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள் என சர்வதேச சட்டத்தரணிகள் சங்க அறிக்கை கூறுகிறது.[1] இவ்வறிக்கையைப் பற்றிக் கீழே கூறப்படுகிறது. நீதித்துறையைப் பெருமளவிற்குப் பாதித்த வேறுசில விடயங்களுமிருந்தன. அவற்றில் பிரதம நீதியரசர் பதவிக்கு நீதிபதி சரத் சில்வா நியமனம் செய்யப்பட்டதற்கு எதிரான மூன்று மனுக்கள், பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் தீர்ப்பு, ஓர் உயர் நீதிமன்ற நீதிபதிக்கெதிரான இலஞ்சக்

---

* சட்டத்தரணி, இணைப்பாளர், சமவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டம், சட்டம் மற்றும் சமூகத்துக்கான நம்பிக்கை நிதியம், கொழும்பு.

1 'Sri Lanka: Failing to Protect the Rule of Law and the Independence of the Judiciary', சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் அறிக்கை, நவம்பர் 2001, பக் 23-24.

குற்றச்சாட்டு ஆகியன இவற்றில் சிலவாகும். இந்நிகழ்வுகள் யாவற்றுக்கும் ஊடகத்தில் பெரும் முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இதன் காரணமாக ஒரு சுதந்திரமானதும் நடுநிலையானதுமான நீதித்துறையின் முன்னிலையில் நீதி கேட்கும் ஒரு சாதாரண மனிதனின் எதிர்பார்ப்புக்களில் பெரும் தாக்கமேற்பட்டிருக்கலாம்.

மக்களின் உரிமைகளைப் பாதிப்பதில் குறிப்பாக அரசின் வரம்பு மீறல்களினின்றும் பாதுகாப்பது நீதித்துறையின் முக்கிய பங்காகும். ஒரு சுதந்திரமான நீதித்துறை இல்லாமல் சட்டவாட்சியையோ சிறந்த ஆட்சிமுறையின் கோட்பாடுகளையோ நிலைநிறுத்த முடியாது. அடிப்படை உரிமைகள் மீறப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கலில் உயர் நீதிமன்றத்தின் பங்கு குறித்து மனித உரிமைகளின் நீதிமுறைப் பாதுகாப்பு என்னும் அத்தியாயத்தில் ஆய்வு செய்யப்படுகிறது.

2. பிரதம நீதியரசரின் நியமனத்தை எதிர்த்தல்

மூன்று அடிப்படை உரிமை விண்ணப்பங்கள் மூலம் நீதிபதி சரத் சில்வா பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டமை உயர் நீதிமன்றத்தில் எதிர்க்கப்பட்டது.[2] மூன்று மனுதாரர்களும் தமது விண்ணப்பங்களில் பிரதம நீதியரசரை முதலாவது பிரதிவாதியாகக் குறிப்பிட்டு, யாப்பின் உறுப்புரைகள் 12 (1), 17 ஆகியவற்றின் கீழ் தமது அடிப்படை உரிமைகள் அவரது நியமனம் மூலம் பாதிக்கப்பட்டதாக முறையிட்டனர்.[3] அவரது நியமனம் யாப்பிற்கு எதிரானது எனவும் தகுதியற்றது எனவும், செல்லுபடியற்றது எனவும் பிரகடனப்படுத்துமாறு 3 விண்ணப்பங்களிலும் கோரப்பட்டிருந்தன. நீதிமன்றம் மூன்று விண்ணப்பங்களிலும் வழக்கைத் தொடர அனுமதி மறுத்தது. அத்துடன் மனுதாரரில் எவரேனும் முதலாவது பிரதிவாதி யாப்பின் 126 ஆம் உறுப்புரையின் கீழ் தமது அடிப்படை உரிமைகளை மீறும் அல்லது மீற முயலும் நிருவாக செயற்பாட்டில் ஈடுபட்டதன் மூலம் குற்றம் புரிந்தார் என முறையிடவில்லையெனக் குறிப்பிடப்பட்டது.[4] மூன்று மனுதாரர்களும் முதலாம் பிரதிவாதி சனாதிபதியால் நியமிக்கப்பட்டதே தமது அடிப்படை உரிமையை மீறிய செயலாகும் என்று மட்டுமே குறிப்பிட்டனர்.

---

2 அடிப்படை உரிமைகள் மனு இல: 898/99, 902/99.

3 அத்துடன், இல: 901/99 விண்ணப்பத்தின் மனுதாரரான சட்டத்தரணி யாப்பின் உறுப்புரைகள் 14 (1) (அ), 14 (1) (எ) ஆகியவை மீறப்பட்டுள்ளது எனக் கூறினார்.

4 (2001) 1 Sri LR 309

2.1 அரசியலமைப்பின் உறுப்புரை 107 (1)

நீதிபதி வடுகொடப்பிட்டிய முதலாவதாக உறுப்புரை 107 (1) இன் கீழ் சனாதிபதி முதலாவது பிரதிவாதியை பிரதம நீதியரசராக நியமித்தமை சட்டப்படியும் யாப்பின்படியும் செல்லுபடியானதா என்பதைத் தீர்மானிக்க முயன்றார். அது செல்லுபடியாகும் என்பதே அவரது முடிவு. *சில்வா* எதிர் *பண்டாரநாயக்க*[5] வழக்கில் உறுப்புரை 107 (1) இன் கீழ் நியமனங்கள் மேற்கொள்கையில் சனாதிபதி பிரதம நீதியரசரைக் கலந்தாலோசிக்க வேண்டுமென தீர்க்கப்பட்டதாக மனுதாரர் தரப்பில் வாதிக்கப்பட்டது. இந்த வாதத்தை நிராகரித்த நீதிமன்றம் அவ்வாறு ''கட்டாயம்'' கலந்தாலோசிக்க வேண்டுமென நீதிபதி பெர்னாண்டோ கூறவில்லை என்றும் அத்தகைய ஒத்துழைப்பு விரும்பத்தக்கது என்று மாத்திரமே குறிப்பிட்டார் எனவும் கூறியது.

யாப்பின் உறுப்புரை 107 (1) (17 ஆம் திருத்தத்திற்கு முன்னர்) கலந்தாலோசித்தல் குறித்து எந்த ஏற்பாட்டையும் கொண்டிருக்கவில்லை. பதிலாக சனாதிபதி மேல்நீதிமன்ற நிதிபதிகளை நியமிக்கும்போது தனது எழுத்து மூலமாக நியமிக்க வேண்டும். *சில்வா* எதிர் *பண்டாரநாயக்க* வழக்கில் உயர் நீதிமன்றத்திற்கு கலாநிதி பண்டாரநாயக்காவை நியமிப்பதற்கு முன்னர் பிரதம நீதியரசரிடம் ஆலோசனை பெறப்பட்டதா எனும் பிரச்சினை எழுந்தது. எனினும அப்போதைய நீதியரசர் இவ்விடயத்தைத் தெளிவுபடுத்தி சத்தியக் கடதாசி வழங்க அழைக்கப்படாததால் இப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை. நீதிமன்ற நியமனங்கள் மேற்கொள்ளப்படும்போது நிருவாகத்துறையும் நீதித்துறையும் ஒரு மரியாதையான இணக்கப்பாட்டுக்கு வரவேண்டுமென நீதிமன்றம் கூறியது. இங்கு ''மரியாதையான இணக்கப்பாடு'' என்பதன் பொருள் இங்கு தெளிவுபடுத்தப்படவில்லை. ஆனால் *சில்வா* எதிர் *பண்டாரநாயக்க* வழக்கில் அத்தகைய ஒத்துழைப்பும், கலந்துரையாடலும் சட்டரீதியான அல்லது யாப்புரீதியான ஒரு தேவையென்றோ அல்லது அது கட்டாயமானது என்றோ குறிப்பிடப்படவில்லையென தற்போதைய விண்ணப்பத்தின் கீழ் தீர்மானிக்கப்பட்டது. எனவே பிரதம நீதியரசரின் நியமனம் யாப்பின் 107 (1) இன் கீழ் செல்லுபடியானதேயென நீதிமன்றம் முடிவு செய்தது.

2.2 வழக்குத் தொடுத்தலிலிருந்து சனாதிபதிக்கிருக்கும் பாதுகாப்பு

நீதிபதி சரத் சில்வாவின் நியமனம் யாப்புரீதியாகச் செல்லுபடியானதே எனத் தீர்மானித்த பின்னர் நீதிபதி வடுகொடப்பிட்டிய மற்றைய வாதத்தை ஆய்வு செய்தார். அதாவது முதலாவது பிரதிவாதியான பிரதம நீதியரசர் நியமனத்தின்

---

[5] (1997) 1 Sri LR 92.

'நன்மையை' அனுபவித்தால் சனாதிபதியின் செயற்பாட்டை அவரே ஊக்கியிருப்பார் என்று கொள்ள முடியுமா? சனாதிபதியின் மீது 35 ஆம் உறுப்புரையின்படி வழக்குத் தொடுக்க முடியாத காரணத்தினால் சனாதிபதியின் செயற்பாட்டின் சட்டபூர்வத் தன்மையை நிரூபிக்கும் பொறுப்பு முதலாவது பிரதிவாதியின் மீது உள்ளது எனவும் வாதம் முன்வைக்கப்பட்டது. இந்த வாதமும் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது. முதலாவது பிரதிவாதி சனாதிபதியின் நியமனத்தின் காரணமாக பதவி வகிப்பதால் யாப்பின் உறுப்புரைகள் 17, 126 ஆகியவற்றின் கீழ் நிருவாகச் செயற்பாட்டினை இழைக்கவில்லை எனக் கூறப்பட்டது. *கருணாதிலக்க எதிர் தயானந்த திசாநாயக்க, தேர்தல் ஆணையாளர்*[6] வழக்கிலிருந்து தற்போதைய வழக்கு மாறுபட்டது. சனாதிபதியின் செயற்பாட்டை ஊக்குவிக்கும் நபருக்கும், *கருணாதிலக்க வழக்கில* நிர்ணயிக்கப்பட்ட கோட்பாடுகளின்படி சனாதிபதியின் செயல்கள் உள்ளன என நிரூபிக்கும் பொறுப்பு உள்ள நபருக்கும் சமமாக முதலாவது பிரதிவாதியைக் கருத முடியாது என நீதிமன்றம் கூறியது. மனுதாரர்கள் உறுப்புரை 35 இன் கீழ் வழக்குத் தொடர முடியாத ஒரு விடயத்தை மனுதாரர்கள் கேள்விக்குட்படுத்தியிருந்தனர்.

2.3 பிரதம நீதியரசரைப் பதவியிலிருந்து நீக்கும் செயன்முறை

யாப்பின் 107 (1), 107 (3) உறுப்புரைகளின் கீழ் கூறப்பட்டுள்ள குற்றவியல் பிரேரணைச் செயன்முறை அல்லாத வழிகளில் பிரதம நீதியரசரைப் பதவி நீக்கம் செய்ய முடியுமா என்பதனையும் நீதிமன்றம் ஆய்வு செய்தது. இவ்விரண்டு உறுப்புரைகளின்படி அல்லாது வேறெந்தவொரு முறையிலும் பிரதம நீதியரசரைப் பதவி நீக்கம் செய்ய முயன்றாலும் அது செல்லுபடியற்றது என சட்டமா அதிபர் சார்பில் கூறப்பட்டது. இந்த அடிப்படையில் நீதிமன்றம் பின்வருமாறு குறிப்பிட்டது.

> *....... 'யாப்பினை உருவாக்கியோர் நீதிபதிகளைச் சுதந்திரமானவர்களாகவும் தமது பதவியில் பாதுகாப்பு உள்ளவர்களாகவும் ஆக்கும் தமது முயற்சியில் அவர்களை அகற்ற முடியாத அந்தஸ்த்துக்கு உயர்த்தி வைத்திருந்தனர். அத்துடன் யாப்பின் உறுப்புரை 107 (2), (3) பந்திகளில் மாத்திரமே அவர்களை அகற்றுவதற்குரிய வரையறுக்கப்பட்ட வழிகளை ஆக்கி வைத்தனர்.*

---

6 (1999) 1 Sri LR 157.

3. பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை

இலங்கை வரலாற்றில் இரண்டாவது முறையாக, 2001 இல் பிரதம நீதியரசர் ஒருவர் குற்றவியல் பிரேரணைக்கு முகம்கொடுக்கும் நிலை ஏற்பட்டது. 1984 இல் பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோன் கியூ. ஸி. அவர்கள் சில குறிப்பிட்ட துர்நடத்தை காரணமாக பாராளுமன்றத்தின் தெரிவுக் குழுவுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. 1984 இல் பாராளுமன்றமானது "சட்டங்களை ஏற்படுத்துவதை" விடுத்து யாப்பின் உறுப்புரை 107 (3) இன் கீழ் நிலையியற் கட்டளை நடைமுறையைப் பின்பற்றி விசாரணை மேற்கொண்டது. அந்நேரத்தில் அச்செயல் பலமாக விமர்சிக்கப்பட்டது. இரண்டாவது முறையும் நீதியரசர் தீர்ப்பு வழங்கவோ அல்லது சான்றுகளை மதிப்பிடவோ முடியாத ஒருசில பாராளுமன்ற உறுப்பினர்களினால் நாட்டின் மிக உயர்ந்த நீதித்துறை பதவியாளர் ஒருவர் விசாரிக்கப்படுகின்ற நிலைமை ஏற்பட்டது.

3.1 பொருத்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகள்

துர்நடத்தை அல்லது திறமையின்மை நிருபிக்கப்பட்ட நிலைமையில் பாராளுமன்றத்தில் அதுபற்றி உரையாற்றி பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவுடன் சனாதிபதியின் கட்டளையின் பேரிலேயே உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகள் பதவி விலக முடியும்.[7] அவ்வாறான சனாதிபதியின் உரை குறித்த தீர்மானம் பாராளுமன்ற உறுப்பினர்களின் மூன்றிலொரு பகுதியினரால் கையெழுத்திடப்பட்டிருக்க வேண்டும். மேல்நீதிமன்ற நீதிபதியை சனாதிபதி நீதிச்சேவை ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் பதவிநீக்கம் செய்ய முடியும்.[8] கீழ்மட்ட நீதிமன்றங்களின் ஒழுக்காற்றுச் செயற்பாடுகளும், பதவிநீக்கமும் நீதிச்சேவை ஆணைக்குழுவின் பொறுப்பில் உள்ளன.[9]

3.2 உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றின் நீதிபதிகளின் துர்நடத்தை, திறமையின்மை ஆகியவற்றை விசாரித்து நிருபிக்கும் நடைமுறை

உறுப்புரை 107 (2) இன் கீழ் மேற்படி விடயம் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின்[10] கீழ் உள்ளது. 1984 இல் ஏற்பட்ட இந்த நடைமுறையின்

---

7 இலங்கை சனநாயக குடியரசின் யாப்பின் 107 (2) ஆம் உறுப்புரை, 1978.

8 மேற்படி., உறுப்புரை 111 (2).

9 மேற்படி., உறுப்புரை 114 (1).

10 இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 78 A நிலையியற் கட்டளை.

வரலாறு குறிப்பிடக்கூடியது. அன்றைய பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோன் 14 பங்குனி 1984 இல் சின்னத்துரை வர்த்தக டியூட்டரியின் பரிசளிப்பு விழாவில் ஆட்சியிலிருந்த அரசாங்கம் பற்றிச் சில குறிப்புக்களைக் கூறியிருந்தார்.[11] அதன்பின் அன்றைய பிரதமர் ஆர். பிரேமதாச அவர்களின் (இதன் பின்னர் ``பிரேமதாச குழு`` எனப்படும்) தலைமையின் கீழ் பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டது. பிரதம நிதியரசர் மேற்படி கூற்றுக்களை உண்மையில் குறிப்பிட்டாரா, ஆமெனில் அக்கூற்றுக்கள் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருந்தனவா என பாராளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிப்பது அக்குழுவின் பணியாக இருந்தது.

- பிரதம நீதியரசருக்குப் பொருத்தமற்ற நடத்தை அல்லது முறையற்ற நடத்தை;
- அரசியல் பிரச்சினைகள் பற்றிய அரசியல் விடயங்கள் பற்றியது;
- நடுநிலையான நீதிவழங்கலைத் தடுத்தது;
- விசாரணையில் ஈடுபடும் தரப்பினருக்கு ஒருதலைப்பட்சமான நிலைமையைத் தோற்றுவித்தது;
- உயர்நீதிமன்றம் முழுவதையும் குறிப்பாக நீதியரசர் பதவியை அபகீர்த்திக்கு உள்ளாக்கியது.[12]

பிரதம நீதியரசரைப் பதவி விலக்குவதற்கான அன்றைய அரசாங்கத்தின் அரசியல் காய்நகர்த்தல்கள் குறிப்பிடக்கூடியவை. பாராளுமன்றத்தில் தெரிவுக்குழு அமைக்கும் பிரேரணை ஆர். பிரேமதாச அவர்களால் பாராளுமன்றத்தில் கொண்டு வருவதற்கு முதல்நாள் 4 சித்திரை 1984 இல் 78 ஆம் நிலையியற் கட்டளையானது 78 A பிரிவு ஒன்றினைச் சேர்த்து

---

11 தெரிவுக்குழுவின் அறிக்கை, 1984 ஆம் ஆண்டு 71 ஆம் இலக்க பாராளுமன்றத் தொடர். 1983 ஆடிக் கலவரங்கள், நீதிச்சேவை ஆணைக்குழு தனது பணியாளரை தெரிவு செய்ய வேண்டியுள்ள தொழில் வங்கியின் தொழிற்பாடுகள், இவ்வாணைக்குழு முறைக்கு தேர்ச்சியற்ற தட்டெழுத்தாளர்கள் நியமனம் தொடர்பாக சில பாராளுமன்ற உறுப்பினர்களின் விதந்துரைக் கடிதங்கள், உயர் வாழ்க்கைச் செலவு, அதன் விளைவுகள், சனாதிபதியின் சம்பளம் தொடர்பான சில குறிப்புக்கள் ஆகியவை தொடர்பான சில அவதானங்கள்.

12 மேற்படி., பக். 82.

க்கப்பட்டு திருத்தப்பட்டது. இக்கட்டளை உயர்நீதிமன்ற நீதியரசரை பதவிவிலக்க சனாதிபதியைக் கோரும் நடைமுறைகள் தொடர்பானது.[13]

பிரேமதாச குழு தனது அறிக்கையை 9 ஆவணி 1984 இல் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தது. பிரதம நீதியரசரின் சில கூற்றுக்கள் அவரது பதவிக்கு ஏற்புடையதல்ல எனவும் பொருத்தமான நடவடிக்கையை எடுக்குமாறும் அறிக்கை கோரியது. எடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்து பாராளுமன்றமே தீர்மானிக்க வேண்டியிருந்தது.[14] புதிய கட்டளை விதிகளின்படி பிரதம நீதியரசரைப் பதவி விலக்கக் கோரி 6 புரட்டாதி 1984 இல் அரசாங்கம் ஒரு தீர்மானத்தை சபாநாயகரிடம் கையளித்தது. நீதிமன்றத்தில் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென பாராளுமன்றம் ஒரு தெரிவுக்குழுவை நியமித்தது.[15] எனினும் தெரிவுக்குழு தனது அறிக்கையைச் சமர்ப்பிக்க முன்னர் பிரதம நீதியரசர் 22 ஐப்பசி 1984 இல் தனது பதவிக்காலம் முடிந்து ஓய்வு பெற்றார்.

வலுவேறாக்கம், நீதிபதிகளின் பேச்சுரிமை, யாப்பின் 107 (2) உறுப்புரையின்கீழ் நீதிபதிகளை விசாரிக்க பாராளுமன்றம் பின்பற்றிய நல்முறையின் யாப்புத் தன்மை முதலிய பல்வேறு சட்டப் பிரச்சினைகள் பற்றி தெரிவுக்குழு ஆராய்ந்தது. அதன் இறுதி முடிவுரை பின்வருமாறு அமைந்தது:

> *கௌரவ நீதியரசரின் பேச்சானது, எல்லாவித சூழ்நிலைகளையும் வைத்து நோக்கும்போது பாரதூரமான மரபு மீறலாகவும், நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதிப்பதாகவும் அத்துடன் நீதித்துறையின் மீது பொதுமக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையைக் குறைப்பதாகவும் அமைந்துள்ளது. எனினும் ஒவ்வொரு மரபு மீறலும் தகாத நடத்தையாகிவிடாது. அதற்கான நிரூபண தராதரம் மிகவும் உயர்ந்தது. ஆனால் எல்லா சூழ்நிலைகளையும் வைத்துப் பார்க்கும்போது பிரதம நீதியரசரின் பேச்சை இக்கமிட்டி*

13 இந்தத் திருத்தத்தின்படி ஒரு நீதிபதியைப் பதவி விலக்கும் தீர்மான அறிவித்தல் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்ட பின்னர் அவர் அதனைப் பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் சேர்த்துக் கொள்வார். அதன் பின்னர் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகாத நடத்தை, திறமையின்மை பற்றி விசாரித்து பாராளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கவென ஏழு உறுப்பினர்களுக்குக் குறையாத எண்ணிக்கை கொண்ட தெரிவுக்குழு ஒன்றினைச் சபாநாயகர் நியமிப்பார்.

14 *Supra* n 11, பக்.84.

15 தீர்மானத்திலுள்ள குற்றச்சாட்டுகள் "பிரேமதாச கமிட்டி" கருத்தில் கொண்ட குற்றச்சாட்டுகள் போன்றவையே.

கண்டிக்கிறது. எனினும் கௌரவ பிரதம நீதியரசர் நிரூபிக்கப்பட்ட தகாத நடத்தையில் ஈடுபட்ட குற்றத்தைப் புரிந்துள்ளார் என்னும் முடிவுக்கு எம்மால் வரமுடியவில்லை.[16]

4. நிலையியற் கட்டளை 78 (அ) இன் அரசியலமைப்புத் தகைமை

4.1 2001 இல் நீதிமன்றத்தில் 78 (அ) நிலையியற் கட்டளையை எதிர்த்தல்

பிரதம நீதியரசர் சரத் சில்வாவை பதவி விலக்கக் கோரும் தீர்மானம் 77 பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்காவிடம் 6 ஆனி 2001 இல் கையளிக்கப்பட்டது. எனினும் அதே தினத்தில் உயர் நீதிமன்றமானது தன்முன்னுள்ள மூன்று அடிப்படை உரிமைகள் வழக்கில் ஒரு தீர்மானம் எட்டப்படும்வரை நிலையியற் கட்டளை 78 (அ) யின் கீழ் சபாநாயகர் ஒரு தெரிவுக்குழுவை நியமிக்கத் தடைவிதித்தது. யாப்பின் அடிப்படை உரிமை அத்தியாயத்தின் கீழ் சமத்துவ உரிமை (உறுப்புரை 12(1)), கருத்து வெளிப்பாட்டு உரிமை (உறுப்புரை 14 (1) (அ)), தமது தொழிலைச் செய்யும் உரிமை (உறுப்புரை 14 (1)(எ)) ஆகியவை மீறப்பட்டதாக சட்டத்தரணிகள் குழு இரு விண்ணப்பங்களைத் தாக்கல் செய்திருந்தது. மனுதாரர்கள் நிலையியற் கட்டளை 78 (அ) யாப்புத் தன்மையற்றது எனவும், நியாயமான விசாரணைக்கு அது வழிவகுக்கவில்லை என்றும் தெரிவுக்குழு ஒருதலைப்பட்சமாகச் செயற்பட வழிவகுக்கின்றது எனவும் சட்டத்தரணிகள் வாதிட்டனர்.[17]

மனுதாரர்களின் சட்டத்தரணி பல வாதங்களுக்கும் மத்தியில் இந்தக் கருத்தையும் முன்வைத்தார். அதாவது எந்த விசாரணையும் நீதிமுறையாக இருந்தால் மட்டுமே சுதந்திரமானதாகவும் நியாயமானதாகவும் இருக்குமெனவும், தெரிவுக்குழுவின் விசாரணையானது நீதிமுறைச் செயன்முறையைத் தவறாகக் கையாளுவதாக அமையுமெனவும், குற்றம் சுமத்துபவர், வழக்குத் தொடுப்பவர், நீதிபதி ஆகிய மூவரும் ஒரே தரப்பினராக அமைகின்றனர் எனவும் வாதிட்டார்.[18]

---

16 *Supra* n 11, பக். 91.

17 நீதிபதிகள் பிரியந்த பெரேரா, எச். எஸ். யாப்பா, ஹிரானி பண்டாரநாயக்க ஆகியோர் கொண்ட குழுவினர் வழக்குத் தொடர அனுமதித்ததுடன், தடைக் கட்டளையும் விதித்தனர்.

18 20-11-2001 திகதியிடப்பட்ட விண்ணப்பத்தின்படி விண்ணப்பங்களை மீளப்பெற மனுதாரர் நீதிமன்றத்திடம் அனுமதி கோரினர். அனுமதி வழங்கப்பட்டதுடன் விண்ணப்பங்கள் கைவிடப்பட்டன.

4.2 1984 தெரிவுக்குழு விசாரணையில் 78 (அ) உறுப்புரையை எதிர்த்தல

இதேபோன்ற வாதங்களே 1984 ஆம் ஆண்டு தெரிவுக்குழு விசாரணையிலும் முன்வைக்கப்பட்டன. பூர்வாங்க ஆட்சேபனையைக் கிளப்பிய தெரிவுக்குழு உறுப்பினர் ஒருவர்[19] சட்டரீதியாக நீரூபிக்கப்பட்டிருந்தாலொழிய "'திறமையின்மையை அல்லது தகாத நடத்தையை" தெரிவுக்குழு தீர்மானிக்க முடியாது எனக் கூறினார். தகாத நடத்தையை நிரூபிக்காமல் அதைப்பற்றி விசாரிப்பது குழுவைப் பொறுத்தவரையில் ஒரு பயனற்ற செயற்பாடாகும். அத்துடன் பாராளுமன்றமானது யாப்பின் 4 (இ) உறுப்புரையின்படி தனது சொந்த சிறப்புரிமை தவிர பாராளுமன்றமானது தனது நீதியதிகாரத்தைப் பாராளுமன்றமூடாக மட்டுமே பிரயோகிக்க முடியுமென நீதிபதி சமரக்கோன் சார்பில் வாதாடப்பட்டது. எனவே நீதியதிகாரத்தைப் பாராளுமன்றம் பிரயோகிக்க வழி செய்கின்ற நிலையியற் கட்டளை 78 (அ) யாப்பிற்கு முரணானது. இருப்பினும் தெரிவுக்குழுவானது இவ்வாதங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனுடைய கருத்துப்படி பாராளுமன்றம் தனக்களித்த அதிகாரத்திற்கமைய தனது கடமைகளை மேற்கொள்வதாகக் கூறியது. அத்துடன் உயர் நீதித் துறையினர் தொடர்பான ஒழுக்காற்று அதிகாரம் பல நாடுகளில் பாராளுமன்றத்திடமே கையளிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்திற்குரிய இந்த உரிமையின் அடிப்படையிலேயே தன்னுடைய கடமைகளைச் செய்வதாக தெரிவுக்குழு கூறியது. அதுமாத்திரமல்லாது நிலையியற் கட்டளை 78 (அ) இன் கீழ் பாராளுமன்றமானது யாப்பின் உறுப்புரை 107 (3) இன் கீழ் தனது அதிகாரங்களைப் பிரயோகிப்பதாக கூறியது.[20]

4.3 நிலையியற் கட்டளை 78 (அ) மீதான சபாநாயகரின் தீர்ப்பு

20 ஆனி 2001 இல் தீர்ப்பு வழங்கிய சபாநாயகர் நிலையியற் கட்டளை 78 (அ) இன் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் தான் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு தடைவிதிக்க உயர்நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை எனக் கூறினார். இது போன்ற செயலானது பாராளுமன்றத்துக்கு இருக்கக்கூடிய உரிமைகளைத் தடைசெய்வதாக அமையும். அதாவது பாராளுமன்றத்தின் மேல் வழக்குத் தொடரவோ அல்லது குற்றவியல்

---

19 திரு. சரத் முத்தெட்டுவேகம பாராளுமன்ற ஆட்சேபனையைக் கிளப்பினார். திரு. அனுரா பண்டாரநாயக்க, திரு. தினேஷ் குணவர்த்தன ஆகியோர் அவரை ஆதரித்தனர்.

20 *Supra* n 11, பக். 89.

பிரேரணை கொண்டுவரவோ, கேள்வி கேட்கவோ அல்லது தலையீடு செய்யவோ எந்தவொரு நீதிமன்றத்துக்கும் அதிகாரமில்லை. எனவே உயர் நீதிமன்றத்தின் ஆணைக்குத் தலைவணங்குகின்ற சட்டரீதியான கடப்பாடு சபாநாயகருக்கு இல்லை. அத்துடன் சபாநாயகர் என்பவர் ஒரு தெரிவுக்குழுவை நியமிக்கும்போது யாப்பின் உறுப்புரை 17 மற்றும் 126 இன் கீழ் ஒரு நிருவாகச் செயலை மேற்கொள்ளவில்லை. மாறாக அவர் பாராளுமன்றத்தின் ஓர் அதிகாரியாகவே செயற்படுகிறார். எனவே அவரது செயற்பாடுகள் அடிப்படை உரிமைகள் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் வரம்புக்குள் வரமாட்டா. எனவே குற்றவியல் பிரேரணையைப் பாராளுமன்றத்தின் கட்டளைப் பத்திரத்தில் சேர்க்குமாறு சபாநாயகர் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்தை அறிவுறுத்தினார். எனினும் ஏற்றுக்கொள்ளப்பட்ட குற்றவியல் பிரேரணை 2001 மார்கழி பாராளுமன்றக் கலைப்புடன் காலாவதியானது. பாராளுமன்றத்தின் கலைப்பு தொடர்பாக யாப்பின் உறுப்புரை 70 (4) பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்பதாகக் கொண்டுவரப்பட்ட தீர்க்கப்படாத சகல பிரச்சினைகளும் அடுத்தடுத்த தொடரின்போது திரும்பவும் எடுத்துக்கொள்ளப்படலாம். எனினும் பாராளுமன்றத்தின் கலைப்பு தொடர்பாக இதேபோன்ற ஏற்பாட்டை யாப்பு கொண்டிருக்கவில்லை.

5. நீதிபதிகளும் பக்கச்சார்பும்

5.1 பக்கச்சார்பின் சட்டரீதியான கருத்தியல்

''தனது சொந்த விடயத்துக்குத் தானே நீதிவழங்க முடியாது'' (nemo judex in re sua causa) என்பது இயற்கை நீதிக் கோட்பாடு. இக்கோட்பாடு பக்கச்சார்புக்கு எதிரான விதியாகக் குறிப்பிடப்படுகிறது. பக்கச்சார்பின்றியும், நடுநிலையுடனும் தீர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதே இதன் பொருளாகும். நிருவாகச் சட்டத்தில் இயற்கை நீதியின் விதிகளின் பயன்பாட்டுக்கு பக்கச்சார்பின்மைக் கோட்பாடு பிரயோகிக்கப்படுகின்றது. தனது வழக்கை விசாரிக்கும் நீதிபதி பக்கச்சார்பில்லாதவர் என்னும் நம்பிக்கை நீதிகோரி வழக்குத் தாக்கல் செய்வோருக்கு ஏற்பட வேண்டும். நடுநிலைமை என்பது ஒரு நீதிபதி அடைய வேண்டிய ஓர் இலட்சியமாகும். எனினும் அவரது மனம் (tabularasa) அல்ல; ''தெய்வீக நீதியை'' (divine Justice) அவர்களிடமிருந்து பொதுமக்கள் எதிர்பார்க்கக் கூடாது.

> *..................... காலம், தான், நண்பர்கள், உறவுகள் ஆகிய யாவற்றையும் மறந்து தனது எதிரி உட்பட இன்னொருவருக்குச்*

சரியானதை சொல்வதை மட்டுமே எண்ணும்போது மனிதன் தேவதையாகி விடுகிறான்.[21]

இங்கிலாந்தின் பல வழக்குகளில் பணத்தின்மீது ஏற்படும் ஈடுபாடு, அது எவ்வளவு சிறியதாக இருந்தபோதும் ஒரு நீதிபதியாகச் செயலாற்றுவதிலிருந்து ஒருவரைத் தகுதியற்றவராக்கிவிடும். தனிப்பட்டரீதியில் பக்கச்சார்பு கொள்ளுதல் பல சந்தர்ப்பங்களில் ஒரு தரப்பினருக்கு எதிரான நிலைமையை ஏற்படுத்திவிடும். ஒரு நீதிபதி ஒரு தரப்பினருடன் நட்பு, அல்லது உறவு அல்லது வர்த்தக அல்லது தொழில்சார் தொடர்பு கொண்டிருக்கும்போது பக்கச்சார்பு ஏற்படுவது சாதாரணமாகிவிடும். இவ்வாறான தொடர்பு வழக்காளிக்குத் தெரியவரும்பொழுது தனது வழக்கில் நீதிபதியின் நடுநிலைமை குறித்த சந்தேகம் அவருக்கு வருவது இயல்பாகும். வழக்கு முடிந்தபின்னர் இந்தத் தொடர்பு தெரியவந்தால் நிலைமை இன்னும் மோசமாகிவிடும். மேற்படி தொடர்பு காரணமாக வழக்கு விசாரணையிலிருந்து பல உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் பலர் தம்மை விடுவித்துக்கொண்ட சந்தர்ப்பங்கள் பல இலங்கையில் ஏற்பட்டுள்ளன. 2001 ஆம் ஆண்டு இந்த பக்கச்சார்புக் கோட்பாடு இலங்கைச் சட்டத்துறையில் இரண்டு காரணங்களுக்காக முக்கியத்துவம் பெற்றது. பிரதம நீதியரசர் சரத் சில்வா மீது கொண்டுவரப்பட்ட குற்றவியல் தீர்மானத்தில் பக்கச்சார்பான செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருந்தன. இரண்டாவது விடயம் தனது நியமனத்தை எதிர்த்த விண்ணப்பங்களை விசாரிப்பதற்கு பிரதம நீதியரசர் அமைத்த உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழு.

5.2 நீதித்துறை அலுவலர்களின் பக்கச்சார்பைத் (bias) தீர்மானிக்கும் சோதனைகள்

ஆங்கிலச் சட்டத்தின்கீழ் "பக்கச்சார்பு ஏற்படுவதற்கான உண்மையான வாய்ப்புப் பற்றிய சோதனை" அல்லது "பக்கச்சார்பு பற்றிய நியாயமான சந்தேகம் மீதான சோதனை" ஆகிய விண்ணப்பங்களைத் தீர்மானிப்பது மூலம் பக்கச்சார்பு சோதனை நடத்தப்படுகிறது. முதலாவது சோதனையில் குற்றம் சாட்டுபவர் மீதே நிரூபிக்கும் பொறுப்பு உள்ளது. ஏனெனில் இதிலுள்ள நியமம் நீதிமன்றத்தால் கணிக்கப்பட்ட உண்மைகள் பக்கச்சார்பு ஏற்படுவதற்கு உண்மையிலேயே காரணமாக இருந்துள்ளனவா என்பதாகும். இரண்டாவது

---

21 1-6-1991 இல் "நீதிசார் ஒழுக்கவியல்" என்னும் தலைப்பில் மேல் மாகாண மாவட்ட நீதிபதிகளுக்கு ஆற்றிய தனது உரையில் நீதிபதி ஏ. ஆர். பி. அமரசிங்க மேற்கோள் காட்டினார். (நீதிபதிகள் சஞ்சிகை (1991) யில் பிரசுரிக்கப்பட்டது)

சோதனை இலகுவானது. நீதி வழங்கப்படுவது மாத்திரமல்ல அது வழங்கப்படுவதாகக் காட்டப்படவும் வேண்டும் எனும் கோட்பாட்டில் இது தங்கியுள்ளது.[22]

நீதிபதிகளின் பக்கச்சார்பு தொடர்பான விடயங்கள் அண்மைக்காலத்தில் பினோசே வழக்கில் (case of Pinochet) (இல. 2)[23] முக்கியத்துவம் பெற்றது. தகுதியின்மைக்கு வழிவகுக்கும் பக்கச்சார்பு பற்றிய ஆங்கிலச் சட்டத்தின் பிரயோகம் இந்த வழக்கில் இன்னும் விரிவடைந்தது. இவ்வழக்கில் பணம் அல்லது பொருளாதார நலன்கள் சம்பந்தப்படா விட்டாலும் ஒரு காரணம் மேம்படுத்தப்பட்டிருப்பதால் அதுவும்கூட தகுதியின்மைக்கு உரியதாகும் என பிரபுக்கள் சபை தீர்மானித்தது.[24]

---

22 *மெற்ரோபொலிரன் புரொபட்டீஸ் கம்பனி* எதிர் *லென்னன்* (1969) 1QB, 577, வழக்கில் டெனிங் பிரபு ''பக்கச்சார்புச் சோதனையின் நியாயமான சந்தேகத்தை'' அங்கீகரித்தார். எனினும் அவர் அதனை ''பக்கச்சார்புச் சோதனைக்கான உண்மையான வாய்ப்புடன்'' தொடர்புபடுத்தினார். இதன்படி ஒரு சாதாரண நபர் பக்கச்சார்புக்கான உண்மையான வாய்ப்பு இருப்பதாகக் கருதினால் தீர்ப்பு கைவிடப்பட வேண்டும். எனினும் *R* எதிர் *Gough* (1993) AC 646 இல் பிரபுக்கள் சபையினால் ''பக்கச்சார்புச் சோதனையின் உண்மையான வாய்ப்பு'' குற்றவியல் வழக்குகள் மீண்டும் நிலைநிறுத்தப்பட்டது. ஆனால் அதிலுள்ள ''உண்மையான ஆபத்தும்'' காட்டப்பட்டது. எனவே இதன் மூலம் 'வாய்ப்பு' என்பதைவிட 'நிகழ்தகவு' வலிறுத்தப்பட்டது.

23 (1999) All E.R 577

24 இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட விடயங்களின்படி பினோசெயின் மேன்முறையீட்டை விசாரித்த குழுவின் உறுப்பினரான ஹெரப்மன் பிரபு தன்னை மேன்முறையீட்டின் ஒரு தரப்பாகக் கருத முடியாது என பிரபுக்கள் தீர்மானித்தனர். எனினும் சர்வதேச மன்னிப்புச் சபையின் துணை நிறுவனம் ஒன்றில் அவர் பணிப்பாளராக உள்ளமை, சர்வதேச மன்னிப்புச்சபை இந்த வழக்கில் ஒரு தரப்பாக உள்ளமை காரணமாக அவரைத் தகைமையற்றவராக்குகிறது. ஹொப்மன் பிரபு சர்வதேச மன்னிப்புச் சபையின் நேரடி உறுப்பினர் அல்லாதுவிடினும் அவர் பணிப்பாளராக இருக்கும் துணை நிறுவனம் வழக்கில் ஒரு தரப்பாக இருக்கும் நிறுவனத்தின் ஒரு அங்கமாக இருப்பதால் பிரபு தகைமையற்றவராகிறார் என பிரபுக்கள் கருதினர்.

5.3 இலங்கை நீதிமன்றங்களில் பிரயோகிக்கப்பட்ட பக்கச்சார்பு நியமம

எமது நீதிமன்றங்களில் "பக்கச்சார்பு பற்றிய நியாயமான சந்தேக சோதனை" (reasonable Suspicion of bias test)[25] ஆரம்பகால வழக்குகளில் பின்பற்றப்பட்டாலும் அண்மைக்காலங்களில் "பக்கச்சார்பு ஏற்படுவதற்கான உண்மையான வாய்ப்பு சோதனை" (real likelihood of bias test) ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதாவது வழக்கின் சகல சந்தர்ப்பங்களிலும் ஒரு நியாயமான நபர் தனக்கு எதிராகப் பக்கச்சார்பு ஏற்பட உண்மையான வாய்ப்பு உள்ளதா எனும் நம்பிக்கை பற்றியதாகும்.[26] *சைமன்* எதிர் *தேசிய வீடமைப்பு ஆணையாளர்*[27] இச் சோதனை வழக்கில் அங்கீகரிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட பகுதியினர் நியாயமான சந்தேகம் கொண்டிருக்கிறார்கள் என்பதால் மாத்திரம் ஒரு தீர்ப்பை இரத்துச்செய்ய முடியாது. பக்கச்சார்பிற்கான உண்மையான வாய்ப்பு உள்ளதா என்பது நிரூபிக்கப்படல் வேண்டும். பக்கச்சார்பு பற்றிய ஆங்கில சட்டத் தீர்ப்புக்கள் பயன்படுத்திய இரண்டுவகை சோதனைகளையும் ஆய்வு செய்த நீதிமன்றம் ''பக்கச்சார்பு ஏற்படுவதற்கான உண்மையான வாய்ப்பு'' எனும் சோதனையை அங்கீகரித்தது. எனினும் மீளாய்வு செய்யும் நீதிமன்றம் தன்முன்னால் இருக்கக்கூடிய சகலவிதமான சான்றுகளையும் அடிப்படையாகக் கொண்டு கீழ்மட்ட நீதிமன்றம் பக்கச்சார்பாக நடப்பதற்கு உண்மையான வாய்ப்புக்கள் உள்ளதா என புறவயமான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும்.

5.4 குற்றவியல் தீர்மானமும் பக்கச்சார்பு தொடர்பான குற்றச்சாட்டுக்களும்

2001 ஆனி 6 இல் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்ட தீர்மானத்தில் பிரதம நீதியரசருக்கு எதிரான பல பக்கச்சார்புக் குற்றச்சாட்டுக்கள்

---

25 *அரசு எதிர் பொடிசிங்கோ* 16 NLR 16.

26 பார்க்க, *In Re Ratnagopal* 70 NLR 409.

27 75 NLR 471.

முன்வைக்கப்பட்டன.[28] எனினும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த விண்ணப்பங்களை பிரதம நீதியரசர் விசாரிக்க மனுதாரர்கள் ஆட்சேபனை கிளப்பினரா என்பது தெளிவில்லை. அத்துடன் அப்படியொரு நிலைமையில் பிரதம நீதியரசர் தாமே இந்த விண்ணப்பங்களை விசாரிப்பதிலிருந்து விலகியிருக்க வேண்டுமா எனும் பிரச்சினையும் எழுகிறது.

---

28 சண்டே லீடர் 10-6-2001 பக் 8-9 பார்க்கவும்
அமைச்சர் ரிச்சாட் பத்திரண பிரதிவாதியாகவிருந்த லால் பிரியந்த லியனகேயினால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 447/97 இலக்க அடிப்படை உரிமைகள் விண்ணப்பத்தில் வழக்குத் தொடர அனுமதி மறுக்கப்பட்டது. இந்த நீதிபதிகள் குழுவின் தலைவரான நீதிபதி சரத் நந்தா சில்வா மனுதாரரிடம் பின்வருமாறு கூறினார்: ''அமைச்சர் ரிச்சாட் பத்திரண எனது வீட்டுக்கு வந்து அழுதார். அவர் இப்படியொரு செயலை எப்போதுமே செய்யவில்லை எனக் கூறினார். அவரை எனக்குத் தெரியும். அவர் இவ்வாறான செயலைச் செய்யக்கூடியவர் அல்லர்.''

உயர் நீதிமன்ற வழக்கு இல 2/2000 (இழிவுபடுத்தல்)

(அ) நீதிமன்றத்தை இழிவுபடுத்தியமைக்காக ஏன் தண்டிக்கப்படக் கூடாது என்பதற்கு காரணம் காட்டுமாறு நீதிமன்றம் அமைச்சர் எஸ். பி. திசாநாயக்காவுக்கு அறிவித்தல் விடுத்தது. நீதிமன்றத்தின் சில நீதிபதிகளின் கோரிக்கை காரணமாகவே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டது.

(ஆ) அது தொடர்பாக மூன்று பாராளுமன்ற பிரதிநிதிகளான கலாநிதி ரஜித சேனாரட்ன, திரு. பி. சந்திரசேகரன் மற்றும் திரு. சேகு இஸாதீன் ஆகியோர் அமைச்சர் திசாநாயக்கா நீதிமன்றத்தினை அவமதித்த குற்றத்திற்காக விசாரிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டுமென உச்ச நீதிமன்றத்தில் மனுவொன்றினைத் தாக்கல் செய்தானர். மேலே குறித்த புகார் இல: 1/2000 (அவமதிப்பு)

(இ) ்மலே கூறப்பட்ட விதி பற்றிய விசாரணைக்கு நீதிபதி சரத் நந்த சில்வா தலைமை தாங்கினார். அவர் அமைச்சர் திசாநாயக்காவின் நெருங்கிய நண்பராக இருந்த போதிலும் இப்பணியைச் செய்தார்.

(ஈ) மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களின் சார்பில் வாதிட்ட வழக்கறிஞர் தமது கருத்துக்களைச் சொல்ல அனுமதி கேட்டபோது அதற்கு பிரதம நீதிபதி அனுமதி வழங்க மறுத்தார். அத்துடன் அவர்கள் தொடர்ந்த அவதூறு வழக்கானது 2/2000 இலக்க வழக்கின் தீர்ப்பு வரும்வரை காத்திருக்க வேண்டும் என்று கூறி அதன் பின்னர் அவர் அமைச்சர் திசாநாயக்காவை எச்சரித்து விடுதலை செய்தார். அமைச்சர் இத்தகைய விடயங்கள் தொடர்பாக வகுக்கப்பட்ட நடைமுறைகளுக்கு மாறாக வருத்தம் தெரிவித்து ஓர் அறிக்கையை விடுத்திருந்ததன் அடிப்படையில் அவரது அவதூறு நடவடிக்கை பாரதூரமானதாக இருந்தபோதும் விடுதலை செய்யப்பட்டார்.

பிரதம நீதியரசர், சட்டமா அதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் நடந்த ஒரு நிகழ்வை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது. சட்டமா அதிபர் திணைக்களத்தில் தேங்கிக்கிடந்த தனது மைத்துனர் ஒருவரின் வழக்கில் பிரதிச் சட்டமா அதிபர் தலையிடுவதாக முன்வைக்கப்பட்ட ஒரு குற்றச்சாட்டில் சட்டமா அதிபர் தனது கருத்தைக் கூறியிருந்தார். அதாவது நீதிபதிகள் தமது உறவினர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளையும் விசாரிக்கலாம். ஆனால் தீர்ப்பு தனது உறவினக்கு சாதகமாக இருக்கும் பட்சத்தில் ''பொதுமக்களுக்குத் தெரிவிப்பதற்காக'' தாம் விசாரணையிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும்.[29] சிலவேளை தாம் தொடர்பு கொண்டுள்ள கம்பனி சம்பந்தப்பட்ட வழக்குகளிலிருந்து நீதிபதிகள் விலகிக் கொண்டுள்ளனர். இந்தளவுக்கு ''பக்கச்சார்பு'' என்பது எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமா என்பது ஆய்வுக்குரியது. எனினும் நீதிமுறைச் சட்டத்தின்படி[30] தான் தொடர்புபட்டுள்ள அல்லது ''தனக்கு ஈடுபாடுள்ள'' ஒரு வழக்கில் இரு தரப்பாரின் சம்மதமின்றி ஒரு நீதிபதி விசாரணை செய்ய முடியாது. இதே பிரச்சினைதான் 2001 இல் பிரதம நீதியரசரின் பக்கச்சார்பு பற்றிய வழக்கில் ஏற்பட்டுள்ளது.

5.5 உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழுவை நியமித்தல்

நீதிபதி சரத் சில்வா அவர்களை பிரதம நீதியரசர் பதவிக்கு நியமித்தது தொடர்பான அடிப்படை உரிமை வழக்கு[31] மூன்று நீதிபதிகளினால் விசாரணை செய்யப்படுவதற்காக யாப்பின் 132 (3)[32] உறுப்புரையின்படி "பொருத்தமான நீதிபதிகள் குழு" ("appropriate bench") பிரதம நீதியரசரால் நியமிக்கப்பட்டது.

---

29 See, *Sunday Times*, 6th April 1998

30 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறையாட்சிச் சட்டத்தின் 49 (1) பிரிவின்படி இரு தரப்பினருடைய அனுமதி இல்லாதவிடத்து ஒரு நடவடிக்கை, குற்றம் சாட்டல் அல்லது வேறெதேனும் விடயத்தில் நீதிபதி ஒருவர் சம்பந்தப்பட்டவராய் அல்லது தனிப்பட்ட ஈடுபாடு உடையவராய் இருக்கும் பட்சத்தில் அந்த நீதிபதி தமது நீதி அதிகாரத்தை அவ்விடயத்தில் பயன்படுத்த தகுதியற்றவராகின்றார்.

31 *Supra* n 2.

32 பிரிவு 132 (3) இன்படி பிரதம நீதியரசர் தனது சொந்த மனுவின்படி அல்லது விசாரணையில் ஈடுபட்டிருக்கும் இரு அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகளின் வேண்டுகோளின்படி அல்லது மனுச் செய்த தரப்பின் விண்ணப்பக்கும் விண்ணப்பத்தின்படி, பிரதம நீதியரசரின் கருத்தில் அவ்விசாரணையானது பொதுவாகவும், பொதுமக்களைப் பொறுத்தும் முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கருதுமிடத்து உயர் நீதிமன்றத்தில் 5 அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகளைக் கொண்ட குழுவொன்று அவ்விசாரணையைச் செய்யுமாறு பணிக்கலாம்.

இதற்கு எதிராக மனுதாரர்கள் பிரதம நீதியரசருக்கு சமர்ப்பித்த மனுவில் இந்த வழக்குக்காக முடிந்தளவு ஆகக்கூடிய உயர்நீதிமன்ற நீதிபதிகள் எடுக்கப்பட வேண்டுமெனவும் அது முடியாத பட்சத்தில் சேவை மூப்பு அடிப்படையில் நீதிபதிகள் நியமிக்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் பிரதம நீதியரசர் இதனை நிராகரித்து மூன்று நீதிபதிகளின் கோரிக்கையின்பேரில் வழக்கை விசாரிப்பதற்காக ஏழு நீதிபதிகளை சேவை மூப்பு அடிப்படையில் நியமித்தார். பின்னர் ஐந்து நீதிபதிகள் அடங்கிய புதிய குழு நியமிக்கப்பட்டது. (ஒருவர் ஓய்வு பெற்றார்). இந்த ஐந்து பேரும் முன்னர் நியமிக்கப்பட்ட ஏழு பேரடங்கிய குழுவில் அங்கம் வகித்தோராவர்.

இந்த குழுவினருக்கு எதிராக மனுதாரர்கள் பூர்வாங்க ஆட்சேபனையை எழுப்பினர். 901/99, 902/99 ஆகிய விண்ணப்பங்களின்மீது வாதம் நிகழ்த்திய சட்டத்தரணி மனுதாரர்கள் ஒத்துக்கொள்ள முடியாத வகையில் நீதிபதிகள் குழுவை பிரதம நீதியரசர் நியமித்துள்ளார் எனவும் அது 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதிமுறைச் சட்டத்தின் 49 ஆம் பிரிவுக்கு முரணானது எனவும் கூறினார். இந்த வாதத்தை நீதிபதி வடுகொடபிட்டிய நிராகரித்தார். உயர் நீதிமன்றம் மற்றும் மேற்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றின் நீதிபதிகள் தொடர்பான உறுப்புரை 49 (3)[33] ஆகுமே தவிர 49 (1)[34] அல்ல. எனவே சம்பந்தப்பட்ட தரப்பினரின் சம்மதம் அவசியமல்ல என நீதிபதி கூறினார். அத்துடன் நீதிபதிகளை பிரதம நீதியரசர் நியமித்தல் என்பது ஒரு நீதிமுறைசார்ந்த செயலல்ல எனக் கூறிய நீதிபதி வடுகொடபிட்டிய பிரதம நீதியரசர் தான் சம்பந்தப்பட்டுள்ள வழக்கை விசாரிக்கவோ, தீர்ப்பளிக்கவோ முயலாத காரணத்தினால் பிரிவு 4 (3) மீறப்படவில்லை எனச் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் இன்னுமொரு ஆட்சேபனையும் முன்வைக்கப்பட்டது. அதாவது பிரதம நீதியரசர் உறுப்புரை 132 (3) (ii) இன் கீழ் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை சட்டத்தின்படி கையாளவில்லை எனவும் ஐந்து நீதிபதிகளை அவர் நியமனம் செய்தபோது பக்கச்சார்புக்கு எதிரான விதியை மீறியுள்ளார் எனவும் கூறப்பட்டது. தேவையின் காரணமாகவே பிரதம நீதியரசர் நீதிபதிகள் குழுவை உறுப்புரை 132 (3) இன் படி நியமித்துள்ளார் எனவும் மனுதாரர் சட்டத்தரணி வாதிட்டார். மனுதாரர் கேட்டுக்கொண்டபடி பிரதம நீதியரசர் நீதிபதிகள் குழுவை நியமித்திருந்தால் அவர்கள் இந்தக் குற்றச்சாட்டினை முன்வைத்திருக்க மாட்டார்கள். இந்த ஆட்சேபனை தொடர்பாக நீதிபதி வடுகொடபிட்டிய பின்வருமாறு கூறினார்:

---

33 ஒரு விடயத்தில் உயர் நீதிமன்ற நீதிபதியோ அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதியோ தனிப்பட்ட ஈடுபாடு கொண்டவராக, இருப்பின் அவரது தீர்ப்புத் தொடர்பான மேன்முறையீடு அந் நீதிமன்றத்தின் வேறொரு நீதிபதி அல்லது நீதிபதிகளால் விசாரிக்கப்படல் வேண்டும்.

34 *Supra* n 30.

அத்தியாவசியமான தேவை என்னும் கோட்பாடு உண்மையில் இயற்கை நீதிக் கொள்கைக்கு ஒரு விதிவிலக்கை ஏற்படுத்தியுள்ளது. பக்கச்சார்புக்கு எதிரான விதியை உள்ளடக்கியுள்ள இக் கொள்கையானது பக்கச்சார்பு கொண்ட ஓர் அலுவலர். அவ்விதியை மீறாமல் தனக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு செயலை. அவ்வதிகாரத்தை தனக்களித்த சட்டத்தின்படி மேற்கொள்ள வழிவகுக்கிறது. எனவே நீதியரசர் தான் ஒரு பிரதிவாதியாக இருந்த மோதிலும்கூட நீதிபதியின் குழுவை நியமிக்க சட்டப்படி அதிகாரம் கொண்டவராக (பக்கச்சார்பு இருந்தாலும்) உள்ளார். யாப்பின் உறுப்புரை 132 (3) இவ்வதிகாரத்தை அவருக்கு வழங்குகிறது. எனவே அவர் ஐந்து நீதிபதிகள் குழுவை நியமித்தமை எல்லா வழிகளிலும் சட்டப்படி சரியானது. அவரது சட்ட பூர்வமான அதிகார வரம்பிற்கு உட்பட்டதுமாகும். எனவே பிரதம நீதியரசர் பக்கச்சார்பு விதியை மீறவில்லை.........

விசாரணைகளின்போது நீதிபதிகளில் எவரேனும் பக்கச்சார்பானவராகவோ அல்லது பக்கச்சார்பு விதியை மீறியவராகவோ இல்லை எனவும் அவர்கள் அனைவரும் நடுநிலையானவர்களே எனவும் மனுதாரர்களின் சட்டத்தரணி ஒத்துக்கொண்டார். எனவே பிரதம நீதியரசர் பக்கச்சார்பு கொண்டவர் என்று சொல்லப்பட்டாலும் அவர் நீதிபதிகளை நியமித்தார் என்ற ஒரே காரணத்துக்காக அவர்களும் பக்கச்சார்பு கொண்டவர்கள் எனக் கூறுவதற்கில்லை என நீதிபதி வடுகொடபிட்டிய குறிப்பிட்டார்.

அவரது கருத்துப்படி பிரதம நீதியரசர் பிரதிவாதியாக உள்ள வழக்கு விசாரணையில் அவர் ஈடுபடாத காரணத்தினால் பக்கச்சார்புக்கு எதிரான விதி இங்கு பொருந்தாது. பிரதம நீதியரசர் நீதிபதிகள் குழுவை நியமித்த காரணத்தினால் பக்கச்சார்பு தொடர்பான சந்தேகம் எழவேண்டிய அவசியமில்லை. நீதிபதிகள் குழுவை நியமித்தல் ஒரு நிருவாகத் தொழிற்பாடு மட்டுமே; அது நீதி வழங்குதல் தொடர்பானது அல்ல; எனவே பக்கச்சார்புக்கு எதிரான விதி இங்கு பொருந்தவில்லை என தீர்ப்பிலிருந்து தெளிவாகிறது.

6. சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் அறிக்கை

இலண்டனிலுள்ள சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தினர் 2001 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 28 முதல் 31 வரை உண்மையறியும் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வந்தனர். அவர்களின் அறிக்கைப்படி அவர்கள்

இங்கிருந்தபோது சட்டத்தரணிகள், இலங்கை சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், பிரதம நீதியரசர் உள்ளிட்ட நீதிபதிகள், கல்வியாளர்கள், வாண்மையாளர், அரசியல்வாதிகள் ஆகிய பல தரப்பினரையும் சந்தித்தனர். சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் மனித உரிமை நிறுவனம் இந்த விஜயத்தை ஏற்பாடு செய்திருந்தது. 2001 கார்த்திகையில் வெளியிடப்பட்ட அவர்களது அறிக்கையின்படி[35] அவர்களது வருகையின் நோக்கங்களானது பின்வருமாறு:

> *அண்மைக்காலத்தில் நடந்த வழக்குகளின்படி பிரதம நீதியரசர் ஒரு சட்டத்தரணியாகப் பணியாற்றுவதினின்று தடுக்கும் முயற்சிகள் நடந்துள்ளன. பாராளுமன்றத்தில் மூன்றிலொன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் அவரைக் குற்றவியல் பிரேரணைக்குட்படுத்த முயற்சி செய்திருக்கிறார்கள். இந்தப் பின்னணியால் நீதித்துறையின் சுதந்திரத்துக்கு உள்ள உத்தரவாதங்கள் பற்றியும் அந்த உத்தரவாதங்களுக்கு நடைமுறைரீதியாகக் கிடைக்கக்கூடிய மதிப்பைப் பற்றியும் ஆராய்வதற்காக அவ்வாறு செய்தனர்.*[36]

சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் தூதுக்குழுவினர் இலங்கையின் நீதித்துறையின் சுதந்திரம் பற்றி முடிவுக்கு வந்த கருத்துக்கள் மகிழ்ச்சிக்குரியவையல்ல. இலங்கையின் நீதித்துறைச் சுதந்திரம் பற்றி முன்வைத்த ஐந்து வருடங்களுக்குள் வெளியான இரண்டாவது மோசமான அறிக்கையாகும். முதலாவது அறிக்கை ஜெனீவாவிலுள்ள நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளின் சுதந்திரத்துக்கான நிலையம் (Centre for the Independence of Judges and Lawyers - CIJL) வெளியிட்டது.[37] 1997 ஆம் ஆண்டு அறிக்கையில் பல்வேறு விடயங்களிருந்தன. அவற்றுக்கு மத்தியில் விதந்துரைகளும் இருந்தன.

(i) நீதித்துறை நியமனம் தொடர்பான யாப்பு முறையை மாற்றுவதில் கவனம் செலுத்த வேண்டும்.

  (அ) நீதிச்சேவை ஆணைக்குழுவைச் சுதந்திரமாக இயங்கக்கூடிய முறையில் தெரிவு செய்தல்.

---

35 *Supra* n 1.

36 *Ibid.*, p. 9.

37 *Judicial Independence in Sri Lanka.* Report of a Mission 14-23 September, Center for the Independence of Judges and Lawyers, Geneva (1997).

(ஆ) மேல் நீதிமன்றங்களுக்கான நியமனங்களை ஆணைக்குழு மேற்கொள்ள அல்லது ஆணைக்குழு சமர்ப்பித்த பட்டியலிலிருந்து சனாதிபதியை நியமிக்குமாறு கோருதல்.

(ii) மேற்படி முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால், அரசியல்யாப்பு செயற்பட வழிவிடப்பட வேண்டும். அதன்படி சனாதிபதி நியமனங்களை மேற்கொள்வதற்கு முன்னர் பிரதம நீதியரசரைக் கலந்தாலோசித்திருக்க வேண்டும். பிரதம நீதியரசரும், வேறு இரு சிரேஷ்ட நீதிபதிகளும் நீதிச்சேவை ஆணைக்குழுவை (Judicial Service Commission) உருவாக்குவர்.

(iii) ஆணைக்குழுவின் செயலாளர் சனாதிபதியினால் அன்றி பிரதம நீதியரசரினாலேயே நியமிக்கப்படுவார்.[38]

சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் 2001 இன் அறிக்கையின் விதந்துரைகளும் இதேபோல் அமைந்திருந்தன. நீதிபதிகள் சுதந்திரமான கணிப்பீட்டுக்குப் பின்னர் நியமிக்கப்பட வேண்டும். நீதிபதிகளின் நியமனம், மாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை, பதவி நீக்கம், ஓய்வு ஆகியவை வெளிப்படையாகவும் வகைகூறலுடனும் நடைபெறும் முறைமை உருவாக்கப்படல் வேண்டும். நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு எவ்வாறு நியமனங்கள் மேற்கொள்ள வேண்டும் என்ற பல்வேறு விதந்துரைகளையும் இச்சங்கம் முன்வைத்தது. அண்மைக்காலமாக நீதித்துறை தொடர்பாக நடந்தவைகளைக் கருத்திற்கொண்டே இவ்வாறான விதந்துரைகள் முன்வைக்கப்பட்டன. நீதிபதிகள் நியமனம், நீதிச்சேவை ஆணைக்குழு தொடர்பான நீதிபதிகளின் முறைப்பாடு, நியாயமான விசாரணை இல்லாமல் நீதிபதிகளை அகற்றுதல், உயர் நீதிபதிகள் பற்றி பாராளுமன்றம் விசாரணை செய்தல் முதலியன பற்றி தூதுக்குழு விசனம் தெரிவித்தது. நீதித்துறையின் உயர் அலுவலரின் திறமையின்மை மற்றும் தகாத நடத்தை பற்றி சுதந்திரமான வாதம் நடத்துவதற்குப் பாராளுமன்றம் பொருத்தமான இடமல்ல எனவும் ஒரு சுதந்திரமான நீதித்துறை இல்லை என்னும் கருத்து பரவலாகும் ஆபத்தினால் சட்டவாட்சி பெரும் பாதிப்புக்கு உள்ளாகும் எனவும் தூதுக்குழு கருத்துத் தெரிவித்தது.

நீதிபதிகளும் நீதிமன்றங்களும் பொது விவாதங்களினின்று விதிவிலக்குப் பெற முடியாது. எனினும் நீதித்துறை குறிப்பாக உயர் நீதிமன்றத்தை அரசியல்வாதிகள் அரசியல்ரீதியாக விமர்சனம் செய்யும்போது

---

[38] *Ibid*., p. 47.

அதனால் நீதித்துறையும் அதன் சுதந்திரமும் பாதிக்கப்படுமென தூதுக்குழு சுட்டிக்காட்டியது. சனாதிபதி உட்பட அரசியல்வாதிகள் நீதித்துறையினருக்கு எதிராக ஆதாரமில்லாத குற்றச்சாட்டுக்களை முன்வைக்கக் கூடாதென தூதுக்குழு விதந்துரை செய்தது.[39] தூதுக்குழுவின் இக்கருத்துக்கள் பற்றி அடுத்து ஆராயப்படுகிறது.

7. நீதித்துறை உறுப்பினர் ஒருவருக்கெதிரான குற்றச்சாட்டு

2000 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஓர் அடிப்படை உரிமைகள் வழக்கில் பெயர் குறிப்பிடப்படாத உயர்நீதிமன்ற நீதிபதியொருவர் ஒரு விடுதலைப்புலி சந்தேக நபரிடம் இருந்து இலஞ்சம் வாங்கியதாக இரண்டு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சனாதிபதி குறிப்பிட்டதாக ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டிருந்தது.[40] இவ்வாறு இலஞ்ச ஊழல் நடைபெறவில்லை என்றும் தமக்கு ஏற்பட்ட அவப்பெயரை நீக்குமாறும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் சனாதிபதிக்கு ஆனி மாதத்தில் கடிதமெழுதினர்.[41] நீதிபதிகளில் ஒருவர் இலஞ்சம் பெற்றதற்கு நம்பக்கூடிய சான்றுகள் இருப்பின் சட்ட நடைமுறைகளின்படி புலனாய்வு செய்து நடவடிக்கை எடுக்குமாறு கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இக்கடிதத்திற்கு சனாதிபதி பதில் தராத காரணத்தினால் அவர் சுமத்திய குற்றச்சாட்டுக்கு எவ்வித ஆதாரமும் இல்லையென நீதிபதிகள் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தனர். பின்னர் சனாதிபதி ஒரு கூட்டத்தில் அந்த நீதிபதியின் பெயரை வெளிப்படுத்தியதாகவும் வேறுசில முக்கியமான நீதித்துறையினரின் பெயர்களும் இருந்ததாகவும் ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது.[42] இந்தப் பின்னணியில் 2001 ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் யூ.என்.பி. இன் உதவித் தலைவரான திரு காமினி அத்துக்கோரள சம்பந்தப்பட்ட நீதிபதியை இனங்காணுமாறும் சனாதிபதியின் குற்றச்சாட்டு உண்மையா, பொய்யா என்பதை ஸ்தாபிக்குமாறும் இலஞ்ச ஆணையாளருக்கு முறைப்பாடு செய்தார். இந்த முறைப்பாட்டிற்கு என்ன நடந்தது என்பது தெரியாது. ஆனால் உயர் நீதிமன்ற நீதிபதியின்மேல் சுமத்தப்பட்ட இந்த இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டால் பொதுமக்கள் நீதித்துறையின்மேல் கொண்டிருந்த நம்பிக்கையானது ஆட்டம் கண்டது.

---

39 *Supra* n 1, p. 40.

40 *Sunday Leader*, 9th April 2000.

41 *Sunday Leader*, 24th June 2000.

42 *Ibid.*

8. அரசியலமைப்பிற்கான 17 ஆவது திருத்தம்

அரசியலமைப்பிற்கான 17 ஆவது திருத்தம் 2001 ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேறியது. இந்நூலின் இரண்டாம் அத்தியாயத்தில் இவ்விடயம் தொடர்பாக விரிவாக ஆய்வு செய்யப்பட்டதெனினும் 17 ஆவது திருத்தத்திலுள்ள நீதித்துறை பற்றிய முக்கியமான விடயங்கள் இங்கு ஆய்வு செய்யப்படும்.

17 ஆவது திருத்தத்தின் உறுப்புரை 41C (1) இன்படி உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகள், பிரதம நீதியரசர், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் மற்றும் ஏனைய நீதிபதிகள், நீதிச்சேவை ஆணைக்குழுவின் தலைவர் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள், சட்டமாஅதிபதி ஆகியோர் சனாதிபதியால் நியமிக்கப்படுவர். ஆனால் சனாதிபதியின் விதந்துரைகள் யாப்புப் பேரவையின் அங்கீகாரம் பெற்றதன் பின்னரே சனாதிபதியினால் நியமனங்களை மேற்கொள்ள முடியும். 17 ஆவது திருத்தத்தின் உறுப்புரை 111E இன்படி நீதிச்சேவை ஆணைக்குழு பிரதம நீதியரசரையும், உறுப்புரை 41C இன்படி சனாதிபதியால் நியமிக்கப்பட்ட வேறு இரு நீதிபதிகளையும் கொண்டிருக்கும். கடந்த இரு தசாப்தங்களாக பல்வேறு சந்தர்ப்பங்களில் சில நீதித்துறை நியமனங்கள் அரசியல்ரீதியாக மேற்கொள்ளப்படுகின்றன என்னும் அபிப்பிராயம் பொது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.[43] தற்போதைய சட்டமானது நீதித்துறையின் சுதந்திரத்தைப் பேணி அரசியற் தலையீடுகளினின்றும் நீதித்துறையை விடுவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

9. முடிவுரை

ஒரு சனநாயக நாட்டில் நீதித்துறையானது மிகவும் முக்கியமான பங்கினை வகிக்கின்றது. நீதித்துறையின் சுதந்திரம் என்பது வெறுமனே அரசின் ஏனைய இரு கூறுகளான சட்டத்துறையும் நிருவாகத்துறையும் தலையிடாமல் இருத்தல் என்பதைவிடக் கூடிய அர்த்தமுள்ளதாக மாறியுள்ளது. 1959 ஆம் ஆண்டு புதுடில்லியில் கூடிய சர்வதேச ஜூரிமார் காங்கிரஸ் (International Congress of Jurists) கூடி "மாறும் உலகத்தில் சட்டத்தின் ஆட்சி" (The Rule of Law in

---

43 See, paper presented by R. K. W. Goonesekera on the 'Judiciary' at the Law & Society Trust Conference on "*Fifty Years of Law, Justice and Governance in Sri Lanka.*"

a Changing World) எனும் பொருளில் கலந்துரையாடியது. அம்மாநாட்டில் பின்வரும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன:

> *சட்டவாட்சி என்பது ஒரு மாறுநிலை கொண்ட எண்ணக்கருவாகும். அதனுடைய விரிவுக்கும் நிறைவுக்கும் அடிப்படையில் பொறுப்பாக இருப்போர் ஜுரிமார்களே. சட்டவாட்சி என்பது ஒரு சுதந்திர சமூகத்தில் தனிமனிதனின் குடியியல் மற்றும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கு மாத்திரம் பயன்படுத்த முடியாது. தனிநபரின் சட்ட பூர்வமான அபிலாசைகளும் கௌரவமும் அடையப்படக்கூடிய வகையில் அது சமூக, பொருளாதார, கல்வி மற்றும் கலாசார சூழ்நிலைகளைத் தோற்றுவிக்க வேண்டும்.*[44]

1995 ஆம் ஆண்டு ஆவணி 19 ஆம் திகதி நீதித்துறையின் சுதந்திரம் பற்றிய கோட்பாடுகள் மீதான பெய்ஜிங் பிரகடனம்[45] ஒரு ''சுதந்திரமான நீதித்துறைக்கான'' தேவைகளைப் பட்டியல் படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆவணத்தின்படி நீதித்துறையின் குறிக்கோள்களும் தொழிற்பாடுகளும் ஏனையவை இருக்கத்தக்கதாக கூட்டாட்சியைப் பிரயோகிப்பதும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதுமாகும்.[46] இலங்கையில் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக நீதித்துறையின் செயற்பாடு பற்றி இந்நூலின் 4 ஆம் அத்தியாயத்தில் ஆய்வு செய்யப்பட்டது. இந்த அத்தியாயத்தில் "சுதந்திரமான நீதித்துறை" என்னும் மரபுரீதியான கருத்து தொடர்பான சில பிரச்சினைகள் பற்றி கவனம் செலுத்தப்படுகிறது.

---

44 Barnett, Hilaire, *Constitutional and Administrative Law* (1995) p. 115.

45 நீதித்துறையின் சுதந்திரம் தொடர்பான தத்துவங்கள் பற்றிய அறிக்கையானது LAWASIA பிராந்தியத்தின் நீதித்துறையின் சுதந்திரம் தொடர்பான தத்துவங்கள் பற்றிய பெய்ஜிங் அறிக்கை எனப்பட்டது. இதனை ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியங்களுக்கான பிரதம நீதியரசர்களின் 6 ஆவது மகாநாடு நிறைவேற்றியது. கௌரவ நீதியரசர் பி. ஆர். பி. பெரேரா இலங்கைப் பிரதிநிதியாக இதில் கலந்து கொண்டார்.

46 *Ibid.*, உறுப்புரைகள் 10(அ) மற்றும் 10(ஆ).

IV

சமூக பொருளாதார உரிமைகள் மற்றும் நிலை பேண் அபிவிருத்தியின் மீதான மின்சார நெருக்கடியின் தாக்கம்

சொனாலி ஆர். தயாரட்ன*

1. அறிமுகம்

1994 இல் இருந்து இலங்கை பருவகாலரீதியான மின்சாரப் பற்றாக்குறைகளை அனுபவித்து வந்துள்ளது. இத்தகைய பற்றாக்குறைகள் இரவோடு இரவாகத் தோற்றம் பெற்றவையன்று. மாறாக, மின்சார நெருக்கடி கடந்த ஒன்றரை தசாப்தங்களுக்கு மேலாக அதிகரித்து வந்துள்ளது. 1980 களில் நீர்மின் உருவாக்கத்தில் இலங்கை மின்சாரசபை (CEB- Ceylon Electricity Board) பாரிய முதலீடுகளை ஏற்படுத்துவதில் தனியுரிமை அதிகாரத்தைக் கொண்டதாகக் கருதப்பட்டது. 1990 களின் ஆரம்பத்தில் சக்தியின் அடிப்படையைப் பன்முகப்படுத்துவதற்கான தேவை உணரப்பட்டது. மோசமான வானிலை நிலைமைகளினால் நீர்மின் சக்தியின் பயன்பாடு

* LLB (சிறப்பு) கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை; சட்டத்தரணி, இலங்கை உயர்நீதிமன்றம். சேனானி தயாரத்ன LLB (சிறப்பு), கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை; சட்டத்தரணி, இலங்கை உயர்நீதிமன்றம் அவர்கள் வழங்கிய உதவிக்கு இக்கட்டுரை ஆசிரியர் நன்றி கூறுகிறார்.

வரையறுக்கப்பட்டமை பருவகால மின்சக்திப் பற்றாக்குறைகளை ஏற்படுத்தியது. முதலீட்டுத் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டாலும் அவை தாமதமாகியதுடன் பதிலீடாக வேறு திட்டங்கள் முன்வைக்கப்பட்டன அல்லது சூழலியல்வாதிகள், சமய நிறுவனங்களின் பல்வேறு தலையீடுகளினால் அமுல்படுத்தப்படவில்லை. இதன் விளைவாக 1996 இல் நாடு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டதுடன் எட்டு மணித்தியால மின்வெட்டுக் கட்டுப்பாடுகள் அத்தியாவசியமற்ற மின்சாரப் பாவனைகளின் மீது விதிக்கப்பட்டன. மின்சார நெருக்கடியின் சில அம்சங்கள் பின்னணியில் இன்றும் இருந்துவந்தாலும் 1996-2000 ஆண்டுக் காலத்தில் மின்வெட்டுக்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தவிர்த்தே வந்துள்ளனர். மின்பாவனையைக் கட்டுப்படுத்தல், ஜெனரேற்றர்களை வாடகைக்கு அமர்த்தல், மேலதிக கட்டணங்களுக்கு வரி விதித்தல் ஆகியவற்றின் மூலம் இதனை மேற்கொண்டனர்.[1] இருப்பினும் 2001 ஆம் ஆண்டு நீர்மின் சக்தி உருவாக்கத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க குறைப்பு வெளிப்படையாகத் தெரிந்ததுடன் மிகக் கடுமையாக ஏற்பட்ட வரட்சி நிலைமைகளும் இதற்குக் காரணமாக இருந்தது. இதன் விளைவாகவே 2001 ஆம் ஆண்டில் எட்டு மாதங்களுக்குத் தொடர்ச்சியான மின்வெட்டு இடம்பெற்றது. சக்தி நெருக்கடியின் இத்தகைய விளைவுகள் நாட்டின் சமூக பொருளாதார நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தியதுடன் மின்சக்தித்துறை நிறுவனங்களின் நல்லரசாட்சி (good governance) தொடர்பான பிரச்சினைகளையும் உருவாக்கியது.

இவ் அத்தியாயத்தில், 2001 ஆம் ஆண்டு இலங்கைப் பொருளாதாரத்தின் சீரழிவில் மின்சார நெருக்கடியின் பங்கினையும் அந்நெருக்கடியின் விளைவினால் மக்களின் சமூக, பொருளாதார மற்றும் அபிவிருத்தியில் ஏற்பட்ட தாக்கம் பற்றியும் மதிப்பீடு செய்யப்படுகின்றது. சூழலும் அபிவிருத்தியும் (1992) பற்றிய "றியோ பிரகடனம்" (Rio Declaration) கூறுவதன்படி நிலைபேண் அபிவிருத்தியை[2] அடைந்து கொள்வதற்கான இலங்கையின் கடப்பாடு என்னும் பின்னணியில் துறைசார்ந்த அதிகாரிகளினால் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளை இவ்வத்தியாயம் பரிசீலிக்கிறது.

---

1 மத்திய வங்கி அச்சகம், கொழும்பு, இலங்கை 2002. பக். 109. நிதிச் சட்டமானது மத்திய வங்கியின் நிதிச்சபை வருடாந்தம் நிதி அமைச்சருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமெனக் கூறுகிறது. இதில் ஏனைய விடயங்களுடன், பொருளாதாரத்தின் நிலைமையும், ஒவ்வொரு வருடமும் நிதிச்சபையின் கொள்கைகள் பற்றிய மீளாய்வும் உள்ளடக்கப்பட வேண்டும்.

2 நிலைபேண் அபிவிருத்தி என்னும் கருத்து சூழல், அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகள் மாநாட்டில் (UNCED) முன் வைக்கப்பட்டது. 1992 ஆனியில் நடந்த இம் மாநாடு பூகோள உச்சிமாநாடு எனவும் கூறப்படும். இம்மாநாட்டில் சூழல் மற்றும் அபிவிருத்தி மீதான றியோ பிரகடனம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதில் நிலைபேண் அபிவிருத்திக் கோட்பாடுகள் உள்ளடங்கியுள்ளன.

நல்லாட்சித் தத்துவங்கள்[3] மற்றும் நிலைபேண் அபிவிருத்தியிலும் சக்தி நெருக்கடியிலும் அதன் தாக்கங்கள் தொடர்பாக மின்சக்தித் துறையில் அரச ஒழுக்காற்றுப் பொறிமுறைகள் பற்றிய மதிப்பீடு ஒன்றும் தரப்பட்டுள்ளது. கட்டுரையாசிரியரினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்களின் அடிப்படையிலான பரிந்துரைகளும் இவ் அத்தியாயத்தில் முன்வைக்கப்படுகின்றன.

2001 ஆம் ஆண்டில் மின்சக்தி நெருக்கடியானது நாட்டின் சமூக பொருளாதார நடவடிக்கைகளைச் சீர்குலைத்த முக்கிய காரணியாக அடையாளம் செய்யப்பட்டாலும் மேலும் பல காரணிகள் மக்களின் சமூக பொருளாதார உரிமைகளின் மீது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. இலங்கையின் பொருளாதாரத்தினை தொடர்ச்சியான பல்வேறு நிகழ்வுகள் சீர்குலையச் செய்திருந்ததுடன் மிக ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார வளர்ச்சியைக்கூட அவை முற்றாகத் தடைசெய்துவிட்டன.

இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை 2001[4] இன்படி 2001 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 11 ஆம் திகதி ஐக்கிய அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதிகளின் தாக்குதல் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளினை மிக விரைவாக மோசமடையச் செய்தது. பூகோளப் பொருளாதாரத்தின் பொதுவான வளர்ச்சியின் காரணமாக ஏலவே பாதிக்கப்பட்டு வந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. மேலும் 2000 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து நிலவிவந்த தொடர்ச்சியான வரட்சியும் உள்நாட்டு விவசாய வெளியீட்டினைக் குறைத்ததுடன் உள்நாட்டு உணவு விலைகளையும் அதிகரித்ததுடன் நீர்மின் சக்தியின் உருவாக்கத்தினையும் குறைத்துவிட்டது.[5]

நீர்மின் சக்தி உருவாக்கத்தில் ஏற்பட்ட குறைவால் வருடத்தின் பின்னரைப் பகுதியில் பரந்தளவான மின்வெட்டுக்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் நாட்டின் முழுப் பொருளாதார நடவடிக்கையும் பாதிக்கப்பட்டது. நிலைமையை மேலும் மோசமாக்கும் வகையில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஆடி மாதம் நிகழ்த்தப்பட்ட பயங்கரவாதிகளது தாக்குதலினால் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடைந்தது, முதலீட்டாளர்களின் நம்பிக்கையில் தளர்வு ஏற்பட்டது, உள்நாட்டிலும்

---

3 நல்லரசாட்சிக் கோட்பாடுகள் பற்றி இதில் பார்க்கவும். அத்துடன் அம்பிகா சற்குணநாதன் எழுதிய கட்டுரையைப் பார்க்கவும்: 'State Interference with Public Institution, A Case Study of the Bribery Commission' *Sri Laka: State of Human Rights 2002* (Law & Society Trust, Colombo, 2002).

4 *Supra* n 1, பக். 1.

5 *மேற்படி.*

வெளிநாட்டிலும் வெளிநாட்டு வர்த்தகம் குறைவடைந்தது. வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட கணிசமான குறைவுக்கு, விமான நிலையத் தாக்குதலை அடுத்து விதிக்கப்பட்ட உயர்வான யுத்த அபாய மிகைக் காப்புறுதிக் கட்டணமே காரணமாக இருந்தது. வருடத்தின் பின்னரைப் பகுதியில் நிலவிய அரசியல் நிச்சயமற்ற நிலைமைகள் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மேலும் பாதித்ததினால் மிகவும் அவசியமாகத் தேவைப்பட்ட அமைப்புரீதியான சீரமைப்புக்கள் பின்போடப்பட்டன.[6]

பொருளாதாரத்தில் ஏற்பட்ட இத்தகைய எதிர்மறையான நிகழ்வுகளின் ஒட்டுமொத்தமான பாதிப்புக்கள் ஏற்கனவே நிலவிவந்த அமைப்புரீதியான பலவீனங்களினாலும் (கொள்கைப் பிரதிபலிப்புக்களின் தாமதம், கொள்கைச் செயற்பாடுகளில் தொடர்ச்சியின்மை, மார்கழியில் நிகழவிருந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தல் காலத்தில் கொள்கை உபாயங்களின் பின்னடைவு[7] ஆகியவற்றினால்) மேலும் மோசமடைந்தன.

நாட்டின் பொருளாதார நிலைமைகள் நேரடியாகவே மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்தி உரிமைகளின் வேறுபாடுகளைப் பாதிப்பதனால் மேற்கூறப்பட்ட நிகழ்வுகளே இலங்கை மக்களின் சமூக பொருளாதார உரிமைகள் சீரழிந்து செல்வதற்கான காரணிகளாக இருந்தன.

இத்தகைய காரணிகளில் சக்தி நெருக்கடியே பொருளாதாரத்தினைத் தளர்வுறச் செய்வதில் குறிப்பிடத்தக்க பங்கினை வகித்தது. உண்மையில் மின்சக்தியின் நிரம்பலில் உறுதித்தன்மை மிக முக்கியமானது. இது பற்றிய அவதானிப்பு பின்வருமாறு:

> *ஒரு நாட்டின் சமூக பொருளாதார மானிட விருத்திக்கு நம்பகரமான, சுத்தமான, பெற்றுக் கொள்ளக்கூடிய சக்தி மூலாதாரம் மிக இன்றியமையாதது. கைத்தொழில் மற்றும் சேவைத்துறைகளில் பொருளாதார நடவடிக்கையின் நோக்கம், அசைவுத்தன்மை, தகவல்களுக்கான அடைகை ஆகியன நவீன தொழில் நுட்பத்தில் மேலும் தங்கியுள்ளது. இவற்றினை இயக்குவதற்கு சக்தி அவசியமானது. கிடைக்கக்கூடிய பல்வேறு வகையான சக்தி மூலாதாரங்களில் நீர்மின் சக்தி ஒரு சுத்தமான சக்தி மூலாதாரமாக இருப்பதுடன் அதனை மிகத் தூரத்திலுள்ள இடங்களுக்கும் கடத்த முடிவதுடன் மிகச் சிறியளவான இழப்புக்களுடன் வேறு சக்தி வடிவங்களாகவும் மாற்ற முடியும். இதனால் அபிவிருத்திக்கான அத்தியாவசிய ஒரு முன்தேவையாக மின்சக்தி மாற்றமடைந்துள்ளது.*[8]

---

6 *மேற்படி.*

7 *மேற்படி.*

8 Institute of Policy Studies, *Sri Lanka: State of the Economy; 2001* (Sri Lanka) பக். 85.

இவ்வத்தியாயத்தில் அடுத்து இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு மின்சக்தி நெருக்கடி எத்தகைய பங்கினை வகித்தது என்பதையும் அதன் விளைவாக மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்தி உரிமைகளில் ஏற்பட்ட பாதிப்புக்களும் ஆராயப்படுகின்றது.

2. சமூக பொருளாதார உரிமைகளும் நிலைபேண் அபிவிருத்தியும்

இருபது ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கை 1966 ஆம் ஆண்டின் சர்வதேச பொருளாதார சமூக கலாசார உரிமைகள் பற்றிய சர்வதேசக் கட்டுறுத்தினைப் (International Convenant on Economic, Social and Cultural Rights (ICESCR)) பின்னுறுதிப்படுத்தியது.[9] இதன்மூலம் தனது வளங்கள் யாவற்றையும் பயன்படுத்தி கட்டுறுத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சகல உரிமைகளையும் பூரணமாக அடைந்து கொள்ள உறுதியெடுத்துக்கொண்டது.

மேற்படி சாசனத்தின் பங்காளிகளான ஒவ்வொரு அரசும் தனது வளங்கள் யாவற்றையும் பயன்படுத்தி சாசனத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சகல உரிமைகளையும் அடைவதற்கு குறிப்பாக பொருளாதார தொழில்நுட்ப நடவடிக்கைகளை எடுப்பதற்குக் கடமைப்பட்டுள்ளது. இவற்றில் சட்ட நடவடிக்கைகளும் அடங்கும்.[10] ஒவ்வொரு நபரும் போதுமான வாழ்க்கைத்தரத்தை அடையவும் தனது வாழ்க்கை நிலைமைகளைத் தொடர்ச்சியாக மேம்படுத்திக் கொள்ளவும் கொண்டிருக்கக்கூடிய உரிமையை அநுபவிக்கப் பொருத்தமான நடவடிக்கைகளை அரசுகள் மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.[11]

இலங்கையானது சூழல் மற்றும் அபிவிருத்சி மீதான றியோ பிரகடனத்திலும் (Rio Declaration on Environment and Development) கைச்சாத்திட்டுள்ளது. இப்பிரகடனமானது நிலைபேண் அபிவிருத்திக் கோட்பாடுகளைக் குறிப்பிடுகின்றது. தற்போதைய தலைமுறையினர்களதும் எதிர்கால தலைமுறையினர்களதும் அபிவிருத்தி மற்றும் சூழல்சார் தேவைகளை சமத்துவமாகப் பூர்த்தி செய்வதன் மூலம் அபிவிருத்திக்கான உரிமை என்பது நிறைவு செய்யப்படல் வேண்டும் என நேரடிப் பிரகடனம் வலியுறுத்துகின்றது.[12] இப்பிரகடனமானது ''நிலைபேண் அபிவிருத்தி இலக்கினை அடைவதற்கு அரசுகள் பணிபுரிய வேண்டுமென வேண்டுகிறது.

---

9 1980 இல்.

10 உறுப்புரை 2(1).

11 உறுப்புரை 11.

12 தத்துவம் 3.

இவ்விடயத்தில் சூழற் பாதுகாப்பு என்பது அபிவிருத்திச் செயன்முறையின் ஒரு பிரிக்க முடியாத அங்கமாகும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.[13] றியோ பிரகடனமானது நாடுகளைக் கட்டுப்படுத்தக்கூடிய ஒரு சர்வதேச ஆவணமல்ல. ஆனால் அது அரசுகளை இணங்கச்செய்யும் வல்லமையைக் கொண்டுள்ளது. இதன் காரணமாக நிலை பேண் அபிவிருத்தியை அடைய அரசுகள் முனைய வேண்டும். சூழற் பிரச்சினைகள் பொருத்தமான மட்டங்களில் சகலருடைய பங்கேற்புடனும் கையாளப்படுவது சிறந்ததென றியோ பிரகடனத்தின் பத்தாவது தத்துவம் கூறுகின்றது. தேசிய மட்டத்தில் பொது நிறுவனங்கள் கொண்டிருக்கக்கூடிய சூழல் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்வதற்கும் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையில் பங்கேற்பதற்கும் உரிமை இருக்க வேண்டும். அத்துடன் அரசுகள் தகவல்களைப் பரவலாக வழங்குவதன் மூலம் பொதுமக்கள் விளக்கமடையவும் பங்கேற்கவும் வசதிப்படுத்த வேண்டும். நீதிசார்ந்த மற்றும் நிருவாகம் சார்ந்த வழிமுறைகளின் மூலம் பரிகாரம் பெற்றுக்கொள்ளவும் வாய்ப்பிருக்க வேண்டும்.[14]

இவ்விடயத்தில் தனக்கிருக்கும் கட்டுப்பாடுகளின் அடிப்படையில் பூகோள உச்சி மாநாட்டில்[15] இலங்கை அரசாங்கமானது 1992 இல்[16] தனது சூழல் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பான 1990 களுக்கான நிகழ்ச்சித் திட்டத்தைச் சமர்ப்பித்தது.

மேற்படி தேசிய அறிக்கை 1991 ஆம் ஆண்டு ஓர் உயர்மட்டக் குழுவினரால் தயாரிக்கப்பட்டது. இதில் பல்வேறு அமைச்சுகளும் ஏனைய சம்பந்தப்பட்ட நிறுவனங்களும் பங்குகொண்டன. சூழல் அமைச்சு இணைப்பாக்கம் செய்தது. அறிக்கையின் வலு பற்றிய பகுதியில் மோசமான சூழல் விளைவுகளைக் கட்டுப்படுத்துமுகமாக பின்வரும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்போவதாக கூறப்பட்டுள்ளது:

- எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் சகல நீர்மின்சார செயற்றிட்டங்களிலும் அவற்றின் சமூக பொருளாதார சூழற் பாதிப்புக்கள் ஆய்வு செய்யப்படும்;

- அனல் மின்சார உற்பத்தியானது கழிவகற்றலில் தேசிய தராதரங்களைப் பின்பற்றும்; இது நியாயமான மேலதிக செலவுகளின்

---

13 தத்துவம் 4.

14 தத்துவம் 10.

15 பார்க்க *Supra* n. 2.

16 Ratnasiri, J., "Sustainable Development and the Energy Sector" in the *Daily News*, 29/11/2001, பக். 45.

அடிப்படையில் யதார்த்தமானதாகவும் அடையக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

- உற்பத்தி விரிவாக்கத் திட்டமிடலானது தற்போது (1991) ஆகக் குறைந்த கிராமிய அடிப்படையைக் கொண்டுள்ளது. இது இனிமேல் சூழல்சார் கிரயங்களையும் கொண்டிருக்க வேண்டும்.

- கைத்தொழிற் துறையிலும் போக்குவரத்துத் துறையிலும் வலுப்பாதுகாப்புப் பற்றி தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இதில் நிதிச்சலுகைகளும் ஊக்குவிப்புக்களும் பயிற்சி நெறிகளும் அடங்க வேண்டும்.

மேற்படி தேசிய அறிக்கைக்குப் பின்னர் கடந்த பத்தாண்டுகளின் சாதனைகளை மதிப்பீடு செய்வோமாயின் மேற்கொள்ளப்பட்ட சகல பணிகளிலும் நிலைபேண் அபிவிருத்திக் கோட்பாடுகள் பின்பற்றப்படவில்லை என்பது தெளிவாகும்.[17]

அபிவிருத்தி உரிமை மீதான ஐக்கிய நாடுகள் பிரகடனமும் (1986) இவ்விடயத்தில் பொருத்தமானதாகும். அபிவிருத்திக்கான உரிமை என்பது பிரிக்க முடியாத மனித உரிமை என இப்பிரகடனம் கூறுகிறது. இதில் சகலருக்கும் பங்குபெறவும் பங்களிக்கவும் பொருளாதார சமூக கலாசார அரசியல் அபிவிருத்திகளை அனுபவிக்கவும் உரிமையுண்டு. இதன் மூலம் சகல மனித உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரங்களும் முழுமையாக அடையப்பட முடியும்.[18]

மேற்படி பிரகடனமானது சகல அரசுகளும் அபிவிருத்தியை அடைவதற்கு தேசிய மட்டத்தில் சகல ஏற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும்.[19] அத்துடன் அபிவிருத்தியிலும் மனித உரிமைகளை அடைவதிலும் பொதுமக்களின் பங்குபற்றலை அரசுகள் ஊக்குவிக்க வேண்டுமெனவும் கூறுகிறது.[20] தேசிய மட்டத்தில் கொள்கைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்தல் மற்றும் சட்டவாக்கம் உட்பட அபிவிருத்திக்கான உரிமையை அடையவும் தொடர்ச்சியாக மேம்படுத்தவும் தேவையான நடவடிக்கைகளை உறுதிப்படுத்த வேண்டும்.[21]

---

17 *மேற்படி*

18 உறுப்புரை 1(1).

19 உறுப்புரை 8(1).

20 உறுப்புரை 8(2).

21 உறுப்புரை 10.

அபிவிருத்தி மீதான பிரகடனமும் ஏனைய பிரகடனங்களைப் போலவே கட்டுப்படுத்தும் வலுவற்றது என்பதை இங்கு குறிப்பிடுவது முக்கியமானது. சர்வதேச மட்டத்தில் மேற்படி பிரகடனம் பல்வேறு வாதப் பிரதிவாதங்களையும் தோற்றுவித்தது. 1986 ஆம் ஆண்டு இது ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் கூட சர்வதேச மட்டத்தில் கருத்தொருமிப்பை ஏற்படுத்தவில்லை. அத்துடன் அபிவிருத்தி உரிமைக்கான சட்ட அந்தஸ்த்து என்பது நிச்சயமானதல்ல. எனினும் பிரகடனங்களும் தீர்மானங்களும் இணங்கவைக்கும் தன்மையைக் கொண்டுள்ளன. மனித உரிமைகள் மீதான சர்வதேச பிரகடனம் (Universal Declaration on Human Rights),[22] ஸ்டொக்ஹோம் பிரகடனம் (Stockholm Declaration)[23] போன்றவை வழமையான சர்வதேச சட்டத்தின் பகுதிகளாக மாறியுள்ளன.

2.1 இலங்கையின் சமூக பொருளாதார உரிமைகள் மற்றும் நிலை பேண் அபிவிருத்தி ஆகியவற்றின் மீதான நீதிகாண் தகைமை

இலங்கை யாப்பின்[24] அடிப்படை உரிமைகள் மீதான அத்தியாயம் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளை[25] முதன்மையாகக் கொண்டுள்ளது. இதில் சமூக பொருளாதார உரிமைகள் விலக்கப்பட்டிருந்தாலும் சமத்துவ உரிமை (இது குடியியல், அரசியல், சமூக, பொருளாதார, கலாசார உரிமைகளைச் சார்ந்தது) பற்றிக் குறிப்பிடுகின்றது.[26] தொழிற்சங்க உரிமைகள்,[27] வாழ்விற்காக சட்டரீதியான செயற்பாடுகளில் ஈடுபடும் உரிமை[28] மற்றும் கலாசார உரிமைகள்[29]

எனவே சட்டமில்லாத நிலையில் பொருளாதார சமூக கசலாசார உரிமைகள் மீதான சர்வதேச சாசனத்தில் உறுதிப்படுத்தப்பட்ட தமது சமூக

---

22 1948 ஆம் ஆண்டு மார்கழி 10 இல் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டது.

23 1972 ஆனி 16 இல் ஸ்டொக்□ாமில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனித சூழல் மீதான ஐக்கிய நாடுகள் மாநாட்டின் பிரகடனம்.

24 1978 ஆவணி 31 இல் பெற்றுக் கொள்ளப்பட்ட இலங்கை சனநாயக சோஷலிஸ குடியரசின் அரசியல் யாப்பு.

25 சிந்தனை, மனச்சான்று மற்றும் சமயம் மீதான சுதந்திரம் (உறுப்புரை 10) சித்திரவதையிலிருந்து சுதந்திரம் (உறுப்புரை 11) ஒருதலைப்பட்சமான கைது, தடுத்துவைப்பு, தண்டனைச் சட்டம் ஆகியவற்றிலிருந்து சுதந்திரம் (உறுப்புரை 13) பேச்சு, கூடுதல், கூட்டம், நகர்வு, சமயம் முதலியன மீதான சுதந்திரம் (உறுப்புரை 14)

26 உறுப்புரை 12 (1), 12 (2)

27 உறுப்புரை 14 (1) (ஈ)

28 உறுப்புரை 14 (1) (ஊ)

29 உறுப்புரை 14 (1) (ஏ)

பொருளாதார உரிமைகளை ஒரு நீதிமன்றத்தில் நிலைநாட்ட இலங்கை மக்களுக்கு உரிமை உள்ளதா எனும் வினா எழுகின்றது. சகல மனித உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரங்களும் பிரிக்க முடியாதவையெனவும் ஒன்றிலொன்று தங்கியிருப்பனவென்றும் அபிவிருத்தி மீதான பிரகடனம் அங்கீகரிக்கின்றது. அத்துடன் குடியியல், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை அமுல்படுத்தவும் மேம்படுத்தவும் பாதுகாக்கவும் கவனம் செலுத்தப்பட வேண்டுமென மேற்படி பிரகடனம் கூறுகின்றது.[30] எனவே குடியியல், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு தவறுவதன் காரணமாக ஏற்படக்கூடிய அபிவிருத்திக்கான தடைகளை நீக்குவதற்கு அரசுகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.[31]

இலங்கை யாப்பின் அரச கொள்கை மற்றும் அடிப்படைக் கடமைகள் பற்றிய வழிகாட்டல் கோட்பாடுகள் மீதான அத்தியாயமானது[32] சட்டங்களை ஆக்குதல் மற்றும் நாட்டை ஆட்சி செய்தல் ஆகியவை தொடர்பாக பாராளுமன்றம், சனாதிபதி மற்றும் அமைச்சரவைக்கு மேற்படி கோட்பாடுகள் வழிகாட்ட வேண்டுமெனக் கூறுகிறது.[33] உறுப்புரை 27 (4) அரசானது அரசாங்கத்தின் சனநாயக இயல்பினையும் மக்களின் சனநாயக உரிமைகளையும் வலுப்படுத்தவும் வேண்டுமெனக் கூறுகின்றது. இதற்காக நிருவாகத்தைப் பன்முகப்படுத்தவும் தேசிய வாழ்விலும் அரசாங்கத்திலும் ஒவ்வொரு மட்டத்திலும் மக்கள் பங்கேற்பதற்கு வாய்ப்புக்கள் வழங்க வேண்டுமெனவும் கூறுகிறது. எனினும் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தைப் போல மேற்படி வழிகாட்டும் கோட்பாடுகள் சட்டவலு கொண்டவையல்ல என உறுப்புரை 29 கூறுகின்றது.[34] எனினும் *யாப்பிற்கான 13 ஆவது திருத்தம் மற்றும் மாகாணசபைகள் மசோதாவில்*[35] உயர் நீதிமன்றமானது மேற்படி வழிகாட்டல் கோட்பாடுகளின் அரசியல் யாப்பு முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. வழிகாட்டல் கோட்பாடுகளைச் சட்டரீதியாக அமுலாக்க முடியாது விட்டாலும்கூட சமர்ப்பிக்கப்படும் மசோதாக்கள், யாப்பை இயற்றியோரின் எதிர்பார்ப்புக்களை அமுல்நடத்தக்கூடிய வகையில் அமைந்துள்ளனவா என்பதை ஆய்வு செய்ய

---

30 உறுப்புரை 6 (2).

31 உறுப்புரை 6 (3).

32 அரசியல் யாப்பின் அத்தியாயம் VI.

33 உறுப்புரை 27(1)

34 வேறு வார்த்தைகளில் கூறினால் மேற்படி ஏற்பாடு சட்ட உரிமைகள் அல்லது கடப்பாடுகளைச் சுமத்த மாட்டாது. அதனால் நீதிமன்றத்தில் அல்லது வேறு மன்றத்தில் நடைமுறைப்படுத்த முடியாது.

35 (1987) 2 Sri L.R. 312.

முடியுமென நீதிமன்றம் கருத்துத் தெரிவித்தது.[36] இக்கருத்தினை வெளிப்படுத்திய பிரதம நீதியரசர் சர்வானந்தா ஒரு சட்டமன்றத்தில் வழிகாட்டற் கோட்பாடுகளை நிலைநிறுத்த முடியாவிடினும் கூட ஒரு சனநாயக அரசாங்கத்தின் நோக்கங்களையும் அபிலாசைகளையும் வெளிப்படுத்தக்கூடிய அவற்றின் பெறுமானத்தைக் குறைத்து மதிப்பிட முடியாதெனக் குறிப்பிட்டார். வழிகாட்டற் கோட்பாடுகள் சட்டரீதியாக அமுல்படுத்தப்பட வேண்டுமெனவும் மேற்படி இரு மசோதாக்களும் அந்த வழியையே காட்டிநிற்கின்றன எனவும் பிரதம நீதியரசர் குறிப்பிட்டார்.[37]

இதைப்போலவே *செனிவிரட்ன மற்றும் இன்னொருவர் எதிர பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் இன்னொருவர்*[38] வழக்கில் நீதிபதி வனசுந்தர. ஜே. பின்வருமாறு குறிபபிட்டார்:

> *ஒரு சட்ட ஆவணத்தை உருவாக்கும்போது முழு ஆவணமும் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயமாகும். அதன்படி யாப்பின் ஒரு ஏற்பாட்டைக் கருத்தில் கொள்ளும்போது அது தொடர்பான சகல ஏற்பாடுகளும் கவனிக்கப்படல் வேண்டும். இந்த அடிப்படையில் தேவையெனில் வழிகாட்டற் கோட்பாடுகளும் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். வழிகாட்டற் கோட்பாடுகளானது ஓர் அறிவுறுத்தற் கருவியாகுமெனக் கூறப்படுகின்றது. எனவே இதனைச் சட்டமன்றமும் நிருவாகத் துறையும் மதித்துப் பின்பற்ற வேண்டும். சம்பந்தப்பட்ட இந்திய வழக்குகளில் இந்த ஏற்பாடுகள் யாப்பின் தவிர்க்க முடியாத பகுதி எனவும் அவற்றை உரிய முறையில் அங்கீகரித்து அவற்றின் செயற்பாட்டுக்கு நீதிமன்றங்கள் ஆவன செய்ய வேண்டுமெனவும் தெளிவாகக் கூறப்பட்டது.*[39]

இவ்வாறாக பொருத்தமான வழிகாட்டற் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தும் பல்கலைக்கழக மானியங்கள் குழுவின் நோக்கமானது *செனிவிரட்ன வழக்கில்* உயர்நீதிமன்றத்தினால் வகுதிப்படுத்துவதற்கான நியாயமான அடிப்படையென ஏற்றுக்கொள்ளப்பட்டது.[40]

---

36 பார்க்க, *Wickramaratne, J., Fundamental Rights in Sri Lanka* (Navrang Booksellers & Publishers, India (1996) பக். 30.

37 *மேற்படி*, பக். 326

38 (1978 - 79-80) 1 Sri LR 182.

39 *மேற்படி*, பக். 216.

40 *Supra* n 36, பக். 34.

மேற்படி வழக்குகளின் அடிப்படையில் சமூக பொருளாதார உரிமைகள் இலங்கையில் அரச கொள்கையில் வழிகாட்டற் கோட்பாடுகளினால் அங்கீகரிக்கப்பட்ட அளவுக்கு அமுல் நடத்தப்பட முடியுமா என்பது வாதத்துக்குரியது. இதில் வளங்களின் வரையறையும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

அத்துடன் அடிப்படை உரிமைகள், அத்தியாயத்திலுள்ள சமத்துவ ஏற்பாட்டின்[41] அடிப்படையிலும் உயர்நீதிமன்றத்தினால் அமுல்படுத்தப்படுமா என்பதையும் கவனத்திற் கொள்ளல் வேண்டும். அதேபோல பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் மீதான சர்வதேச சாசனத்துக்கு தனக்கிருக்கும் கடப்பாடுகளின் காரணமாக (இருக்கக்கூடிய வளங்களின் அடிப்படையில்) அரசு படிப்படியாக நிறைவேற்ற ஏற்றுக்கொண்டுள்ள சமூக-பொருளாதார உரிமைகளின்படி சகல இலங்கையர்களுக்கும் சமத்துவமான உரிமை உண்டு எனவும் வாதிடலாம்.

மறுதலையாகப் பார்க்கும்போது, நிலைபேண் அபிவிருத்திக் கோட்பாடானது இலங்கையின் நீதிமன்றங்களில் இரு தடவைகளேனும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. *விதானகே டொன் சுனில் குணரத்ன எதிர் ஹோமாகம பிரதேச சபை மற்றும் ஏனையோர்*[42] வழக்கிலும் (இதுவே நிலைப்பேண் அபிவிருத்திக் கோட்பாட்டின் அடிப்படையில் நீதிமன்றத்தின் முதலாவது தீர்ப்பாக இருக்கலாம்), *டிக்கிரி பண்டா மற்றும் ஏனையோர* எதிர் *செயலாளர், கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு மற்றும் ஏனையோர்*[43] (இனிமேல் இது எப்பாவல பொஸ்பேட் வழக்கு எனப்படும்) வழக்கிலும் நீதிமன்றம் முக்கியமான தீர்ப்புக்களை வழங்கியது.

விதானகே டொன் சுனில் குணரத்ன வழக்கில நீதிபதி எ. ஆர். பி. அமரசிங்க "நிலைபேண் அபிவிருத்தி என்னும் இலக்கு அடையப்பட வேண்டுமெனில் பகிரங்கப்படுத்தல், திறந்த தன்மை, நியாயம் ஆகியவை முக்கியமானவைகளாகும்"[44] எனக் குறிப்பிட்டார். நிலைபேண் அபிவிருத்தி

---

41 அரசியல் யாப்பின் உறுப்புரை 12(1) சகலரும் சட்டத்தின் முன் சமம் எனவும் சட்டத்தினால் சம பாதுகாப்புக்கு உரித்துடையவர்கள் எனவும் கூறுகிறது.

42 உயர் நீதிமன்றம் விண்ணப்பம் இல. 210/97 உயர் நீதிமன்ற குறிப்புகள் 03/04/1998. பார்க்க, Silva, S. R, "Investing in Sustainable Development: Judgements of the Supreme Court of Sri Lanka & International Court of Justice" in *Moot Point*, Legal Review 1999, Vol. 3 (மாற்றுக் கொள்கைக்கான நிலையம், இலங்கை, மார்கழி 1999), பக். 20.

43 உயர்நீதிமன்றம் விண்ணப்பம் இல. 884/99, உயர் நீதிமன்றக் குறிப்புகள் 2/6/2000. பார்க்க, Amaratunge, K., Phosphate Mining in Eppawala: "Some Salient Features of the Judgement" in *Moot Point*, Legal Review, 2000, Vol. 4 (மாற்றுக் கொள்கைக்கான நிலையம், இலங்கை, மார்கழி 2000), பக். 3.

44 *Supra n* 42, பக். 5.

என்னும் கருத்தில் உள்ளார்ந்துள்ள நல்லரசாட்சியின் சிறந்த அம்சங்கள் சிலவற்றை இது கோடிட்டுக் காட்டுகிறது. எப்பாவல பொஸ்பேட் வழக்கில் எப்பாவெலவிலுள்ள பொஸ்பேட் சுரங்கமறுத்தல் தொடர்பாக அரசாங்கமும் வெளிநாட்டுக் கம்பனியும் செய்துகொண்ட ஒப்பந்தமானது ஸ்டொக்ஹோம் மற்றும் றியோ பிரகடனங்களின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலைபேண் அபிவிருத்திக் கோட்பாடுகளின் அடிப்படையில் கருத்தில் கொள்ளப்பட வேண்டுமெனக் கூறினர்.[45] இந்த ஆவணங்கள் கட்டுப்படுத்தக்கூடியவை அல்ல என்றபோதும் இலங்கை ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடாக இருப்பதினால் அவற்றில் கூறப்பட்டுள்ள கோட்பாடுகளை நிராகரிக்க முடியாது எனவும் நீதிபதி குறிப்பிட்டார்.

3. மின்சார நெருக்கடி

3.1 மீள்நோக்கு

கடந்த ஐந்து ஆண்டுகளில் இலங்கை இரண்டாவது தடவையாக மின்சார நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. 2001 இல் மின்சாரத் துண்டிப்பு ஆரம்பித்தபோது பல நிபுணர்கள் பெற்றோலிய விலையுயர்வு, இரண்டாவது வருடத்திலும் குறைந்த மழைவீழ்ச்சி போன்ற புறக்காரணிகளினால் இந்த நெருக்கடி ஏற்படவில்லை எனக் கூறினர். (குறைந்த மழைவீழ்ச்சி வழக்கமானது. அத்துடன் வானிலைத் திணைக்களம் இதுபற்றி எதிர்வு கூறியிருந்தது)[46] ஆனால் இலங்கை மின்சார சபையில் ஏற்பட்ட முகாமைத்துவ நெருக்கடியினால் இந்நிலை ஏற்பட்டதெனக் கூறப்பட்டது. இச்சபையில் நிதிநிலைமை, ஆற்றல் தொடர்பாக நெருக்கடிநிலைமை ஏற்பட்டிருந்தது.[47]

நீர் மின்சாரமே இலங்கையின் மின்சாரத் தேவையைப் பூர்த்திசெய்யும் பிரதான மூலமாகும்.. 1950இல் மஸ்கெலியாவில் லக்சபானா மின்னுற்பத்தி நிலையம் கட்டப்பட்டதைத் தொடர்ந்து வர்த்தகரீதியாக மின்சார விநியோகம் தொடங்கியது. 1950-74 காலப்பகுதியில் களனி நதியின் இரண்டு கிளையாறுகளைப் பயன்படுத்தி 275 மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடிய நான்கு மின்னுற்பத்தி நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டன. பின்னர் துரித மகாவலித் திட்டத்தின்கீழ் 660 மெகாவாட் இயலளவு கொண்ட ஆறு மின்வலு

---

45 *Supra* n 43, பக். 21.

46 *Supra* n 8, பக். 85.

47 *மேற்படி.*

நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டன. இவை வருடாந்தம் 2032 GWH மின்வலுவை உற்பத்தி செய்யக்கூடியவை. 1976-1990 காலப்பகுதிகளில் தேசிய மின்வலு உற்பத்தித் திறனை இவை குறிப்பிடக்கூடிய அளவுக்கு உயர்த்தின.[48]

எனினும் 1990 க்குப்பின்னர் தேசிய மின்னுற்பத்தி ஆற்றல் கூட்டப்படவில்லை. மின்வலுப் பயன்பாடு 59 சத வீதம் அதிகரித்த போதும் 1990-95 காலப்பகுதிகளில் சமனலவேவ மின்னுற்பத்தி நிலையம் மாத்திரமே புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. இதனுடைய மின்னுற்பத்தி ஆற்றல் 120 மெகாவாட் ஆகும்.[49]

குறுங்கால மின்வலுப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காக 1997 இல் களனிதிஸ்ஸ, சப்புகஸ்கந்த ஆகிய இடங்களில் இரு அனல் மின்சார நிலையங்கள் உருவாக்கப்பட்டன. இவற்றின் இயலளவு 155 கிலோவாட் ஆகும்.[50] இவை அவசர அவசரமாக நிர்மாணிக்கப்பட்டதன் காரணமாக உற்பத்திச்செலவு, சூழற் தாக்கம் போன்றவை கவனத்திற் கொள்ளப்படவில்லை.[51] இலங்கை மின்சார சபையானது குறைந்த செலவு காரணமாக நிலக்கரியைப் பயன்படுத்தும் மின்னுற்பத்தி நிலையங்களை அமைப்பதையே விரும்பியது. ஆனால் இதற்கு 4-6 ஆண்டுகள் செல்லும் என்பதாலும் பெற்றோலியத்தைப் பயன்படுத்தும் நிலையங்களுக்கு ஓர் ஆண்டு போதுமானது என்பதாலும் இவை கைவிடப்பட்டன.[52] 1999 இல் பல தனியார்துறை சிறு மின்வலு உற்பத்தியாளர்களும் காற்று வலு உற்பத்தி நிலையமும் இருந்தபோது செலவு கூடிய அனல் மின்நிலையங்களிலேயே நாடு தங்கியிருந்தது.[53]

2001 ஆம் ஆண்டு தீவிரமான மின்வலுப் பற்றாக்குறை ஏற்பட்டது. வரட்சி காரணமாக மின்வலு உற்பத்தியில் வீழ்ச்சி, உற்பத்தி இயந்திரங்கள் பழுது பார்க்கப்படாமை, வாடகை மின்நிலையங்கள் கைவிடப்பட்டமை போன்ற பல்வேறு காரணங்களினால் இந்த நிலைமை ஏற்பட்டது. அத்துடன் மின்வலு நுகர்வு 7 சத வீதம் அதிகரித்தது. மின்வலுவைப் பயன்படுத்தும் வீடுகள் 65 சத வீதத்தால் அதிகரித்தன.[54] 2001 இல் மொத்த மின்வலு உற்பத்தி 7% அதாவது 1901 மெகாவாட்டாக அதிகரித்தது. இதன்காரணமாக மின்வலு உற்பத்தியில் தங்கியிருத்தலானது 61 சத வீதமாகக் குறைந்தது. எனினும்

---

48 *மேற்படி*, பக். 86.

49 *மேற்படி*, பக். 88.

50 *மேற்படி*.

51 *மேற்படி*.

52 *மேற்படி*.

53 *மேற்படி*.

54 *Supra* n 1, பக்.. 13-14.

நீர்த்தேக்கங்களில் நீர்மட்டக் குறைவு காரணமாக மின்னுற்பத்தி இயலளவு முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. இதன்காரணமாகப் பொருளாதாரத்தில் அதிகரித்த மின்வலுப் பயன்பாட்டினை மின்னுற்பத்தியினால் ஈடுகட்ட முடியவில்லை.[55] அத்துடன் இலங்கை மின்சார சபை, மின்வலு நெருக்கடியில் மாத்திரமல்லாது நிதிப்பற்றாக்குறை நெருக்கடியிலும் சிக்கித் தவித்தது என மத்திய வங்கி அறிக்கைகள் தெரிவிக்கின்றன:

> *அனல் மின்சாரத்தில் அதிகமாகத் தங்கியிருத்தல் மற்றும் வாடகைக்கு எடுக்கப்பட்ட வலு காரணமாக மின்வலு உற்பத்திக்கான செலவு அதிகரித்தது. ஆனால் இதனை ஈடுசெய்யக்கூடிய விதத்தில் மின்சாரக் கட்டண விகிதங்கள் அதிகரிக்கப்படவில்ல. சராசரிக் கட்டணம் (ரூ. 5.53/ அலகுக்கு) சராசரிச் செலவைவிட (ரூ.7.20/அலகுக்கு) குறைவாக இருந்தது. இதில் மாற்றம் ஏற்படுத்தாமையினால் சபைக்கு 12 மில்லியன் ரூபா அளவில் நட்டம் ஏற்பட்டது. அதேவேளை சபையினது 21 சத வீதமான நட்டம் தொடர்ந்தது. இதனால் நிதி நெருக்கடி இன்னும் மோசமானது.*[56]

அடுத்த பத்து வருடங்களில் மின்வலுவுக்கான கேள்வி வருடாந்தம் 10-12 சத வீதம் அதிகரிக்கும் என மின்சார சபை மதிப்பீடு செய்தது. இதனால் வருடாந்தம் மின்வலுத் தேவை 650 GWH ஆக உயரும். இதனை ஈடு செய்வதற்கு தற்போதைய இயலளவு வருடாந்தம் 160 மெகாவாட் அளவுக்கு உயர்த்தப்படல் வேண்டும்.[57]

அண்மைக்காலத்தில் குக்குளே (Kukule), மேல் கொத்மலை (Upper Kotmale), புரோட்லாண்ட் (Broadland), உமா ஓயா (Uma Oya) ஆகிய பொருளாதார வாய்ப்புள்ள பேரளவு மின்னுற்பத்திக்கான இடங்களை மின்சாரசபை இனங்கண்டுள்ள போதிலும் நாட்டின் பேரளவு மின்னுற்பத்தித் திறன் வீழ்ந்து விட்டது என்னும் கருத்து வெளிவந்துள்ளது. குக்குளே, மேல் கொத்மலை ஆகிய இடங்களில் நிர்மாணப் பணிகள் தொடங்கிவிட்டன. எனினும் இவை இரண்டும் சேர்ந்துமே 200 மெகாவாட் மின்வலுவை மாத்திரமே உற்பத்தி செய்ய முடியும். எனவே இவற்றின் மூலம் குறுங்கால அடிப்படையிலேயே பிரச்சினையைத் தீர்க்க முடியும். சிறு மின்னுற்பத்தி நிலையங்களை அமைக்கும் வாய்ப்பு இருந்தபோதும் இவையாவும் சேர்ந்து ஓரளவு மாத்திரமே இயலளவைக் கூட்டமுடியும்.[58]

55 *மேற்படி.*
56 *மேற்படி*, பக். 14.
57 *Supra* n 8., பக். 86.
58 *மேற்படி*, பக். 90.

1999 இல் மின்சாரசபையின் நீண்டகால விரிவாக்கத் திட்டங்கள் அரைப்பகுதிக்கு மேல் நிலக்கரி மின்னுற்பத்தி ஆலோசனைகளிலேயே தங்கியிருந்தன. எனினும் இன்னும் இப்பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. வேறுபல செயற்றிட்டங்களும் கூட இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. குறுகிய காலத்தில் பெற்றோலியத்தில் தங்கியிருக்கும் அத்திட்டங்களின் காரணமாக மின்சாரக் கட்டணம் உயரும் வாய்ப்பு உள்ளது. "எதிர்கால மின்னுற்பத்தித் திட்டங்கள் தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறை ஒழுங்கமைக்கப்படாவிடில் தற்போதைய அனாவசிய தாமதங்கள் தொடரும். இதனால் தற்போதைய மின்வலுப் பற்றாக்குறை மற்றும் உயர்ந்த செயற்படு செலவுகள் இன்னும் மோசமடையும்."[59]

3.2 நிலைபேண் அபிவிருத்தி மற்றும் சூழல்சார் பிரசாரங்கள் தொடர்பான பிரச்சினைகள்

குக்குளே செயற்றிட்டம் சில வருடங்கள் தாமதத்துக்குப் பின்னர் தற்போது தொடர்கின்றது. ஆனால் மேல் கொத்மலைத் திட்டம் கடந்த காலத்தில் தாமதப்பட்டே வந்துள்ளது. றியோ பிரகடனம் குறிப்பாக பத்தாவது கோட்பாடு ஆரம்பத்திலிருந்தே பின்பற்றப்பட்டிருந்தால் இதுவரையில் செயற்றிட்டம் முடிவடைந்திருக்கும்.[60] நடைமுறைச் சாத்திய ஆய்வில் ஈடுபட்ட யப்பானிய நிபுணத்துவ ஆலோசகர்கள் தமது ஆய்வின் முதலாவது கட்டத்தை, சூழல் தாக்க மதிப்பீடு உட்பட 1994 இல் பூர்த்தி செய்துவிட்டனர். அவர்கள் நான்கு மாற்றீடுகளை விதந்துரைத்தனர். இவற்றில் ஒன்று தெரிவு செய்யப்பட்டு அதனடிப்படையில் இறுதி வடிவத்தைக் கட்டமைக்குமாறு நிபுணத்துவ ஆலோசகர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது.[61] இந்த தெரிவானது மின்வலு உற்பத்தியை உச்சப்படுத்தும் அதேநேரத்தில் சென். கிளேயர்ஸ், டெவன் முதலான உல்லாசப் பயணிகளைக் கவரும் நீர்வீழ்ச்சிகளின் நீர்ப்பாய்ச்சலைத் தடைசெய்துவிடும்.

நிறைய பணத்தையும் நேரத்தையும் விரயம் செய்த பின்னர் இறுதிச் செயற்றிட்டத்தின் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மாத்திரமே பொதுமக்களின் பின்னூட்டலைப் பெறுவதற்காக வெளியிடப்பட்டது. யப்பானிய நிபுணத்துவ ஆலோசகர்களின் நான்கு மாற்றீடுகளும் பொதுமக்களுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மீள்குடியேற்றம், நீரில் மூழ்கும் நிலப்பரப்பு,

---

59 *மேற்படி*, பக். 92-93.

60 *Supra* n 16.

61 *மேற்படி*, பார்க்க, மேல் கொத்மலை நீர் மின்வலு செயற்றிட்டம் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை.

நீர்வீழ்ச்சிகளில் ஏற்படும் தாக்கம் போன்ற பிரச்சினைகள் இறுதியான சூழல் தாக்க மதிப்பீட்டில் (EIA) முன்வைக்கப்பட்டன. இவை ஆரம்பத்திலேயே வெளிப்படுத்தப்பட்டிருப்பின் சம்பந்தப்பட்ட சூழல், விஞ்ஞான அமைப்புக்களின் கருத்துக்களைப் பெற்றிருக்க முடியும். சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தெரிவும், நிர்மாணிக்கும் நிறுவனமும் தீர்மானிக்கப்பட்டிருப்பின் எவ்வித தாமதமும் இல்லாமல் செயற்றிட்டத்தை ஆரம்பித்திருக்க முடியும். இவ்வாறான ஆரம்ப கலந்துரையாடல் இல்லாததன் காரணமாகவே மேல் கொத்மலை செயற்றிட்டத்தில் 5 ஆண்டுகள் தாமதம் ஏற்பட்டது. அத்துடன் பணமும் விரயம் செய்யப்பட்டது.[62]

சூழற் பாதுகாப்புப் பிரசாரம் காரணமாக பல மின்வலு செயற்றிட்டங்களுக்கு தடங்கல் ஏற்பட்டது என்னும் குற்றச்சாட்டும் உள்ளது. திருகோணமலை நிலக்கரி மின்நிலையம் (1980 களின் பிற்பகுதி), மேல்கொத்மலை நீர்மின்வலு செயற்றிட்டம் (1995 இலிருந்து), நுரைச்சோலை நிலக்கரி மின்வலுத் திட்டம், அனுராதபுரத்தில் சிறு மின்நிலையம் (2001 இல்) ஆகியவை இவ்வாறு தடங்கலுக்கு உள்ளாகின.[63] கடைசி மூன்று திட்டங்களும் மத்திய சூழல் அதிகார சபையின் பூரண அங்கீகாரம் பெற்றிருந்ததுடன் நிதிவசதியும் பல வருடங்களாக தயாராக இருந்தது.[64] சூழற் பாதுகாப்புப் பிரசாரகர்கள், மேல் கொத்மலை செயற்றிட்டம் மத்திய சூழல் அதிகாரசபை நியமித்த குழுவினால் மூன்று முறை நிராகரிக்கப்பட்டது எனவும் அதனுடைய தீர்மானங்கள் நன்மைகளைவிட அதிகம் என மதிப்பிடப்பட்டது எனவும் கூறினர்.[65] எனினும் இத்திட்டத்தை நிராகரித்த குழுவினரின் நம்பகத்தன்மை கேள்விக்குரியது என எதிர்வாதம் முன்வைக்கப்பட்டது.[66] இறுதியாக மேல் கொத்மலைத் திட்டம் இலங்கை மின்சார சபையின் மேல்முறையீட்டின் பேரில் சூழல் அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெற்றது.[67] சூழல் பாதுகாப்புக்காரர்கள் இத்திட்டம் எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாக்கப்பட வேண்டிய பல நீர்வீழ்ச்சிகளை இல்லாமல் செய்கிறது எனவும், இலங்கைக்கு அந்நியச் செலாவணியைக் கொண்டுவரும் உல்லாசப் பயணத்தொழிலை அச்சுறுத்துகிறது எனவும், இதுவே இலங்கை

---

62 *மேற்படி*

63 Siyambalapitiya, T., "Three Power Plants blockded by Environment NGO" in *The Island*, 1 புரட்டாதி 2001.

64 *மேற்படி*

65 Algama, R., "Electricity Crisis and the Environmental Foundation" in *The Island* 6 புரட்டாதி 2001.

66 Siyambalapitiya, T., Ushering in intermittent darkness in *The Island* 21 புரட்டாதி 2001.

67 *Supra* n. 65

மக்களின் பெரும்பான்மையினரின் கருத்து எனவும் வாதிட்டனர்.[68] சேறு நிறைந்தமை காரணமாக 40 சத வீதம் தனது கொள்ளளவை இழந்துள்ள கீழ் கொத்மலை நீர்த்தேக்கத்தை அகழ்ந்தெடுப்பது புதிய கொத்மலைத் திட்டத்தை நிர்மாணம் செய்வதைவிட மோசமானது என அவர்கள் கூறுகிறார்கள். விக்டோரியா நீர் மின் நிலையமும் தனது இயலளவில் 25 சத வீதத்தை இழந்துள்ளது.[69]

இன்னுமொரு முக்கிய விடயம் நிலக்கரி மின்வலு நிலையத்தை நிர்மாணிப்பதில் ஏற்பட்டுள்ள தேவையற்ற தாமதமாகும். முதலாவது முன்மொழிவு 1980 களின் பிற்பகுதியில் முன்வைக்கப்பட்டது. நடைமுறைப் பொருத்தம் பற்றிய ஆய்வுகள் (feasibility studies) பிறநாட்டு நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. இலங்கைக்கு மிகவும் பொருத்தமானது பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் கூடிய நிலக்கரி மின்வலு நிலையமே என்பது அடிக்கடி வலியுறுத்தப்பட்டாலும் இதன் கட்டுமானம் இன்னும் தொடங்கவில்லை.[70] தவறான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு சூழல் பாதுகாப்புப் பிரசாரகர்கள் எதிர்ப்புக் காட்டுவதே இந்தத் தாமதத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. விசேட நலன்களைக் கொண்ட பிரசாரம் காரணமாக அரசியற் தடுமாற்றம் ஏற்படுகின்றது. தற்போது இவர்களுடன் அனல் மின்சாரம் காரணமாக உரிய இலாபம் பெறும் தனியார் துறையினரும் சேர்ந்து கொண்டுள்ளனர் என்னும் கருத்தும் முன்வைக்கப்படுகின்றது.[71]

நிலக்கரி மின்வலுத் திட்டங்களைத் தள்ளி வைப்பதற்கான உண்மையான காரணிகள் பற்றிய பல செய்தி அறிக்கைகளும், வாதப் பிரதிவாதங்களும் வெளிவந்தன. 1980 களின் பிற்பகுதியில் சூழல் தாக்க மதிப்பீட்டறிக்கை தயாரிக்கப்பட்ட பின்னரும் கூட ஓர் அரசுசாரா சூழல் நிறுவனம் திருகோணமலை நிலக்கரி மின்வலு நிலைய நிர்மாணத்தை எதிர்த்தது.[72] நுரைச்சோலை நிலக்கரி மின்வலு நிலையம் தொடர்பாக சூழல் பாதுகாப்புப் பிரசாரகர்களின் பொய்ப் பிரசாரம் காரணமாக 1999 இல்

---

68 *மேற்படி.*

69 *மேற்படி.*

70 இத்துறையில் தற்போதுள்ள தொழில்முறையியலை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மின்சாரசபை நிலக்கரி மின்வலுவை சூழலுக்குச் சாதகமான வலுவாக இனங்கண்டது. பெற்றோலிய வளங்களுடன் ஒப்பிடும் போது நிலக்கரி வளங்கள் இன்னும் பல நூற்றாண்டுகள் நீடித்திருப்பதோடு அதன் விலையும் குறைந்து செல்கிறது. உலகின் மின்வலுவில் 40% நிலக்கரி மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. அபிவிருத்தியடைந்த நாடுகளான ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, அவுஸ்திரேலியா, யப்பான் மற்றும் கனடா ஆகியனவும் இதனைப் பயன்படுத்துகின்றன.

71 *Supra* n. 8, பக். 92.

72 Withanage, H., "Reason for Power Cuts: Low Rainfall or Breakdown and delay of Power Plants." in *The Island*, 5 புரட்டாதி 2001.

பொதுமக்கள் பகிஷ்கரிப்பு இடம்பெற்றது. இதில் கிறீஸ்தவ பாதிரிமாரும் பௌத்த குருமாரும் பங்கேற்றனர். இது பின்னர் அரசியற் பிரச்சினையாக மாறியது. அரசியல்வாதிகள் இதனை நிறுத்துமாறு இலங்கை மின்சார சபைக்குக் கட்டளையிட்டனர்.[73]

மறுபுறம் சூழற் பிரசாரகர்கள் இக்குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் கூறினார்கள். அவர்கள் கருத்துப்படி மின்வெட்டுக்குக் காரணம், 150 மெகாவாட் பியட் மின்நிலையமும் 2x20 மெகாவாட் களனிதிஸ்ஸ நிலையமும் இயங்காமையும், விலைமனு கோரலில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக தனியார் மின்வலு நிலையங்கள் இயங்காமை, இலங்கை மின்சார சபையில் காணப்படும் ஊழல், யப்பானிய OECF மின்வலு நிலையம், AES களனிதிஸ்ஸ செயற்றிட்டம் ஒழுங்கற்ற விலைமனு கோரல் காரணமாக தாமதித்தல் போன்றவைகளாகும்.[74] சூழல்வாதிகள் இன்னுமொரு விடயத்தையும் பிரசாரம் செய்தனர். அதாவது சர்வதேச பண நிதியத்துடனான உடன்படிக்கையின்படி அடுத்து தனியார் மயப்படுத்தப்படப்போகும் பொது நிறுவனம் இலங்கை மின்சார சபைதான் எனவும் அதனை நியாயப்படுத்துவதற்காகவே 1996 முதல் இந்நிறுவனம் வங்குரோத்து நிலையில் வைக்கப்பட்டுள்ளது எனவும் அவர்கள் கூறினர்.[75] நீர்மின் வலு, நிலக்கரி மின்வலு ஆகியவற்றின் அலகு விலை இயற்கை வாயுவைவிடக் குறைவானது எனினும் சூழல் பாதிப்பு அடிப்படையில் நோக்கும்போது நிலக்கரியானது காற்று, சூரிய ஒளி, இயற்கை வாயுவைவிட விலை கூடியது எனவும் அவர்கள் கூறினர்.[76] இலங்கை மின்சார சபைக்குள் தமது சொந்த நலன்கருதி நிலக்கரிக்குச் சார்பாக பிரசாரம் செய்யும் ஒரு குழுவினரும் உள்ளனர் எனவும் கூறப்பட்டது.[77] தாம் நிலக்கரிப் பயன்பாட்டுக்கு எதிரானவர்கள் இல்லை எனவும் சூழல் காரணங்களுக்காகவே தாம் திருகோணமலையில் நிலக்கரி மின்வலு நிலையம் அமைவதை எதிர்ப்பதாகவும் சூழல்வாதிகள் குறிப்பிட்டனர். ஓர் அரசுசாரா நிறுவனம் இலங்கை மின்சார சபையை நீதிமன்றத்துக்கு இழுத்தது உண்மை எனினும் இலங்கை மின்சாரசபையே நுரைச்சோலைத் திட்டத்தை தான் கைவிடுவதாக அறிவித்தது.[78]

---

73 *Supra* n. 63.

74 *Supra* n 72, *Supra* n 65 ஐயும் பார்க்க.

75 *மேற்படி*

76 *மேற்படி*

77 *மேற்படி*

78 *Supra* n 72. பார்க்க, Algama, R., EFL replies 'Cost of NGO Activities' in *The Island,* 11 ஐப்பசி 2001.

எனினும் சூழலியல்வாதிகளின் பிரசாரத்தில் எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்கு மேலே குறிப்பிடப்பட்டவை உட்பட பல வாதங்கள் உள்ளன. சூழலியல்வாதிகள் நிலக்கரி மின்வலுவை விட தாவர இயற்கைவாயு செலவு குறைவு எனவும் வாதிட்டனர். ஆனால் அவர்கள் அதனை நிரூபிக்கத் தவறிவிட்டனர்.[79] சூழலியல்வாதிகள் இந்த விடயத்தில் எதிர்கால பிரசாரங்களில் இன்னும் கவனமாக செயற்பட வேண்டும் எனும் கருத்தும் வெளிப்படுத்தப்பட்டது. ஒரு பாரிய மின்வலு நிலையத்தைத் தடுப்பது நான்கைந்து வருடங்களில் மின்வலு நெருக்கடியை ஏற்படுத்தும் எனக் கூறப்பட்டது. அடுத்த மின்வலு நெருக்கடி 2004-5-6 இல் ஏற்படலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலைமைக்கு நுரைச்சோலைத் திட்டம் சூழல் மன்றத்தினால் சட்டரீதியாகத் தடுக்கப்பட்டதே காரணமாக அமையும்.[80] மனுதாரரான அரசுசாராநிறுவனம் நீதிமன்றத்தில் சூழலைக் காரணம்காட்டாது அனுமதி பெற்ற செயன்முறை தவறானது என்றே காரணம் காட்டியது. நுரைச்சோலைத் திட்டமானது வடமேல் மாகாணசபை, மத்திய சூழல் அதிகாரசபை, கரையோர பாதுகாப்புத் திணைக்களம் ஆகிய மூன்று அமைப்புக்களினதும் நியாயாதிக்கத்தில் வருவதால் இந்த மூன்றினது அனுமதியும் அவசியம் என்றும் ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை எனவும் கூறப்பட்டது.[81]

இவ்வாறிருக்க சூழல் மற்றும் மதரீதியான பிரசாரங்களின் காரணமாக நிலக்கரி மின்வலுத் திட்டம் காலத்துக்குக் காலம் பின்போடப்பட்டது. ஆனால் இதன் நடைமுறை வாய்ப்புப் பற்றிய ஆய்வுக்காக இலட்சக்கணக்கான பணம் பொதுமக்களின் வரிப்பணத்திலிருந்தே செலுத்தப்பட்டது. றியோ பிரகடனமானது நிலைபேண் அபிவிருத்தி எய்தப்பட வேண்டுமெனில் சூழல் பாதுகாப்பு என்பது தனியாக நோக்கப்படாது அபிவிருத்திச் செயன்முறையின் ஒரு பகுதியாகவே கருதப்பட வேண்டும் எனக் கூறியது உண்மைதான்.[82] பிரகடனத்தின் 11 ஆம் கோட்பாடானது சூழல் நியமங்கள், முகாமைத்துவக் குறிக்கோள் மற்றும் முன்னுரிமைகள் ஆகியவை அவை பிரயோகிக்கப்படக் கூடிய சூழல் மற்றும் அபிவிருத்தியின் சூழ்நிலைப் பொருத்தங்களைச் சூழல் பிரதிபலிக்க வேண்டும் எனக் கூறுகின்றது. சில நாடுகளுக்குப் பொருந்தும் நியமங்கள் ஏனைய நாடுகளுக்கு குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளுக்கு பொருத்தமில்லாமல் இருக்கலாம். அத்துடன் தேவையற்ற பொருளாதார, சமூக பாதிப்புக்களையும் ஏற்படுத்தலாம். இக்கோட்பாடு ஒரு

---

79 *Supra* n 66.

80 *மேற்படி.*

81 பார்க்க, Algama, R., *Supra* n 78.

82 தத்துவம் 4.

நாட்டுக்குள்ளேயும் பிரயோகிக்கப்படலாம். எனவே இந்த விடயத்தில் நிலைபேண் அபிவிருத்தி என்னும் எண்ணக்கருவை சூழலியல்வாதிகள் சரியாக விளங்கிக்கொள்ளாமல் பொறுப்பற்ற முறையில் நடந்துகொண்டனரா என்னும் கேள்வி எழுகிறது.

4. சமூக-பொருளாதார உரிமைகளின்மீது மின்வலு நெருக்கடியின் தாக்கம்

மின்சார நெருக்கடியின் நேரடிக் கிரயங்கள் (Costs) பற்றிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2001 இல் 1.4 சத வீத எதிர்மறையான வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்தது. அவ்வாண்டின் ஆரம்பத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 4.5 சத வீதமாக அமையுமென எதிர்வு கூறப்பட்டிருந்தது. 1948 இல் இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் இதுவே முதன் முறையாகப் பதிவு செய்யப்பட்ட எதிர்மறை வளர்ச்சி வீதமாகும். (எனினும் இலங்கை மாத்திரமல்லாது பல நாடுகளும் இவ்வாண்டில் எதிர்மறை வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்தன) உலகப் பொருளாதாரத் தேக்கம் ஒருபுறமிருக்க,[83] நீண்டகால வரட்சி விவசாயத்தையும் நீர்மின்வலு உற்பத்தியையும் கடுமையாகப் பாதித்தது. இதனால் மொத்த உள்நாட்டு உற்பத்தி 13 சத வீதம் குறைவடைந்தது.[84] மின்வெட்டானது பொருளாதாரச் செயற்பாடுகள், முதலீடு, கைத்தொழில் உற்பத்தி, உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் மக்களின் நாளாந்த வாழ்க்கை ஆகியவற்றில் தாக்கம் செலுத்தியது என மத்திய வங்கி அறிக்கை குறிப்பிட்டது.[85] எனவே மின்வெட்டானது மக்களின் சமூக-பொருளாதார உரிமைகள் உட்பட கைத்தொழில், வர்த்தகம், முதலீடு, சேவைகள், சுகாதாரம், கல்வி, தொழில்வாய்ப்பு ஆகிய சகல அம்சங்களையும் பாதித்தது எனலாம்.

4.1 கைத்தொழில்

கைத்தொழில் நோய் தொடர்பான (Industrial Sickness) தீர்வுகளை முன்வைக்குமாறு அரசாங்கம் நியமித்த குழுவினர்[86] தமது ஆய்வின்படி

---

[83] எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டில் ஏற்பட்ட நட்டத்தில் இது இரண்டில் மூன்று பங்கு என அறிவிக்கப்பட்டது. *Supra* n 1 p. 2.

[84] *மேற்படி*, பக். 2-3.

[85] *மேற்படி*, பக். 107.

[86] ஒரு தொழில்முயற்சி அதனுடைய பெறுமதியை விட திரட்டிய நட்டத்தை அடைந்து வெளிவாரி நிதியில் தங்கியிருப்பதை கைத்தொழில் நோய் என மத்திய வங்கி வரையறை செய்கிறது. *Supra* n 1, பக். 80

மின்வலுவுக்கான அதிகபட்சக் கட்டணமும், மின்வெட்டுமே வளர்ச்சியின் வீழ்ச்சிக்கான முக்கிய காரணங்களாகக் குறிப்பிட்டனர்.[87] தயாரிப்புத் துறையின் பிரதான உப துறையான தொழிற்சாலைக் கைத்தொழிற்துறை 3.9 சத வீத வீழ்ச்சியைக் காட்டியது. அத்துடன் உள்நாட்டுச் சந்தைக்கான கைத்தொழில்களிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. இதே துறை 2000 ஆம் ஆண்டில் 11 சத வீத வளர்ச்சியையும் கடந்த தசாப்தத்தில் 9.5 சத வீத வருடாந்த வளர்ச்சியையும் காட்டியது. மத்திய வங்கி அறிக்கையின்படி கடந்த இரு தசாப்தங்களாக வருடாந்தம் 7 சத வீத அதிகரிப்புக் காட்டிய தயாரிப்புக் கைத்தொழில் முதன்முறையாக 2001 ஆம் ஆண்டில் வீழ்ச்சியைக் காட்டியது.[88]

கைத்தொழில் உப துறைகளைப் பொறுத்தவரையில் உடை மற்றும் புடைவை (8.5 %), மட்பாண்டம் (11.9 %), பெற்றோலியப் பொருட்கள் (11.3 %), வீழ்ச்சியைக் காட்டியமை குறிப்பிடத்தக்கது.[89] மதிப்பீடுகள் இல்லாவிடினும் கூட இந்நிலைமை வேலைவாய்ப்பு மற்றும் சம்பளத்தை மோசமாகவே பாதித்திருக்கும். இதன்மூலம் பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் மீதான சர்வதேச பிரகடனத்தில் உறுதிப்படுத்தப்பட்ட மக்களுக்குப் போதுமான வாழ்க்கைத்தரம் என்னும் உரிமை மீறப்பட்டது.

மின்வெட்டானது கைத்தொழில் வெளியீடு, உற்பத்தித் தரம், தொழிலாளர் உற்பத்தித் திறன் ஆகியவற்றை நேரடியாகப் பாதிக்கின்றது என மத்திய வங்கி அறிக்கை கூறுகின்றது. அத்துடன் தொடர்ந்து மின்வெட்டு ஏற்பட்டால் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பாதிக்கப்பட்டு மூலதனம் துரிதமாகத் தேய்வடையும். எனினும் பாரிய கைத்தொழில்களைப் பொறுத்தமட்டில் அவைகள் தமது சொந்த மின்வலுப் பிறப்பாக்கியைக் கொண்டுள்ளதால் அவற்றின் வெளியீடு அவ்வளவாகப் பாதிப்புக்கு உள்ளாகவில்லை. உலகப் பொருளாதாரம் தேக்கமடைந்ததன் காரணமாகவே அவை பாதிக்கப்பட்டன. சிறு மற்றும் மத்திய தரக் கைத்தொழில்களும் கூடிய மின்வலு நுகர்வுக் கைத்தொழில்களுமே வெகுவாகப் பாதிக்கப்பட்டன.[90] அறிக்கை பின்வருமாறு குறிப்பிடுகின்றது: "2002 ஆம் ஆண்டு தொடர்ச்சியான மின்வெட்டு நாட்டின் பொருளாதார மீட்சியில் பாதிப்பை ஏற்படுத்தியது. இதனால் 2002 மத்திய பகுதி முதல் உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் நன்மைகளை உத்தமமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை."[91]

---

87 நோய் நிலைக் கைத்தொழில்கள் பற்றிய ஆய்வு (2001) - மூடப்பட்ட கைத்தொழில்கள் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு, வெளிவாரிப் பாதிப்பினால் பாதிக்கப்பட்ட கைத்தொழில்களை மதிப்பீடு செய்ய நியமிக்கப்பட்ட கமிட்டியின் அறிக்கை.

88 *Supra* n 1, பக். 13 மற்றும் 77.

89 *மேற்படி*, பக். 13.

90 *மேற்படி*, பக். 109.

91 *மேற்படி*.

4.2 சேவைகள்

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 53 சத வீதமான சேவைத் துறையும் இவ்வாண்டு 0.5 சத வீத எதிர்மறை வளர்ச்சியைப் பதிவு செய்தது என மத்திய வங்கி அறிக்கை கூறுகிறது. உல்லாசப் பயணத்துறை 16 சத வீதம் வீழ்ச்சியடைந்து கூடிய தாக்கத்தை அனுபவித்தது.[92]

4.3 வேலைவாய்ப்பு

பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் மீதான பிரகடனத்தின் (ICESCR) பங்காளி நாடுகள் வேலை செய்வதற்கான உரிமையை அங்கீகரித்துள்ளன. வேலை செய்வதன் மூலம் தன் வாழ்க்கைத் தரத்தைத் தேடிக்கொள்ளும் வாய்ப்பு, அத்தொழிலைச் சுதந்திரமாகத் தெரிவு செய்தல் அல்லது ஏற்றுக்கொள்ளல் ஆகியவை அவ்வுரிமையில் அடங்குகின்றன. இவ்வுரிமையைப் பாதுகாக்க அரசுகள் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.[93] அத்துடன் அந்நடவடிக்கைகள் உறுதியான பொருளாதார, சமூக, கலாசார அபிவிருத்தியை அடையும் கொள்கைகளையும், நுட்பங்களையும் கொண்டிருக்க வேண்டும். பொருளாதாரம் மற்றும் முதலீட்டின் தேக்கநிலை காரணமாக வேலைவாய்ப்புகள் குறைவடைந்தன. அதனால் வேலையின்மை வீதம் அதிகரித்தது.

மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட உல்லாசப்பயணம் தொடர்பான சேவைகளிலும், ஆடை ஏற்றுமதித் துறையிலும் தற்காலிகமாக ஆட்குறைப்புச் செய்ய வேண்டியிருந்தது.[94] மின்வெட்டுக் காரணமாக சில ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டன. சில தமது இயலளவைப் பாதியாகக் குறைத்து விட்டன. இதனால் உற்பத்தி வெளியீடு குறைந்து விட்டது. தொழிலாளர்களின் சம்பளம், போனஸ் ஆகியவற்றில் குறைவு ஏற்பட்டதால் அவர்களின் நிதி நிலைமை மிகவும் பாதிக்கப்பட்டது[95] ஆசிய அபிவிருத்தி வங்கியின் செயலமர்வு ஒன்றில் மின்வெட்டுக் காரணமாக பண நஷ்டம் ஏற்பட்டதோடு தொழிலின்மை ஏற்பட்டதாலும், கடன்களைக் கட்ட முடியாததாலும் பல இறால் பண்ணைகள் மூடப்பட்டன என அறிவிக்கப்பட்டது.[96]

---

92 *மேற்படி*, பக். 15.

93 உறுப்புரை 6 (1)

94 *Supra* n 1, பக். 18.

95 Jinadasa, J., " Social impact of power crisis" in *Daily News*, 11 மார்கழி 2001.

96 *மேற்படி*.

2001இல் ஆவணி மாதமளவில் ஊழியப்படை 6.7 மில்லியனாகவிருந்தது.[97] இக்காலக்கட்டத்தில் ஊழியப்படையின் பங்குபற்றல் வீதம் 48.3 சத வீதமாக வீழ்ச்சி அடைந்தது. இது 2000இல் 50.3 சத வீதமாகவிருந்தது.

4.4. சுகாதாரம்

வரவு செலவுத் திட்டப் பிரச்சினை காரணமாக பொதுத்துறைச் சுகாதார சேவைகள் குறைக்கப்பட வேண்டியிருந்தது என மத்திய வங்கி அறிக்கை கூறுகிறது.[98] சில முக்கியமான உட்கட்டமைப்புச் சேவைகளின் மீது ஏற்பட்ட வெட்டின் காரணமாகப் பொருளாதாரத்தில் பாரிய சுமை ஏற்ட்டது. அவற்றில் சுமார் 6 மாத காலமாக அமுல் நடத்தப்பட்ட நீர் வெட்டும் ஒன்றாகும்.[99] 2000 இல் ரூ 20,696 மில்லியனாக இருந்த சுகாதார சேவைச் செலவுகள் 2001 இல் ரூ 18,772 மில்லியனாக வீழ்ச்சியடைந்தது. அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.6 சத வீதமாக இருந்த இச் சேவை 1.3 சத வீதமாக வீழ்ச்சியடைந்தது. சுகாதார பராமரிப்புச் சேவைகளின் பொதுச் செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கடந்த சில வருடங்களாக 1.5 சத வீதமாகவே நிலைத்துள்ளது.[100] இதுவே நடுத்தர வருமானம் உள்ள நாடுகளில் 2.4 சத வீதமென உலக அபிவிருத்தி அறிக்கை 1999/2000 கூறுகிறது.[101]

மின் வெட்டின்போது மண்ணெண்ணெய் விளக்குகளைப் பயன்படுத்துவதால் ஏற்பட்ட விபத்துக்கள் காரணமாக கொழும்பு பெரியாஸ்பத்திரியில் ஒவ்வொரு மாதமும் சுமார் 15 பேர் மரணித்தனர்.[102] நாட்டின் ஏனைய பகுதிகளில் நடந்த இவை போன்ற விபத்துக்களைப் பற்றிய விபரம் தெரியவில்லை. மின்வெட்டானது ஆய்வுகூடப் பரிசோதனை சத்திரசிகிச்சையைப் பின்போடல் போன்ற நாளாந்த சுகாதார சேவைகளிலும் மறைமுகத் தாக்கங்களை ஏற்படுத்தியது.[103] இக்கால கட்டத்தில் போஷாக்கின்மையும் அதிகரித்தது. ஏனெனில் மின்வெட்டின் காரணமாக மக்கள் வேலை இழந்தனர் அல்லது வழமைக்கு மாறாக அரை மணித்தியாலம் மட்டுமே பணி புரிந்தனர்.[104]

---

97 சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் ஊழியப் படை காலாண்டு ஆய்வு சஞ்சிகை.

98 *Supra* n 1, பக். 99.

99 *மேற்படி.*

100 *மேற்படி*, பக். 100.

101 *மேற்படி.*

102 *Supra* n. 95.

103 *மேற்படி.*

104 *மேற்படி.*

4.5 கல்வி

மின்வெட்டின் காரணமாகப் பாடசாலை மாணவர்கள் படிக்கும் நேரத்தை இழந்தனர். இவ்விடயத்தில் நகர்ப்புற மாணவர்களே அதிகம் பாதிக்கப்பட்டனர். கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையைப் பின்போட வேண்டிய நிலைமையும் உருவாகியிருந்தது. பல்கலைக்கழகக் கல்வியும் பாதிக்கப்பட்டது. ஆய்வுகூடப் பரிசோதனைகள், ஆய்வுகள், இலத்திரனியல் ஊடகம் வழியான தகவல் பாய்ச்சல் ஆகியவை பாதிக்கப்பட்டன. பொழுது போக்கு அம்சங்களும் கூடப் பாதிக்கப்பட்டன.[105]

இவ் அத்தியாயத்தின் அடுத்த பகுதியில் மின்சாரத் துறையில் ஆட்சியியல் தத்துவங்கள் தொடர்பான ஒழுங்கமைப்புப் பொறிமுறைகள் பற்றியும் மின்வலு நெருக்கடியில் அவற்றின் தாக்கம் பற்றியும் ஆராயப்படும்.

5. அரசாட்சியும் மின்சாரத் துறை ஒழுங்குபடுத்தலும்

அரசாட்சி என்பது நல்ல முகாமைத்துவத்தின் கோட்பாடுகள் எனக் கூறப்படுகின்றது. அறிவார்ந்த பொருளாதார, சமூகக் கொள்கைகள், சனநாயக தீர்மானம் மேற்கொள்ளல், போதுமான அரச திறந்த தன்மை, நிதிசார் வகைகூறல், அபிவிருத்திக்கான சந்தை சாரந்த சூழலை உருவாக்குதல், சூழலுக்கு எதிரான ஏற்பாடுகள், சட்டவாட்சிக்கும் மனித உரிமைக்கும் மதிப்பளித்தல் ஆகியவை அத்தகைய கோட்பாடுகளில் உள்ளடங்கியுள்ளன.[106] எனினும் ''அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் முக்கிய பண்புகளை வரையறுப்பதில் ஒன்றாக அதன் பலவீனமான அரசாட்சி அமைப்புகளும் சேர்க்கப்படுகின்றன என கூறப்படுகின்றது.''[107]

கலாநிதி கமல் ஹொசைன் பின்வருமாறு கூறுகிறார்:

> *தீர்மானம் மேற்கொள்ளலில் மக்கள் சுதந்திரமாகப் பங்குபற்றுவதற்கு வசதியளிக்கும் ஓர் அரசியல் முறை நிலைபேண் அபிவிருத்தி என்னும் எண்ணக்கருவில் உள்ளார்ந்துள்ளது. அதாவது நிலைபேண் அபிவிருத்தி*

---

105 *மேற்படி.*

106 Ginther, K., Denters, E., and de Waart, P. J. I. M. (eds), *Sustainable Development and good governance* (Martinus Nijhoff Publishers, The Netherlands: 1995), பக். 1.

107 Nye, J. S. Jr. and Donahue, J. D. (Editors), *Governance in a Globalising World. Visions of Governance for the 21st Century* (Brookins Institutions Press, Washington DC: 2000). பக். 188.

நோக்கங்களுக்குத் துலங்கக் கூடியதான கொள்கை உருவாக்கம், தீர்மானம் மேற்கொள்ளல், அவற்றின் அமுலாக்கத்துக்கான அமைப்புகள் உள்ளன.[108]

அபிவிருத்தித் திட்டங்களை வடிவமைப்பதில் றியோ பிரகடனக் கோட்பாடுகளை மதித்தல் நிலைபேண அபிவிருத்தியின் இலக்காகும். இதனை நல்லரசாட்சி என்பது உறுதிப்படுத்தல் வேண்டும். அபிவிருத்தித் திட்டங்களின் நன்மை தீமைகளை குறுகிய பொருளாதார மதிப்பீட்டுக்கு உட்படுத்தல் இந்த நோக்கத்தை அடைவதற்கு வாய்ப்பானதல்ல. அபிவிருத்தித் திட்டங்களின் சமூக, சூழற் தாக்கங்களையும் நிலைபேண் அபிவிருத்தியின் இலக்குகளை அடைவதில் அவற்றின் முக்கியத்துவத்தையும் மதிப்பீடு செய்தல் வேண்டும்.[109]

எனவே நல்லரசாட்சிக் கோட்பாடுகள் எந்தளவுக்கு ஆட்சிச் செயன்முறையில் உள்வாங்கப்பட்டுள்ளன என்பது அந்நாட்டின் நிலைபேண் அபிவிருத்தியைப் பாதிக்கும் அம்சமாகும். உதாரணமாக குறுகிய நோக்கு கொண்ட பொருளாதார, சமூகக் கொள்கைகள், ஒருதலைப் பட்சமான தீர்மானம் மேற்கொள்ளல், ஊழல் போன்றவை ஒரு நாட்டின் அபிவிருத்திக்குப் பாதகமானவை. அத்துடன் இத்தகைய நிலைமை மக்களின் சமூக பொருளாதார உரிமைகளையும் பாதிக்கும். இதனை உணர்ந்து கொண்டதினால் நல்லரசாட்சிக்கான உரிமை என்பது சர்வதேச சட்டத்தின் தத்துவங்களில் ஒன்றாக இன்று தோற்றம் பெற்றுள்ளது.

சுயநிர்ணயத்திற்கான உரிமையை மக்கள் கொண்டிருக்கின்றனர் எனக் கூறும் ICESR, அதன் காரணமாக இந்த உரிமையானது, தமது அரசியல் அந்தஸ்த்து மற்றும் அவர்களுடைய பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை மேற்கொள்வதனைச் சுதந்திரமாக நிர்ணயிப்பதற்கான உரிமையாகும் எனக் குறிப்பிடுகின்றது.[110] சுயநிர்ணய உரிமையினைப் பெற்றுக் கொள்வதனை ஊக்குவித்தல் கட்டுறுத்தில் (Convenant) சம்பந்தப்பட்ட அரச குழுவினரின் கடப்பாடாகும்.[111]

அபிவிருத்திக்கான உரிமை பற்றிய பிரகடனமானது, அபிவிருத்தியின் மையப்பொருள் மனிதனே என்பதனையும் அவனே பிரதான பங்குகொள்வோனாகவும் அபிவிருத்தி உரிமையின் நன்மையைப் பெறுவோனாகவும் இருத்தல் வேண்டும் எனக் கூறுகின்றது.[112] மனித

---

108 *Supra* n 106, பக். 20.

109 *மேற்படி*, பக். 21.

110 உறுப்புரை 1 (1)

111 உறுப்புரை 1 (3)

112 உறுப்புரை 2 (1)

வர்க்கத்தினர் யாவரும் அபிவிருத்திக்கான பொறுப்பினையும் அவர்களுடைய மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்கள் என்பனவற்றுக்கு முழுமையான மதிப்பளிப்பதுடன் சமூகம் பற்றிய அவர்களின் கடமைகள் பற்றியும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். ஆகவே அவர்கள் பொருத்தமான அரசியல், சமூக மற்றும் பொருளாதார ஒழுங்கினை பொருளாதார அபிவிருத்தி கருதி மேம்படுத்த வேண்டும், பாதுகாக்க வேண்டும்.[113] அபிவிருத்திக்கான உரிமையை அடைந்து கொள்வதற்குச் சாதகமான சர்வதேச நிலைமைகளையும் தேசிய நிலைமைகளையும் உருவாக்குவதற்கான அடிப்படைப் பொறுப்பு அரசாங்கங்கள் மீதே சுமத்தப்பட்டுள்ளது.[114]

ஐக்கிய நாடுகள் குழுவின் அபிவிருத்தித் திட்டமிடல் பற்றிய அறிக்கை, நல்லரசாட்சியின் (good governance) பண்புகளைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.[115]

1. பணிக்குழு ஆட்சியினூடாக அரசியற் தலைவர்களிடமிருந்து ஏனையவர்களுக்கு வகைசொல்லல் (accountability) பற்றிய தெளிவான வரையறைகள்.

2. திறந்த அரசியல் முறைமையானது ஈடுபாடும் விழிப்புணர்வும் கொண்ட சிவில் சமூகமொன்றை ஊக்குவிக்கும். அவர்களுடைய நலன்கள் வகைசொல்லும் அரசாங்க அமைப்புக்குள் இடம்பெற்றிருக்கும். அரச அலுவலகங்கள், சட்டம் மற்றும் உடன்பாடுகளை உறுதிப்படுத்தும்.

3. உயர் தொழிற் தேர்ச்சி, ஆற்றல் மற்றும் நேர்மையுடைய அரச சேவை வகைசொல்லக்கூடிய, சட்டத்தின் ஆட்சிக்குட்பட்ட அமைப்பினுள் நடைமுறையிலிருக்கும். அதனுள் திறமை என்னும் கோட்பாடும் பொதுமக்கள் நலன்களும் உயர் இடத்தைப் பெற்றிருக்கும்.

4. மற்றும், சிறந்த நிதிசார் திட்டமிடல், செலவு, பொருளாதார முகாமைத்துவம் மற்றும் நிதிசார் வகைசொல் முறைமையுடன் பொதுத்துறைச் செயற்பாடுகளை மதிப்பிடும் ஆற்றலும் இருக்கும்.

ஆகவே நல்லரசாட்சி என்ற எண்ணக்கருவானது பொது மற்றும் தனியார்துறை தொடர்பான அபிவிருத்திச் செயன்முறையை முகாமைத்துவம் செய்தலுடன்

---

113 உறுப்புரை 2 (2)

114 உறுப்புரை 3 (1)

115 Report of the United Nations Committee for Development Plannin g, *Poverty Alleviation and Sustainable Development*: Goals in Conflict? (1992), pp. 62-3.

தொடர்புடையது. அரசாட்சியானது, பொதுத்துறையின் தொழிற்பாடுகளையும் ஆற்றலையும் உள்ளடக்கியதுடன், பொது மற்றும் தனியார் துறையின் நடவடிக்கைகளுக்குரிய நடத்தைகள் அமைப்பினை உருவாக்கும் சட்டங்களையும் நிறுவனங்களையும் கொண்டிருக்கும். இவை, பொருளாதார மற்றும் நிதிசார் செயலாற்றுகைக் கம்பனிகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் பங்குடைமைகள் தொடர்பான ஒழுக்காற்று அமைப்புக்களின் வகைசொல்லை உள்ளடக்கும்.[116] பிளாக்கின் சட்ட அகராதியானது[117] (Black's Law Dictionary) 'ஒழுங்குமுறை' (Regulation) என்பதனை செயல் (Action) அல்லது சட்டத்தினால் அல்லது தடைகளினால் கட்டுப்படுத்தும் செயன்முறை என்றே வரையறை செய்கின்றது.[118] ஆகவே ஆளுகை என்பது, ஏனைய விடயங்களுக்கு மத்தியில் ஒழுக்காற்று நிறுவனங்களின் வினைத்திறனுடனும், அதில் ஈடுபடுவோரின் விருப்பங்களுக்கு சமத்துவச் சமநிலையை அடைதலுக்குமிடையிலான செயன்முறைகளிலும் அக்கறையுடையது. உதாரணமாக, அரசாங்கம், தனியார்துறை மற்றும் பொதுத்துறையைக் குறிப்பிடலாம். ஒழுக்காற்று நிறுவனங்களின் நல்லரசாட்சியானது, ஒழுங்குபடுத்துபவரின் சட்டரீதியான நிலைமைகளை உருவாக்குதல் மற்றும் உறுதிப்படுத்துதல் என்ற காரணங்களினால் முக்கியத்துவம் வாய்ந்ததுடன் அதன் விளைபயனைப் பொறுத்தவரை முக்கிய கூறாகவும் உள்ளது.

கலாநிதி ஹொசைன் கூறியது போன்று:

> *கூடியளவுக்கு வெளிப்படைத் தன்மையையும் வகைகூறுதலையும் வழங்கக்கூடிய சட்ட அமைப்புக்களை உருவாக்க வேண்டிய தேவை ஒன்றுண்டு. அத்துடன் ஊழலை எதிர்க்கக்கூடிய பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கும் சுதந்திரமான பத்திரிகைகள் குடியியல் அமைப்புக்கள் ஆகிய நிறுவனங்களால் ஒத்துழைப்பைப் பெறக்கூடிய வினைத்திறன் மிக்க சட்ட அமுலாக்கல் அமைப்பொன்றும் தேவைப்படுகின்றது. நிலைபேண் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு அவசியத் தேவையாகக் காணப்படும் நல்லரசாட்சியை (good governance) விருத்தி செய்வதில் முக்கியவொரு அம்சமாக விளங்கும் குடியியல் சமூகத்தின் நிறுவனங்களை வலுப்படுத்தல் வேண்டும்.*[119]

---

116 The World Bank, *Managing Development: The Governance Dimension* (June 1991), p. 1.

117 Garner, B. A., 7th Edition (West Group, St. Paul, minn: 1999).

118 *மேற்படி.*

119 *Supra* n 106, பக். 22.

5.1 மின்சாரத்துறை ஒழுங்கு விதிகள் தொடர்பான சட்டரீதியான ஏற்பாடுகள்

மின்சாரத் துறைக்கான வினைத்திறன் மிக்க ஒழுங்குவிதிகள் எவையும் 2001 ஆம் ஆண்டு இறுதிவரையில் இருக்கவில்லை. மின்சாரத் துறைக்கென சட்டரீதியாக நியமிக்கப்பட்ட ஒழுங்குபடுத்துனர் இல்லையென்பதே இதற்கான அடிப்படைக் காரணமாகும். உதாரணமாக, தொலைத் தொடர்புத் துறையைக் கூறலாம். 1950 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க மின்சாரச் சட்டமானது, மின்சக்தியைப் பிறப்பித்தல், பரப்புதல், பரிமாறல், வழங்குதல், விநியோகித்தல் மற்றும் பயன்பாடு என்பனவற்றை ஒழுங்குபடுத்துவதற்காக இயற்றப்பட்டது. மின்சாரத்துறைக்கென ஒழுங்குபடுத்துனர் ஒருவரை (regulator) உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் எவையுமில்லை.

மேலும், இலங்கை மின்சார சபைக்கு மட்டுமே இலங்கை முழுவதும், பயன்பாடுடைய, இயைபாக்கப்பட்ட மற்றும் சிக்கனமான மின்சார விநியோகத்தை விருத்தி செய்யவும், பராமரிக்கவுமான பொறுப்பு 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சாரசபைச் சட்டப்படி உரித்தாக்கப்பட்டுள்ளது. (இதன் பின்னர் இலங்கை மின்சார சபைச் சட்டம் (CEB Act) என அழைக்கப்படும்)[120] இச்சட்டம் நடைமுறைக்கு வரும்போது, அரசாங்கத்தின் மின்சாரப் பொறுப்பு இலங்கை மின்சார சபைக்கு மாற்றப்படும்.[121] எந்தவொரு ஆளோ அல்லது ஒரு சபையோ மின்சார சபைக்கு அமைச்சினால் வழங்கப்பட்ட அனுமதியின்றி ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குப் பெருமளவான மின்சக்தியை மாற்றுதலை இச்சட்டம் விசேடமாகத் தடைசெய்கிறது.[122] மின்பிறப்பாக்கம், மின்வழங்கல் மற்றும் பரிமாற்றம் எற்பனவற்றில் இலங்கை மின்சாரசபை ஏகபோக உரிமையுடையது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இலங்கை மின்சாரசபை ஏறக்குறைய 80 சத வீதமான மின்சாரத்தை 2.1 மில்லியன் மின்சார வாடிக்கையாளருக்கு நேரடியாக விற்பனை செய்கின்றது. அதேவேளையில் லங்கா மின்சாரக் கம்பனி (LECO) அரசுக்குச் சொந்தமான விநியோக அமைப்பு நடுத்தர சக்தி கொண்ட மின்சாரத்தைக் கொள்வனவு செய்து மேற்குக் கரையோரங்களிலுள்ள வாடிக்கையாளருக்கு விநியோகிக்கின்றது.[123]

---

120 இலங்கை மின்சார சபைச் சட்டம், பிரிவு 11.

121 பிரிவு 18.

122 பிரிவு 16.

123 Siyambalapitiya, T., "Regulation in Sri Lanka's Electric Power Sector" in *Competition Policy and Utility Regulation, Sri Lankan Experience* (Law & Society Trust, colombo, August 2002)

இலங்கை மின்சாரசபைச் சட்டத்தினைப் பார்க்கும்போது, மின்சாரசபை மீது அரசாங்கரீதியான/ அமைச்சுரீதியான கட்டுப்பாடு உள்ளது என்பது தெளிவாகத் தெரிகின்றதுடன் இலங்கை மின்சார சபையின் தன்னாதிக்கத்துக்கு அது பெரும் தடையாக உள்ளது. ஏழு பேர் கொண்ட இலங்கை மின்சாரசபை உறுப்பினர்களில் நான்குபேர் அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றனர். பொறியியல், வர்த்தகம், நிருவாகம் மற்றும் கணக்கியல்[124] என்பனவற்றில் அனுபவமும் ஆற்றலும் உள்ளவர் எனக் காண்பவரையே அமைச்சர் நியமிக்கிறார். எஞ்சிய மூன்று உறுப்பினர்களில் ஒருவர் உள்ளூர் அதிகாரசபைகளால் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில், உள்ளூராட்சி அமைச்சரின் ஆலோசனையுடனும் மற்ற இருவரும் கைத்தொழில்களுக்குப் பொறுப்பான அமைச்சரின் ஆலோசனையுடனும் கைத்தொழிற் துறையைப் பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய வகையிலும் நியமிக்கப்படுகின்றனர்[125] ஏழாவது உறுப்பினர் பொதுத்திறைசேரியிலிருந்து நிதிக்குப் பொறுப்பான அமைச்சரால் நியமிக்கப்படுகின்றார்.[126]

சபையின் பொது முகாமையாளராக தகுதியும் அனுபவமும் உள்ள ஒருவரை நியமிப்பதற்கு சபைக்கு (அமைச்சரின் அனுமதி பெறவேண்டும்)[127] சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. கொள்கை சார்ந்த விடயங்களில் சபையின் பொதுவான நெறிப்படுத்தலுக்கு ஆளாதல் என்ற வகையிலேயே பொதுமுகாமையாளர் சபை நடவடிக்கைகளைக் கவனிப்பதுடன், அதிகாரங்களைப் பயன்படுத்துதல், மற்றும் சபையின் கடமைகள் பொறுப்புகளையும் நிறைவேற்ற வேண்டும்.

சபை உறுப்பினர் ஒருவரை நியமிப்பதற்கு முன்னர், அந்த ஆள் நிதி சார்ந்து அல்லது சபையின் உறுப்பினர் என்ற வகையில் அதன் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதில் மிகவும் நேர்மையானவர் என்பதையிட்டு அமைச்சர் திருப்தியடைய வேண்டும். சபைக்கு நியமிக்கப்படும் எந்தவொரு ஆளும் அவ்வாறான தகவல்களைச் சட்டரீதியாக அறிவித்தல் வேண்டும்.[128] பொதுசன விருப்பங்களை ஏலவே தெரிவிப்பதற்கும் எவ்வித ஏற்பாடுகளும் இங்கே இல்லை. (உதாரணமாக, பாராளுமன்றத் தெரிவுக் குழுவினூடாக) தீர்மானம் மேற்கொள்ளும் சபையின் வெளிப்படைத் தன்மையையும் தன்னாதிக்கத்தையும் உறுதிப்படுத்துவதற்கு இது அவசியமாகின்றது.

எவ்வாறாயினும் இலங்கை மின்சார சபைச் சட்டமானது சபையின் உறுப்பினர் ஒருவர் சபை செய்கின்ற ஒப்பந்தம் ஒன்றில் நேரடியாகவோ

124 இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் பிரிவு 3(1) (அ)

125 பிரிவு 3(1) (ஆ) மற்றும் (இ).

126 பிரிவு 3(1) (ஈ).

127 பிரிவு 5(1).

128 பிரிவு 3(3).

அல்லது மறைமுகமாகவோ அக்கறையுள்ளவராயின் அவ் அக்கறையின் தன்மையை அவ் உறுப்பினர் வெளிப்படுத்த வேண்டுமென்பதனைக் கட்டாயப்படுத்துகின்றது. இவ்வொப்பந்தம் சம்பந்தமாக தீர்மானம் மேற்கொள்ளப்படும் பொழுதோ அல்லது கலந்துரையாடப்படும் பொழுதோ அவ்வுறுப்பினர் அவ்வமர்வுகளில் சமூகமளிக்கக் கூடாது.[129] ஆயினும் இத்தகைய ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் பல பிரச்சினைகள் எழும்.

இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் திட்டத்தில் சில உள்ளார்ந்த பிரச்சினைகள் காணப்படுகின்றன. அமைச்சருக்கும் சபைக்குமிடையிலான வகிபங்கிலும் நோக்கங்களிலும் தெளிவின்மை காணப்படுகின்றது. உதாரணமாக, அமைச்சர் சபையுடன் கலந்தாலோசித்த பின்னர் ஆற்ற வேண்டிய கடமைகள் மற்றும் தேசிய நலன்களைப் பாதிக்குமென அவருக்குத் தோன்றும் விடயங்கள் தொடர்பான அதிகாரங்கள் தொடர்பாக பொதுவான அல்லது விசேடமான வழிகாட்டுதல்களை வழங்குவார். சபையானது அத்தகைய நெறிப்படுத்தல்களுக்கு இணங்கி நடப்பது. கடினமானது.[130] "தேசிய நலன்களில" அடங்குபவை எவை எனத் தீர்மானித்தல் அமைச்சரின் முழுமையான தெரிவுக்கு விடப்படுகின்றது, சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் நோக்குடன் ஒழுங்கு விதிகளை உருவாக்கும் பொதுவான அதிகாரம் அமைச்சருக்கும் உண்டு.[131] ஆயினும் இந்த அதிகாரம் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்கு உட்பட்டது.[132]

சபையின் உறுப்பினர் ஒருவரை அலுவலகத்திலிருந்து நீக்குவது தொடர்பாக இலங்கை மின்சார சபை மீதான அரசாங்க / அமைச்சுரீதியான கட்டுப்பாடுகளின் ஆதிக்கம் வெளிப்படையாகத் தெரிகின்றது. இலங்கை மின்சார சபையின் தொழிற்பாடுகளை மிகத் திறமையாகச் செயற்படுத்துதல், அல்லது கடமைகளை நிறைவேற்றுதல் என்னும் ஆர்வத்தில் அவ்வாறு செய்தல்வேண்டுமெனக் கருதப்படுமிடத்து சபையின் உறுப்பினர் எவரேனும், அந்த உறுப்பினரின் நியமனத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் கலந்தாலோசித்து அமைச்சரினால் நீக்கப்படுவதற்கு இலங்கை மின்சார சபைச் சட்டம் இடமளிக்கின்றது.[133] அத்தகைய நீக்கத்துக்கான காரணத்தைச் சட்டம் கோரவில்லையாயினும் நிருவாக நடவடிக்கைக்கான நீதிமுறை மீளாய்வினால் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படலாம்.

---

129 பிரிவு 3(4).

130 பிரிவு 8(1).

131 பிரிவு 56(1).

132 பிரிவு 56(4)

133 பிரிவு 3(7)

இலங்கை மின்சார சபையின் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையில் பங்கேற்றல், பதில் கூறுதல் மற்றும் பொதுமக்கள் உள்ளீடு என்பன மிகக் குறைவாக உள்ளது என்பதும் எடுத்துக்காட்டப்படுகிறது. இவை அமைச்சரின் கவனத்துக்கு விடப்படுகிறது என்பதுடன் இலங்கை மின்சார சபை உறுப்பினர்களும் அவர்களாலேயே நியமிக்கப்படுகின்றனர். இதற்குரிய விதிவிலக்கு யாதெனில், சபையினால் தீர்வைகள் விதிக்கப்படுவதற்கு முன்னர் பிரபல்யப்படுத்தலுக்கான ஏற்பாடுகள் இருப்பதாகும். அத்தகைய தீர்வைகள் தொடர்பிலான பொதுப் பிரதிநிதித்துவத்தைச் செய்வதற்கு வசதியாக ஒரு மாத காலம் உள்ளது.[134] இவ்வேற்பாட்டினைப் பாதுகாப்பதற்கு மின்சார சபைச் சட்டத்தில் அல்லது 1950 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க மின்சாரச் சட்டத்தில் (திருத்தப்பட்டது) ஏற்பாடுகள் எதுவுமில்லை. சக்தித் துறையைப் பாதிக்கும் முக்கியமான விடயங்களில் பொது மக்களின் கருத்துக்களைக் (public hearing) கேட்பதற்கான ஏற்பாடுகள் எதுவுமில்லை. துறையைப் பாதிக்கும் வகையிலான முக்கிய தீர்மானங்களை மேற்கொண்டதற்கான காரணங்களை அமைச்சர் மற்றும் / அல்லது சபை தெரிவிக்க வேண்டும் என்பதற்கான ஏற்பாடுகளும் இல்லை. ஆயினும் சக்தித் துறையில் புதிய செயற்றிட்டங்களுக்கான சூழல் தாக்க மதிப்பீடு (EIA) மேற்கொள்ளப்படும் போது, பொதுமக்கள் 1980, 47 ஆம் இலக்க மத்திய சூழல் அதிகாரசபைச் (Central Environmental Authority) சட்டப்படி (1988 ஆம் ஆண்டு 56 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டது) பொது மக்களும் செயன்முறைகளில் ஈடுபடலாம். அத்தகைய சூழல் தாக்க மதிப்பீட்டு ஆவணங்கள் யாவும் பொது ஆவணங்கள் என்றும் பொதுமக்கள் பங்குபற்றல் இருத்தல் வேண்டும் எனவும் கூறுகின்றது. தேசிய சூழல் அதிகா,சபையும் (NEA) சில சந்தர்ப்பங்களில் பொதுமக்களின் கருத்துக்களுக்கு இடமளிப்பதுடன், அத்தகைய கருத்துக்கள் மேல் கொத்மலை நீர்த்தேக்கச் செயற்றிட்டம் தொடர்பாகவும் பெற்றுக் கொள்ளப்பட்டன.

5.2 தகவல் சுதந்திரமும் வெளிப்படைத் தன்மையும்

இலங்கை மின்சார சபையின் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையில் வெளிப்படைத் தன்மை பெரிதும் காணப்படவில்லை. பொதுமக்களைப் பாதிக்கும் கொள்கைத் தீர்மானங்கள் மிகக் குறைந்தளவிலேயே தெரிவிக்கப்படும் இலங்கை அரசாங்கத்தின் வழக்கமான முறையாக அது விளங்குகிறது. பெரும்பாலான இலங்கையர்கள், தமது வாழ்வில்

---

134 பிரிவு 52(2)

பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய அரசாங்கம் தெரிவிக்கும் தகவல்களை அறிவதற்கான வாய்ப்புக்கள் பற்றி மனநிறைவடைவதில்லை. அரசும் பல வருட காலமாக, கொள்கைத் தீர்மானத்தில் இரகசியம் பேணும் கலாசாரத்தையே கட்டியெழுப்பி வந்துள்ளது. இதற்குரிய ஒரு காரணமாக எமது அரசியலமைப்பில் அல்லது வேறு சட்டவாக்கங்களில் தகவல்களுக்கான அடிப்படை உரிமைகள் விளக்கமான முறையில் எடுத்துக் காட்டப்படவில்லை. இருந்தபோதிலும், அடிப்படை உரிமைப் போராட்டத்தின் காரணமாக அரசாங்கத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான சில முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.[135]

இலங்கையின் உயர் நீதிமன்றமானது, *விஸ்வலிங்கம* எதிர் *வியனகே வழக்கில*[136] கருத்துச் சுதந்திரத்துக்கான அடிப்படை உரிமையில் தகவல்களுக்கான உரிமையை எடுத்துக்காட்டியிருந்தது. இந்த வழக்கில், உயர் நீதிமன்றமானது, தகவல்களைப் பெறுபவரான ஒருவரின் உரிமையை சகல அரசாங்க நிறுவனங்களும் அங்கீகரிக்க வேண்டும் என்பதனைப் பகிரங்கமான கலந்துரையாடலின் மூலம் எடுத்துக் காட்டியுள்ளது. எனினும் பின்னர் நடந்த ஒரு வழக்கில்[137] கட்டுப்பாடற்ற முறையில் தகவல்களுக்கான உரிமையை உயர் நீதிமன்றம் மறுத்துள்ளது. அதாவது கருத்துச் சுதந்திரத்துடன் தொடர்புபடுத்தும் நோக்கில் அதனைத் தொடர்புபடுத்தாமல் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் உரிமை.[138] அரசியலமைப்பின் 10 ஆவது உறுப்புரை தகவல்களுக்கான உரிமை உள்ளடங்கலாக சிந்தனை உரிமையை ஒவ்வொரு நபருக்கும் உத்தரவாதமளிக்கிறது என நீதிமன்றம் பிரகடனம் செய்தது. கட்டுப்பாடின்றி தகவல்கள் பெறுவதற்கான உரிமையை 10 ஆவது உறுப்புரையில் உள்ளடக்குவதன் மூலம் தகவலுக்கான உரிமையானது சர்வதேச சட்டத்தின் கீழ் பொது அவசரகாலநிலைமை உள்ள காலத்திலும் விலகி நிற்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ முடியாத உரிமை என்ற நிலைக்கு உயர்வடைந்தது.[139]

மேலும் ஊடக அதிகாரசபை மசோதா (Media Authority Bill) தொடர்பான வழக்கில்[140] உயர் நீதிமன்றமானது பேச்சுச் சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் என்பன தகவல் பெறும் உரிமையை உள்ளடக்கும்

---

135 பார்க்க, Udagama, D., " The Right to Information in Sri Lanka" in *Sri Lanka: State of Human Rights* 1999 (Law & Society Trust, Colombo, 1999) p. 139.

136 [1984] 2 Sri LR p 123. பார்க்க, *supra* n 86, pp 141-3.

137 பார்க்க, *Wimal Fernando* v. *Sri Lanka Broadcasting Authority* (1996) 1 Sri LR p. 157. பார்க்க, *supra* n 86, pp. 143-7.

138 *Supra* n 137, பக். 145.

139 *மேற்படி*, பக். 146.

140 *Gamini Athukorale* et al v. *Attorney General*, Supreme Court SD No. 1/97 – 15/97. பார்க்க *supra* n 86, pp. 147-9.

என்பதைக் குறிப்பாக எடுத்துக் காட்டியிருந்தது. ஆகவே, இலங்கையின் நீதித்துறையானது நீதித்துறைச் செயற்பாடுகள் மூலம் தகவல்களைப் பெறுவதற்கான உரிமையை ஏற்றுக் கொண்டுள்ளது. ஆயினும் இத்தகைய தீர்ப்புகள், அரசாங்கம் வழங்கும் தகவல்களுக்கு[141] மாறாக, மூன்றாம் தரப்பினரிடமிருந்து தகவல்கள் பெறுதல் தொடர்பான, பெறுவோர் உரிமைக்கே அடிப்படையில் முக்கியத்துவம் கொடுக்கிறது. மேலும் சில நியதிச் சட்டங்கள்[142] அரசாங்கம் கொண்டிருக்கும் தகவல்களை, நேரடியாகப் பெறுவதைத் தடுப்பதற்கு பௌதிகரீதியாக அதனை அடைந்து கொள்வதை அல்லது குறிப்பிட்ட சில வகையான தகவல் வெளியீடுகளை தணிக்கை செய்வதன் மூலமும் தடை செய்து வருகின்றன.

எப்பாவெல பெஸ்பேற் சுரங்கமறுத்தல (Eppawela Phosphate Mining) வழக்கில்[143] மனுதாரர்கள், உத்தேச உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் நம்பகத்தன்மை மற்றும் நீதித்துறையின் பரிசீலனைக்குப் பதிலாக நடைமுறையில் பொது மக்களின் பங்கேற்றல் தவிர்க்கப்பட்டது. ஆகவே இச்செயற்றிட்டத்தைத் தொடர்வதில் அரசாங்கத்தின் தீர்மானம் பக்கச் சார்பானது, நீதியற்றது என்பதனை மனுதாரர்கள் வலியுறுத்தினர். பிரேரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டம் தொடர்பாக முழு அளவிலான அளவீடொன்று நடத்தப்பட வேண்டுமென்று உயர் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்ததுடன் அதன் முடிவுகளும் வெளியிடப்படவிருந்தது. மேலும் தேசிய சூழல் அதிகார சபையில் (NEA) சூழல் தாக்க மதிப்பீடு (EIA) ஏற்பாடுகளை அமுலாக்குவதற்கு இரு தரப்பினரையும் வேண்டிக் கொள்கின்றது. தமது வாழ்க்கையில் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய மற்றும் அரசாங்கம் கொண்டிருக்கும் தகவல்களைப் பொதுமக்கள் பெற்றுக் கொள்வதற்கான உரிமையை ஏற்றுக் கொள்ளும் தீர்மானங்களில் பங்கேற்பது தொடர்பான உரிமைகளில் உயர் நீதிமன்றம் உறுதியாக இருந்தது.[144]

வெளிப்படைத் தன்மை தொடர்பாக இந்த நியதிச்சட்ட ஏற்பாடுகள் குறைந்தபட்ச அளவிலேயே காணப்பட்டன. குறிப்பிட்ட ஆண்டில் இலங்கை மின்சார சபையின் அதிகாரங்கள், கடமைகள், கொள்கைகள், நிகழ்ச்சித்

---

141 பார்க்க *Supra* n 137, பக். 149.

142 1995 32 ஆம் இலக்க அலுவலக இரகசியம் பேணும் சட்டம்; 1973 5 ஆம் இலக்க இலங்கை பத்திரிகைப் பேரவைச் சட்டம்; 1958 41 ஆம் இலக்க Profane வெளியீடுகள் சட்டம்; 1927 4 ஆம் இலக்க Obscene வெளியீடுகள் கட்டளைச் சட்டம்; 1912 7 ஆம் இலக்க பொதுமக்கள் ஆற்றுகைக் கட்டளைச் சட்டம்; 1979 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச்சட்டம்; மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால விதிகள் ஆகியவற்றை இந்த நியதிச் சட்டங்கள் உள்ளடக்குகின்றன.

143 *Supra* n 43.

144 *மேற்படி*, பக். 53.

திட்டங்கள் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டமை பற்றிய அறிக்கையின் சில பிரதிகளும், சபையின் கணக்குகள் பற்றிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையும் பொதுமக்களால் கொள்வனவு செய்யக்கூடிய முறையில் ஏற்பாடுகள் இருத்தல் வேண்டும் என்பதை மட்டுமே இந்த நியதிச் சட்டங்கள் வலியுறுத்தின.[145]

மத்திய வங்கி அறிக்கை குறிப்பாகக் கூறுவதாவது:

> *2001ஆம் ஆண்டின் சில முக்கியமான உட்கட்டமைப்புச் சேவைகளில் காணப்பட்ட முக்கிய குறைபாடுகள் பொருளாதாரத்தில் பெரும் சுமையை ஏற்படுத்தின. ஏறக்குறைய வருடத்தின் அரைப் பகுதி மின்வெட்டினைக் கொண்டிருந்தது. மேலும் உட்கட்டமைப்புச் சேவைகளின் பற்றாக்குறையான நிரம்பலும் நடைமுறையிலுள்ள திறனின்மைகளும் பதில் கூறும் பொறுப்பு, விலை மற்றும் அளவுக்கதிகமான ஆளனியினர் ஆகியவற்றுடன் தொடர்பான பிரச்சினைகளும் தொடர்ந்து காணப்பட்டது.*
>
> *உட்கட்டுமானத் தொகுதியின் போதுமான அடைகையைக் கொண்ட பயன்படுதன்மையும் போதியளவான வாய்ப்புகளும் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கும், உறுதியான சமூக நலனுக்கும் முன் தேவையாக உள்ளது. உட்கட்டுமான சேவைகளை விருத்தி செய்வதில் விசேட கவனம் செலுத்துதல் அவசியமானது. நிதிப்படுத்தல், நிர்வகித்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும் உட்கட்டுமான சேவைகளின் உண்மையான விநியோகம் ஆகியவற்றில் காணப்படும் அரசாங்கத்தின் ஈடுபாடு இம் முறைமையில் பல்வேறு திறனின்மைகளை உருவாக்கியுள்ளன.*
>
> *முகாமையாளர்களின் பலவீனமான நிதியியல் மற்றும் நடைமுறைகள், பொறுப்புகள், தீர்மானம் மேற்கொள்வதில் தாமதம்; அரசியல் மயப்படுத்தல், விலையிடலில் உத்தம நிலையின்மை, மிதமிஞ்சிய ஆளணியினர், பொருத்தமற்ற தொழில்நுட்பத் தெரிவுகள் என்பன இத்தகைய சில திறமையின்மைகளாகும். உட்கட்டுமான சேவைக்கு ஏலவே வழங்கப்பட்டுள்ள கணிசமான அளவு முதலீடுகளிலிருந்து மேலதிக நன்மைகளை சில நிறுவனரீதியான சீர்திருத்தங்கள் உருவாக்க முடியும்.*[146]

---

145 இலங்கை மின்சார சபை சட்டம், பிரிவு 51(4).

146 *Supra* n 1, at p. 99.

வானிலை நிலைமைகளில் தங்கியிருப்பதன் காரணமாக நீர்மின் சக்தியிலிருந்து வெப்ப சக்திக்கு மாற்றியமைப்பதற்கான பல பிரேரணைகள் இலங்கை மின்சார சபையினால் 1980களின் பிற்பகுதியிலிருந்து முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆயினும், இத்தகைய பிரேரணைகள் (Proposals) எதுவும் செயற்படுமுறைத் தாமதங்கள், பல்வேறு ஆர்வக் குழுக்களின்[147] ஆதரவைத் தேடுதல் மற்றும் அரசியல் ரீதியான பொறுப்பின்மை போன்ற காரணங்களால் அமுல் செய்யப்படுவதில்லை.[148]

இலங்கை மின்சார சபையால் எதிர்வு கூறப்பட்டது போன்று 1996இல் மழை போதாதினால் நாடு கடுமையான சக்தி நெருக்கடியை எதிர் நோக்கியதுடன் மிகப் பாதகமான காலத்தில் நாளொன்றுக்கு 8 மணி நேர மின்வெட்டுக்கும் வழிகோலியது. சக்தி நெருக்கடிக்கான நேரடிச் செலவு பற்றிய மதிப்பீடுகள் கிடைக்கவில்லையாயினும் 1996இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது அதன் முன்னைய இரு ஆண்டுகளில் நிலவிய 5.5 சத வீத சராசரி வளர்ச்சி வீதத்திலிருந்து 3.6 சத வீதமாகக் குறைந்தது.[149] அவ்வாறே 2001இல் நிலவிய வரட்சியினால் விவசாய உற்பத்தியும் மின்சக்திப் பிறப்பாக்கமும் வெகுவாகப் பாதிக்கப்பட்ட போது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 சத வீதம் நேரடியாகக் குறைந்தமை நேரடியாக விளங்கும் இரண்டாவது முக்கிய காரணியாக இருந்தது.[150]

இது பின்வருமாறு அவதானிக்கப்பட்டது:

> *2000, 2001ஆகிய ஆண்டுகளில் இறுதி விளைவாக, இலங்கை மின்சார சபை தனது சொந்த செலவு மிகுந்த வெப்ப பிறப்பாக்கிகளையும், மேலும் செலவு மிகுந்த உடனடிப் பிறப்பாக்கிகளின் விரிவான செயல் நடவடிக்கைகளையும் வாடிக்கையாளரின் இடங்களில் இயக்கியது. அத்துடன் தனிப்பட்ட உற்பத்தியாளரிடமிருந்து குறுங்கால ஒப்பந்த அடிப்படையில் கூடிய செலவில் சக்தியைக் கொள்வனவு செய்தது.*[151]

---

147 சுற்றாடல் மற்றும் சமய சார்புக் குழுக்கள் உட்பட.

148 *Supra* n 8, p. 88.

149 *மேற்படி.*

150 *Supra* n 1, pp. 2-3.

151 *Supra* n 8, p. 88.

முகாமைத்துவச் சீர்கேடு, வளங்களின் துஷ்பிரயோகம், ஊழல்[152] போன்றன இலங்கை மின்சார சபை பல நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு காரணமாக இருந்தன என பல அறிக்கைகள் கூறுகின்றன. தேசிய சக்திப் பயன்பாடானது, தனிப்பட்ட வழங்குனரிடமிருந்து குறுங்கால ஒப்பந்தங்களின் அடிப்படையில் உயர் செலவில் சிறிய அசையும் இயந்திரங்களை வாடகைக்குப் பெற்றுக் கொண்டது. அவசரப் பேச்சுவார்த்தைகளின் மூலம் உருவான ஒப்பந்தங்களினால், அவசரமாக மேற்கொள்ளப்பட்ட விநியோகம் பெரும் செலவுக்குக் காரணமாயிற்று.[153] இலங்கை மின்சார சபை தற்பொழுது பெரும் நிதி நெருக்கடியை எதிர்கொள்வதாக அறியப்படுகின்றது. 2000ஆம் ஆண்டின் முடிவில், அதன் வருமானம் ரூபா. 26.3 பில்லியனாகவும் செயல்முறைச் செலவு ரூபா. 33 பில்லியனாகவும் இருந்ததினால் ரூபா. 6.7 பில்லியன் இழப்பு ஏற்பட்டது. இலங்கை மின்சார சபையின் மொத்த இழப்பு ரூபா. 12 பில்லியனுக்கு மேல் இருந்ததுடன், இந்த இழப்பினை வருடாந்தம் 1.7 பில்லியன் ரூபா வட்டிக்கு என்ற வீதத்தில் மேலதிக பண எடுப்புக்கள் மூலம் வங்கியினால் நிதியீட்டம் செய்யப்பட்டது.[154]

இலங்கை மின்சார சபை இத்தகைய நிலைமைகளுக்கான பிரதான காரணங்களாக உலகில் எண்ணெய் விலைகள் உயர்வாக இருந்தபோது குறைவான மழைவீழ்ச்சியின் காரணமாக வெப்ப சக்திப் பயன்பாட்டில் ஏற்பட்ட பாரியளவிலான அதிகரிப்பு, அரசாங்கத்தின் செயற்படுமுறைத் தாமதத்தினால் இரண்டு வெப்ப சக்தி இயந்திர சாதனங்களை அமுலாக்குவதில் ஏற்பட்ட தாமதம், அரசாங்க நிறுவனங்களின் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட தாமதம் ஆகியவற்றைக் குறிப்பிட்டது. டீசலுக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் முன்னர் வழங்கி வந்த விலைகளுக்குப் பதிலாக 2000ஆம் ஆண்டிற்குரிய உலக விலைகளில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் மீள் ஒப்பந்தமொன்றை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் செய்து கொண்ட போது நிலைமை மேலும் மோசமடைந்தது.[155]

தனியார் பிறப்பாக்கி இயந்திரங்களை மிக உயர்ந்த விலையில் வாடகைக்கு அமர்த்தியமை தொடர்பாக இலங்கை மின்சாரசபை மீது ஊழல் குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டன.[156] இத்தகைய நடைமுறைகள் இலங்கை மின்சார சபையின் பக்கத்தில் அதன் அனுபவமற்ற நிதியியல் மற்றும் பேரம்

---

152 பார்க்க, *Supra* n 65 மற்றும் *Supra* n 72.

153 *Supra* n 8, p. 88.

154 *மேற்படி*, பக். 89.

155 *மேற்படி*

156 2000 இல் சராசரிச் செலவு ரூ. 9.53/kwh. 2001 தையில் ரூ. 12.40/kwh ஆக மதிப்பிடப்பட்டது.

பேசும் சக்திகளை எடுத்துக் காட்டுகின்றன. இத்தகைய வாதத்துக்குரிய பிரச்சினைகளானது இயந்திரங்கள் செயற்படாத நிலையிலும், உயர்வான வாராந்த வாடகை அளவிடல், வரிவிலக்களித்தல், இயந்திரங்களின் கொண்டு செல் செலவினை இலங்கை மின்சார சபை ஏற்றுக் கொண்டமை மற்றும் பெற்றோலிய விலையில் ஏற்படும் தளம்பல்களால் வரும் ஆபத்துக்களை ஏற்றுக் கொண்டு எண்ணையின் மொத்தச் செலவினை வழங்கியமை ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. பொதுத்துறை நிறுவனங்களின் குழுவினால் (Committee on Public Enterprises – COPE) மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகளின் படி பெரும்பாலான தனியார் சக்தி இயந்திரங்கள் ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட இரண்டாம் தரத்தைச் சேர்ந்தவை, செயற்றிறன் இல்லாதவை, அதிகளவில் எண்ணெய் நுகரக் கூடியவை என்பது தெரிய வந்தது.[157]

ஆகவே குறைந்த செலவிலான நீர்மின்சக்தி கூட செலவுமிக்க வெப்ப மின் பிறப்பாக்கத்துக்குப் பிரதியீடாகப் பேணக்கூடிய நிலை இருக்கவில்லை. 2001 பங்குனியில் இலங்கை மின்சார சபை 25 சத வீதம் மிகைக் கட்டணத்தை விதித்ததன் மூலம் நுகர்வோரின் சராசரி விலையை ரூபா 4.75/KWh இலிருந்து ரூபா. 5.70/KWh ஆக அதிகரித்தது. ஆயினும், தனியார் பிறப்பாக்கி இயந்திரங்களினால் வழங்கப்பட்ட மின்சக்திக்குரிய ஓர் அலகுக்கான இழப்பு ரூபா. 6.70/KWh ஆக இருந்தது. இத்தகைய பற்றாக்குறையே இலங்கை மின்சார சபைக்கு 2001இல் 12 பில்லியன் ரூபா பாரிய இழப்பினை ஏற்படுத்தியது.[158]

இலங்கை மின்சார சபையின் நிதிநிலைமையானது எதிர்பார்த்த அளவிலும் பார்க்க குறைவாக இருந்தமைக்கு வரட்சி நிலவிய வருடங்களில் ஏற்பட்ட உயர்ந்த செலவுகள் மட்டும் காரணமல்ல எனக் கூறப்பட்டது. 400,000 மின்சக்தி நுகர்வு மானிகளுக்கான (electricity - consumption meters) கொள்வனவுப் பத்திரங்களை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக பட்டியல்களைத் (billing) தயாரிப்பதில் திறனற்ற தன்மை, திருட்டு, கிராமிய மின்மயமாக்கல் திட்டங்களின் மூலம் பெறப்பட்ட குறைந்த வருமானம், மற்றும் தீர்வை வீதங்களை மீளமைத்தலும் அதிகரித்தலும் தொடர்பான பிரச்சினைகளே மிகக் குறைவான நிதியியல் செயலாற்றத்துக்குக் காரணமாக அமைந்தன.[159]

கைத்தொழில்சார் குறைபாடுகளுக்கு தீர்வுகளை முன்வைப்பதற்கான குழுவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் மின்சாரத்தின் உயர் விலையையும் மின்சாரத் தடையையும் தீர்க்கும் வகையில் பின்வரும் தீர்வுகள் முன்வைக்கப்பட்டன:

---

157 *Supra* n 8, p. 89.

158 *மேற்படி.*

159 *மேற்படி*, பக். 89-90.

- சக்தி கொள்வனவுத் திட்டங்களை மீண்டும் அறிமுகப்படுத்தல்
- நிலக்கரி மூலமான சக்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்
- மின்சாரத் திருட்டுக்களை ஒழித்தல்
- இரண்டு வருடங்களில் தொகுதி இழப்பினை (system loss) நடைமுறை மட்டமாக இருக்கும் 20 சத வீதத்துக்கு மேலான நிலையிலிருந்து 15 சத வீதமாகக் குறைத்தல்.
- சக்தியைப் பேணிப் பாதுகாத்தல் சாதனங்களின் பயன்பாட்டினையும் புதுப்பிக்கக் கூடிய சக்தி, கைத்தொழில் கழிவுகள் போன்ற எண்ணெய்யை அடிப்படையாகக் கொண்டிராத சக்தியையும் ஊக்குவித்தலும் பிரபல்யப்படுத்தலும்.
- தனியார் துறையினரால் பிறப்பாக்கம் செய்யப்படும் நீர்மின்சக்தியின் மீதான உயர் ஆற்றலுக்கான கட்டுப்பாட்டினை 10MW இல் இருந்து 25MW ஆக மாற்றுவதுடன் சுற்றாடல் பிரச்சினைகளுக்கு உரிய கவனத்தைச் செலுத்துதல்.[160]

5.4 சக்தித் துறையில் நுகர்வோரின் வகிபங்கு

அபிவிருத்திக்கான உரிமை பற்றிய பிரகடனமானது, பொருத்தமான தேசிய அபிவிருத்திக் கொள்கைகளை உருவாக்குவது அரசுகளுக்குரிய உரிமையும் கடமையுமாகும் எனக் கூறுகின்றது. இதன் இலக்கானது முழுச் சனத்தொகையினதும், எல்லா தனிநபர்களினதும், நலனை மேம்படுத்தலாகும். அபிவிருத்தியில் செயற்றிறனுடனும் சுதந்திரமாகவும், அர்த்தமுள்ள பங்களிப்புடனும் செயற்பட்டால் அதன் விளைவாகக் கிடைக்கும் நன்மைகளும் நியாயமான முறையில் அமையும் என எடுத்துக் காட்டியுள்ளது.[161]

ஆட்சியியல் மூலகங்களான பங்கேற்றலும் வகைசொல்லலும் ஒழுக்காற்றுச் செயன்முறைகளில் நுகர்வோரும் பொதுமக்களும் ஈடுபடுவதன் மூலம் அடையப்படலாம். இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்பு சிறிதளவு கவனத்தையே பெற்றுள்ளது. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்களின் போதாமையும் செயற்றிறனின்மையும் சமகால நிலையில் நடவடிக்கைகள எவற்றையும் எடுக்க முடியாமல் இருக்கின்றது.[162] நுகர்வோர் பாதுகாப்புப

---

160 *Supra* n 1, p. 81.

161 அபிவிருத்தி மற்றும் பிரகடன உறுப்புரை 2(3).

162 பார்க்க, Kelegama, S., and Casie Chetty, Y., *Consumer Protection Act and Fair Trading in Sri Lanka* (Law & Society Trust, Colombo, August 1993).

பற்றிய இலங்கையின் சட்டவாக்கமானது பிராந்திய மற்றும் சர்வதேசச் சட்டங்களுடன் ஒப்பிடும் போது குறைந்து விளங்குகின்றன.

2001 ஆம் ஆண்டினைப் போல, நுகர்வோர் குழுக்களை, சமூகங்களைச் சக்தித்துறையின் பயன் பெறுவோராக அங்கீகாக்கும் வழங்கும் சட்டரீதியான ஏற்பாடுகள் எவையும் இல்லை. அதன் காரணமாக, நுகர்வோர் சமூகங்கள் அல்லது குழுக்கள் தாமாகவே சங்கங்களுக்கும் சபைகளுக்கும் பொருந்தக்கூடிய பொதுச்சட்டங்களுக்கு அமைய உருவாக்கப்படுதல் வேண்டும். நுகர்வோர் குழுக்களை உருவாக்குவதற்கும் ஒழுங்கமைக்கவும் வளங்களும், நிபுணத்துவமும் நிறுவனம்சார் வசதிகளும் தடையாக இருக்கின்றன. இக்குழுவானது சக்தித்துறையின் ஒழுங்கமைப்பில் நன்கு பங்கேற்க முடியும். நுகர்வோர் பாதுகாப்புப் பற்றிய சட்டத்தினை உருவாக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் வருட இறுதியில் அது வரைவாகவே முடிவுற்றிருந்தது.

கலாநிதி திலக் சியம்பலப்பிட்டியவின் அவதானிப்பு பின்வருமாறு அமைந்தது:

> *இலங்கை மின்சார சபை மற்றும் லங்கா எலக்றிசிற்றி கம்பனி (LECO) என்பனவற்றின் மின்சார சேவைகளானது அரசுக்குச் சொந்தமான ஏகபோக உரிமை கொண்டனவாக இருந்தன. உள்ளக நிர்வாக விடயங்கள் தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறைகளும் அவை நேரடியாக நுகர்வோரைப் பாதிப்பதும் நாட்டிலுள்ள ஏனைய பல்வேறு அரச நிறுவனங்களினதும் தனிநபர்களினதும் பாரதூரமான செல்வாக்கின் விளைவுகளாகும். ஏகபோக உரிமையின் விளைவுகள், நுகர்வோருடனான தொடர்புக் குறைவுகள் மற்றும் பராமரிப்பின்மை அல்லது குறைந்த விலையிலும் நம்பகமான மின்சாரத்தைப் பெறும் நுகர்வோரின் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதில் காட்டும் அர்ப்பணிப்பின்மை மற்றும் மின்சார சேவைகள் ஆகியவற்றின் மூலம் தெரிகின்றன. இலங்கையின் மின்சாரப் பயன்பாட்டில் எவ்வித வேறுபாடும் இல்லை.*[163]

சில விடயங்களில் காணப்படும் மிகக் குறைவான ஒழுங்குமுறைகளும் ஏனைய நடைமுறைகளிலுள்ள மிகை ஒழுங்குமுறைகளும் இரண்டு மின்சாரப் பயன்பாட்டின் இறுக்கமான உரிமைசார் அமைப்புடன் இணைந்து வருவதினால் நுகர்வோர் மீது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தி விட்டது.[164] மின்சார

---

163 *Supra* n 123, p. 103.

164 *மேற்படி.*

விநியோகத்திலுள்ள மீளெழும் ஆற்றல் நெருக்கடிகள் 1979, 1983, 1987, 1992 மற்றும் 1996 ஆகிய வருடங்களில் இருட்டடிப்புக்களுக்கு காரணமாக இருந்தன. 2001-2002 இடைப்பட்ட காலங்களில் தொடர்ந்து 8 மாதங்களுக்கு மின்வெட்டு இருந்தது. நுகர்வோர் நலன் தொடர்பான முறைப்பாடுகளைக் கையாளுதல் பற்றிய பல குறைபாடுகள் பற்றிய செய்திகளும் உள்ளன.[165]

சட்டத்தரணி ஒருவர், பொதுமக்களின் நன்மை கருதி, இலங்கை மின்சார சபை நுகர்வோருக்கு மின்சார விநியோகத்தைத் தொடர்ந்து வழங்கத் தவறிவிட்டது என்பதை முறையிடும் ரிட் மனுவொன்றைச் சமர்ப்பித்ததுடன் அதற்கு இலங்கை மின்சார சபை பதிலிறுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.[166] இந்த மனுவானது இலங்கை மின்சார சபைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின்படி மின்சார உற்பத்தியையும் அதன் தொடர்ச்சியான விநியோகத்தையும் உறுதிப்படுத்துமாறு இலங்கை மின்சார சபையைக் கட்டாயப்படுத்த வேண்டுமென மனுவொன்றை வழங்குமாறு கேட்டுக்கொண்டது. இலங்கை மின்சார சபையானது மாற்றுச் சக்தி மூலம் ஒன்றை நிறுவுவதன் மூலம் வரட்சியேற்படும் காலங்களில் நீர்மின்சக்தி குறையும்போது அதனை ஈடுசெய்ய வேண்டும் என்றும் மனுதாரர் எடுத்துக் காட்டியிருந்தார். மனுதாரர் சூழலியலாளர் மீதும் குற்றம் சாட்டியதுடன் இவர்கள் தமது வெளிநாட்டுத் தொடர்புகளின் நலன்களை ஊக்குவிக்கும் வகையில் டீசலைப் பயன்படுத்தும் பிறப்பாக்கிகளை நிறுவுவதற்கு ஊக்கமளித்தனர். இவ் வெளிநாட்டுடன் தொடர்பான அரசுசாரா நிறுவனங்களுக்கு அந்நாடுகளே நிதியீட்டமும் செய்தன.[167]

இதற்கு அப்பாற்பட்ட ஒரு விடயமாக, நுகர்வோர் ஒருவர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கமானது, இலங்கை மின்சார சபை தமது அதிகாரிகள் தமது கடமைகளை நிறைவேற்றத் தூண்டுதலளிக்க வேண்டும் எனக் கூறிய சந்தர்ப்பமும் உண்டு. இந்த விடயத்திலும் மனுதாரர் ஒரு சட்டத்தரணியே என்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஏனெனில் பெரும்பாலான பொதுமக்கள் பல்வேறு காரணங்களின் காரணமாக நுகர்வோர் குறைபாடுகளை நீக்கும் நீதிமுறைகளுடன் குறைவான தொடர்புகளையே கொண்டுள்ளனர். இதற்குக் காரணங்களாக நீதிசார் தடைகள், தமது உரிமைகள் தொடர்பாக உள்ள அறிவின்மை மற்றும் சிக்கலான ஒழுங்கு விதிகள் என்பன நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்தினைத் தூண்டுவதில்லை.

---

165 *மேற்படி.*

166 Weerarathne, C., "Court issues notice on CEB for Failure to supply continuous power" *in The Island*, 23 rd October 2001.

167 *மேற்படி.*

6. முடிவுரையும் பரிந்துரைகளும்

கொள்கை ஆய்வு நிறுவகம் பின்வருமாறு குறிப்பிட்டது:

> *முன்னைய ஆண்டுகளில் குறிப்பாக 1983, 1987, 1992 மற்றும் 1996 ஆகிய ஆண்டுகளில் எதிர்நோக்கப்பட்ட நெருக்கடிகளைப் போன்று 2001 ஆம் ஆண்டிலும் மீண்டும் மின்வெட்டு இடம்பெற்றது. மழைவீழ்ச்சிப் போக்குடன் இணைந்த முறையில் மீண்டும் இடம்பெறும் இந்தப் போக்கானது தேசியரீதியான சக்திப் பயன்பாட்டில் மிக மோசமான முகாமைத்துவக் குறைபாட்டினை எடுத்துக் காட்டியது. செயற்றிட்ட அமுலாக்கத்தில் ஏற்பட்ட தாமதங்கள், இலங்கை மின்சார சபையின் நிதி நெருக்கடியுடன் இணைந்திருந்தன.*[168]

மின்சக்தித் துறையை மீளமைப்பதற்கு அதிகாரத்துவம் மிக்க செயற்றிறன் கொண்ட நிறுவனமொன்று அவசியமானதுடன் அதற்குப் பிரேரிக்கப்பட்டுள்ள சக்திப் பிறப்பாக்கத் திட்டங்கள் மற்றும் அதன் அமுலாக்கம் பற்றி மதிப்பிடுவதற்கான முழு அதிகாரமும் வழங்கப்படல் வேண்டும். சக்திப் பிறப்பாக்கத் திட்டங்கள் தொழில் நுட்பம் மிக்கவையாக இருப்பதினாலும் நாட்டின் தொழில்நுட்ப, நிதிசார், சமூக, சூழல் தேவைகளுடன் தொடர்புபட்டதாக இருப்பதினாலும் தீர்மானம் மேற்கொள்பவர்கள் பயிற்சி பெற்ற நிபுணர்களாக இருத்தல் வேண்டும். இலங்கை மின்சார சபையினை அரசியல் மயப்படுத்தலைத் தவிர்ப்பது அதன் நிதிசார் நிலைமைகளை மேம்படுத்தும் நீண்டகால முதலீடுகளைத் தூண்டிக் கொடுப்பனவுத் தாமதங்களைக் குறைக்கும். இத்தகைய சீர்திருத்தங்களுக்கு தன்னாதிக்கமும் அனுபவமும் முன்தேவையாக உள்ளது.[169]

அரசாங்கத்தினால் 2001 தையில் மீள்-ஒழுங்குக் குழுவொன்று (De-Regulation Commitee) ஸ்தாபிக்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க கைத்தொழில் முன்னேற்றச் சட்டத்தின்படி முதலீடுகளைக் கவருவதற்கு நாட்டின் போட்டித் தன்மையை விருத்திசெய்யும் நோக்கில் மீளொழுங்கினை ஆய்வு செய்யவும், மேம்படுத்தவுமான பணியை இக்குழு மேள்கொள்ளும். சக்தி தொடர்பாக பின்வரும் பரிந்துரைகளை அது முன்வைத்தது.

---

168 *Supra* n 8, p. 96.

169 *மேற்படி*, பக். 97.

- முதலீட்டினையும், போட்டித் தன்மையையும் மேற்பார்வை செய்வதற்கு ஒழுங்குமுறைச் சட்டத்தை ஸ்தாபித்தல்.

- மொத்த மானியங்கள், விலைக் கட்டுப்பாடுகள், வரவுசெலவுத் திட்டப் பரிமாற்றங்களை அகற்றுதல்.

- மின்சாரப் பிறப்பாக்கம் மற்றும் பரம்பல் தொடர்பாக ஆரம்ப நிலையிலுள்ள கட்டுப்பாடுகளை அகற்றல்.

- பெற்றோலியத் துறையில் காணப்படும் தனியார்துறை நடவடிக்கை மீதான கட்டுப்பாடுகளைக் கலைத்துவிடுதல்.

- பிரேரிக்கப்பட்டுள்ள நிலக்கரி மூலமான சக்தி நிலையங்களை உடனடியாக ஆரம்பிப்பதுடன் மேலும் மூன்று அமைவிடங்களுக்கு சூழல் தாக்க அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும்.[170]

பொதுமக்களின் நலன்கருதி அதனை உறுதிப்படுத்துவதற்கு எல்லா ஒழுங்கு விதிகளையும் சுதந்திரமாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் பரிசோதிப்பதில் ஈடுபட்டுள்ள தற்போது நடைமுறையிலுள்ள ஒழுக்காற்று மீள்பரிசீலனை (regulatory review) ஒன்றை அரசாங்கம் ஸ்தாபிப்பதற்கு குழு பரிந்துரை செய்தது.[171]

சக்தி நெருக்கடி மீண்டும் இடம்பெறுமா என்பது இன்னொரு கவலைதரும் விடயமாகும். மத்திய வங்கி அறிக்கையில் இது பற்றிப் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

> *சக்தி நிபுணர்களின் கருத்துப்படி மோசமான நிலைமை இன்னும் வரவிருக்கின்றது. 2004-2005 இல் இன்னுமொரு சக்தி நெருக்கடி இடம்பெறலாம். 2002 ஆம் ஆண்டு முடிவில் தற்போது உள்ள இணைக்கப்பட்டிருக்கும் ஆற்றல் (Installed capacity) 200 MW ஆக விரிவடையும் அதேவேளை குக்குலு கங்கை (80 MW) 2002-2004 இல் சேர்க்கப்படவிருக்கும் ஒரேயொரு பிரதான செயற்றிட்டமாகக் காணப்படும். இலங்கை மின்சாரசபையானது (CEB) புத்தளத்தில் 300 MW நிலக்கரி மூலம் இயங்கும் வலுப்பொறியின் முதல் நிலை 2004 இல் இயங்கத்*

170 *Supra* n 1, p. 51.

171 *மேற்படி*, பக். 50.

தொடங்குமென ஆரம்பத்தில் எதிர்பார்த்திருந்தது. இந்த சக்தி செயற்றிட்டத்தில் முன்னேற்றம் ஏற்படாததினால் இலங்கை மின்சார சபைத் திட்டமானது (2000) 2004 ஆம் ஆண்டு தைக்குப் பிந்தாமல் 150 MW இணைந்த சுற்று சக்தி நிலையம் இயங்க வேண்டுமென வலியுறுத்தியது. எவ்வாறாயினும் இது பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பிரேரிக்கப்பட்டுள்ள நிலக்கரி மின் நிலையத்தை இப்பொழுதே அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் மேலும் புதிய பாரிய அளவுத் திட்டத்திலான குறைந்த செலவு மின் செயற்றிட்டங்களை ஆரம்பிப்பதற்கு உடனடியான வழிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் இந் நெருக்கடி பல வருடங்களுக்கு தொடர்ந்திருக்கப் போகின்றது.[172]

மத்திய வங்கி அறிக்கையில் மின்சக்தி நெருக்கடியானது ஒரு சிக்கலான விடயம் என்பது சுட்டிக் காட்டப்பட்டது. மின்துறை அதிகாரிகளின் தற்போது காணப்படும் ஆற்றலையும், நிதி நெருக்கடியையும் உடனடியாக அறிவிப்பதற்கான தேவை உள்ளதுடன் நீண்ட காலத்தில் எழக்கூடிய நெருக்கடியைத் தவிர்ப்பதற்குப் பொருத்தமான அளவு முறைகளையும் எடுக்க வேண்டும். தற்போதுள்ள பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் அதிகாரிகள் பின்வரும் அளவு முறைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது:

- கைத்தொழில் வலயங்களின் நன்மைக்காக விசேட மின் பிறப்பாக்கம், மற்றும் பரம்பல் ஆகியவற்றில் முதலீடு செய்வதற்கு தனியார் துறையை அனுமதிக்கவும் ஊக்குவிக்கவும் வேண்டும்.

- இலங்கை மின்சார சபையின் இழப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்குத் தற்போதுள்ள நெருக்கடிகளைச் சமாளிப்பதற்குத் தேவையான வரி அதிகரிப்பை உடனேயே அமுலாக்க வேண்டும்.

- மின் நிலையங்களின் பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகளினால் ஏற்படும் தாமதத்தினைக் குறைப்பதற்கு நேர அட்டவணை ஒன்றைப் பின்பற்ற வேண்டும். கேள்விப்பத்திர நடைமுறைகளைத் துரிதப்படுத்த வேண்டும்.[173]

---

172 *மேற்படி*, பக். 110.

173 *மேற்படி.*

எதிர்காலத்தில் மின் நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கு மின்துறை அதிகாரிகளினால் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இத்தகைய நடவடிக்கைகள் பின்வருமாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது:

- போட்டித் தன்மையை நிலைநிறுத்தும் முகமாக போட்டி விலைகளில் நம்பிக்கையான, போதுமான மின்சக்தி வழங்கலை முதலீட்டாளர்கள் உத்தரவாதப்படுத்த வேண்டும்.

- மேல் கொத்மலை நீர் மின்சக்தித் திட்டம் உடனடியாக அமுல் படுத்தப்பட வேண்டும். இச்செயற்றிட்டம் அட்டவணையின்படி 6 வருடங்கள் பின்தங்கியுள்ளது.

- சக்தித் துறை, தனியார்துறைகளிலிருந்தும், பொருளியலாளர், அரசாங்க அதிகாரிகள், நிபுணத்துவ தேர்ச்சி பெற்றோரை உள்ளடக்கக் கூடியதாக சுதந்திரமான ஆலோசனைக் குழுவொன்று நீண்டகாலத் தேவைகளை மதிப்பிடவும், கொள்கைகள் மற்றும் உபாயங்களை வடிவமைக்கவும், மின்சக்தித் துறைக்கான பரிந்துரைகளை மேற்கொள்ளவும் அமைக்கப்பட வேண்டும்.

- மின்சக்தி அதிகார சபைகளின் வெளிப்படைத் தன்மை மேம்படுத்தப்பட வேண்டும்.

- இழப்பினைக் குறைக்கும் வலைப்பின்னல் நிகழ்ச்சித் திட்டம் துரிதப்படுத்தப்பட வேண்டும்.

- சக்தியின் திறன் மிக்க பயன்பாட்டை அதிகரிப்பதற்கு பயனுறுதி வாய்ந்த கேள்வி முகாமைத்துவக் கொள்கை ஒன்று அமுலாக்கப்பட வேண்டும்.

- மின்சக்தியின் எதிர்கால விரிவாக்கம், கடத்துதல், பரிமாற்றம், பரம்பல் என்பன பிரதானமாகத் தனியார் துறையிலேயே தங்கியிருப்பதினால் பொருத்தமான சுதந்திரமான ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையொன்று (regulatory authority) ஸ்தாபிக்கப்பட வேண்டும்.[174]

---

174 *மேற்படி*, பக். 110-111.

நாட்டில் பல்வேறு பயன்பாட்டாளர்களினால் பல பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகவும் முக்கியமானது – முதலீட்டினையும் போட்டித் தன்மையையும் முக்கியமாகக் கொண்டு மின்சக்தித் துறைக்கு சுதந்திரமான அரசியல் சார்பற்ற ஒழுங்கமைப்பு வரைச்சட்டம் ஒன்றினை ஸ்தாபிக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உள்ளது. எனவே சட்டச் சீர்திருத்தம் மிக முக்கியமானது. தற்பொழுது காணப்படும் நிதியிழப்பு, திறனின்மை, ஊழல், தீர்மானமெடுத்தலில் தாமதங்கள் போன்ற தற்போதைய புதைகுழியிலிருந்து விடுபடுவதற்கான சந்தர்ப்பத்தை உண்மையிலேயே நாடு கொண்டிருந்தால் அதனை மேற்கொள்ள வேண்டும். சட்டரீதியான வரைச்சட்டத்தினுள் நல்லரசாட்சி அம்சங்களை உள்ளடக்கக்கூடிய நிரந்தரமான தன்னாதிக்கமுள்ள ஒழுக்காற்றுப் பிரிவொன்றினை ஸ்தாபிப்பது அவசியமானது. அது சட்டரீதியான ஒழுக்காற்று நிறுவனத்துக்கான ஓர் அடிப்படையை உருவாக்கும். மத்திய வங்கி அறிக்கையில் இது பற்றிக் குறிப்பிட்டுள்ளதாவது:

> *மின்சக்தி அதிகாரிகளின் வகைகூறும் தன்மையை ஸ்தாபிப்பதற்கு நிறுவனங்கள் அரசியற் தலையீடுகள் மற்றும் ஏனைய இடையீடுகளிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். குறிப்பாக மின்சக்தித் துறையின் தொழில்நுட்பப் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொறுப்பினை (அமைவிடத்தைத் தெரிவு செய்தல், வரியினைத் தீர்மானித்தல், பொருத்தமான சக்திக் கலப்பினைத் தீர்மானித்தல்) அரசியல்வாதிகள் அல்லது சூழலியலாளர்களிடம் விட்டுவிட்டது. அது சிறப்புத் தேர்ச்சி பெற்ற நிபுணர்களிடம் கையளிக்கப்பட வேண்டும். இவ் இடையீடுகளினால் ஏற்பட்ட செலவு தாங்கமுடியாத அளவுக்கு சென்றுள்ளதைக் கடந்தகால அனுபவம் எடுத்துக் காட்டியுள்ளது.*[175]

மின்சக்தித் துறையுடன் தொடர்பான பல்வேறு சமூக, பொருளாதார, சூழலியல் காரணிகளுக்கிடையில் சமநிலையொன்றினைக் காண்பதற்கான தேவை அரசாங்கம், தனியார்துறை, நுகர்வோர், பொருளியலாளர்கள், சூழலியலாளர்கள் ஆகியோருக்கு உள்ளது. மிகவும் கடினமானதாகவும், யதார்த்தத்துக்குப் புறம்பானதாகவும் இப்பிரச்சினை காணப்படுவதினால் தீர்வுக்கான பொறிமுறையென்பது அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அம் முறையானது பல்வேறு வகையான பிரச்சினைகளுக்குப் பயனுறுதிமிக்க

175 *மேற்படி*, பக். 111.

விரைவானதொரு தீர்வினை ஊக்குவிக்கக்கூடிய சட்டவாக்கத்தினூடாக அமைதல் வேண்டும். நிலைபேண் அபிவிருத்தியின் வரைச்சட்டத்தினுள் சமூக, பொருளாதார உரிமைகளை அடைந்துகொள்ள வேண்டுமென்பதே யாவரினதும் முதன்மையான நோக்கமாகவும் இருக்க வேண்டும்.

மேலும், பொதுமக்களின் அறிவு புகட்டலை நோக்கமாகக் கொண்ட குறிப்பாக, நுகர்வோர் பாதுகாப்புடன் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்கள் அரசாங்கத்தினாலும் குறிப்பாக குடியியல் சமூக நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்பட வேண்டும். தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையில் பங்குபற்றக்கூடிய முறையில் பொதுமக்களுக்கான கலந்துரையாடல் ஒன்றினை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். பொதுமக்களும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்வதற்கு கல்வியூட்டப்பட வேண்டும். குடியியல் சமூகத்தின் பங்கேற்புடன் காலாவதியான சட்டங்களை ஒன்றிணைத்த முறையில் சீர்திருத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். ஆட்சியியலின் பல்வேறு அம்சங்களிலும் நல்லரசாட்சித் தத்துவங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

V

மனித உரிமைகளின் நீதிமுறைப் பாதுகாப்பு

சுமுது அத்தபத்து *

1. அறிமுகம்

உயர் நீதிமன்றம்[1] அடிப்படை உரிமை மீறல்களைத்[2] தீர்மானிக்கின்ற விசேட உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளதினால் பிரசைகளின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கின்ற தனது முக்கிய பணியை 2001ஆம் ஆண்டில் தொடர்ந்தது. இவ்வாண்டில் கூட பல முக்கியமான தீர்ப்புகளை உயர் நீதிமன்றம் வழங்கியது. இவற்றில் ஒரு வழக்கு முன்னர் எப்போதுமே வழக்கு விசாரணைக்கு வந்ததில்லை. இவ்வழக்கில் மனுதாரர்கள் ஓர் அடிப்படை உரிமைகள் மனு மூலமாக தற்போதைய பிரதம நீதியரசரின் நியமனத்தின் தகுதியுடைமை குறித்துக் கேள்வி எழுப்பியிருந்தனர். பொதுவாக இந்த அத்தியாயம் உயர் நீதிமன்றம் அனுமதிக்காத மனுக்கள் குறித்து கவனம்

---

* வருகைதரு புலமையாளர், சட்ட கற்கைகளுக்கான நிறுவகம், விஸ்கொன்சின் பல்கலைக்கழகம்-மெடிசன், சட்டக் கல்லூரி, ஐக்கிய அமெரிக்கா; நிபுணத்துவ ஆலோசகர், சட்டம் மற்றும் சமூகத்துக்கான நிதியம், கொழும்பு, மற்றும் முன்னைய சிரேஷ்ட விரிவுரையாளர், சட்ட பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்.

1 இனிமேல் "நீதிமன்றம்"

2 1978 ஆம் ஆண்டு யாப்பின் 126 (1) உறுப்புரையின் கீழ் யாப்பினால் பாதுகாக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் அல்லது மொழியுரிமைகளுக்கு மீறல்கள் அல்லது மீறப்படக்கூடிய வாய்ப்புக்கள் தொடர்பான பிரச்சினைகளை விசாரிக்கவும் தீர்மானிக்கவும் உயர் நீதிமன்றம் முற்றுமுழுதான நியாயாதிக்கத்தைக் (Sole and exclusive jurisdiction) கொண்டிருந்தது.

செலுத்தாவிட்டாலும் கூட இந்த மூன்று மனுக்களின் முக்கியத்துவம் காரணமாக நீதிமன்றத்தின் கருத்து குறித்து ஆய்வு செய்யப்படும்.

இவ்வருடத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களில் அதிர்ச்சி அளிக்கக் கூடிய அம்சம் என்னவெனில் 11ஆம் உறுப்புரையின் கீழான மனுக்களின் (petitions) வேகமான அதிகரிப்பாகும். இவ்வுறுப்புரை சித்திரவதை மற்றும் மனிதாபிமானமற்ற கீழ்தரமான நடத்துகை மற்றும் தண்டனை பற்றியதாகும். இக்கருத்தினை உறுதிப்படுத்துவதற்கு புள்ளி விபரங்கள் இல்லையெனினும் இவ்வாண்டு தீர்ப்புக் கூறப்பட்ட 22 மனுக்களில் எட்டு வழக்குகள் 11ஆம் உறுப்புரையின் கீழானவைகள் ஆகும். இவற்றில் 75 சத வீதமான வழக்குகளில் பாதகமான தீர்ப்பே வழங்கப்பட்டது. முன்னை அத்தியாயங்களில் குறிப்பிட்டதைப் போன்று பயங்கரவாத தடைச் சட்டம் அல்லது அவசரகால விதிகளின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின் மீதான சித்திரவதை ஒரு பொதுவான நடைமுறையாகும். அவசரகாலச் சட்டமும் (Prevention of Terrorism Act – PTA) அதன் கீழான அவசரகால விதிகளும் (Emergency Regulations – ERs) ஆனி மாதத்தில் இரத்து செய்யப்பட்டதால் அவசரகால விதியின் கீழ் யாரையும் கைது செய்ய முடியாது. குற்றவியல் நீதி முறைமையின் கீழும் கூட சித்திரவதை என்பது ஓர் அம்சமேயாகும். இதனை கீழே ஆய்வு செய்யப்படும் வழக்குகள் வெளிப்படுத்தும். பொலிஸாரினால் சித்திரவதைக்கு உள்ளானோர் பற்றிய மனுக்களின் அதிகரிப்பானது எமது கவனத்தை ஈர்க்க வேண்டிய ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. இந்த அத்தியாயத்தில் குறிப்பிட்ட வருடத்தில் அடிப்படை உரிமைகள் தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளன. மேலே குறிப்பிட்டதைப் போன்று தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைப் பற்றி மாத்திரம் ஆய்வு செய்வதிலிருந்து விலகிச் செல்கின்றோம். இதில் ஆரம்ப ஆட்சேபனைகள் மற்றும் உயர் நீதியரசரின் நியமனத்தின் தகுதியுடைமை பற்றிய கேள்வி மற்றும் வழக்கை விசாரிக்க உத்தரவு போன்றவை ஆய்வு செய்யப்படும். ஏனெனில் இதில் சட்டம் தொடர்பான பல முக்கிய கேள்விகள் எழுகின்றன.

2. உறுப்புரைகள் 11,[3] 13(1),[4] 13 (2)[5] இன் கீழான வழக்குகள்

மேற்படி மூன்று உறுப்புரைகளின் மீதான வழக்குகள் ஒரு வசதிக்காக ஒன்றாக எடுக்கப்படுகின்றன. எனினும் இந்தத் தலைப்பின் கீழுள்ள சகல

---

[3] இந்த உறுப்புரையானது சித்திரவதை, தரக்குறைவான மனிதாபிமானமற்ற நடத்தை அல்லது தண்டனையினின்று சுதந்திரமாக இருக்கும் உரிமை தொடர்பானது.

[4] இந்த உறுப்புரையானது ஒரு தலைப்பட்சமான கைது மற்றும் தடுத்து வைப்பிலிருந்து சுதந்திரமாக இருக்கும் உரிமை தொடர்பானது.

[5] இந்த உறுப்புரையானது தடுத்துவைக்கப்பட்ட நபர் சட்டப்படி ஒரு நீதிபதிக்கு முன்னால் கொண்டு வரப்படுவதற்கும் கைதுக்கான காரணங்களை அறிவதற்கும் உள்ள உரிமை தொடர்பானது.

வழக்குகளும் மேற்படி மூன்று உறுப்புரைகளுடன் சம்பந்தப்படவில்லை. அறிமுகத்தில் குறிப்பிட்டது போன்று 11ஆம் உறுப்புரையின் கீழான வழக்குகள் கடந்த வருடங்களை விட மிகவும் வேகமாக அதிகரித்திருப்பது நாம் கருத்தில் கொள்ள வேண்டிய ஒரு விடயம். பல சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைகள் பயங்கரமானவை. இவற்றால் மனுதாரர்கள் மோசமான துன்பத்தை அனுபவித்துள்ளனர். இதில் இன்னும் முக்கியமானது என்னவெனில் குற்றப் புலனாய்வு முறைமையில் இச்சித்திரவதை முறைகள் ''ஒரு வழமையான பகுதி'' யாகக் கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வுறுப்புரைகளின் கீழான பல மனுக்கள் பொலிசார் செய்த சித்திரவதை தொடர்பானவை. *என்.கே.எல். விதானகே* எதிர் *உதயா செனிவிரத்ன* வழக்கில் *பொலிஸ் இன்ஸ்பெக்டர் மீலிய கொடவும் வேறு இருவரும்*[6] ஒரு கைத்தொழில் நிறுவனத்தின் உதவி முகாமையாளரான மனுதாரரை மிகவும் மோசமான தூஷணை வார்த்தைகளால் திட்டியதாகவும், அவரை ஒரு கதவுடன் பிணைத்து நள்ளிரவு வரை பொலிஸ் நிலையத்தில் ஒரு பெஞ்சில் அமர்த்தி வைத்ததாகவும் அத்துடன் முதலாவது எதிரி அவரது கன்னத்தில் சில தடவைகள் அறைந்ததாகவும் கூறப்பட்டது. அத்துடன் கைது செய்யப்பட்டு மூன்று நாட்களின் பின்னரே ஒரு நீதவான் முன்னிலையில் அவர் நிறுத்தப்பட்டார். நீதிபதி எதுசூரியா தனது கடுமையான தீர்ப்பில் பொலிசாரின் மரியாதையற்ற, கீழ்தரமான புலனாய்வு முறைகள் பற்றி சீற்றத்துடன் குறிப்பிட்டார்.

> பொலிஸ் புலனாய்வுகள் அறிவைப் பாவித்து நடத்தப்பட வேண்டுமே தவிர கைமுஷ்டிகளைப் பாவித்து அல்ல என்பதை முதலாவது பிரதிவாதி புரிந்து கொள்ள வேண்டும். பொலிஸ் புலனாய்வுகள் மூளையைப் பாவித்து நடத்த வேண்டுமே தவிர உடம்பைப் பாவித்து அல்ல என்பதை பலமுறை சொல்லியாகி விட்டது.

பொலிஸ் பதிவுகளிலுள்ள தனது குறிப்பில் மாற்றங்களைச் செய்தமைக்காகவும் நீதிமன்றத்தை தவறாக வழிநடத்துவதற்காக பொய்யான சத்தியக் கடதாசிகளைச் (false affidavits) சமர்ப்பித்தமைக்காகவும் முதலாவது பிரதிவாதியை நீதிமன்றம் மேலும் கண்டித்தது. மனுதாரருக்கு நட்டஈடாகவும், செலவுத் தொகையாகவும், தமது சொந்தப் பணத்திலிருந்து 20,000 ரூபாவைச் செலுத்துமாறு முதலாவது பிரதிவாதிக்குக் கட்டளையிட்ட நீதிபதி எதுசூரிய பின்வருமாறு குறிப்பிட்டார். "சட்டத்தை மதிக்காது தவறு செய்கின்ற இத்தகைய பொலிஸ் அதிகாரிகளின் கருணை மீது இந்நாட்டு மக்கள் தங்கியுள்ளனரே என்பது கவலைக்குரிய விடயம் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்."

---

6 உயர் நீதிமன்ற விண்ணப்பம் இல. 148/99, உ.நீ. குறிப்புக்கள் 26-09-2001.

என். சிவகுமார எதிர் பொறுப்பதிகாரி விசேட அதிரடிப்படை முகாம், செட்டி பாளையம் மற்றும் ஏனைய ஐந்து பேர்[7] என்னும் வழக்கு கூட விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சித்திரவதை தொடர்பானது. இந்த வழக்கில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த மனுதாரர் பல விடயங்களுக்கு மத்தியில் தன்மீது சித்திரவதை மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிட்டார். மரத்தடியினால் அடித்தல், மார்பிலும் அடிவயிற்றிலும் உதைத்தல், பெற்றோலையும், மிளகாய்த்தூளையும் கொண்ட பிளாஸ்டிக் பையை தலைமீது வைத்தல்; மூச்சுத் திணறும் வரை தண்ணீருக்குள் அமுத்தி வைத்தல்; சாக்கடைத் தொட்டியில் மூழ்கச் செய்தல், சிகரெட் நுனியினால் சுடுதல், மர்ம உறுப்பையும் விதைகளையும் இழுத்துக் கசக்குதல் போன்றன மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைகளில் சிலவாகும். மருத்துவ சான்றுகள் இக்காயங்களை சான்றுபடுத்தின. 11ஆம் உறுப்புரையின் கீழ் மனுதாரரின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதனால் அரசாங்கம் நட்டஈடாகவும், செலவுத் தொகையாகவும் 30,000 ரூபாவை வழங்க வேண்டுமென நீதிபதி பண்டாரநாயக்க கட்டளையிட்டதோடு சித்திரவதை தொடர்பான குற்றவாளிகளாக இனங்காணப்பட்டோர் மீது விசாரணை செய்து தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக தமது தீர்ப்பின் பிரதிகளை பொலிஸ் மாஅதிபருக்கும், சட்டமா அதிபருக்கும் அனுப்பி வைக்குமாறு பணித்தார். அத்துடன் *அமல் சுதத் சில்வா* எதிர *கொடிதுவக்கு, பொலிஸ் மாஅதிபர் மற்றும் ஏனையோர* வழக்கில் நீதிபதி அத்துக்கோறளை விதித்த தீர்ப்பினை அனுமதியுடன் மேற்கோள் காட்டினார்.[8]

மனுதாரர் ஒரு மோசமான சட்ட விரோதியாக இருக்கலாம். அவரைப் போன்றவர்கள் அனுதாபத்துக்கு அருகதை இல்லாதவர்களாக இருக்கலாம். ஆனால் எமது சனநாயக அமைப்பில் யாப்பு உத்தரவாதங்களுக்கு ஏதேனும் அர்த்தமோ அல்லது மதிப்போ இருக்குமெனில் எமது யாப்பில் விதிக்கப்பட்ட பாதுகாப்பினை அவருக்கு மறுக்காமல் இருப்பது முக்கியமானதாகும்.

இவ்வழக்கானது பயங்கரமான சித்திரவதைகளுடன் தொடர்பு பட்டதென்பதும் இதற்கு இன்னும் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதையும் நாம் விளங்கிக் கொள்ள முடியும்.[9] மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களும் அத்துடன் அவருக்கு ஏற்பட்ட உளவியல் ரீதியான

---

7 உயர் நீதிமன்ற விண்ணப்பம் இல. 363/2000, உ.நீ. குறிப்புக்கள் 01-10-2001.

8 (1987) 2 Sri LR, பக். 127

9 *யு. டபிள்யூ நீல் அஜந்த, யு. டபிள்யூ.ஏ. குசும்சிறி, யு.டபிள்யூ.எ. சமந்தபிரிய எதிர் பொலிஸ் அத்தியட்சகர் கோரலாகே, பொலிஸ் நிலையம், வத்தளை மற்றும் ஏனைய ஐந்து பேர்.* (உ. நீ. விண்ணப்ப இல: 996/97, 967/97, 968/97, உ. நீ. குறிப்புக்கள் 01-10-2001). இவ்வழக்கில் உறுப்புரைகள் 11, 13 (2) ஆகியவற்றை மீறியமைக்காக மனுதாரர் ஒவ்வொருவருக்கும் ரூபா 5000 வழங்கப்பட்டது.

தாக்கங்களும் அவரை அவரது வாழ்நாள் முழுக்கப் பாதிக்கக் கூடியவை. இந்நிலையில் 30,000 ரூபா நட்டஈடு விகிதாசாரக் கொள்கைக்கு[10] முற்றிலும் எதிரானது. இக்கொள்கையின்படி ஏற்பட்ட காயங்களுக்கும் வழங்கப்பட்ட நட்டஈட்டுக்கும் இடையில் ஒரு நியாயமான விகிதாசாரம் பேணப்பட வேண்டும்.[11]

இவ் வழக்குக்கு வித்தியாசமாக *பீ.கே. லியானாராச்சி* எதிர் *பொறுப்பதிகாரி, தடுப்புக்காவல் சிறைச்சாலை, எம்பிலிப்பிட்டிய மற்றும் ஏனைய ஆறு பேர்*[12] வழக்கில் மனுதாரருக்கு 100,000 ரூபா நட்டஈடாக வழங்கப்பட்டது. மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள் மிகவும் மோசமான தாக்குதலால் ஏற்பட்டது என நட்டஈட்டுத் தொகைக்கு நியாயம் கற்பிக்கப்பட்டது. சித்திரவதை வழக்குகளில் நட்டஈடாக வழங்கப்படுகின்ற சின்னஞ்சிறு தொகைகளோடு ஒப்பிடும் போது இத்தொகை முன்னர் எப்போதும் வழங்கப்படவில்லை. ஆயினும் பன்னிரெண்டாம் உறுப்புரையின் கீழ் வழங்கப்படுகின்ற நட்டஈட்டுடன் ஒப்பிடுகையில் குற்றத்தின் இயல்பு பாரதூரமானது.[13]

இன்னும் ஒரு வழக்கிலும் உறுப்புரைகள் 11,13(1), 13(2) ஆகியவற்றின் கீழ் உறுதி செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறியமைக்காக 100,000 ரூபாவை வழங்குமாறு கட்டளையிடப்பட்டது. *எம். எச். சித்தி மர்லியா* எதிர் *ஆர். மல்லவ குமார, சிறு குற்றப் பிரிவுப் பொறுப்பதிகாரி, பொலிஸ் நிலையம், நிட்டம்புவ மற்றும் ஏனைய ஏழு பேர*[14] வழக்கில் கைது செய்யப்பட்ட போது மனுதாரர் மீது அதிக அளவு பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டதாகவும் அவமரியாதையுடன் நடத்தப்பட்டதாகவும் பின்னர் மோசமாகத் தாக்கப்பட்டதாகவும் தேவையற்ற முறையில் இரவில் தடுத்து

---

10 விகிதாசாரத் தத்துவம் என்பது சட்டத்தில் குறிப்பாக சர்வதேச சட்டத்தில் ஒரு பொதுக் கோட்பாடாகும். இதன்படி ஒரு செயலுக்கும் அதற்கான பொறுப்புக்குமிடையில் ஒரு நியாயமான விகிதாசாரம் இருக்க வேண்டும். உதாரணமாக சர்வதேச சட்டத்தின் கீழ் சுயபாதுகாப்பு நிலைமையானது விகிதாசாரத் தத்துவத்துக்கு அமைவானது. *டீ.எ. நெத்தசிங்க* எதிர் *ரட்ணசிறி விக்கிரமநாயக, பொதுநிருவாக உள்விவகார பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் ஏனைய நான்குபேர* வழக்கில் நீதிமன்றம் இதனை அங்கீகரித்தது. (உ.நீ. விண்ணப்ப இல: 770/99, உ.நீ. குறிப்புக்கள் 13-07-2001). இவ்வழக்கில் நீதிமன்றமானது "ஒரு தண்டனையானது குற்றத்துடன் பூரணமாக விகிதாசாரமில்லாத நிலையிலிருந்தால் அது நியாயமற்றதாகும். அது உறுப்புரை 12 (1) இன் கீழ் கொண்டு வரப்பட வேண்டும்" எனக் குறிப்பிடப்பட்டது.

11 இவ்விடயத்தை நிவாரணம் எனும் தலைப்பின் கீழ் பார்க்கவும்.

12 உ. நி. விண்ணப்பம் இல: 971/99, உ. நீ. குறிப்புக்கள் 19-01-2001.

13 பார்க்க, தீபிகா உடகம, "அடிப்படை உரிமைகள் நீதிமுறை" எலிசபெத் நிசன் (பதிப்பாசிரியர்), *இலங்கை: மனித உரிமைகளின் நிலை, 2001* (சட்டம் மற்றும் சமூகத்துக்கான நம்பிக்கை நிதியம், கொழும்பு 2001) பக். 147.

14 உ. நீ. (விசேட விண்ணப்பம் இல: 293/99, உ. நீ. குறிப்புக்கள் 21-09-2001.

வைக்கப்பட்டதாகவும், அத்துடன் உறுப்புரை 13(1), (2) ஆகியவற்றின் கீழான அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டதாகவும் நீதிபதி பெர்னாண்டோ ஏற்றுக் கொண்டார்.

புஷ்பா பிரியந்த டயஸ் எதிர் ஏக்கநாயக்க, பொலிஸ் நிலையம், பொல்பிதிகம மற்றும் ஏனைய மூன்று பேர்[15] வழக்கு ஒரு பாடசாலை ஆசிரியர் மீதான சித்திரவதை பற்றியது. இவர் மட்டக்களப்பில் பிறந்த காரணத்தினால் ஒரு ''புலி''யாக இருக்க வேண்டும் எனக் கருதி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டார். மருத்துவ சான்றுகளின்படி இவரது உடலில் 23 காயங்கள் காணப்பட்டதால் உறுப்புரைகள் 13, 13(1) ஆகியவை மீறப்பட்டுள்ளன என்பதை நீதிமன்றம் உடனடியாக ஏற்றுக் கொண்டது. மனுதாரரின் கூற்றின்படி பிரதிவாதிகள் அவரை தமது தொழிலை தொடரவிடாமல் செய்வதாக அச்சுறுத்தியதுடன் அவர் கஞ்சா வைத்திருந்ததாகக் குறிப்பிட்டு சிறைக்கு அனுப்பப்போவதாகவும் கூறினர். தான் நிரபராதி என்று கூறிய போதெல்லாம் முதலாவது பிரதிவாதி ''இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பொலிஸ் அதிகாரிகளின் ஆற்றலைக் காட்டப் போவதாக'' கூறினார். தாம் பாதுகாக்க வேண்டிய சட்டத்தை சிறிதும் மதிக்காமல் செயற்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் நடத்தை கருத்தில் கொள்ள வேண்டியதாகும்.

3. உறுப்புரை 12இன் கீழான வழக்குகள்

முன்னைய அத்தியாயங்களில் குறிப்பிட்ட உறுப்புரை 12(1) இன் கீழான அடிப்படை உரிமைகள் மனுக்களின் மிகையான அதிகரிப்பை இவ்வருடத்தில் அவதானிக்க முடியவில்லை. அத்தகைய மனுக்களின் பெரும்பாலானவை வழக்கைக் கொண்டு செல்ல அனுமதிக்கும் கட்டத்திலேயே நீக்கப்பட்டதைப் போல தெரிகிறது. சட்டத்தின் கீழ் சமத்துவம் மற்றும் சம பாதுகாப்பு மீதான உறுப்புரை 12 தொடர்பான முக்கிய தீர்ப்புகள் பல கூறப்பட்டுள்ளன. எனினும் மனுக்களில் எதுவும் உறுப்புரை 12(2), அதாவது இனம், பால், அரசியல் அபிப்பிராயம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்ட பாரபட்சம் மீதான மீறலை கொண்டிருக்கவில்லை. சில நீதிபதிகள் தமது தீர்ப்புக்கு ஆதரவாக சர்வதேசக் கட்டுறுத்துக்களை மேற்கோள் காட்டியமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

---

15 உ. நீ. விண்ணப்பம் இல: 860/99, உ. நீ. குறிப்புக்கள் 27-03-2001.

ஏ.எச். விக்கிரமதுங்க மற்றும் மூவர எதிர எச்.ஆர்.டி. சில்வா பிரதான மதிப்பீட்டாளர், மதிப்பீட்டு திணைக்களம் மற்றும் ஏனைய 14 பேர்[16] வழக்கில் நீதிபதி பெர்ணான்டோ பதவி உயர்வு தொடர்பான விடயத்தை தீர்க்க வேண்டியிருந்தது. இவ்வழக்கில் மனுதாரர்கள் 12ஆம், 13ஆம் பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட் பதவியுயர்வு நியாயமற்றதும் ஒரு தலைப்பட்சமானது எனவும் அதன் காரணமாக உறுப்புரை 12(1) இன் கீழ் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன எனவும் முறையிட்டிருந்தனர். மனுதாரர்களுக்கு ஆதரவாக பதவியுயர்வுகளை ரத்துச் செய்ய நீதிபதி பெர்ணாண்டோ சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தைப் பின்வருமாறு மேற்கோள் காட்டினார்.

> *"பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் மீதான சர்வதேசக் கட்டுறுத்தின் 7ஆம் உறுப்புரை வேறு எவ்வித காரணங்களும் அல்லாமல் ''சேவை மூப்பு, தேர்ச்சி ஆகியவற்றை மாத்திரம் கருத்தில் கொண்டு ஒவ்வொருவருக்கும் தமது தொழிலில் பொருத்தமான உயர் மட்டத்திற்கு பதவியுயர்வு பெற சமவாய்ப்பு உரிமையை உறுதிப்படுத்தியது."*

மரியோ கோமஸ் எதிர் *கொழும்புப் பல்கலைக்கழகம் மற்றும் ஏனைய இரண்டு பேர்*[17] வழக்கில் பிரதிவாதியான பல்கலைக்கழகத்தின் மொழிக் கொள்கைக்கு எதிராக கேள்வி எழுப்பப்பட்டது. சகல தகுதிகாண் விரிவுரையாளர்களும் ஏதேனும் ஒரு தேசிய மொழியில் தேர்ச்சிக் காண் சோதனையில் சித்தியடைய வேண்டும் எனப் பல்கலைக்கழகம் கோரியதும் மனுதாரர் இப்பரீட்சையில் சித்தியடையத் தவறியதால் சட்ட பீடத்தின் விரிவுரையாளர் பதவியிலிருந்து அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். மனுதாரர் தான் மொழித் தேர்ச்சி காண் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்பதை அவர் தகுதி காண் விரிவுரையாளராக பதவி ஏற்ற 1990ஆம் ஆண்டிலேயே அறிந்திருந்த காரணத்தினால், தனது நியமனக் கடிதத்தின் ஒரு ஏற்பாட்டுக்கு எதிராக தான் பதவி நீக்கம் செய்யப்பட்ட பின்னர் நீதிமன்றம் வர முடியாது என தீர்மானித்தது. எனவே சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டமை அடிப்படை உரிமைகளை மீறியமையாகும் என்னும் இம்மனு காலம் தொடர்பானது. ஏனெனில் மொழித் தேர்ச்சிகாண் பரீட்சை தொடர்பான நியமனக் கடிதத்தின் 8ஆம் பிரிவு இந்த வழக்கு விடயத்தில் நீதிமன்றம்

---

16 உ. நீ. விண்ணப்பம் இல: 551/98 (FR), உ. நீ. குறிப்புக்கள் 31-08-2001.

17 உ. நீ. விண்ணப்பம் இல: 833/99, உ. நீ. குறிப்புக்கள் 25-05-2001.

தன் தவறால் தடைப்படும் தத்துவத்தினைப் (Principle of Estoppel) பிரயோகித்ததைப் போல தோன்றுகிறது. அதாவது ஒருவர் ஒரு குறிப்பிட்ட விடயம் தொர்பாக நியாயமான காலத்துக்குள் தனது எதிர்ப்பைக் காட்டாவிட்டால் பின்னர் அதிலிருந்து, அதைப் பற்றி முறையிடுவதிலிருந்து அவர் தடை செய்யப்படுகின்றார்.

சிறிமல் குணரத்ன மற்றும் மக்கள் வங்கியும் ஏனையோர் 11 பேரும்[18] வழக்கில் முதலாவது பிரதிவாதியான வங்கி தன்னைப்போல குற்றப்பத்திரிகை வழங்கப்பட்ட இன்னொரு அதிகாரியை தற்காலிக பதவி நீக்கம் செய்யாமல் தன்னை மாத்திரம் சம்பளமற்ற தற்காலிக பதவி நீக்கம் செய்தமையானது உறுப்புரை 12(1), 14 ஆகியவற்றின் கீழ் அடிப்படை உரிமைகளை மீறிய செயலாகும் என மனுதாரர் குறிப்பிட்டார். இவ்வழக்கை விசாரிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது. மனுதாரர் தானும் மற்றைய அதிகாரியும் ஒரே விதமான சூழ்நிலையை எதிர் கொண்ட தருணத்தில், தான் மாத்திரம் சமத்துவம் அற்ற முறையில் நடத்தப்பட்டதாக முறையீடு செய்தார் சமத்துவமற்ற பாதுகாப்புக்கான சான்றுகளை நீதிமன்றம் அறிய முடியவில்லை. நீதிபதி பண்டாரநாயக்க தனது தீர்ப்பில் ஜெயின் கக்சியை (Jain Kagzi) பின்வருமாறு மேற்கோள் காட்டினார்:

> *சமமானவர்கள் சமத்துவமற்ற முறையில் நடத்தப்படக்கூடாது; அதே நேரத்தில் பதவியுயர்வு, ஓய்வு பெறுதல் ஆகிய விடயங்களில் சமத்துவமற்றவர்கள் சமமாக நடத்தப்படவும் கூடாது. ஒரே நிலையிலுள்ள இரண்டு நபர்கள் ஒரே விதமாக நடத்தப்பட வேண்டும் என சமவாய்ப்பு கோருகிறது. சமமற்றவர்களை நியமனம், பதவியுயர்வு, பணிக்கொடை மற்றும் ஓய்வூதியங்கள் வழங்கல் ஆகியவை தொடர்பாக ஒரே விதிகளுக்குட்படுத்துவது அடிப்படையில் பாரபட்சமாக இருக்கக் கூடாது. சமவாய்ப்பு என்பது சமத்துவமானவர்களுக்கே, அதாவது வாழ்க்கையில் ஒரே நிலைமையை கொண்டவர்களுக்கேயாகும்.*[19]

அரசியல் யாப்பின் உறுப்புரை 12(1) சட்டத்தின் முன் சமத்துவ பாதுகாப்பினை உறுதிசெய்த போதும் ஒவ்வொரு வித்தியாசமான நடத்துதலும் ஒரு மீறல் எனக் கொள்ள முடியாது என்று நீதிபதி பண்டாரநாயக்க அழுத்தியுரைத்தார். "நியாயமான அடிப்படையில் வகைப்படுத்தல் அல்லது வித்தியாசப்படுத்தல்

---

18 உ. நி. விண்ணப்பம் இல: 514/99, உ. நி. குறிப்புக்கள் 25-07-2001.

19 இந்திய அரசியலமைப்பு, 5 ஆவது பதிப்பு, பக். 238.

என்பது சட்டரீதியானதும் தகுதியுடைமையானதுமாகும்" இவ்விடயத்தில் நீதிபதி *அர்கன்சாஸ் வாயு கம்பனி எதிர் புகையிரத வீதி ஆணைக்குழு* வழக்கிலிருந்து[20] நீதிபதி பின்வருமாறு மேற்கோள் காட்டினார்:

> *அசமத்துவம் அடிப்படையில் சமத்துவப் பாதுகாப்பை மீறுகிறது என கூறுவதற்கில்லை. விதிகளை அமுல்படுத்துவதற்கு நபர்களைத் தெரிவு செய்யும் போது ஓர் அளவு சமத்துவமின்மையும் காணப்படுகின்றது. சமத்துவக் கோட்பாட்டை மீறுகின்ற சமத்துவமின்மையானது உண்மையிலேயே நியாயமற்றதும் ஒருதலைபட்சமானதுமாகும.*

இவ்வாறாக நியாயமான வகைப்படுத்தல் கோட்பாடு உறுப்புரை 12(1) இன் கீழான சமத்துவத்தை மீறவில்லையென நீதிமன்றம் உறுதிப்படுத்தியது.

சந்ததன்ன கார்மன்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட எதிர் *டெக்ஸ்டைல் கோட்டா சபை மற்றும் ஏனைய நான்கு பேர்*[21] வழக்கு, உறுப்புரை 12(1), 14(1) (எ) ஆகியவற்றை மீறல் தொடர்பானது. மனுதாரருக்குரிய 1999ஆம் ஆண்டுக்குரிய ஏற்றுமதிக் கோட்டாவை மோசமாகக் குறைத்ததன் மூலமாக மனுதாரரை தனது தொழிலிருந்து விரட்டியடித்ததன் மூலம் 1 ஆவது பிரதிவாதி ஒரு தொழில் அல்லது வர்த்தகத்தில் ஈடுபடும் சுதந்திரத்தை (உறுப்புரை 14(1) (எ)) மீறினார் என முறையிடப்பட்டது.

நீதிபதி பெர்ணான்டோ பல அம்சங்களின் அடிப்படையில் இந்தப் பிரச்சினையை அணுகினார். முதலாவதாக, மனுதாரர் அவரைப் பாதிக்கின்ற ஒரு தீர்மானம் தொடர்பாகத் தனது கருத்தைக் கூறுவதற்கு அவருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லையென்பதால் இயற்கை நீதித் தத்துவங்கள் மீறப்பட்டுள்ளது என்பதை நீதிபதி ஏற்றுக் கொண்டார். இரண்டாவதாக, மனுதாரரின் வழக்கின் சூழ்நிலைகளைக் கவனத்திற் கொள்ளத் தவறியதால் முதலாவது பிரதிவாதி தனது தற்றுணிபைச் சரியான முறையில் கையாளவில்லை. மூன்றாவதாக, சில சந்தர்ப்பங்களில் கோட்டாவைக் குறைக்க வேண்டியது அவசியம் என எடுத்துக் கொண்டாலும் மனுதாரர் மீது விதிக்கப்பட்ட கோட்டா குறைப்பு புடவைக் கோட்டா சபையினது (Textile Quota Board) திட்டம் மற்றும் சூத்திரத்தின் அடிப்படையிலேயே மிகமிக அதிகமானது. நான்காவதாக, மனுதாரர் மீது விதிக்கப்பட்ட கோட்டா குறைப்பு வெளிப்படையாகவே பாரபட்சமானது. இறுதியாக, ஏற்றுமதியாளர்களுக்கு இடையில் கோட்டா பரிமாற்றத்தை தண்டிப்பது குறிப்பாக கோட்டா சபையின்

---

20 261 US 379 at 384.

21 உ. நீ. (FR) விண்ணப்பம் இல: 869/99, உ. நீ. குறிப்புக்கள் 11-12-2001.

நடைமுறைகளின் அடிப்படையில் நியாயமற்றது. உறுப்புரை 12(1) இன் கீழ் மனுதாரரின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட்ட நீதிபதி பெர்ணாண்டோ அத்தகைய மீறலின் மூலம் மனுதாரர் தனது வியாபாரத்தைத் தொடர முடியாத அளவுக்கு அதீதமாக இருந்ததால் அது மனுதாரருக்கு கடுமையான மன உளைச்சலை ஏற்படுத்தியது எனக் கூறினார். மனுதாரருக்கு 5,000,000 ரூபா நட்டஈடாக வழங்கப்பட்டது. இலங்கையில் அடிப்படை உரிமை மீறல் வழக்குகளில் வழங்கப்பட்ட ஆகக்கூடிய நட்டஈட்டுத் தொகையாக இது அமைகிறது. முதலாவது பிரதிவாதி அவ்வாறு செயற்படாமலிருந்தால் மனுதாரர் பெற்றிருக்கக் கூடிய சராசரி இலாபத்தை அடிப்படையாகக் கொண்டே இந்தத் தொகை தீர்மானிக்கப்பட்டது.

உறுப்புரை 14(1) (எ) மீறப்பட்டிருப்பதாகக் கூறப்படும் விடயம் தொடர்பாக நீதிபதி பெர்ணான்டோவின் கருத்தின்படி, ஏனையோர் தவிர பிரசைகள் மாத்திரமே அனுபவிக்கும் அடிப்படை உரிமையே அது எனக் குறிப்பிட்டார்.

> *பிரசைகளுக்கு ஏனையோருடன் சேர்ந்து (in association with others) சட்டபூர்வமான வியாபார முயற்சிகளில் ஈடுபட உரிமை உண்டு. அவ்வாறு ''சேருதல்'' (association) பின்வருமாறு அமையலாம். வரையறுக்கப்பட்ட பொறுப்பாண்மை கம்பனி, பங்குடைமைச் சங்கம் முதலியன. இதன்படி மனுதாரருடைய பங்காளிகள் யாரேனும் பிரசைகளாக இருப்பின் அவர்கள் இந்தத் தடையானது உறுப்புரை 14(1)(எ) இன் கீழான தமது அடிப்படை உரிமையை மீறியுள்ளதாக முறையிட முடியும். எனினும் மனுதாரர் கம்பனி முறையிட உரிமை கொண்டுள்ளது என நான் நினைக்கவில்லை. ஏனெனில் கம்பனியின் பங்காளிகள் அனைவரும் அல்லது அவர்களில் பெரும்பான்மையினரேனும் பிரசைகள் என்பதற்கான உறுதிப்பாடு இல்லை.* (அழுத்தம் மூலத்திலுள்ளது.)

டி.ஏ. நெத்தசிங்க எதிர் ரத்னசிரி விக்ரமநாயக்கா, பொது நிர்வாக, உள்நாட்டு விவகார மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சர் மற்றும் ஏனைய நான்கு பேர்[22] வழக்கு பல முக்கிய விடயங்கள் தொடர்பானதாகும். நியதிச்சபையின் அங்கத்தவரை நீக்குவதற்கு அமைச்சருக்கு அதிகாரம் உள்ளதா? தனது செயலுக்கு ஒரு சட்டபூர்வமான காரணம் உள்ளதா? அவரது செயலை மீளாய்வு செய்ய முடியுமா? அவர் audi alteram partem விதிக்கு இணங்க வேண்டுமா?

---

22 உ. நீ. விண்ணப்பம் இல: 770/99, உ. நீ. குறிப்புக்கள் 13-07-2001.

சர்வதேச புகழ்பெற்ற விஞ்ஞானியான மனுதாரர் தமமை உதவிப் பணிப்பாளர் பதவியிலிருந்தும், இரண்டாம் பிரதிவாதியான தெங்குச் சபையின் உறுப்பினர் பதவியிலிருந்தும் எந்த காரணமுமில்லாமல் தூக்கி எறிந்தமையானது உறுப்புரை 12(1) இன் கீழான தனது அடிப்படை உரிமையை மீறியமையாகும் என முறையிட்டார.

1971ஆம் ஆண்டின் தென்னை அபிவிருத்திச் சட்டத்தின் பொருத்தமான பகுதிகளை, குறிப்பாக எவ்வித காரணமும் காட்டாது ஓர் உறுப்பினரை நீக்கும் அமைச்சருக்குள்ள அதிகாரத்தை ஆய்வு செய்த நீதிபதி பெர்ணாண்டோ தனது முன்னைய தீர்ப்பு ஒன்றினைச் சுட்டிக் காட்டினார்.

> *உறுப்புரை 55(1) என்பதை சமத்துவ ஏற்பாடான உறுப்புரை 12 உடன் இணைத்து நோக்கும்போது அது தன்னிச்சையான செயற்பாட்டை விலக்கி நியாயத்தை உறுதிப்படுத்துகிறது. அரசியல்யாப்பு நியமனம் மற்றும் பதவி நீக்கும் அதிகாரத்தை பல்வேறு அதிகார அமைப்புகளுக்கு வழங்கியிருப்பது பொது நன்மைக்காகவே தவிர தனிப்பட்ட நலன்களுக்கல்ல; அத்தகைய அதிகாரம் நியாயங்களின் அடிப்படையில் பயன்படுத்தப்பட வேண்டுமே தவிர தனது மனப்போக்கின் அடிப்படையில் அல்ல.*[23]

நீதிபதி பெர்ணான்டோ மனுதாரரைப் பதவிநீக்கம் செய்வதற்கு காரணங்கள் தரப்பட வேண்டுமெனவும், இவ்விடயத்தில் அமைச்சர்களின் முடிவு மீளாய்வுக்கு உட்படக் கூடியதே எனவும், சட்டமானது ஒருவர் செவிமடுக்கப்பட வேண்டுமென்னும் உரிமை உறுப்புரை 12(1)இல் உள்ளார்ந்து இருக்கும் ஒரு பாதுகாப்பு என்றும் மேலும் குறிப்பிட்டார். மனுதாரர் தனது பக்க நியாயத்தை எடுத்துரைக்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டதால் அவரது பதவிநீக்கம் audi alteram partem விதியை மீறியதால் தவறானது. அத்துடன் இழைக்கப்பட்ட குற்றத்துக்கு சிறிதும் பொருந்தாத விதத்தில் தண்டனை வழங்குவது என்பது நியாயமற்றதும், வீம்புத்தனமானதும், தன்னிச்சைப் போக்கானதுமாகும் என்பதால் அது உறுப்புரை 12(1) இன் கீழ் வருகிறது. இவ்விடயத்தில் நீதிபதி பெர்ணாண்டோவின் கருத்துப்படி உதவிப் பணிப்பாளர் மற்றும் சபை உறுப்பினர் பதவியிலிருந்து, அவர் விளக்கமளிக்கக் கூட வாய்ப்பளிக்காமல் நீக்கியது ‘‘நீதியற்றது மட்டுமல்ல நியாயமற்ற முறையில் கடுமையானதுமாகும்.’’ மனுதாரரின் பதவிக்காலம் தற்போது முடிவடைந்தபடியினால் அரசு மனுதாரருக்கு 100,000 ரூபா செலவுத் தொகையையும் தர வேண்டுமென நீதிமன்றம் ஆணையிட்டது.

---

23 *பண்டார எதிர் பிரேமசந்திர* (1994) 1 Sri LR 301.

எனவே 12(1) ஆம் உறுப்புரையின் கீழான சமத்துவக் கோட்பாடு நிர்வாகியினால் எடுக்கப்படும் தண்டனையையும் உள்ளடக்கியுள்ளது. தண்டனை விகிதாசாரமாக இல்லாதுவிடின் அத்தகைய தண்டனை ஒரு தலைப்பட்சமானது எனவும், நியாயமற்றதெனவும் தீர்க்கப்படும்.

4. உறுப்புரை 14இன் கீழான வழக்குகள்

14ஆம் உறுப்புரையின் கீழ் அடிப்படை உரிமை மீறல் வழக்குகள் பொதுவாக உறுப்புரைகள் 14(1) (அ) மற்றும் (எ) தொடர்பானவை. அவை பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம் மற்றும் ஒரு தொழிலில் அல்லது வர்த்தகத்தில் ஈடுபடும் சுதந்திரமுமாகும்.

ஜே.எ. எகொடவெல மற்றும மூன்று பேர் எதிர் தாயனந்தா திசாநாயக்க, தேர்தல் ஆணையாளர் மற்றும் 15 பேர்[24] வழக்கு வாக்களிக்கும் உரிமை தொடர்பானது. கண்டி மாவட்டத்தில் வாக்காளர்களாகப் பதிவு பெற்ற மனுதார்கள் தேர்தல் தினத்தன்று பெயர் குறிப்பிடப்பட்ட 25 வாக்களிப்பு நிலையங்களில் நடைபெற்ற சட்ட விரோதமான சம்பவங்கள் ''வாக்களிப்பு நிலையத்தை நேரத்திற்கு முன்னரே மூடுதல், வாக்குச் சீட்டுகளைப் பெட்டிக்குள் திணித்தல், முகவர்களை விரட்டுதல், ஏனையோரைப் பயமுறுத்தல் பேன்றவை" 12(1), 14(1) (அ) ஆகிய உறுப்புரைகளின் கீழான தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாக முறையிட்டனர்.

இந்த வழக்கில் நீதிபதி பெர்ணாண்டோ இன்னுமொரு முக்கிய தீர்ப்பினை வழங்கினார். இதன் மூலம் கருத்துச் சுதந்திர ஏற்பாட்டில்[25] வாக்களிக்கும் உரிமை உட்படுத்தப்பட்டுள்ளது என்னும் நீதிமன்றம் வழங்கிய முன்னைய தீர்ப்பு மேலும் முன்னெடுக்கப்பட்டது. இதன் மூலம் நீதிபதி பெர்னாண்டோ இவ்விடயத்தில் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திலிருந்து மேற்கோள் காட்டினார்.

இவ்வழக்கில் தேர்தல் துஷ்பிரயோகங்கள் உண்மையில் இடம் பெற்றன என்பதை ஏற்றுக் கொண்ட நீதிபதி பெர்ணாண்டோ அந்நிகழ்வுகளின் தாக்கங்களைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டார். ''இத்தகைய நிகழ்வுகள் உண்மையான வாக்குச்சீட்டுகள் அல்லது முகவர்களுக்கப்பால் ஏனைய

---

24 உ. நீ. விண்ணப்பம் இல: 412/99, உ. நீ. குறிப்புக்கள் 03-04-2001.

25 *கருணாதிலக்க மற்றும் இன்னொருவர் எதிர் தயாநந்த திசாநாயக்க, தேர்தல் ஆணையாளர் மற்றும் ஏனையோர.* இந்த வழக்கைப் பற்றிய விபரத்திற்கு பார்க்க: Sumudu Atapattu, 'Judicial Protection of Human Rights' in Elizabeth Nissan (ed) *Sri Lanka: State of Human Rights 2000* (Law & Society Trust, Colombo, 2000), பக். 79.

வாக்காளர்களைப் பாதிக்கின்றமை பற்றி பகுப்பாய்வு செய்ய வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

தேர்தலை ரத்துச் செய்து மீண்டும் வாக்களிப்பை நடத்துவது தொடர்பாக நீதிபதி பெர்ணான்டோ பின்வரும் விடயங்களை கருத்தில் கொண்டார்

(அ) சரியான வாக்களிப்பு நடந்ததா?

1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 3ஆம் பகுதியை (திருத்தப்பட்டது) சுட்டிக் காட்டிய நீதிபதி பெர்ணாண்டோ அதிலுள்ள பல ஏற்பாடுகள் வாக்களித்தலானது சுதந்திரமாகவும், சமத்துவமாகவும், இரகசியமாகவும் நடைபெற வேண்டுமென்ற சட்டபூர்வமான நோக்கத்தைச் சுட்டிக்காட்டுகின்றன எனக் குறிப்பிட்டார். "வாக்களிப்பு" என்பதை அவர் பின்வருமாறு வரைவிலக்கணம் செய்தார்:

> *வாக்களிக்கும் செயன்முறையானது இரண்டு போட்டியாளர்களுக்கு இடையில் ஒரு நேர்மையான தெரிவை மேற்கொள்ள உதவ வேண்டும். அது முறையற்ற செல்வாக்கு அல்லது அழுத்தங்களினின்று சுதந்திரமாகவும் (free) சமமான அடிப்படையில் போட்டியிடுகின்ற கட்சிகளுக்கும் அபேட்சகர்களுக்கும் தமது தெரிவினை வெளிப்படுத்துவதற்கு சகலரும் வாக்களிப்பதில் சமத்துவமானதாகவும் (equal) வாக்களிப்பில் இரகசியம் (secrecy) பேணப்படுவதாகவும் இருத்தல் வேண்டும்.* (அழுத்தம் மூலத்திலிருந்து).

அத்துடன் வாக்களித்தல் ஆரம்பத்திலிருந்து முடியும்வரை தடையின்றி நடத்தப்படல் வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

(ஆ) வாக்களிப்பை இரத்துச்செய்தல்

ஒவ்வொரு மீறலுக்கும் வாக்களிப்பை இரத்துச் செய்ய வேண்டுமென சட்டம் கூறாவிட்டாலும் இவ்விடயத்தில் முதலாம் பிரதிவாதி தனது தற்றுணிபின்படி செயற்பட முடியும். அதாவது சுதந்திரமான, சமத்துவமான, இரகசியமான வாக்களிப்பை அத்தகைய மீறல் சம்பவங்கள் பாதித்துள்ளன எனத் தென்படும்போது அத்தகைய தற்றுணிபு பயன்படுத்தப்பட வேண்டும். முதலாம் பிரதிவாதியானவர் இவ்வாறான மீறல்கள் பரவலாக நடந்த 23 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பை இரத்துச் செய்திருக்க வேண்டுமெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

(இ) மீண்டும் வாக்களிப்பை நடத்துதல்

ஒரு வாக்களிப்பு நிலையத்தில் தேர்தல் ஆணையாளர் வாக்களிப்பை இரத்துச் செய்துவிட்டால் அத்தகைய வாக்குகளை எண்ணாத காரணத்தினால் அந்நிருவாக மாவட்டத்தில் தேர்தலின் முடிவு பாதிக்கப்படலாமென அவர் கருதுவாராயின் சட்டப்படி அவர் திரும்பவும் அங்கு வாக்களிப்பை நடத்த வேண்டும். முதலாம் பிரதிவாதியானவர் வாக்களிப்பு நிலையங்களில் நடந்த முறைகேடுகள் தேர்தல் முடிவுகளைப் பாதிக்க மாட்டாதென நியாயமான முறையில் முடிவு செய்திருக்க முடியாதென தீர்மானிக்கப்பட்டது. எனவே முதலாம் பிரதிவாதியானவர் மீண்டும் வாக்களிப்பு நடத்தக் கட்டளையிட்டிருக்க வேண்டும். நீதிபதி பெர்னாண்டோ போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகளை ஏற்படுத்தத் தவறியதனாலேயே இத்தகைய மீறல்கள் நடைபெற்றன எனக் கூறினார்: ''முதலாவது பிரதிவாதி நிருவாகத்துறையில் ஓர் அங்கமானவர். அவர் அதே நிருவாகத்துறையின் இன்னுமோர் அங்கம் குற்றம் கூறத்தக்கவகையில் செயற்படாமல் இருந்தமைக்குக் காரணமாக ஏற்பட்ட மீறல்கள் வசதிக் குறைபாடு காரணமாக தீர்க்கப்படாமல் இருக்க வேண்டும் எனக்கூற முடியாது''.

(ஈ) மனுதாரர் கோரிய உரிமையின் இயல்பு

கருனாதிலக்க எதிர் *திசாநாயக்க* வழக்கின்படி கண்டி மாவட்ட பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களான மனுதாரர்கள் தேர்தலில் வாக்களிக்க சட்டபூர்வமான உரிமையுடையவர்கள் எனவும் அத்தகைய வாக்களிப்பானது 14 (1) (அ) உறுப்புரையின் உத்தரவாதத்தின் வெளிப்பாடு எனவும் தீர்க்கப்பட்டது. யாப்பின் 4 (உ) மற்றும் 93 இன் கீழ் மாகாணசபைத் தேர்தல்கள் பற்றிக் குறிப்பாகக் கூறப்பட்டாலும் தேர்தல்கள் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் இரகசியமாகவும் நடத்தப்படவேண்டிய தேவையுள்ளது என நீதிபதி பெர்னாண்டோ சுட்டிக்காட்டினார்.

> *மக்களின் இறைமை, பிரதிநிதித்துவ சனநாயகம் மற்றும் கூட்டாட்சி ஆகியவற்றை மதிக்கின்ற எந்தவொரு நாட்டிலும் நடக்கின்ற எந்தவொரு தேர்தலிலும் இது அடிப்படையானது. எனவே சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் இரகசியமாகவும் வாக்களிக்கும் உரிமையானது ஒரு பிரசையின் கருத்துச் சுதந்திரத்தின் தவிர்க்க முடியாத பகுதியென நான் கூறுகிறேன். அந்த சுதந்திரத்தை அவர் வாக்களிப்பதன் மூலம் நிலைநாட்டும்போது அது யாப்புரீதியானதா அல்லது சட்டரீதியானதா என்பது முக்கியமானதல்ல.*

அடிப்படை உரிமைகளை பல அரச அமைப்புக்களும் மதித்து மேம்படுத்தி பாதுகாக்க வேண்டுமென உறுப்புரை 4 (ஈ) கூறுகிறது. இது தேர்தல் ஆணையாளருக்கும் பொருந்தும் எனவும் ஒவ்வொரு பதிவுசெய்யப்பட்ட வாக்காளரினதும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் தேர்தல்கள் நடத்தப்படுவதை அவர் உறுதிப்படுத்த வேண்டுமென்றும் நீதிபதி மேலும் குறிப்பிட்டார்.

வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு எவ்வித சிறு இடையூறுகளும் ஏற்படுத்தப்படாவிட்டாலும்கூட மனுதாரர்கள் முறையிட்டதைப்போல அவர்களது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டனவா என்பது குறித்து நீதிமன்றம் கவனம் செலுத்த வேண்டியிருந்தது. முறையிடப்பட்ட ஒழுங்கீனங்கள் சட்டப்படி உறுப்புரைகள் 12(1) மற்றும் 14(1) (அ) ஆகியவற்றின் கீழ் மனுதாரர்களின் அடிப்படை உரிமை தொடர்பான மீறல்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக நீதிபதி பெர்னான்டோ ஒரு பிரசையின் வாக்களிக்கும் உரிமை பற்றிய உண்மையான இயல்புகளை உறுதி செய்யவேண்டியிருந்தது.

நீதிபதி பெர்னான்டோ ICCPR இன் 25 ஆம் உறுப்புரையில் ஆரம்பித்தார். இந்த உறுப்புரையின்படி ஒவ்வொரு பிரசைக்கும் தாம் சுதந்திரமாகத் தெரிவுசெய்த பிரதிநிதிகள் ஊடாக பொது விடயங்களில் பங்கெடுக்கவும் சர்வசன வாக்குரிமையின்படி சமத்துவமாகவும், இரகசிய வாக்களிப்பு முறை மூலம் நடத்தப்படுகின்ற நேர்மையான காலக்கிரமமான தேர்தலில் வாக்களிக்கவும், அத் தேர்தல்களில் சுதந்திரமான கருத்தை வெளிப்படுத்தவும் உரிமையுண்டு.

இலங்கை ICCPR மற்றும் அதற்கு இணையான கட்டுறுத்தில் பங்காளிகள் என்பதைச் சுட்டிக்காட்டிய நீதிபதி பெர்னாண்டோ உறுப்புரை 27 (15) ஆனது சர்வதேச சட்டத்தையும் ஒப்பந்தக் கடப்பாடுகளையும் அரசு மதிக்க வேண்டும் என்பதை கோருகிறது என எமக்கு ஞாபகப்படுத்தினார்.

> *எமது மாகாணசபைத் தேர்தல்கள் ஒவ்வொரு பிரசையும் தேர்தல் தொகுதியின் சுதந்திரமான கருத்தை வெளிப்படுத்தக்கூடிய இரகசிய வாக்களிப்பு மூலம் சர்வசன வாக்குரிமையின் அடிப்படையிலும் நடத்தப்பட்ட நேர்மையான தேர்தலில் தன்னால் சுதந்திரமாகத் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலம் பொது விடயங்களில் பங்கெடுப்பதை உறுதிப்படுத்துகின்றது............... ஒரு நீதிமன்றமானது ஒரு தேர்தலை ஒழுங்கமைக்கும் ஒரு சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகளை வியாக்கியானம் செய்கின்றபோது, தெளிவான வார்த்தைகளில் சொல்லப்படாத பட்சத்தில் ஓர் அரசுக்கு இருக்கக்கூடிய சர்வதேசக் கடப்பாடுகளின் அடிப்படையில் குறிப்பாக சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தினடிப்படையில்*

விளக்கம் தர வேண்டும். அத்தகைய உத்தரவாதங்கள் உறுப்புரை 14 (1) (அ) அங்கீகரிக்கின்ற கருத்துச் சுதந்திரத்தின் முக்கியமான பகுதிகள் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். (அழுத்தம் - மூலத்திலிருந்து).

வாக்குரிமை பற்றி மேலும் ஆய்வு செய்த நீதிபதி பெர்னாண்டோ ஒரு சுதந்திரமான, சமத்துவமான இரகசிய வாக்களிப்பைக் கொண்ட தேர்தலில் வாக்களிக்கின்ற ஒரு பிரசையின் உரிமையானது முழுத் தேர்தல் தொகுதியினதும் சுதந்திரமான கருத்து வெளிப்பாட்டினை உறுதிப்படுத்துகின்ற ஓர் உண்மையான தேர்தலுக்கான உரிமையுடன் இணைகிறது. இந்த அடிப்படையில் நோக்கும்பொழுது இந்த உரிமையும் யாப்பின் 14 ஆம் உறுப்புரையில் கூறப்பட்டுள்ள பல உரிமைகளைப்போல ஒரு கூட்டு நிலைமையாகும்.

ஒரு பிரசையின் வாக்களிக்கும் உரிமையின் உண்மையான மதிப்பை தனிமையில் எடைபோட முடியாது என அவர் மேலும் குறிப்பிடுகிறார். முதலாம் பிரதிவாதி ஓர் உண்மையான, சுதந்திரமான, சமத்துவமான, இரகசியமான வாக்களிப்பை நடத்தத் தவறியமையும் அதன்பின் அந்த வாக்களிப்பை இரத்துச் செய்து புதிய வாக்களிப்பை நடத்தத் தவறியமையும் 14 (1) (அ) யின் கீழான மனுதாரரின் கருத்துச் சுதந்திரத்தையும் உறுப்புரை 12 (1) ன் கீழான சமத்துவம் மற்றும் சமத்துவப் பாதுகாப்பு உரிமையையும் மீறியுள்ளார் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மேலும் நீதிபதி பெர்னாண்டோ சமத்துவ சர்வசன வாக்களிப்பின் மூலம் உண்மையான சனநாயகரீதியான தேர்தல் நடத்தப்படுவதை உறுதி செய்வதற்கு சில பாதுகாப்பு ஏற்பாடுகளையும் குறிப்பிட்டார்:

- ஒரு முறையான காலக்கிரமமான பதிவு நடைமுறைகள்
- தேர்தலுக்கு முந்திய காலத்தில் சகல அபேட்சகர்களும் சமத்துவ அடிப்படையில், பிரசாரம் செய்வதை உறுதிப்படுத்தல். இவ்விடயத்தில் தேர்தல் சட்டங்கள் எல்லோருக்கும் பொதுவானதாக இருத்தல் வேண்டும். அரசு ஊடகம் மற்றும் ஏனைய வளங்கள், வசதிகளில் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது.
- தவறான தேர்தல் நடவடிக்கைகளைத் தடுத்தல். அத்துடன் தேர்தல் குற்றங்களை உடனடியாக விசாரணை செய்தலும் வழக்குத் தொடரலும்.

இன்னொரு விடயம் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டும். பிரதிவாதிகள் தரப்பில் தேர்தல் பிரச்சினைக்கு சரியான பரிகாரம் சட்டத்தின் 7 ஆம்

பகுதியின் கீழான தேர்தல் மனுவாகும் எனவும் இப்பிரச்சினைகள் யாப்பின் 126 ஆம் உறுப்புரையின் கீழ் தீர்க்கப்பட முடியாது எனவும் வாதாடப்பட்டது. அதாவது 126 ஆம் உறுப்புரையின்கீழ் தேர்தல் விடயங்கள் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்கு நீதி அதிகாரமில்லை என வாதிடப்பட்டது. இந்த வாதத்தை நிராகரித்த நீதிபதி பெர்னாண்டோ அடிப்படை உரிமைகள் விண்ணப்பமும் தேர்தல் மனுவும் வித்தியாசமான பண்புகளைக் கொண்டிருந்த போதும் இரண்டும் பிரச்சினைகள் பற்றியதாகும். எந்தவொரு பிரச்சினையும் தனக்கு அரசியலமைப்புரீதியாக உத்தரவாதப்படுத்தப்பட்ட உரிமைகளை ஒரு நிர்வாகி மீறியதற்குப் பரிகாரம் தேடி ஓர் அடிப்படை உரிமைகள் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க முடியும். ஆனால் ஒரு தேர்தல் மனுவை ஓர் அபேட்சகர் மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். அத்துடன் இங்கு மீறல் என்பது நிருவாகியின் தவறான நடத்தைக்கு மாத்திரம் வரையறுக்கப்படவில்லை. இத்தீர்ப்பானது *கருணாதிலக்க* எதிர் *திசாநாயக்க* வழக்கில் ஸ்தாபிக்கப்பட்ட நீதிமுறை இன்னும் பல படிகள் முன்னோக்கிக் கொண்டு சென்றது என்பதில் எவ்விதமான சந்தேகமுமில்லை. அத்துடன் வாக்களிக்கும் உரிமை மற்றும் ஒரு சுதந்திரமான, நியாயமான தேர்தலுக்கான முன்நிபந்தனைகள் ஆகியவற்றின் பல்வேறு பரிமாணங்களையும் ஆய்வு செய்தது. அத்துடன் சர்வதேச சட்டத்தின் அடிப்படையிலும் இது முக்கியமானது. வாக்களிக்கும் உரிமை தொடர்பான விடயத்தில் நீதிபதி பெர்னாண்டோ ICCPR இலேயே தங்கியிருந்தார். அத்துடன் எமது சட்டங்கள் யாவும் சர்வதேச கடப்பாடுகளுக்கு குறிப்பாக சர்வதேச உரிமைச் சாசனத்துக்கு (International Bill of Rights) இசையும் வகையிலேயே வியாக்கியானம் செய்யப்பட வேண்டுமென அவர் தெளிவாகக் குறிப்பிட்டார். இது உண்மையிலேயே சர்வதேச சட்டத்திற்குக் கிடைத்த வெற்றியாகும். அத்துடன் *எப்பாவல வழக்கில* நீதிபதி அமரசிங்க வழங்கிய தீர்ப்பையும் உறுதிப்படுத்தியது. இத்தீர்ப்பு *இலங்கை: மனித உரிமைகள் நிலை பற்றிய அறிக்கையின்*[26] *2001* ஆம் ஆண்டு பதிப்பில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

உறுப்புரை 14 (1) (அ), (எ), 12 (1) ஆகியவை மீறப்பட்டது தொடர்பான இன்னுமொரு மிக முக்கியமான தீர்ப்பு விருதுபெற்ற படமான புரஹந்த களுவர ("Death on a Full Moon Day") எனும் திரைப்படம் தொடர்பானதாகும். இந்த வழக்கில் 3-5-2000 ஆம் ஆண்டு ஏற்கப்பட்ட 2000 ஆம் ஆண்டு, 1 ஆம் இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் அதிகாரங்களும்) விதிகளைப் பற்றியும் கருத்திற் கொள்ள வேண்டியிருந்தது. இத் திரைப்படம் சிறந்த படத்திற்கான பரிசு உட்பட பல்வேறு சர்வதேச விருதுகளையும் வென்றிருந்தது. இது பொதுச் செயலாற்றல் சபைக்கு (Public

---

26 பார்க்க. *Supra* a 13.

Performance Board) (இதன் அங்கத்தவர்கள் பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்படுகின்றனர்) சமர்ப்பிக்கப்பட்டபோது அச்சபையானது இத்திரைப்படம் எவ்வித வரையறையுமின்றி பொதுமக்களுக்குக் காண்பிக்கப்படக் கூடியது என சான்றிதழ் வழங்கியது. இச்சான்றிதழ் பின்னர் எப்போதுமே இரத்துச் செய்யப்படவில்லை.

முதலாவது பிரதிவாதியான ஊடக அமைச்சர் இப்படத்தைத் திரையிடுவதானது 14 ஆவது அவசரகால விதியை மீறுவதாகும் எனவும் யுத்த நடவடிக்கைகளையும் பாதுகாப்புப் படைகளின் ஆர்வத்தையும் வெகுவாகப் பாதிக்கும் எனவும் இராணுவத்துக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கையைப் பாதிக்கும் எனவும் உறுதிப்படுத்தினார். எனவே அவர் மூன்றாவது பிரதிவாதியான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு பாதுகாப்பு நிலைமைகள் விருத்தியடையும்வரை இப்படத்தை திரையிடுவதைத் தடுத்து வைக்குமாறும் கட்டளையிட்டார். இச்சந்தர்ப்பத்தில் அமைச்சரவை நாட்டில் யுத்தநிலையைப் பிரகடனப்படுத்தியது.

இப்படத்தைத் திரையிடுவதற்குத் தகுதியான அதிகாரியிடம் (4 ஆவது பிரதிவாதி) அனுமதி கோரியபோது இப்படத்தின் கருப்பொருளும் மற்றும் பல்வேறு காட்சிகளும் அவசரகால விதிகளின் கீழ் அனுமதிக்கப்பட முடியாதவை என அறிவித்தார். தொடர்ந்து *லீடர் பிரசுரங்கள எதிர் ரூபசிங்க*[27] வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பு அவசரகால விதிகள் தகுதியுள்ள அதிகாரியை நியமிப்பதற்கு ஏற்பாடுகளைக் கொண்டிராத காரணத்தினால் மனுதாரர் 4 ஆம் பிரதிவாதியின் தீர்ப்பு செல்லுபடியற்றது என 3 ஆம் பிரதிவாதிக்கு அறிவித்தார். மனுதாரர் 3 ஆம் பிரதிவாதியுடன் கலந்துரையாடிய பின்னர் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் உதவிப் பொது முகாமையாளரான 5 ஆம் பிரதிவாதி 21 ஆவணி 2000 முதல் படத்தைத் திரையிட முடியுமெனவும் தேவையான பிரதிகளைப் பெறுமாறும் மனுதாரருக்கு அறிவித்தார். மனுதாரர் இப்படத்தின் 15 பிரதிகளை இந்தியாவினின்று தருவிப்பதற்காக 2 ஆவது பிரதிவாதியிடமிருந்து 1.5 மில்லியன் ரூபாவைக் கடனாகப் பெற்றுக்கொண்டார். இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி பெர்னாண்டோ மனுதாரரின் படத்தை வரையறையில்லாது தடுத்து வைத்தமையானது உறுப்புரை 14 (1) (அ) உறுதிப்படுத்திய பேச்சு மற்றும் கருத்து வெளிப்பாடு பற்றிய சுதந்திரத்தினை மீறியமையாகும் எனக் குறிப்பிட்டார். அரசியலமைப்பு உரிமைகள் மீது விதிக்கின்ற வரையறைகள் உறுப்புரை 15 (7) இல் கூறப்பட்டுள்ளன. அத்தகைய வரையறைகள் தேசிய பாதுகாப்புத் தொடர்பானவைகளாக இருக்க வேண்டும். *சுனிலா அபேசேகர எதிர் ரூபசிங்க*[28] வழக்கில் இதேமாதிரியான 1998 ஆம்

27 உ. நீ. 362/2000, உ. நீ. குறிப்புக்கள் 30-06-2000.

28 (2000) I Sri LR 314.

ஆண்டு இலக்கம் 1 இன் அவசரகால (முக்கியமான இராணுவத் தகவல்களைப் பிரசுரித்தல் மற்றும் கடத்துதல் மீதான தடை) விதிகளைக் கருத்தில் கொண்ட நீதிபதி அமரசிங்க உறுப்புரை 14 (1) (அ) இற்கான வரையறைகள் குறுகிய அடிப்படையில் பொருள் கொள்ளப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

இவ்வழக்கில் நீதிபதி பெர்னாண்டோ பின்வரும் பல்வேறு விடயங்களைக் கருத்திற் கொண்டார்:

- அவசரகால விதி 12 (2) ஆனது பேச்சுச் சுதந்திரத்தில் அனுமதிக்கக்கூடிய வரையறையாகுமா?
- அவசரகால விதிகள் 14 (2) அனுமதிக்கப்படக்கூடிய வரையறைகள் எனினும், படத் தயாரிப்பாளர்களுக்கு பிரயோகிக்கப்பட முடியாதவையா? அல்லது படமானது அதனது உள்ளடக்கம் காரணமாகவா அல்லது தகுதியுள்ள அதிகாரியின் அதிகாரம் காரணமாகவா தடை செய்யப்பட்டது?
- 1 ஆம் பிரதிவாதி வழங்கிய கட்டளை மற்றும் அல்லது 21-7-2000 திகதியிட்ட 3 ஆவது பிரதிவாதியின் தீர்ப்பு தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் சட்டரீதியானதா?
- இக்கட்டளையும் தீர்மானமும் audi alteram Partem விதியை மீறுகிறதா?

பாதுகாப்புப் படைகளின் ஊக்கத்தைப் பாதிக்கக்கூடிய அம்சங்களை இப்படம் கொண்டிருப்பதாக பிரதிவாதிகள் முறையிட்டனர். அவசரகால விதிகள் தேசிய பாதுகாப்பு பொது ஒழுங்கைப் பேணுதல் போன்றவை தொடர்பாக மட்டுமே ஆக்கப்பட முடியும். எனவே அவசரகால விதி 14 (2) (அ) படைவீரர்களின் ஊக்கத்தைப் பாதிக்கின்ற சகல கூற்றுக்களையும் தடைசெய்கின்றதா? இதில் தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படுகிறதா என்பது முக்கியமில்லையா? அல்லது தேசிய பாதுகாப்புக்கு குந்தகமான கூற்றுக்களை மட்டுமே உட்படுத்தி வரையறைப்படுத்தப்பட்டு வியாக்கியானம் செய்யப்பட வேண்டுமா? பாதுகாப்புப் படைகளின் நடத்தை தொடர்பான ஒவ்வொரு கூற்றும் அவர்களது ஊக்கத்தைப் பாதிக்கலாம் என்றாலும் தேசிய பாதுகாப்பிற்கு கட்டாயமாக இடையூறு விளைவிக்குமெனக் கூற முடியாதென நீதிபதி குறிப்பிட்டார். அத்துடன் அவசரகால விதி 12 (2) (ஆ) நிச்சயமற்ற அகவயமான நியமத்தை விதிக்கிறது. எனவே தடைசெய்யப்பட்ட விடயங்கள் என்பவை *தகுதிவாய்ந்த அதிகாரியின் அபிப்பிராயத்தின்படி* தேசிய பாதுகாப்பிற்கு குந்தகமானது.

அவசரகால விதி 14 (2) இன் மேலோட்டமான நிச்சயமற்ற தன்மைகளைச் சுட்டிக்காட்டிய நீதிபதி பெர்னாண்டோ அவசரகால விதிகள்

காலாவதியாகி விட்டதாயினும் இவ்வழக்கை வேறு அடிப்படைகளில் தீர்த்து வைக்க முடியுமாயினும் அவசரகால விதி 14 (2) பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தின் மீதான அனுமதிக்கப்படக்கூடிய வரையறையா என்பதைத் தீர்மானிப்பது அவசியமற்றதாகும்.

அவசரகால விதி 14 (2) பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மற்றும் பிரசுர கர்த்தாக்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்களை இயக்குபவர்கள் ஆகிய இரு வகுதியினர்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகுமென நீதிபதி குறிப்பிட்டார். படத் தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் தியேட்டர் உரிமையாளர்கள் ஆகியோர் இதில் அடக்கப்படவில்லை. பிரதிவாதிகளின் சட்டத்தரணியின் வாதத்திற்குப் பதிலளித்த நீதிபதி பெர்னாண்டோ அவர்கள் அவசரகால விதிகள் 14 (3), (4) நபர்களின் வகைகளை விரிவுபடுத்தவில்லை என்றும் செயற்பாடுகளின் வகைகளை (catergory) மாத்திரமே விரிவுபடுத்துகிறது என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் (National Film Corporation Act) 6 ஆம் பிரிவு திரைப்படத் தொழில் தொடர்பான அரசாங்கத்தின் பொதுக் கொள்கை தொடர்பாக வழிகாட்டல்களை வழங்குவதற்கு அமைச்சருக்கு அதிகாரம் அளிக்கிறது. எனவே அரசாங்கத்தின் தேசிய பாதுகாப்புக் கொள்கை மீது வழிகாட்டல்களை வழங்க முதலாவது பிரதிவாதிக்கு உரிமையில்லையென நீதிமன்றம் தீர்மானித்தது. அவ்வாறு 6 ஆம் பிரிவு 'வழிகாட்டல்கள்' வழங்க முதலாம் பிரதிவாதிக்கு அதிகாரமளித்தாலும் அது மனுதாரரின் பேச்சு மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மீதான ஒரு வரையறையாகுமென்று நீதிமன்றம் தீர்மானித்தது. அத்தகைய வரையறைகள் சட்டத்தினால் மட்டும் விதிக்க முடியுமே தவிர சட்டத்தின் கீழ் அல்ல. மேலும் 3 ஆவது பிரதிவாதி ஒரு சுதந்திரமான தீர்ப்பை நடைமுறைப்படுத்த முயற்சி செய்யவில்லை. ஆனால் 1 ஆம் பிரதிவாதியின் தீர்மானத்தை உறுதி செய்தார். அவரது தீர்மானம் இதே தவறுகளினால் தவறியுள்ளது.

மனுதாரர் தனது படத்தை திரையிட சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளார். விளம்பர சாதனங்களைப் பெற்றுள்ளார். நியாயமான செலவுகளையும் செய்துள்ளார். இவை யாவற்றையும் அவசரகால விதிகள் பற்றிய பூரண அறிவுடனேயே மேற்கொண்டுள்ளார். 2 ஆவது பிரதிவாதி படத்தை 21 ஆவணி 2000 இல் வெளிடுவதற்கு நிர்ணயித்துள்ளார். இவ்வாறு மனுதாரரின் சட்டபூர்வமான எதிர்பார்ப்புக்கள் ஒரு சட்ட பூர்வமான உரிமையாக முதிர்ச்சியடைந்துள்ளது. எனவே அத்தகைய உரிமையை எவ்வித அறிவுறுத்தலும் இல்லாது அல்லது விளக்கம் கோராது மீறுவதானது மனுதாரரின் சட்டத்திற்கு முன் சமத்துவப் பாதுகாப்பு உரிமையை மீறுவதாகுமென நீதிமன்றம் தீர்மானித்தது.

நீதிமன்றத்தின் தீர்ப்பு

இவ்வாறாக அவசரகால விதி 14 (2) மனுதாரருக்கு அல்லது 2 ஆம் பிரதிவாதிக்கு பொருந்தாது என நீதிமன்றம் தீர்மானித்தது. அத்துடன் முதலாம், மூன்றாம் பிரதிவாதிகள் படத்தைத் தடுத்து வைக்க அதிகாரமற்றவர்கள் என்றும் அவர்கள் படம் திரையிடப்படுவதைத் தடை செய்ததன் மூலம் அவர்கள் audi alteram partem விதியை மீறிவிட்டனர் எனவும் நீதிமன்றம் தீர்மானித்தது. அத்துடன் முதலாம் பிரதிவாதி 6 ஆம் பிரிவின் கீழான தனது அதிகாரத்திற்கு அப்பால் சென்று பொதுச் செயலாற்றுகைச் சபைக்கு உரித்துடைய அதிகாரத்தில் தலையிட்டதன் மூலம் இந்த வழக்கிற்கான முதன்மைக் காரணியாக இருந்துள்ளார். எனவே வழக்கிற்கான செலவையும் அவரே தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க வேண்டும்.

நிவாரணத்தைத் தீர்மானிப்பதில் உரிமை மீறலின் சூழ்நிலையை கருத்தில் கொள்ள வேண்டுமென நீதிமன்றம் கூறியது. 2 ஆம் பிரதிவாதி படங்களைத் திரையிடுவதில் தனியுரிமை கொண்டிருப்பதால் படத்தைத் திரையிட மறுத்தமையானது மனுதாரரின் வாழ்க்கையைப் பாரதூரமாகப் பாதித்துள்ளது. இவ்விடயத்தில் நிவாரணம் வழங்கல் தொடர்பாக மீட்டளிப்புக் கொள்கையை ஏற்றுக்கொண்டு பின்வருமாறு நீதிமன்றம் கூறியது: "எனவே இந்த நீதிமன்றமானது இயலுமானவரை படம் திட்டமிட்டபடி திரையிடப்பட்டிருந்தால் மனுதாரர் என்ன நிலையில் இருப்பாரோ அந்த நிலையை மனுதாரருக்கு உருவாக்கிக் கொடுக்க நீதிமன்றம் முயற்சி செய்ய வேண்டும்."

மனுதாரருக்கான நிவாரணம் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தது. உறுப்புரைகள் 12 (1), 14 (1) (அ), 14 (1) (எ) ஆகியவற்றின் கீழான அவரது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்னும் பிரகடனம் படத்தை 15 புரட்டாதி 2001 க்கு முன் திரையிட வேண்டும் என 2 ஆம் பிரதிவாதிக்கு அறிவுறுத்தல், தாமதப்படுத்தினால் ஒவ்வொரு மாதத்திற்கும் 100,000 ரூபா மனுதாரருக்கு இழப்பீடு, 2 ஆவது பிரதிவாதி 1.5 மில்லியன் ரூபா கடன்மீது வட்டி கோரக்கூடாது, படம் வெளியிடப்பட்டு ஒரு வருடத்தின பின்னரே கடனை மீளச் செலுத்துதல் ஆரம்பிக்கப்படல் வேண்டும், இழப்பீட்டில் 500,000 ரூபா 2 ஆம் பிரதிவாதியினால் செலுத்தப்படல் வேண்டும், 1 ஆம் பிரதிவாதி 15 புரட்டாதி 2000 க்கு முன் 50,000 ரூபாவை மனுதாரருக்கு செலவுத் தொகையாகச் செலுத்த வேண்டும்.

இந்தத் தீர்ப்பானது அமைச்சர்களும் ஏனைய பொது அமைப்புக்களும் தீர்மானம் மேற்கொள்ளும் போளது சட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் இயற்கை நீதித் தத்துவங்களுக்கு மதிப்பளிக்க வேண்டுமெனவும் அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் தண்டனை அதிகமாக இருக்குமெனவும் ஓர் எச்சரிக்கையை விடுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

5. நிர்வாக / நிறைவேற்றுச் செயற்பாடு

நிர்வாகச் செயற்பாடு பற்றிய பிரச்சினை *பி.வி.டி. லியோ சாம்சன்* எதிர *ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் லிமிட்டட் மற்றும் ஏனைய ஐந்துபேர்*[29] எனும் வழக்கில் வியாக்கியானத்துக்கு வந்தது. இவ் வியாக்கியானத்தைச் செய்வதில் நீதிபதி இஸ்மாயில் இந்திய வழக்குகளை மேற்கோள் காட்டினார. *சுக் தேவ் சிங்க்* எதிர *பகத்ராம்*[30] வழக்கில் முகவரகக் கோட்பாடு மற்றும் அரச கருவிப் பயன்பாடு பின்பற்றப்பட்டது. *அஜெய் ஹாசியா* எதிர் *காலிட் முஜிப்*[31] வழக்கில் நீதிபதி பகவதி ஒரு கூட்டுத்தாபனம் ஒரு முகவரகமா அல்லது அரசாங்கத்தின் கருவிப் பயன்பாடா என்பதைத் தீர்மானிப்பதில் பின்வரும் காரணிகள் கருத்திலெடுக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டார்: முழுப் பங்கு மூலதனத்தையும் அரசாங்கம் கொண்டுள்ளதா, அத் தொழில் முயற்சியின் சகல செலவுகளுக்குமான நிதியுதவியை அரசாங்கம் வழங்குகிறதா, கூட்டுத்தாபனம் அரசினால் வழங்கப்பட்ட தனியுரிமை அந்தஸ்தைக் கொண்டுள்ளதா, கூட்டுத்தாபனத்தில் அரசாங்கம் ஆழமான தொடர்ச்சியான கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளதா.

1987 இல் *இராஜரட்ன* எதிர் *எயார் லங்கா* வழக்கில்[32] எயார் லங்காவின் செயற்பாடு, நிருவாக செயற்பாடு எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் எயார் லங்காவில் 26% பங்குகளை எமிரேட்ஸ் எடுத்துக் கொண்டதால் இப்பொழுது நிலைமை மாறிவிட்டது என நீதிபதி இஸ்மாயில் தீர்மானித்தார். இதன் காரணமாக அரசாங்கம் பணிப்பாளர் சபையில் தனது கட்டுப்பாட்டை இழந்துவிட்டது. அரசாங்க முகவரகமா அல்லது கருவிப் பயன்பாடா எனும் சோதனையை மேற்கொண்ட நீதிமன்றம் இதுவரை காலம் கம்பனி மீது அரசாங்கம் கொண்டிருந்த ஆழமான, தொடர்ச்சியான கட்டுப்பாட்டை இழந்துவிட்ட காரணத்தினால் முதலாம் பிரதிவாதியின் நடவடிக்கை நிருவாக செயற்பாடெனக் கொள்ள முடியாது. எனவே விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

இந்த வழக்கை இதே விடயம் தொடர்பான இன்னுமொரு வழக்கான *டி.ஆர்.எ. சிறீகுமார் ஜெயக்கொடி* எதிர் *ஸ்ரீலங்கா காப்புறுதி மற்றும் ரொபின்சன் ஹெட்டல் கோ லிமிட்டெட் மற்றும் ஏனைய 11 பேரும்*[33] வழக்குடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இரண்டாவது பிரதிவாதியான ரொபின்சன் கிளப்

---

29 உ. ந. (FR) விண்ணப்பம் இல: 791/98 மற்றும் 797/98, உ. ந. குறிப்புக்கள் 11-01-2001.

30 AIR (1975 உ. நீ. 1331.

31 AIR (1981) உ. நீ. 487.

32 (1987) 1 Sri LR 128 at 146.

33 உ. நீ. விண்ணப்பம் இல: 769/98, உ. நீ. குறிப்புக்கள் 13-07-2001.

பென்தோட்டை லிமிடெட்டின் 80% இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மூலம் அரசாங்கத்துக்குச் சொந்தமானது. எனவே அது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ளது. இந்த உடைமையும் கட்டுப்பாடும் எத்தனை படிமுறைகளைக் கொண்டிருப்பினும் இறுதியில் அரசாங்கமே உரிமையைக் கொண்டுள்ளது. எனவே 2 ஆம் பிரதிவாதி வர்த்தக அடிப்படையில் இயங்கினாலும் அது ஓர் அரச முகவரகம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

அரச மற்றும் அரச முகவரகங்களில் பணிபுரியும் ஊழியரின் நியமனம், ஒழுக்கக் கட்டுப்பாடு தொடர்பான பிரச்சினையில் நீதிமன்றம் யாப்பின் 55 (5) ஆம் உறுப்புரைகளில் கவனம் செலுத்தியுள்ளது.[34] அந்த உறுப்புரையிலுள்ள வெளியேற்றும் பிரிவு நீதிமன்றத்தின் அடிப்படை உரிமைகள் நியாயாதிக்கத்தின் அடிப்படையில் ஆக்கப்பட்டது:

உறுப்புரை 55 (5) சகல அரச அதிகாரிகளினதும்-அவர்களது தொழிற்பாடு எத்தகையதாக இருந்தாலும்-தொடர்பான நீதிமுறையை பாதுகாக்கின்றது என்பதை நான் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். ஒரு அரசாங்க அதிகாரியின் பணிகள் வர்த்தக செயற்பாடுகள் சார்ந்தது எனக் கூறமுடியாது. எனவே அவரது நியமனம் (அல்லது இடமாற்றம், பதவி நீக்கம் அல்லது ஒழுக்கக் கட்டுப்பாடு) ''நிருவாகச் செயற்பாடு'' ஆகாது. (அழுத்தம் மூலத்திலிருந்து)

அரசு ஒரு தொழிற்பாட்டை, வர்த்தகத்தை அல்லது பொருளாதாரச் செயற்பாட்டை நேரடியாகவோ அல்லாமலோ (ஒரு கூட்டுத்தாபனம் அல்லது முகவரகம் மூலம்) மேற்கொள்ளத் தீர்மானித்தால் இவற்றினால் வேலைக்கமர்த்தப்பட்ட ஊழியர் அடிப்படை உரிமைகள் பாதுகாப்பைக் கொண்டிருப்பர். அல்லது இல்லாவிடின் "அத்தகைய ஊழியரை அவர்களது அடிப்படை உரிமைகள் தொடர்பாக ஏமாற்றுவதற்குச்" சமனாகும். இவ்விடயத்தில் நீதிபதி பெர்னாண்டோ அவர்கள் *சாம்சன* எதிர் *ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ* வழக்கின் நீதிபதி இஸ்மாயிலின் தீர்ப்பை கவனத்திற் கொண்டார்.

நேரில் செயற்பாடு தொடர்பான மேற்படி கோட்பாட்டினைப் பிரயோகித்த நீதிபதி பெர்னாண்டோ அவர்கள் மனுதாரரின் தற்காலிக வேலைநிறுத்தம் 2 ஆம் பிரதிவாதியினால் ஒரு தனிப்பட்ட முகவரினால் மேற்கொள்ளப்பட்டபோதும் அது 2 ஆம் பிரதிவாதியின் செயலாக சட்டப்படி கணிக்கப்படுவதால் அது நிருவாகச் செயலே ஆகும்: "நேரடிச் செயற்பாட்டின் (direct action) மூலம் வருகின்ற பொறுப்புக்களை நேரில் செயற்பாட்டை (indirect action) மேற்கொள்வதன் மூலம் தகர்த்துவிட முடியாது".

சாம்சன் வழக்கின தீர்ப்புடன் முரண்பட்ட நீதிபதி பெர்னாண்டோ நேரில் செயற்பாடு தொடர்பான பிரச்சினையை முன்வைத்தார். மனுதாரரை

---

[34] பார்க்க, *நெத்தசிங்க எதிர் இரட்ணசிறி விக்கிரமநாயக்க* வழக்கில் அதே முடிவு அடைந்து கொள்ளப்பட்டுள்ளது.

கம்பனி (ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் லிமிட்டட்) பதவி நீக்கம் செய்திருப்பின் அது சந்தேகமில்லாமல் நிருவாகச் செயற்பாடாகும். இதனையே கம்பனி ஒரு முகவர் மூலம் செய்திருந்தால் இதில் எந்த வேறுபாடும் இல்லையென அவர் கேள்வியெழுப்பினார்.

மேலே குறிப்பிட்ட ரொபின்சன் வழக்கு சுட்டிக் காட்டியதைப் போல நேரில் செயற்பாடு எனும் கோட்பாடு சந்தேகமில்லாமல் பல வழக்குகளை நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் அதிகாரத்தின் கீழ் கொண்டு வருகின்றது. எனினும் இங்கு நாம் கருத்தில் கொள்ள வேண்டியது என்னவெனில் பல்வேறு நீதிபதிகள் ஒரேவிதமான கொள்கைகளை பிரயோகித்தாலும் வேறுபட்ட முடிவுகளுக்கு வருகின்றனர் என்பதாகும்.

6. பிரதம நீதியரசருக்கு எதிரான மனுக்கள்

பிரதம நீதியரசருக்கு எதிராக மூன்று மனுக்கள் (Petitions) தாக்கல் செய்யப்பட்டன. ஒரு வழக்கைத் தாக்கல் செய்தவர் சட்டத்தரணியும் பத்திரிகையாளருமாவார். தனக்காக தானே வாதாடிய அவர் சனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட பிரதம நீதியரசரின் நியமனமானது அரசியல்யாப்புக்கு எதிரானதும் தகுதியற்றதுமாகும் எனவும் தனது அடிப்படை உரிமைகளை, குறிப்பாக உறுப்புரைகள் 12, 14 (1) (அ), (எ), 17[35] ஆகியவற்றின் கீழான அடிப்படை உரிமைகளை மீறுவதாக முறையிட்டார். இவ் வழக்குகள் பின்வருமாறு: *விக்டர் ஐவன்* எதிர் *கௌரவ சரத் என். சில்வா மற்றும் வேறு இருவர்*,[36] *ராஜ்பால் அபேநாயக்க* எதிர் *கௌரவ சரத் என். சில்வா மற்றும் வேறு இருவர்*,[37] *டபிள்யூ. பி.எ. ஜயசேகர* எதிர் *கௌரவ சரத் என். சில்வா மற்றும் இன்னொருவர்*.[38] இம் மூன்று வழக்குகளும் ஒரே பிரச்சினை தொடர்பாக இருந்தமையால் ஒன்றாகவே விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

6.1 ஆரம்ப ஆட்சேபனைகளை ஆராயும் அமர்வு

ஆரம்ப ஆட்சேபனைகளை ஆராய்வதற்கு ஐந்து நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர். முதலாவது ஆட்சேபனை இந்த நியமனத்தை பிரதம நீதியரசரே

---

35 17 ஆம் உறுப்புரை அடிப்படை உரிமை மீறலுக்கான பரிகாரத்தைத் தருகிறது. அதாவது பாதிக்கப்பட்ட பகுதியினர் யாப்பின் 126 ஆம் உறுப்புரையின் கீழ் உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

36 உ. நீ. விண்ணப்பம் இல: 898/99 (FR), உ. நீ. குறிப்புக்கள் 28-02-2001.

37 உ. நீ. விண்ணப்பம் இல: 901/99 (FR), உ. நீ. குறிப்புக்கள் 28-02-2001.

38 உ. நீ. விண்ணப்பம் இல: 902/99 (FR), உ. நீ. குறிப்புக்கள் 28-0-2001.

மேற்கொண்டார் என்பதாகும். மனுதாரர் சார்பாக 910/99, 902/99 ஆகியவற்றின் கீழ் மனுதாரரின் சம்மதத்திற்குப் புறம்பாக பிரதம நீதியரசர் நீதிபதிகளை நியமித்தாரெனவும் அது 1978 ஆம் ஆண்டின் நீதித்துறையாட்சி சட்டத்தின் (Judicature Act) 49 ஆம் பிரிவுக்கு முரணானது எனவும் வாதம் முன்வைக்கப்பட்டது.

தீர்ப்பு வழங்கிய நீதிபதி வடுகொடபிட்டிய ஆட்சேபனை தவறாகக் கருத்திலெடுக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார். நீதித்துறையாட்சிச் சட்டத்தின் 49 (1) பிரிவு "*இரண்டு தரப்பினரதும் சம்மதமில்லாமல* எந்தவொரு நீதிபதியும் தகைமையுள்ளவரல்ல:

> எந்தவொரு வழக்கிலும் தான் ஒரு தரப்பாகவோ அல்லது ஈடுபாடோ கொண்டிருந்தால் எந்தவொரு நீதிபதியும் வழக்குச் செயன்முறையின் எந்தவொரு கட்டத்திலும் நீதி வழங்க முடியாது." (அழுத்தம் சேர்க்கப்பட்டது).

நீதிபதி வடுகொடபிட்டிய, மேற்படி ஏற்பாடு தான் சம்பந்தமுள்ள வழக்கில் ஒரு நீதிபதி தொடர்பானது. இதன்படி பிரதம நீதியரசர் இவ்வழக்கினை விசாரித்து விண்ணப்பத்தைத் தீர்மானிக்காவிடில் 49 ஆம் பிரிவு அவருக்குப் பொருந்தாது. உண்மையில் அவர் இவ்விண்ணப்பத்தை விசாரித்த நீதிபதிகள் குழுவிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டார்.

898/99 இலக்க விண்ணப்பத்தில் மனுதாரருக்காகத் தோன்றிய திரு ரஞ்சித் அபேசூரிய பி.சி. ஆரம்ப ஆட்சேபனையைக் கிளப்பினார். அதாவது இவ்வழக்கில் பிரதிவாதியாக பிரதம நீதியரசர் இருக்கும்போது அவர் உருவாக்கிய நீதிபதிகள் குழு பாரபட்சமானது. அரசியல்யாப்பின் உறுப்புரை 132 (3) (ii) இன்படி மூன்று நீதிபதிகள் சேட்டுக்கொண்டதன் பேரில் பிரதம நீதியரசர் இந்த நீதிபதிக் குழுவை நியமித்தார். இது ஒரு சாதாரண நடைமுறையாகும். மனுதாரர்கள் தமது மனுவில் நீதிபதிகள் குழு எவ்வாறு நியமிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தமை முறையற்றதும் பொருத்தமற்றதுமாகும். எத்தனை நீதிபதிகள் எத்தகைய மூப்பினடிப்படையில் நியமிக்கப்பட வேண்டும் என மனுதாரர்கள் குறிப்பிட முடியாது என நீதிபதி வடுகொடபிட்டிய குறிப்பிட்டார்:

> *பிரதம நீதியரசர் எவ்வாறு ஒரு நீதிபதிகள் குழுவை நியமிக்க வேண்டும் என வழக்கில் ஒரு தரப்பினர் அவருக்கு அறிவுறுத்தல் வழங்குவதை ஏற்றுக் கொண்டால் அது மிகவும் விரும்பத்தகாத ஒரு முன்னுதாரணமாகிவிடும். வழக்கில் ஒரு தரப்பினர் தாம் விரும்பும் எண்ணிக்கையினரான நீதிபதிகள் தாம் விரும்பும் மூப்பு அடிப்படையில் கோரிக்கை விடுத்து அது அனுமதிக்கப்படுமாயின் அது பொறுத்துக்கொள்ள முடியாத விடயமாகும்.*

இவ்வாறாக மனுதாரர்கள் சார்பில் கிளப்பப்பட்ட ஆரம்ப ஆட்சேபனைகள் நிராகரிக்கப்பட்டன.

6.2 வழக்குத் தொடர அனுமதி கேட்டலை செவிமடுத்தல்

மூன்று விண்ணப்பங்களும் திரும்பவும் ஒன்றாகவே விசாரணைக்கு எடுக்கப்பட்டன. முதலாவது பிரதிவாதியான பிரதம நீதியரசர் நியமனத்தின் காரணமாக 12 (1), 17 ஆகிய உறுப்புரைகளின் கீழான தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுவிட்டன என மூன்று மனுதாரர்களும் முறையிட்டனர். அத்துடன் இரண்டாவது விண்ணப்பத்தின் (901/99) மனுதாரராகிய சட்டத்தரணி உறுப்புரைகள் 14 (1) (அ), (எ) ஆகியவற்றின் கீழ் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாகக் கூறினார். எந்தவொரு மனுதாரரும் முதலாவது பிரதிவாதி மேற்கொண்ட நிருவாகச் செயற்பாட்டினால் தமது அடிப்படை உரிமைகளை மீறும் குற்றமிழைக்கப்பட்டுள்ளது எனக் கூறவில்லை. பிரதம நீதியரசரின் நியமனம் அரசியல்யாப்புக்கு விரோதமானதும் தகுதியற்றதும் செல்லுபடியற்றதுமாகும் என்னும் பிரகடனத்தையே மனுதாரர்கள் கோரினர்.

இவ்விடயத்தில் சட்டமா அதிபர் மூன்று அடிப்படை ஆலோசனைகளை எழுப்பினார்:

- பிரதம நீதியரசர் நியமனம் இந்த விசாரணையில் கேள்விக்குட்படுத்தப்பட முடியாது.
- கோரிக்கைகளில் குறைபாடுகள் உள்ளன.
- எவ்வாறாயினும் மனுதாரர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படவில்லை.

6.3 அடிப்படை உரிமைகள் வழக்கு விசாரணைகளில் பிரதம நீதியரசரின் நியமனத்தை கேள்விக்குட்படுத்தல்

மேற்படி விடயம் தொடர்பாக நீதிமன்றம் மூன்று பிரச்சினைகளை முன்வைத்தது. அரசியல்யாப்பின் உறுப்புரை 107 (1) இன் கீழ் சனாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட பிரதம நீதியரசரின் நியமனம், யாப்பின் உறுப்புரை 35 (1) இன் கீழ் சனாதிபதியின் விடுபாட்டுரிமை (Immunity), அரசியல்யாப்பின் உறுப்புரைகள் 107 (2), (3) இன் கீழ் முதலாம் பிரதிவாதியை அரசியற் குற்றச்சாட்டுகள் தவிர வேறு வழிகளில் நீக்க முடியாமை.

நீதிபதி வடுகொடபிட்டிய மேற்படி உறுப்புரை 107 (1) தெளிவானதும் இரட்டை அர்த்தம் கொண்டதல்ல எனவும் அதனை எளிதாக வாசிப்பதற்கு எவ்வித வழிகாட்டல்களும் தேவையில்லை எனவும் குறிப்பிட்டார்.

இதற்கு இயற்கையான தர்க்கரீதியாகவுள்ள ஒரேயொரு வியாக்கியானத்தைத் தருதல் வேண்டும். அதாவது எளிமையான வார்த்தைகளும் எளிமையான மொழியும் அவற்றின் எளிமையான அர்த்தத்தினைத் தருதல் வேண்டும். அரசியல்யாப்பின் ஏற்பாடுகள் அதன்படி அர்த்தம் கொள்ளப்படல் வேண்டும். மனுதாரர்கள் எண்ணுவதைப்போல நாம் உறுப்புரை 107 (1) வழிகாட்டல்களை நிச்சயமாக வாசிக்க முடியாது. ஏனெனில் அப்படி ஒன்று இல்லை.

நீதிமன்றமானது மேற்படி சூழ்நிலைகளின் கீழ், மேற்படி முதலாம் பிரதிவாதியை சனாதிபதி பிரதம நீதியரசராக நியமித்தமை யாப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவானதே. எனவே அது சட்டரீதியானதும் அரசியல் யாப்பினடிப்படையில் தகுதியானதுமாகும் எனக் குறிப்பிடப்பட்டது.

சனாதிபதி மீது வழக்குத் தொடர முடியாமை தொடர்பாக அவர் பதவி வகிக்கின்ற காலத்தில் அவரது தனிப்பட்ட மற்றும் உத்தியோகரீதியான செயற்பாடுகளுக்கு அவருக்கு உறுப்புரை 35 (1) முழுமையான பாதுகாப்பை வழங்குகின்றது என்பதை சட்டமா அதிபர் ஏற்றுக்கொண்டார். இதன் பொருள் சனாதிபதி சட்டத்திற்கு மேற்பட்டவர் என்பதல்ல. ஒரு சனாதிபதி எவ்வாறு பதவியினின்று நீக்கப்பட முடியுமென அரசியல்யாப்பு தெளிவாகக் கூறுகிறது.

ஜோசப் பெரேரா எதிர் சட்டமா அதிபதி,[39] *கருணாதிலக்க எதிர் திசாநாயக*[40] ஆகிய வழக்குகளை மேற்கோள் காட்டி சனாதிபதிக்குரிய சட்டப் பாதுகாப்பு மீறப்பட முடியாதது எனினும் சில சந்தர்ப்பங்களில் அவரது செயல்கள் உட்படாது என நீதிமன்றம் குறிப்பிட்டது. இவ்வாறாக ஒருவரது அடிப்படை உரிமையை மீறிய ஓர் அதிகாரி சனாதிபதியின் செயலில் தனது செயற்பாட்டை நியாயப்படுத்த முயலும்போது சனாதிபதியின் அடிப்படைச் சட்டம் நீதிமன்ற மீளாய்வுக்கு உட்படுத்தப்படலாம்.

இந்த வழக்கு விசாரணையில் கேள்விக்குள்ளாக்கப்பட்ட ஒரேயொரு செயல் முதலாம் பிரதிவாதியை பிரதம நீதியரசராக நியமித்த சனாதிபதியின் செயலே ஆகும். இவ்விடயத்தில் சனாதிபதியின் பாதுகாப்பை ஏற்றுக்கொண்டு நீதிபதி வடுகொடபிட்டிய பின்வருமாறு குறிப்பிட்டார்:

உண்மையில் மனுதாரர்கள் இந்த நீதிமன்றத்தைக் கேட்பது என்னவென்றால் அரசியல் யாப்பின் 35 ஆம் உறுப்புரையின் கீழ் சனாதிபதி கொண்டுள்ள வழக்குத் தொடர முடியாத

---

39 (1992) 1 Sri LR 199.

40 (1999) 1 Sri LR 157.

உரிமையை மறுத்து அவர் அப்படியொரு உரிமையைக் கொண்டிருக்கவில்லையென தீர்ப்பளிக்க வேண்டுமென்பதாகும். உண்மையில் இந்த விடயம் நீதிமன்றத்தின் அதிகாரத்தின் கீழ் இல்லை. நீதித் தீர்ப்புக்கள் மற்றும் கட்டளைகள் என்னும் பேரில் நீதிபதிகளுக்கு சட்டமன்றத்தின் பணிகளைக் குறிப்பாக அது அரசியல்யாப்புடன் சம்பந்தப்பட்டிருக்கும்போது பறித்துக்கொள்ள முடியாது. அது மாத்திரமல்லாது அவர்கள் முயலவும் மாட்டார்கள்.

பிரதம நீதியரசரைப் பதவியிலிருந்து விலக்குவதற்கு உறுப்புரைகள் 107 (2), (3) ஆகியவை மாத்திரமே வழிசெய்கின்றன எனக் கூறிய நீதிபதி வடுகொடபிட்டிய உறுப்புரை 126 இன் கீழ் உயர் நீதிமன்றத்துக்கு அதிகாரமில்லை என்றும் எனவே மனுதாரர்கள் கோரிய பிரகடனத்தை மேற்கொள்ள நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் இல்லை எனச் சுட்டிக்காட்டினார்.

சட்டமா அதிபதியினால் விண்ணப்பத்தில் குறைபாடுகள் இருப்பதாக எழுப்பப்பட்ட இரண்டாவது ஆட்சேபனை சாட்சியம் தொடர்பாகவே இருந்த காரணத்தினால் அது பற்றிய ஆய்வு இங்கு அவசியமற்றது.

3 ஆவது ஆட்சேபனை மனுதாரர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படவில்லை என்பதாகும். இவ்விடயத்தில் மூன்று மனுதாரர்களின் கூற்றுப்படி ஒரேயொரு மீறல் பிரதம நீதியரசர் நியமனமும் அதனை இழைத்தவர் சனாதிபதியுமாகும். உறுப்புரை 126 (2) இன் கீழ் மனுதாரர்கள் எவரும் சனாதிபதியின் செயலினால் பாதிக்கப்பட்டிருக்கவில்லையெனக் குறிப்பிட்ட நீதிமன்றம் பின்வருமாறு எடுத்துக் கூறியது:

> எனவே, மனுதாரர்கள் விரும்பியவாறு இந்நீதிமன்றத்தினால் அரசியல்யாப்பின் ஏற்பாடுகளை முறையாகவும் சட்டரீதியாகவும் கடைப்பிடிக்கின்ற தெளிவான கடமைக்கப்பால் செல்ல முடியாது. உயர் நீதிமன்றத்தின் அல்லது மேல் நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர் உட்பட நீதிபதி ஒருவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு இன்னொரு முறையை உருவாக்கி மனுதாரரின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு சட்டவியாக்கியானம் என்ற பெயரில் அரசியல்யாப்பில் கூறப்பட்டுள்ளவற்றை அனுமதிக்கப்பட்ட வரையறைகளுக்கப்பால் நிகழ்வுப்படுத்தவும் முடியாது. பிரதம நீதியரசரின் அல்லது வேறு உயர் நீதிமன்றங்களின் நீதிபதியை நியமிக்கும் சனாதிபதியின் அதிகாரத்தை அடிப்படை உரிமைகள் மீறப்பட்ட விண்ணப்பத்தின் ஊடாக கேள்விக்குட்படுத்த ஒருவர்

> விரும்புவாராயின் 35 ஆம் உறுப்புரைக்கு எவ்வித அர்த்தமும் இல்லை. அடிப்படை உரிமைகள் மீதான வரையறுக்கப்பட்ட நியாயாதிக்கத்தைப் பயன்படுத்தி அதில் உட்படாத வேறொரு நோக்கத்தை அடைய முடியாது.

அரசியல்யாப்பு என்பது ஒரு தேசத்தின் உயரிய சட்டம் என்றும் அதனைப் பாதுகாக்கின்ற புனிதமான கடமையை நீதிமன்றம் கொண்டிருக்கின்றது என்றும் மேலும் நீதிமன்றத்தினால் குறிப்பிடப்பட்டது. சட்டமா அதிபரினால் முன்வைக்கப்பட்ட ஆரம்ப ஆட்சேபனைகளைக் கருத்திற்கொண்டு வழக்கை மேற்கொண்டு செல்வதற்கு மனுதாரர்களுக்கு அனுமதியளிக்க நீதிமன்றம் மறுத்துவிட்டது.

7. நிவாரணம்

அரசியல்யாப்பின் 126 (4) உறுப்புரையானது "குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் *நீதியானதும் நியாயமானதுமான* (Just and equitable) நிவாரணத்தை வழங்க அல்லது வழங்குமாறு பணிப்புரை விடுக்க" நீதிமன்றத்துக்கு அதிகாரம் வழங்குகிறது. (அழுத்தம் சேர்க்கப்பட்டது). எனவே வழங்கப்படுகின்ற நிவாரணம் நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தின்படி நியாயமானதும் நீதியானதுமாக இருத்தல் வேண்டும். அநேகமான நட்டஈடுகள் மேற்படி பிரமாணத்தைப் பூர்த்தி செய்தாலும் மேற்குறிப்பிடப்பட்ட சில வழக்குகளில் குறிப்பிடப்பட்ட நட்டஈடுகள் மேற்படி பரமாணத்தைக் கருத்தில் கொண்டிருந்ததா என்ற சந்தேகத்தைத் தோற்றுவிக்கின்றன.

நீதிமன்றமானது வழக்கமாக, சட்டவிரோதமானது எனும் பிரகடனம், நட்டஈடு செலவுத் தொகையுடன் பிரகடனம், சில சந்தர்ப்பங்களில் நட்டஈடு இல்லாமல் செலவுத் தொகையுடன் கூடிய ஒரு பிரகடனம் எனப் பல்வேறு வகையான பரிகாரங்களை வழங்குகிறது. *சேனரத்ன* எதிர் *புண்ணியா டீ சில்வா*[41] வழக்கு இதற்கு ஒரு நல்ல உதாரணம். இவ்வழக்கில் மனுதாரரின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது என்னும் ஒரு பிரகடனம் மாத்திரமே திருப்தியளிக்கக் கூடியது என நீதிபதி அமரசிங்க குறிப்பிட்டார். அத்துடன் மனுதாரரைத் திருப்திப்படுத்த நட்டஈடு தேவையில்லை எனவும் மனுதாரர் கோரிய நட்டஈடு (ரூபா 5 மில்லியன்) மனுதாரரின் பாதிக்கப்பட்ட உணர்வுகளைத் திருப்திப்படுத்தக்கூடிய ஓர் அடையாளமாகக்

---

41 (1995) 1 Sri LR 273.

கொள்ளப்படக்கூடாது[42] எனவும் குறிப்பிட்டார். இவ்வாறாக ஒரு நட்டஈடு என்பது உண்மையான துன்பங்களுக்கான ஒரு பணத்தொகையோ அல்லது துன்பத்துக்கான ஒரு ஆறுதலாகவோ (solatiun) இருக்கலாம்.[43]

அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்டது எனும் பிரகடனமும் நட்டஈடுமே கடந்த வருடங்களில் பொதுவாக வழங்கப்பட்ட நிவாரணமாகும். இந்த வருடம் மீளவும் நிலைப்படுத்தல் தத்துவங்கள் (Principle of Restitution) நிவாரணத்தைத் தீர்மானிக்கின்ற ஓர் அளவுகோலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதாவது பிரதிவாதியின் செயற்பாடு நடைபெறாவிட்டால் மனுதாரர் இருந்திருக்கக்கூடிய நிலைமையில் அவரை மீளவும் நிலைப்படுத்தல் என்பதாகும். மேலும் நீதிமன்றத்தினால் சட்டமா அதிபர் அல்லது பொலிஸ் மாஅதிபருக்கு பல்வேறு பணிப்புரைகள் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டன. தவறிழைக்கும் அதிகாரிகளுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகளை உறுதிப்படுத்தல், குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் ஒரு படத்தைத் திரையிடல் அல்லது ஒரு குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் நட்டஈடு வழங்கல் போன்றவை அவற்றுட் சிலவாகும்.

மேலே குறிப்பிட்டதைப்போல நாம் கருத்தில் கொள்ளவேண்டிய இன்னொரு விடயம் உறுப்புரை 11, 12 (1) ஆகியவற்றின் கீழ் வரும் மீறல்களுக்கென வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகைகளிலுள்ள வேறுபாடாகும். சில வழக்குகளில் நீதிமன்றம் நட்டஈட்டுத் தொகையை எவ்வாறு தீர்மானித்தது என்பதில் தெளிவு இல்லை. அனுபவித்த துன்பங்களுக்கு[44] நட்டஈட்டைக் கணிப்பது இலகுவான பணியல்ல என்றாலும் மேலே குறிப்பிட்டதைப்போல

---

42 . *சமன் எதிர் லீலாதாச மற்றும் இன்னொருவர* (உ. நீ. விண்ணப்பம் இல: 4/88, உ. நீ. குறிப்புக்கள் 6/7.10.1988) வழக்கில் நீதிபதி அமரசிங்க பின்வருமாறு குறிப்பிட்டார்: *முதலாவது பிரதிவாதி தமது தகாத நடத்தை மூலம் குற்றவாளியாகக் காணப்படுகின்ற இதுபோன்ற வழக்குகளில் வழங்கப்படும் நட்டஈட்டில் தண்டனை அம்சம் முக்கியமானதல்ல. ஆனால் நிகழ்ந்த தவறின் பாரதூரமான தன்மையை அங்கீகரிப்பதன் மூலம் மனுதாரரின் பாதிக்கப்பட்ட உணர்வுகளைத் திருப்திப்படுத்துவதே முக்கியமானது. நட்டஈட்டை அதிகரிப்பது மூலம் இந்த நீதிமன்றம் ஏற்பட்ட தீமையின் பாரதூரமான தன்மையை அங்கீகரித்து அது மூலம் ஏற்பட்ட தவறுக்கும் அதற்கு வழங்கப்படுகின்ற நட்டஈட்டிற்குமிடையில் ஒரு நியாயமான தொடர்பு நிர்ணயிக்கப்பட்டது என்பதன் மூலம் மனுதாரர் ஆறுதலடைய வழிவகுப்பதாகும.*

43 இவ்வடயத்தில் நீதிபதி எ.ஆர்.பி. அமரசிங்க தமது நூலில் சிறப்பான பகுப்பாய்வைச் செய்திருப்பதைப் பார்க்க. 'Relief and Remedies for the Infringement of the Rights of Personal Security and Physical liberty in Sri Lanka' *Developing Human Rights Jurisprudence, Interights*, Vol 8 (2001) P. 85; and Justice A.R.B. Amerasinghe *in Our Fundermental Rights of Personal Security and Physical Liberty* (Ratmalana, Sri Lanka: Sarvodaya, 1995), PP. 58-59.

44 இவ்விடயத்தில் இழப்பீடு வழங்கல் பற்றிய நீதிபதி அமரசிங்காவின் கட்டுரையைப் பார்க்கவும். *Supra* n. 43, பக். 105.

பரிகாரமானது நீதியானதும் நியாயமானதுமாக இருக்க வேண்டுமென உறுப்புரை 126 (4) கூறுகிறது. உறுப்புரை 126 (4) இன் கீழ் நீதிமன்றத்தின் வகிபங்கு பற்றிக் குறிப்பாக நிவாரணத்தின் இயல்பு பற்றியும் அது தண்டிக்கக் கூடியதாக இருக்க வேண்டுமா என்பது பற்றியும் இங்கு ஆழமான பகுப்பாய்வினைச் செய்ய முடியாது.[45] வழங்கப்படும் நட்டஈடு மனுதாரர் அனுபவித்த இழப்பு அல்லது சேதத்துக்கு (உடல்ரீதியான மற்றும் /அல்லது உளரீதியான) விகிதாசாரமாக அமைய வேண்டும் என்பதைக் குறிப்பிடுவது இங்கே போதுமானது. விகிதாசாரம் என்று சொல்லப்படுகின்ற இந்த முக்கியமான அம்சம் இல்லாதுவிடின் அரசியல்யாப்பின் உறுப்புரை 126 (4) இன் கீழ் கூறப்பட்டுள்ள[46] "நீதியானதும் நியாயமானதுமான" நிபந்தனையை நீதிமன்றம் வழங்கும் நிவாரணம் ஈடுசெய்ய முடியாது.

அதேபோல பிரதிவாதிகளின் மீது விதிக்கப்படுகின்ற தனிப்பட்ட பொறுப்பு மற்றும் தனிப்பட்ட நட்டஈடு வழங்கல் ஆகியவை தண்டனை சார்ந்த சேதமா அல்லது ஒரு தடையாகுமா என்பது பற்றியும் தனியான ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் பல வழக்குகளில் நீதிமன்றமானது அரசாங்க அதிகாரிகள் எதிர்காலத்தில் வரம்புமீறிச் செயலாற்றுவதைத் தடுப்பதற்காக[47] அவர்களைத் தனிப்பட்ட முறையில் பொறுப்பாளியாக்கியுள்ளது. எனினும் இது எதிர்பார்க்கப்பட்ட விளைவினை ஏற்படுத்தவில்லையென நீதிபதி அமரசிங்க *அபாசின் பண்டா* எதிர் *குணரட்ன* வழக்கில்[48] சுட்டிக்காட்டினார்:

சட்டதிட்டங்களை மீறுவோரை நீதியானதும் நியாயமானதுமென நீதிமன்றத்தால் மதிப்பிடப்பட்ட நட்டஈட்டினை தனிப்பட்ட முறையில் செலுத்த வேண்டும் என்பதும் சட்டரீதியாகக் கண்டிப்பதும் ஏனையோர் அரசியல் யாப்பின் 11 ஆம் உறுப்புரையை மீறுவதை தடுக்கச் செய்யும் என்பது எதிர்பார்த்த பயனைத் தரவில்லை. இந்த விடயத்தில் நீதிமன்றத்தின் விரக்தி மிகவும் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளது.

---

45 *மேற்படி* கட்டுரையில் பார்க்கவும்

46 *மேற்படி*

47 அச்சமூட்டுவதன் மூலம் தடைசெய்தல் தொடர்பான பிரச்சினைகளுக்கு *சமன* எதிர் *லீலாதாச மற்றும் இன்னொருவர்* வழக்கில் நீதிபதி அமரசிங்காவின் தீர்ப்பினைப் பார்க்கவும். அதில் அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "ஓர் அடிப்படை உரிமை வழக்கில் நட்டஈட்டைக் கணிப்பீடு செய்வதில் அச்சமூட்டித் தடுத்தல் என்பது ஒரு பொருத்தமான அச்சமென்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது." இங்கு நீதிபதி அமரசிங்க அச்சமூட்டித் தடுத்தல் என்பதை அரசைத் தண்டிப்பதாகவே பயன்படுத்தியுள்ளார் என்பதைக் கருத்தில் கொள்வது முக்கியமானது. மற்றும் அரசாங்க அதிகாரிகள் தவறு செய்வதை அச்சமூட்டித் தடுக்கும் நோக்கமாக அல்ல.

48 *Supra n* 42, பக். 100.

8. முடிவுரை

மீளாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ள இந்த வருடத்தில் பல முக்கியமான தீர்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. அடிப்படை உரிமைகள் விண்ணப்பத்தின் அடிப்படையில் முன்னெப்போதும் நிகழ்ந்திராத வகையில் பிரதம நீதியரசர் நியமனத்துக்கு எதிரான வழக்கும் முக்கியமானது. இந்த வழக்கைத் தொடர்வதற்கு நீதிமன்றம் அனுமதிக்கவில்லை. இந்த வழக்கில் நீதிமன்றம் அழுத்திக் கூறுவது என்னவெனில் இல்லாத ஒன்றை உள்ளெடுப்பதற்காக அரசியல் யாப்பினை நெகிழ்ச்சியுடன் வியாக்கியானம் செய்ய முடியாது என்பதாகும். நீதிமுறைச் செயலாண்மைக்கு (Judicial Activism) இது ஒரு பாரிய அடியாகும். இந்திய அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு பார்க்கையில் இந்திய உயர் நீதிமன்றமும் சூழ்நிலைப் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் தொடர்பான தம்முடைய முக்கிய தீர்ப்புக்களில் இதைத்தான் செய்துள்ளன. அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தை வியாக்கியானம் செய்தல் போன்ற ஏனைய விடயங்களில் இதனைப் பிரயோகிப்பதில் கூடிய கவனம் தேவை. எனினும் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்ட சூழ்நிலைகள் முன்னர் ஒருபோதும் ஏற்பட்டிருக்கவில்லையென்பதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அடிப்படை உரிமை வழக்குகளில் இன்னொரு முக்கிய அம்சம் என்னவெனில் தீர்ப்புக்கள் நீதிமன்றத்தின் ஒன்று அல்லது இரு நீதிபதிகளாலேயே வழங்கப்பட்டுள்ளன. சில தீர்ப்புக்களில் காணப்படுகின்ற சாமர்த்தியம் நீதிமன்றத்திலுள்ள சகல நீதிபதிகளுக்கும் பொருத்தமானதல்ல. மேல் கூறப்பட்டவை சுட்டிக்காட்டுவது என்னவெனில் அடிப்படை உரிமைகள் தொடர்பான நீதிமுறையை விருத்தி செய்வதில் ஓரிரு நீதிபதிகள் மாத்திரமே ஆர்வமுள்ளவர்களாக இருக்கின்றனர்.

கடந்த பல வருடங்களாக பல கடுமையான தீர்ப்புக்கள் வழங்கப்பட்டபொழுதும் கூட சித்திரவதை இன்னும் இருக்கவே செய்கின்றதென்பதை பல தீர்ப்புக்கள் காட்டுகின்றன. குற்றவியல் நீதிமுறையில் இது ஆழமாகப் புதைந்து விட்டது போல காணப்படுகின்றது. சட்டத்தின் பாதுகாவலர்கள் சட்டத்தை மதிப்பதாகத் தெரியவில்லை. உண்மையில் இது அச்சமூட்டுவதோடு சித்திரவதை முறைகள் ஒவ்வொரு வருடமும் மோசமாகின்றன. ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு இத்தகைய தீங்குகளைச் செய்ய முடியுமாவென கற்பனை செய்யவே முடியவில்லை. தவறு செய்கின்ற அதிகாரிகள் சித்திரவதைச் சட்டத்திக் கீழ் தண்டிக்கப்படல் வேண்டும். அவர்களது பதவியுயர்வுகள் இரத்துச் செய்யப்படுவதோடு அவர்களுக்கெதிரான வழக்குகளும் தாக்கல் செய்யப்படல் வேண்டும்.

அடிப்படை உரிமைகளின் மீறல்களுக்கு பரிகாரம் தேடல் எவ்வளவு முக்கியமோ அதேயளவு முக்கியத்துவம் அல்லது அதைவிடக் கூடிய

முக்கியத்துவம் மீறல்கள் நடக்காமல் தடுப்பதற்கு வழங்கப்படல் வேண்டும். இவ்விடயத்தில் கல்வியும் விழிப்புணர்வும் முக்கியமான பங்கினை வகிக்கின்றன. குடியியல் சமூகக் குழுக்கள் நீதிமன்றத்திலுள்ள நீதிமுறையைப் பயன்படுத்திக்கொண்டு பொதுமக்கள் மத்தியிலும் அரசாங்க அதிகாரிகள் மத்தியிலும் அடிப்படை உரிமைகள் மீறல்களைக் குறைக்கும் நோக்குடன் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளை மேம்படுத்த வேண்டும்.

VI

இலங்கையின் பொதுச்சேவை

எம். சி. எம். இக்பால்*

1. அறிமுகம்

இந்த அத்தியாயம் 2001 ஆம் ஆண்டு காலத்தின்போது பொதுச் சேவையின் நிலைமை பற்றி நோக்குவதுடன் இலங்கையின் பொதுச்சேவை நிலையில் காணப்படும் இன்றைய பரிதாபகரமான நிலைமைகளைத் தூண்டிய காரணிகளையும் ஆராய்கின்றது. முதற் தடவையாக நாட்டின் பொதுச்சேவை மனித உரிமைகள் அறிக்கை ஒன்றில் கலந்துரையாடப்படுவதனால் இந்த அத்தியாயம் அக் கலந்துரையாடலை எடுத்துக் காட்டும் முகமாக பொதுச் சேவையின் வரலாற்றுரீதியான விருத்திகளையும் கவனத்திற் கொள்கின்றது. நல்லரசாட்சி (Good governance) ஒன்றினை நிச்சயப்படுத்துவதில் அரசின் பிரதம அங்கமாக இருக்கக்கூடிய நிலைக்கு பொதுச் சேவையினை மீண்டும் கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகளும் இந்த அத்தியாயத்தில் ஆராயப்படுகின்றன. சனநாயக அரசு ஒன்றில் நல்லரசாட்சி என்பது திறமையானதும், பயன் தருவதுமான நிருவாக அமைப்பு ஒன்றின் விளைவு என்றே கூறலாம். நல்லரசாட்சி என்பது பொறுப்புடைமை, ஒழிவுமறைவற்ற வெளிப்படையான நிலை, சட்ட விதிகளை மதித்தல், சனநாயக சமூகம் ஒன்றிலுள்ள மனித உரிமைகளைப் பாதுகாத்தல் போன்றவற்றினை நிச்சயப்படுத்துவதனை வேண்டி நிற்கின்றது. மேலும் நல்லரசாட்சி எந்த வடிவத்தில் உள்ள பாரபட்சங்களையும் ஏற்றுக் கொள்வதில்லை. பாரபட்சங்கள்

---

* நிபுணத்துவ ஆலோசகர், சட்டத்துக்கும் சமூகத்துக்குமான அறநிலையம்.

சட்ட விதிகளில் முறிவுகள் ஏற்படுவதற்கு தூண்டுவதுடன் மனித உரிமை மீறல்களுக்கும் வழிவகுத்து நிற்கின்றது. இது வழமையாக நல்லரசாட்சி ஒன்று இல்லாத சந்தர்ப்பத்தில் மக்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய தேவையெழுகின்ற பொழுது சில வழிவகைகளைப் பின்பற்றுகின்றது. நல்லதொரு ஆட்சியினை நிச்சயப்படுத்தலை வேண்டி நிற்கின்ற அரசின் முக்கியமானதொரு அங்கமாக பொதுச்சேவை காணப்படுவதனால் அச் சேவை நல்ல முறையில் செயற்படுவதற்கு தவறுகின்றபொழுது நல்லரசாட்சி பாதிக்கப்படுவதனை அரசு கண்டுகொள்கின்றது. இதன் விளைவாக மக்களின் உரிமைகள் பொதுச்சேவையின் கைகளில் சிக்கி ஆபத்திற்குள்ளாகின்றது. ஆகவே மனித உரிமைகள் பற்றிய கலந்துரையாடலில் பொதுச்சேவை சம்பந்தப்படுகின்றமையால் முதற் தடவையாக இந்த அறிக்கையில் அது உள்ளடக்கப்படுகிறது.

அரச நிறுவனங்களில் உள்ள பொதுத்துறை உத்தியோகத்தர்களின் தீர்மானங்கள் மக்களின் அடிப்படை உரிமைகளில் தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடும். அத்தகைய தீர்மானங்கள் இதன் விளைவாக மேல் நீதிமன்றத்தின் அடிப்படை உரிமை நியாயாதிக்கத்துக்கு உட்பட்டவையாக முடியும். 'மனித உரிமைகளின் நீதிமுறைப் பாதுகாப்பு' என்ற அத்தியாயத்தில் எடுத்துக் காட்டப்பட்டிருப்பது போல காலாகாலமாக அரசியலமைப்பின் உறுப்புரை 12 (1) இன் கீழ் நியாயம் வேண்டி சவால் விடப்பட்ட நிருவாகரீதியான தீர்மானங்களுடன் பல அடிப்படை உரிமை வழக்குகள் தொடர்புபடுகின்றன. அரசியலமைப்பின் மேற்குறிப்பிட்ட சட்டவிதி, சட்டத்தின் முன் சமம் மற்றும் சட்டத்தின் முன் சமமான பாதுகாப்பு என்பனவற்றுடன் சம்பந்தப்படுகின்றது.

2. சேவையின் வரலாற்றுப் பரிணாமம், அமைப்பு, மற்றும் அதன் அரசியல் மயமாக்கம்

இலங்கையின் பொதுச் சேவை நீண்டகால வரலாறு கொண்டது. இது புராதன மன்னர்களின் காலத்துடன் தொடர்புபட்டதாக இருந்தது.[1] பிரித்தானிய ஆட்சியின்போது கோல்புறூக் ஆணைக்குழுவின் சிபார்சுக்கு அமைய 1833 ஆம் ஆண்டிலும், டொனமூர் ஆணைக்குழுவின் சிபார்சுக்கமைய 1928 ஆம் ஆண்டிலும் அப்போதிருந்த அமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை சுதந்திரம் அடைந்தபொழுது பொதுச்சேவையானது சோல்பரி ஆணைக்குழுவின் சிபார்சுக்கமைய

---

1 F. A. Hayley, *A Treatise on the Laws and Customs of the Sinhalese* (1923), pp.41, 43, 51.

நிறுவப்பட்ட பொதுச்சேவை ஆணைக்குழுவின்கீழ் கொண்டுவரப்பட்டது.[2] அமைச்சின் கீழ் காணப்பட்ட திணைக்களங்களின் நிருவாகத்திற்கும் அமைச்சுக்களின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அமைச்சருக்கு உதவி செய்வதற்கும் பொறுப்பாக இருந்த நிரந்தர செயலாளர் ஒருவரை ஒவ்வொரு அமைச்சரும் கொண்டிருந்தனர். சில அமைச்சர்கள் கருத்திட்டங்களின் சாத்தியக்கூற்றுக்கு ஏற்ப நிரந்தர செயலாளர்களின் அபிப்பிராயங்களைக் கருத்திற்கொள்ளாமல் தமது விருப்பிற்குரிய செயற்றிட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பதனை விரும்பினர். சில நிரந்தர செயலாளர்கள் இதனை எதிர்ப்பின்றி ஏற்றுக்கொண்ட அதேவேளையில் மற்றைய சிலர் அவ்வாறு நடந்துகொள்ள விரும்பவில்லை. இது இறுதியில் அமைச்சர்களுக்கும் அவர்களது நிரந்தர செயலாளர்களுக்கும் இடையே முறுகல் நிலையை ஏற்படுத்துவதற்கு வழிவகுத்தது. விட்டுக்கொடுத்து இணங்கி நடக்கும் பல அரச உத்தியோகத்தர்கள் மூலம் ஒத்துழைப்பு நல்காத அரச உத்தியோகத்தர்கள் ஓரம்கட்டப்பட்டார்கள். இது அதிகாரத்துவம் மிக்க தீர்மானங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர விரும்பிய அரசியல்வாதிகளின் விருப்பத்தின் வெளிப்பாடாக இருந்தது. சுதந்திர காலத்தை அடுத்து இந்தக் கட்டுப்பாடு அப்போதை சட்டமா அதிபராக இருந்த திரு ஹேமா பசநாயக்காவை பிரதம நீதிபதியாக நியமித்தமை, 1952 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் முதல் நாள் தேர்தல் நடைபெற வேண்டிய தேர்தற் தொகுதிகளை பிரதம மந்திரி தேர்ந்து எடுத்தமை, 1956 இல் மிகச் சாதாரண குடிமகன் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டமை, 1969 இல் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸின் நிரந்தர செயலாளர் நியமனம் போன்ற சம்பவங்களால் நன்கு வெளிப்படையாகவே தெரிவதாக இருந்தது. அரசாங்கத்திலிருந்து அமைச்சர்களுக்கும், அமைச்சர்களிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், அவர்களிலிருந்து பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் அவர்களிடமிருந்து அரசியற்துறை சார்ந்த குழுவினர்களுக்குமிடையே இத்தகைய தலையிடும் போக்கு புற்றுநோயைப் போல மிகவும் வேகமாகப் பரவி வளர்வதாயிற்று. இறுதியாக 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களினால் அமைச்சர்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோரின் நியமனங்களுக்கான பொறுப்பு மந்திரிசபைக்கு வழங்கப்பட்டது. இது அரசியற் தலையீடு சட்டபூர்வமாக நியாயமானது என்பதற்கு வழிசமைப்பதாக இருந்தது.

பிரித்தானிய ஆட்சியாளர்கள் நாட்டிலுள்ள வளங்களிலிருந்து வருமானத்தினைத் திரட்டுவதற்கு வசதிப்படுத்தும் முகமாக பொதுச்சேவைத் துறையினை வடிவமைத்தனர். 1948 இல் சுதந்திரம் கிடைக்கப்பெற்றதனை அடுத்து பொதுச் சேவையானது அபிவிருத்தியினைக் குறிக்கோளாகக்

---

2 இலங்கை (அரசியலமைப்பு) சபை ஒழுங்கு, 1947 இல் திருத்தப்பட்டது பிரிவு 58.

கொண்டதாக மாறியது. மக்களுக்கு தபால், புகையிரதப் போக்குவரத்து, சுகாதாரப் பராமரிப்பு, நீர்ப்பாசனம் போன்ற சேவைகளை வழங்குவதற்காகவும், நாட்டின் அபிவிருத்தியில் உதவி செய்வதற்காகவும் பல்வேறு அமைச்சுக்களில் பொதுத்துறை உத்தியோகத்தர்கள் பலர் நியமிக்கப்பட்டனர். அமைச்சரின் செயலாளர் அதன் நிருவாகத் தலைவராக விளங்கினார். அவர் கொள்கைத் திட்டமிடலில் அமைச்சருக்கு ஆலோசனை வழங்க வேண்டியவராகவும் இருந்தார். இந்தச் செயலாளர்கள் அமைச்சில் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்களாக இருக்கின்ற திணைக்களத் தலைவர்கள், மேலதிக செயலாளர்கள், பிரதிச் செயலாளர்கள், உதவிச் செயலாளர்கள் என்பவர்களைக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஆளணி உத்தியோகத்தர் அல்லது கசட் உத்தியோகத்தர்கள் எனவும் அழைக்கப்படுகின்றனர். பெரும்பாலான ஆளணி நிலையிலுள்ள உத்தியோகத்தர்கள் இலங்கை நிருவாகசேவை, அல்லது அதற்குச் சமமான தரத்தில் உள்ள இலங்கை கணக்காளர் சேவை, இலங்கை கல்வி நிருவாகச் சேவை போன்ற சேவைகளில் பணிபுரிபவர்களாக உள்ளனர். 1963 இல் இலங்கை சிவில் சேவையிலிருந்து உருவாகிய இலங்கை நிருவாக சேவையிலிருந்து உருப்பெற்றதே ஸ்ரீலங்கா நிருவாக சேவையாகும்.

குடியேற்ற ஆட்சி நடைபெற்ற காலத்தில் வழக்கில் இருந்த கச்சேரி முறை *(Kachcheri Systerm)* இன்றுவரையில் பல திருத்தங்களுடன் நடைமுறையிலிருக்கின்றது. ஆரம்ப காலங்களில் மாகாண அடிப்படையிலும், தற்போது மாவட்ட அடிப்படையிலும் நியமிக்கப்படுகின்ற அரசாங்க அதிபர்கள் மாவட்ட செயலாளர்கள் எனவும் அழைக்கப்படுகின்றனர். இவர்களே பல்வேறு மாவட்டங்களினதும் பிரதான நிருவாகத் தலைவர்கள் ஆவர். இவர்களுக்கு மாவட்ட மட்டத்தில் உதவி செய்வதற்காக மேலதிக அரசாங்க அதிபர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் (பிரிவுச் செயலாளர்கள்) ஆகியோர் உள்ளனர். இந்த உத்தியோகத்தர்கள் எழுதுவினைஞர்கள், அதனோடு இணைந்த தரத்திலுள்ள உத்தியோகத்தர் குழாம் ஒன்றினைப் பொது மக்களுக்கு சேவையாற்றும் நோக்கில் கொண்டிருக்கின்றனர்.

1987 ஆம் ஆண்டில் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம்[3] ஏற்றுக்கொள்ளப்பட்டதனைத் தொடர்ந்து மாகாணசபைச் சட்டம் (Provincial Councils Act)[4] நடைமுறைக்கு வந்த பின்னர் இலங்கையில் பொதுத்துறைச் சேவையானது மத்திய அரசாங்க பொதுச்சேவை, மாகாண பொதுச்சேவை என இரண்டு கிளைகளாகப் பிரிந்தது. மத்திய அரசாங்கத்தின் பொதுத்துறைச் சேவையினைத் தொடர்ந்தும், மந்திரிசபை தனது கட்டுப்பாட்டின் கீழ்

3 அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் உறுப்புரை 154 (அ)

4 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க சட்டத்தின் 32 (1) ஆம் பிரிவு

வைத்திருந்த அதேவேளையில், மாகாண சபைகள் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுக்களின்[5] ஊடாக ஆளுநர்களினால் நியமிக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட[6] அவர்கள் மாகாணப் பொதுச்சேவையினை தமது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்தனர். பொதுச்சேவையினைப் பன்முகப்படுத்துவது ஓர் அத்தியாவசியமான தேவையாக இருந்த அதேவேளையில் அது மாகாண நிருவாகத்தில் தொழில் புரிந்த பொதுத்துறை உத்தியோகத்தர்களையும் கூட மாகாண அரசியல்வாதிகளின் பிடிக்குள் சிக்குவதற்கு வழிவகுத்தது எனலாம்.

13 ஆவது திருத்தச் சட்டத்தின் உருவாக்கத்துடன் பிரதேச செயலாளர்கள் (Divisional Secretaries) தமது கடமைகளை இருநிலை ஆற்றல் ஒன்றில் நிறைவேற்ற வேண்டியவர்களாக இருந்தனர். மாகாண நிருவாகத்துக்கு மாற்றியமைக்கப்படாத விடயங்களில் அவர்கள் மத்திய அரசாங்கத்தின் கீழ் சேவையாற்ற வேண்டியிருந்தது. அத்துடன் மாகாண அமைச்சர்களினதும், மாகாணங்களின் பிரதம செயலாளர்களினதும் அதிகாரத்தின்கீழ் மாற்றிக் கொடுக்கப்பட்ட விடயங்களையும் அவர்கள் கவனித்துக்கொள்ள வேண்டியதாக இருந்தது. பிரதேச செயலாளர்கள் மாகாணப் பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் அதிகாரத்தின் கீழ் வராத பொழுதிலும் மாகாண சபைகளுக்கு மாற்றிக் கொடுக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக அவர்கள் மாகாண சபையின் பிரதான செயலாளருக்கு பதிலிறுக்க வேண்டியவர்களாக இருந்தனர். இது குறிப்பாக மத்தியில் அதிகாரத்திலிருந்த கட்சியினைவிட மாகாணத்தில் அதிகாரத்திலிருந்த கட்சி வேறுபட்டதாக இருந்த சந்தர்ப்பங்களில் பிரதேச செயலாளர்களை நம்பிக்கை குறைந்ததொரு நிலைக்கு இட்டுச் செல்வதற்கு வழிவகுத்தது. கிராம நிலதாரிகளைப் (Grama Niladharis) பொறுத்தும் இதே நிலை காணப்பட்டது. (முன்பு இவர்கள் கிராம சேவகர்கள் (Grama Sevakas) என அழைக்கப்பட்டனர்.[7] அடிமட்ட நிருவாக உத்தியோகத்தர்களாக இருந்தவர்களும் மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கம் என்ற அமைப்புக்களின் கீழ் சேவையாற்ற வேண்டியவர்களாக இருந்தனர்.

3. 2001 ஆம் ஆண்டில் சேவையின் நிலை

1972, 1978 ஆகிய ஆண்டுகளில் வடிவமைக்கப்பட்ட அரசியல் அமைப்புக்கள், சோல்பரி அரசியலமைப்பின் கீழ் பொதுச்சேவைகள் ஆணைக்குழு

---

5 *மேற்படி* பிரிவுகள் 32 & 33.

6 *மேற்படி*

7 குடியேற்ற காலத்தின்போது கிராமத் தலைவன் என அழைக்கப்பட்டான்.

கொண்டிருந்த அதிகாரங்களையும் தொழிற்பாடுகளையும் குறைத்து அவற்றினை மந்திரிசபையிடம் கையளித்தது. இது பொதுச்சேவைகள் ஆணைக்குழுவினதும் பொதுச்சேவையினதும் சுதந்திரத்துக்கு சாவுமணியடித்தது. இதன் விளைவாக எந்தவிதமான கேள்விகளும் கேட்காமல் அரசியல்வாதிகளின் தேர்வுகளையே பெரும்பாலும் நிறைவேற்ற வேண்டியவர்களாக இருந்த உத்தியோகத்தர்களைத் தமக்குக்கீழ் பணிபுரியும் பொதுத்துறை உத்தியோகத்தர்களாக அரசியல்வாதிகள் கருதும் நிலை இறுதியில் ஏற்பட்டது. 1956 இல் சிவில் நிருவாகத்திலுள்ள ஓர் உயர்ந்த பதவிக்கு அரசியல் நியமனம் ஒன்று மேற்கொள்ளப்பட்டபோது அது சுதந்திரமாக, நேர்மையாக, ஊழலற்ற முறையில் தொழிற்பட்ட பொச்சேவைத்துறை உயர் பதவிகளுக்காக உயர்நிலை உத்தியோகத்தர்கள், அரசியல்வாதிகளின் பின்னால் ஓடிச்செல்கின்றதொரு நிலை பரிதாபகரமான திட்டமாக மாற்றியமைக்கப்படுவதனை தொடக்கி வைத்தது எனலாம்.[8] அவர்களில் ஒருசிலர் இதனை நன்மையானதாகவும், இலாபகரமானதாகவும் கருதினார்கள். வேறு சிலர் அரசியல்வாதிகளின் விருப்புக்குரிய செயற்றிட்டங்களை அவை நிறைவேற்றுவதற்குச் சாத்தியமற்றவை, தோல்வியைத் தழுவும் என்பதைத் தெரிந்திருந்தும்கூட அச்செயற்றிட்டங்களை நியாயப்படுத்தும் அளவிற்குக்கூட இறங்கிச் சென்றனர். இலங்கைப் போக்குவரத்துச் சபையினை உருவாக்கிய வீதிப் போக்குவரத்துச் சேவையின் தேசிய மயமாக்கம் என்பது இதற்கு சிறந்த உதாரணமாகக் காணப்பட்டது. இந்த இயக்கம் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளைப் பெற்றுத்தரத் தவறியது. அதனால் தொடர்ந்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் இலங்கைப் போக்குவரத்துச்சபைச் சேவைகளுக்கு மேலதிகமாக தனியார் பஸ் சேவைகளை அனுமதிக்கவேண்டி ஏற்பட்டது.

1998 ஆம் ஆண்டில் வரவுசெலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்பொழுது அப்போதைய கல்வி, உயர்கல்வி பிரதியமைச்சராக இருந்த பேராசிரியர் வில்வ வர்ணபால பொதுச்சேவைகளில் காணப்பட்ட பிரச்சினைகளைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டார்:

> *சுதந்திரத்தின்பொழுது குடியேற்றவாதத்தின் பரம்பரைச் சொத்தாகக் காணப்பட்ட மிக உயர்ந்த முறையில் மையப்படுத்தப்பட்ட நிருவாக அமைப்பு ஒன்றினை இலங்கை கொண்டிருந்தது. இந்த பொது நிருவாக முறை சுதந்திர அரசு ஒன்றின் அபிலாசைகளுடன் ஒத்துப்போகக்கூடிய முறையில் தீவிர மாற்றங்களை வேண்டி நின்றது.*

---

8 Editorial, *Sunday Times*, 17th February.

சில பழமையான வழக்கிலுள்ள முறைகளும் ஒழுங்கு விதிகளும் தொடர்ந்து நடைமுறையில் இருப்பதற்கு அனுமதிக்கப்பட்டன. நவீன முறைகளும் எண்ணக்கருக்களும் இம்முறையில் புகுத்தப்படவில்லை. இது அதிகாரத்துவ முயற்சியின்மை, திறமையின்மை, நடைமுறை விடயங்களில் முழுமையான தோல்வி என்பனவற்றிற்குக் காரணமாக அமைந்தது.[9]

அமைச்சுக்களுக்கான செயலாளர்கள் அரசியலமைப்பின் கீழ் சிறப்பான இடம் ஒன்றினைக் கொண்டிருக்கின்றனர்.[10] அவர்களின் நியமனமும் பதவியிலிருந்து நீக்கும் நிலையும் சனாதிபதியின் முழுமையான விருப்பில் தங்கியிருப்பதனால் அதிகாரத்திலுள்ள கட்சிக்கு அவர்கள் விசுவாசமாக இருக்க வேண்டுமெனப் பொதுவாக வலியுறுத்தப்படுகின்றனர். இச் செயலாளர்கள் பொதுச்சேவையில் மிக உயர்ந்த நிலையில் இருப்பதனால் அவரது இளைப்பாறலின் பின் இராஜதந்திரப் பதவி ஒன்று வழங்கப்படுதல் அல்லது நியதிச்சபை ஒன்றில் நியமனம் பெறுதல் போன்றவற்றில் நம்பிக்கை வைத்திருப்பதனைத் தவிர மேலதிக பதவியுயர்வுகள் எதனையும் அவர் எதிர்பார்க்க முடியாது. இதில் வெளிநாடுகளில் இராஜதந்திர சேவையில் தொழில்புரிதல் என்பது சம்பந்தப்பட்ட அமைச்சரினதும் பதவியிலுள்ள கட்சியினதும் நம்பிக்கைக்குரியவராக தொடர்ந்து இருக்கும் பட்சத்திலேயே சாத்தியமானதாகும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் அவர் தனது பதவியினை இழத்தல், குழாம்[11] என்பதில் இடப்படுதல் போன்ற ஆபத்துக்களை எதிர்நோக்குவது மட்டுமன்றி தனது ஓய்வூதியத்தின் பின் உயர் பதவியொன்றைப் பெறும் சந்தர்ப்பத்தையும் இழக்கிறார். இதனால்தான் 2001 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னரும் பெரும்பாலான பொதுத்துறை உத்தியோகத்தர்கள் அரசியல்வாதிகளுக்கு 'ஆம்' போடும் உத்தியோகத்தர்களாக மாறினர்.[12] 2001 ஆம் ஆண்டு மார்கழி மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது அமைச்சர்களுக்கும் பாராளுமன்ற

---

9 பாராளுமன்ற விவாதங்கள் (ஹன்சாட்) தொகுதி 121, இலக்கம் 3, 23 கார்த்திகை 1998.

10 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் 52 ஆவது பிரிவு.

11 குழாம் (Pool) என்பது அதிகாரத்திலுள்ள, அரசாங்கத்திற்கு எதிராகக் குற்றங்கள் இழைப்பதன் மூலம் நிருவாகசபை உத்தியோகத்தர்கள் விடப்படும் ஒரு இடமாகும். இங்கு இவர்களுக்கு வழமையாக எந்தவித வேலைகளும் வழங்கப்படுவதில்லை. ஆனால் சம்பளம் வழங்கப்படும். இதனது கருத்து இவர்கள் உண்மையில் வரியிறுப்பாளர்களுக்கு ஒரு சுமையாக உள்ளனர் என்பதாகும்.

12 பொதுத்துறைச் சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பாக ஆணைக்குழுவின் அறிக்கை. மனித உரிமைகள் நிறுவனம். 21-12-2001, பக். 8.

உறுப்பினர்களுக்கும் அரச வாகனங்களையும் ஏனைய அரச மூலவளங்களையும் வழங்கியமை பொதுத்துறை உத்தியோகத்தர்களின் நடத்தையினை எடுத்துக்காட்டும் சிறந்ததொரு உதாரணமாக உள்ளது.[13]

தற்போது அழைக்கப்படுவதுபோல பொதுத்துறை ஊழியர்களும்[14] அரசியல் அமைப்பில் கூறப்பட்ட விதப்புரைகளுக்கமையவும், அரசின் விருப்பத்திற்கேற்பவும்[15] அலுவல்களை நடாத்தி வருகின்றனர். இந்த அரசியலமைப்பு கபினட் தரத்திலுள்ள அமைச்சர்[16] ஒருவருக்கு பொதுத்துறை ஊழியர்களின் நியமனம், இடமாற்றம், பதவி நீக்கம், ஒழுங்குக் கட்டுப்பாடு போன்றவற்றுக்கான அதிகாரங்களை அனுமதிக்கின்றது. எனினும் அரசியலமைப்பின் பிரிவு 56 இல் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கும் அரசியலமைப்பு மேற்குறிப்பிட்ட அதிகாரங்களை ஒப்படைத்துள்ளது. மறுபக்கத்தில் பொதுச்சேவைகள் ஆணைக்குழு தனது அதிகாரங்களில் பலவற்றை அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் திணைக்களத் தலைவர்களுக்கும் கையளித்துள்ளது.[17] அமைச்சர்களுக்கான செயலாளர்கள் சிரேஷ்ட பொதுத்துறை உத்தியோகத்தர்களிலிருந்து அமைச்சரவையினால் நியமிக்கப்படுகின்றார்கள். இறுதியில் இந்த முடிவு குறிப்பிட்ட பதவிக்கு மிகவும் பொருத்தமான தொழில்புரிகின்ற இயலளவு கொண்ட நபர் என்பதனைவிட சம்பந்தப்பட்ட அமைச்சரினால் பெரிதும் விரும்பப்படுகின்ற ஒருவர் அல்லது 'ஆம் ஐயா' போடும் ஒருவர் என்பதனாலேயே பெரிதும் தீர்மானிக்கப்படுகிறது எனலாம். எனினும் 2001 ஆம் ஆண்டு மார்கழி வரையில் சனாதிபதியின் செயலாளரே பிரதான நியமனத் தீர்மானம் செய்பவராக இருந்தார். இதுவரையில் இத்தகைய நியமனங்கள் நீதிமன்ற நியாயம் வேண்டி சவால் விடப்படவில்லையாயினும், அரச நிருவாக சேவைகள் சங்கம்[18] (State Administrative Service Association) அத்தகைய நியமனங்களில்

---

13 இந்தக் கட்டுரையில் ஏனைய துஷ்பிரயோக சம்பவங்கள் எல்லா இடங்களிலும் உள்ளன.

14 அரசியலமைப்பின் 170 ஆவது உறுப்புரை பின்வருமாறு வரையறை செய்கிறது: *குடியரசின் கீழ் எந்தவொரு சம்பளம் வழங்கப்படும் உத்தியோகத்தர் (அ) சனாதிபதி (ஆ) சபாநாயகர் (இ) அமைச்சர் (ஈ) நீதிச்சேவை ஆணைக்குழு அங்கத்தவர் ஒருவர் (உ) பொதுச்சேவை ஆணைக்குழு அங்கத்தவர் ஒருவர் (ஊ) பிரதியமைச்சர் ஒருவர் (எ) பாராளுமன்ற அங்கத்தவர் ஒருவர் (ஏ) பாராளுமன்ற செயலாளர் நாயகம் (ஐ) சனாதிபதி ஆளணியின் அங்கத்தவர் ஒருவர் (ஒ) பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் ஆளணியின் அங்கத்தவர் ஒருவர.*

15 அரசியலமைப்பின் உறுப்புரை 55 (1).

16 *மேற்படி.*

17 பிரிவு 58 (1) அத்தகைய அதிகார ஒப்படைப்பை வழங்குகின்றது

18 இது இலங்கை நிருவாக சேவையின் ஒரு தொழிற் சங்கமாகும்.

தனது திருப்தியின்மையைச் சுட்டிக்காட்டியுள்ளது. பொது நிருவாக அமைச்சரை சில காலங்களுக்கு முன்பு அவரது அமைச்சில் சந்தித்தபொழுது அரச நிருவாக சேவைகள் சங்கம் தனது திருப்தியின்மையை வெளிப்படுத்தியது. இவ்வாறிருந்த பொழுதிலும் பொதுத்துறைச் சேவைகளில் ஒருபோதும் சேவையாற்றாதவர்கள் கூட செயலாளர்களாகத் தெரிவு செய்யப்பட்ட சம்பவங்கள் உள்ளன. இளைப்பாறிய பொதுத்துறை ஊழியர்களும் அமைச்சர்களின் செயலாளர்களாக நியமிக்கப்பட்ட சம்பவங்களும் உள்ளன.[19] நியமன உரிமையில் அல்லது உறுதிப்படுத்தப்பட்ட தரமான சேவைப் பதிவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அத்தகைய நியமனங்கள் நல்ல செயலாளர்களை உருவாக்கியுள்ளன. உத்தியோகத்தரின் ஆற்றல், பொருத்தம், அனுபவங்கள், தகைமைகள், தகுதிகாண் நிலைமைகள் என்பன முழுமையாகக் கருத்திற் கொள்ளப்படாமல் மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு அரசியல் ரீதியான நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டபோது இந்நிலைமை மிகவும் மோசமடைந்தது. பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட புள்ளிகளைப் பெற்றிராதவர்கள் பலர் செயலாளர்களாக நியமிக்கப்பட்டார்கள் இதன் விளைவாக கடந்த பல வருடங்களாகப் பல சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் இப்பதவிகளை வகிப்பதற்கு தகுதி குறைந்தவர்களாகக் காணப்பட்டனர்.[20]

அரசாங்க சேவையில் தொழில்புரியும் உத்தியோகத்தர் ஒருவர் சேவைப் பாதுகாப்பினைக் கொண்டிருக்கின்றார் எனவும் அதேவேளையில் அவரைப்போல நிலையிலுள்ள தனியார்துறை உத்தியோகத்தர் அதனைக் கொண்டிருக்கவில்லை என்பது வழமையானதொரு அபிப்பிராயம் ஆகும். ஆனால் தனியார்துறை ஊழியருக்கு கிடைக்கின்ற சட்டரீதியான பாதுகாப்புக்களைக் கருத்திற் கொள்ளும்போது அவர்கள் தொழில் நீதிமன்றங்களின் ஊடாக நிவாரணம் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதனால் தன்னிச்சையான நியாயமற்ற தொழிலிழப்பிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்படுகின்றார்கள். பொதுத்துறை ஊழியர்கள் அத்தகைய பாதுகாப்பினைக் கொண்டிருப்பதில்லை.[21] பொதுத்துறை ஊழியர்கள் 60 வயது வரை சேவையில் தொடர்ந்து இருப்பதற்கான சட்டரீதியான உரிமையைக் கொண்டிருக்கின்ற போதிலும் அச்சேவையில் குற்றம் இழைக்கும்

---

19 கடைசியாக இருந்த தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர், கடந்த ஆட்சிக் காலத்தின்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக மந்திரிசபையினால் மேற்கொள்ளப்பட்ட நியமனம் இதற்கான ஓர் உதாரணமாகும்.

20 Somasundaram, M., The Third Wave – *Governance and Public Administration in Sri Lanka* (ICES, Colombo, 1997). p. 37.

21 Gankanda, D. P., "How Secure is the Public Service", *Daily News*, 16th February 1996.

ஊழியர்கள் வசதிகுறைந்த இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுதல், சேவையில் தொடர்ந்து இருக்க முடியாத வகையில் பதவியிறக்கம் செய்யப்படுதல் போன்ற தண்டனைகளை எதிர்நோக்க வேண்டியவர்களாக உள்ளனர். மேல்நீதிமன்றங்களின் அடிப்படை உரிமைகள் நியாயாதிக்கம் ஊடாக நிவாரணம் பெறுதல் என்பது பொதுத்துறை ஊழியர்களைப் பொறுத்தமட்டில் செலவு மிகுந்ததாகவும், குழப்பம் நிறைந்த ஒழுங்குவிதிகள், நேரக்கட்டுப்பாடு என்பனவற்றின் காரணமாக அதிகளவு நடைமுறைகள் பயன்பாட்டில் இல்லாததாகவும் காணப்படுகின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில் விரைவானதும் பயன்தரு நிவாரணங்களையும் வழங்கக்கூடிய வகையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் குறைகேள் அதிகாரியும் போதுமான அதிகாரங்களைக் கொண்டிருப்பதில்லை.

அரசியலமைப்பின் பிரிவு 55 (5) பொதுத்துறை ஊழியர்களைப் பொறுத்தமட்டில் தீங்கு ஏற்படுத்தக் கூடியது, விரோதமானது என்றும் கூறலாம். அப்பிரிவு பின்வருமாறு கூறுகிறது:

> *மேல் நீதிமன்றங்களில்[22] கலந்தாலோசிக்கப்படுகின்ற நியாயாதிக்கம் தொடர்பாக எந்தவொரு நீதிமன்றமோ அல்லது தொழில் மன்றமோ பொதுத்துறை ஊழியர் ஒருவரின் நியமனம், இடமாற்றம், பதவி விலக்கல், அல்லது ஒழுக்கக் கட்டுப்பாடு தொடர்பாக அமைச்சரவை அல்லது அமைச்சர்கள், அல்லது அமைச்சர், பொதுச்சேவை ஆணைக்குழு, பொதுச்சேவை ஆணைக்குழுவின் குழு ஒன்று, பொதுத்துறை ஊழியர் ஒருவர் மேற்கொள்ளும் தீர்மானங்களின் மீது விசாரணை செய்யவோ கருத்துக்கள் தெரிவிக்கவோ அல்லது எந்தவிதமான கட்டளைகளையும் பிறப்பிக்கவோ அதிகாரமோ, நியாயாதிக்கமோ கொண்டவையல்ல.*

எனினும், உறுப்புரை 12 (1) இல் எடுத்துக்காட்டியவாறு மேல் நீதிமன்றம் பொதுத்துறை ஊழியர்களின் இடமாற்றம், ஒழுக்கக் கட்டுப்பாடு, பதவி விலக்கல் போன்றவற்றில் தனக்கு நியாயாதிக்கம் இருப்பதாகத் தொடர்ந்து கூறிவருகிறது. அமைச்சர்களினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்குக் கூட காரணங்கள் கொடுக்கப்பட வேண்டுமெனவும் நீதிமன்றம் தொடர்ந்து கூறிவருவதுடன் இயற்கை நீதியின் ஒழுங்கு விதிகள் பின்பற்றப்பட வேண்டுமெனவும் எடுத்துக்காட்டி வருகிறது.[23] இயற்கை நீதி விதிகளின்

---

22 அரசியலமைப்பின் உறுப்புரை 126, பந்தி 1.

23 சட்டமும் பொதுத்துறைச் சேவையும் பற்றிய பகுதியில் கலந்துரையாடப்பட்ட வழக்குகளை தயவுசெய்து பார்க்கவும்.

இந்த தேவைகளுடன் இணைந்து செயற்படுதல் என்பது விதி என்பதற்கு விதிவிலக்காக உள்ளது. தமக்கு நியாயம் கிடைக்க வேண்டுமெனக் கேட்டு அதற்காகச் செலவிடக்கூடிய பொதுத்துறை ஊழியர்கள் ஒரு சிலரே உள்ளனர்.

4. பொதுச் சேவையினைச் சீர்திருத்தும் முயற்சிகள்

1969 ஆம் ஆண்டில் அப்போதைய பிரதம மந்திரியின் ஒப்புதலுடன் நிதியமைச்சினால் நியமிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் உத்தியோகத்தர் குழு ஒன்றின் சிபார்சின் அடிப்படையில் பொதுநிருவாக அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டது.[24] இணைந்த சேவைகள் பிரிவு, நிருவாக சீர்திருத்தப் பிரிவு, தாபனப்பிரிவு ஆகிய மூன்று பிரிவுகளை தற்போது கொண்டுள்ள இந்த அமைச்சின் உருவாக்கத்துடன் பொதுத்துறைச் சேவையின் சீரழிவு நிலை தடுத்து நிறுத்தப்பட முடியுமென நம்பப்பட்டது.

பொது நிருவாக அமைச்சின் வலையமைப்பு பற்றி[25] கவனமான பரிசீலனை ஒன்றின்படி அரசாங்கத்தினால் அடையாளப்படுத்தப்படுகின்ற தேசிய முன்னுரிமைகள், மக்களின் அபிலாசைகள் என்பனவற்றிற்கு முக்கிய இடமளித்து பிரதேசரீதியான நிருவாக முறைமை, திறமையானதும் பயன்தருவதுமான பொதுத்துறைச் சேவை என்பவற்றை உறுதிப்படுத்துவதே இந்த அமைச்சின் பிரதான குறிக்கோள் என்று எடுத்துக் கூறுகிறது. இந்த வலையமைப்பு அமைச்சின் பிரதான நோக்கங்களாக பின்வருவனவற்றைப் பட்டியலிடுகின்றது:

- பொதுச்சேவை முகாமைத்துவத்தினதும் பிரதேச நிருவாக முறையினதும் திறமையினையும் பயன்தரு நிலையினையும் உயர்த்துதல்

- பொதுமக்களின் திருப்திக்கு ஏற்ற வகையில் அரச சேவைகளை வழங்குதல்

- அரசாங்கத்தினால் வகுக்கப்பட்ட அபிவிருத்தி நோக்குகளை அடைவதற்கு ஏற்றவகையில் பொதுத்துறைச் சேவைகளுக்கு அதிகாரம் வழங்குதல்.

---

24 Nadarajah, S., "Evolution of Administrative Reforms", in Somasundaram, M., *Supra* n 20, p. 251.

25 http//www.gov.lk/public/index.htm, சித்திரை 2002 இல் பெறப்பட்டது.

5. சீர்திருத்தத்தின் விளைவுகள்

பொதுச்சேவையினை பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அத்துறையின் திறமை, பயன்தருநிலை அல்லது ஒன்றிணைவு தொடர்பாக குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படவில்லை. 2000 ஆம் ஆண்டில் சனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க இந்தச் சேவையினை மறுசீரமைப்பதற்கு முயற்சி எடுத்த வேளையில் தொடர்ந்து சீரழிந்து வந்த இந்த சேவை சீரழிவின் உச்ச நிலையை எட்டியது எனலாம்.

2000 ஆம் ஆண்டு ஆவணியில் சனாதிபதி பொதுச் சேவையில் காணப்படும் பிரச்சினைகளை அறிந்து கொள்வதற்காகவும் அதனது சீர்திருத்தத்திற்கான சிபார்சுகளை மேற்கொள்வதற்காகவும் பொதுச்சேவைகள் முகாமைத்துவ அபிவிருத்தி அதிகாரசபை ஒன்றினை நிறுவினார். இந்தச் சபையின் தலைவராக சிரேஷ்ட பொதுத்துறை ஊழியர் ஒருவரும், அவருக்கு உதவியாக அவருக்கு சமமான நிலையிலுள்ள மற்றொரு சிரேஷ்ட ஊழியரும் கடமையாற்றினார். இவர்களுடன் ஆய்வு உத்தியோகத்தர்கள் குழாம் ஒன்றும் கடமையாற்றியது. இந்தச் சபையின் தலைவர் அதிகாரசபை அடைந்த முன்னேற்றம் குறித்து ஒழுங்காக சனாதிபதிக்கு அறிவிக்க வேண்டும்.

2001 ஆம் ஆண்டில் இந்த அதிகாரசபை பதிவாளர் நாயகம் அலுவலகம், ஆட் பதிவுத் திணைக்களம் மற்றும் ஒரு சில பிரதேச செயலாளர் அலுவலகங்கள் போன்ற தெரிவு செய்யப்பட்ட சில திணைக்களங்களின் வேலை நிலைமைகளை அறிந்து கொள்வதற்காக சில அளவீடுகளை மேற்கொண்டது. அதிகாரசபையின் சில அதிகாரிகள் தேவையான நடவடிக்கையின் பொருட்டு பொது நிருவாக அமைச்சிற்கு சிபார்சுகள் மேற்கொள்ளப்பட்டதாக அறிவித்தார்கள்.[26] இந்த அதிகாரிகளின்படி பொதுத்துறைச் சேவையின் பிரதான பிரச்சினைகளாவன: பொறுப்பின் பற்றுக்குறை, பொதுத்துறை ஊழியர் கையாளும்படி கொடுக்கப்பட்ட விடயத்தில் அவருக்கு அறிவு இல்லாமை, பயன்தரு மேற்பார்வை இல்லாமை, போதுமான ஊக்குவிப்பின்மை, இவையெல்லாவற்றிற்கும் மேலாக அரசியல் தலையீடு என்பனவாகும்.

இந்த அதிகாரசபை பாராளுமன்ற சட்டம் ஒன்றினால் நிறுவப்படவில்லை. இச்சபை அதன் உருவாக்கத்தை நியாயப்படுத்தக்கூடிய வகையில் சொந்தமாக எந்தவித பயன்தரு மாற்றங்களையும் ஏற்படுத்த முடியவில்லை. இக் காரணத்தினால்தான் இந்த அதிகாரசபையின்

---

26 எழுத்தாளர் அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் சிலரிடமிருந்து இதனைப்பற்றி அறிந்து கொண்டார்.

ஆளணியினர் பொதுநிருவாக அமைச்சின் நிருவாகச் சீர்திருத்தப் பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்டார்கள்.

அபயரட்ன குழுவின்[27] சிபார்சு ஒன்றின் கீழ் புதிதாக சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட எழுதுவினைஞர்களையும் அவர்களுக்குச் சமமான சேவையில் உள்ளவர்களையும் பயிற்றுவிக்கும் பொருட்டு பயிற்சித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.[28] 2001 ஆம் ஆண்டில் அத்தகைய 700 உத்தியோகத்தர்கள் இலங்கை நிருவாக அபிவிருத்தி நிறுவகத்தினால் பயிற்றுவிக்கப்பட்டார்கள்.

பொதுத்துறைச் சேவைகளை மறுசீரமைக்கும் பொருட்டு இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் முன்பு காணப்பட்ட அதேவிதமான அதிகாரக் கட்டுப்பாடுகளும் அதிகார வர்க்க நிறுவனங்களும் தொடர்ந்துவரும் நிலையில் பொதுத்துறைச் சேவை மக்களிலிருந்து விலகிக் காணப்பட்ட ஒன்றாகவும் அதிகாரத்துவம் நிறைந்ததொன்றாகவுமே விளங்கியது.

அரசாங்கத் திணைக்களங்களில் மனித சக்திப் பற்றாக்குறையினாலும் மூலவளப் பற்றாக்குறையினாலும் முடமாக்கப்பட்டு இயங்க முடியாத நிலையிலிருந்த திணைக்களமாக தபாற் திணைக்களம் காணப்பட்டது.[29] மேலும் பிரதம தபால் அலுவலகம் சனாதிபதியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டதுடன் தபாற் திணைக்களம் இடநெருக்கடி, தரம் குறைந்த வேலை செய்யும் நிலைமைகள் என்பனவற்றிற்கு வழிவகுத்து பொருத்தமற்ற கட்டிடம் ஒன்றிற்கும் மாற்றப்பட்டது, இந்த நிலைமைகள் திணைக்களத்தின் வெளியீட்டைப் பாதித்தன.[30]

6. பொதுத்துறைச் சேவையினால் ஏற்படுத்தப்பட்ட துஷ்பிரயோகங்களும் பொதுத்துறைச் சேவையின் துஷ்பிரயோகங்களும்

2001 ஆம் ஆண்டில் பொதுத்துறைச் சேவையில் இடம்பெற்ற துஷ்பிரயோகங்களும் அத்துறையினால் ஏற்படுத்தப்பட்ட துஷ்பிரயோகங்களும் அளவுகடந்து காணப்பட்டன. அவற்றுள் ஒருசில இங்கு காட்டப்படுகின்றன.

---

27 1990 களின் ஆரம்பத்தில் பொதுத்துறைச் சேவையினைச் சீர்திருத்துவதற்கான சிபார்சுகளை முன்வைப்பதற்கு சனாதிபதி பிரேமதாசாவினால் நியமிக்கப்பட்டது.

28 ஹன்சாட் தொகுதி 135, இல.14, நிரல் 2348.

29 Nilika de Silva and Tania Fernando, "Mail Going Down the Drain", *Sunday Times*, 3rd February.

30 *மேற்படி.*

(அ) அரச சொத்துக்களின் துஷ்பிரயோகம்

2001 ஆம் ஆண்டு மார்கழி மாத பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் பொது மூலவளங்களின் துஷ்பிரயோகம் தொடர்பாக மனித உரிமைகள் நிறுவனத்தின் ஆய்வின் இறுதி அறிக்கையின் பிரகாரம்:

> *சகல பொதுத்துறை ஊழியர்களும் நிதிசார்ந்த ஒழுங்குகளினால் கட்டுப்படுத்தப்படுகிறார்கள். இதனால் அது தொடர்பான எந்த வரம்பு மீறல்களுடனும் சம்பந்தப்பட்ட பொதுத்துறை ஊழியருக்கு எதிராக கடுமையாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல சகல பொதுக் கூட்டுத்தாபனங்களினதும் ஒழுக்கக் கோவைகளும் நிதிச்சட்டத்தின் நிபந்தனைகளும் பொது மூலவளங்களைப் பாதுகாப்பதற்கு பொதுக் கூட்டுத்தாபனங்களுக்கு வழிகாட்டுகின்றன. எவ்வாறாயினும் இந்த ஒழுங்கு விதிகள், சட்டங்கள் என்பனவற்றை முற்றாகப் புறக்கணித்து பொதுச் சொத்துக்களின் துஷ்பிரயோகம் இடம்பெறுகின்றது. இந்த சொத்திழப்புக்களைவிட பொதுத்துறையிலுள்ள ஒழுக்கம் என்பது அதிகாரத்திலுள்ளவர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற வரம்பு மீறல்களின் முன் முற்றாகவே சீரழிந்து விட்டது.*[31]

2001 ஆம் ஆண்டில் பொது மூலவளங்களான அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் மிகவும் மோசமானமுறையில் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகின. இவற்றில் பெரும்பாலானவை தேர்தலுடன் தொடர்புபட்டவையாகக் காணப்படுகின்றன. பொதுச் சொத்துக்களின் பாதுகாப்பிற்கான மனித உரிமைகள் நிகழ்சசித் திட்ட நிறுவனத்திற்கு பொதுசன முன்னணி அரசாங்கத்தினால் தேர்தல் வேலையின் பொருட்டு அரசுக்குச் சொந்தமான 433 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.[32] எனினும் பொதுக் கூட்டங்களில் சனாதிபதியினால் அவ்விதமாக அரச வாகனங்கள் தேர்தல் வேலைகளுக்காக பயன்படுத்தப்பட மாட்டாது என உறுதி வழங்கப்பட்டது. மற்றொரு அறிக்கையின்படி பொதுசன முன்னணி அரசாங்கத்தின் அரசியல் வாதிகளினால் உபயோகிக்கப்பட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரசுக்குச் சொந்தமான வாகனங்கள் அரச நிறுவனங்களுக்குத் திருப்பிக்

---

31 *மேற்படி*, பந்தி 6.3 பக். 15.

32 *Supra* n 12, பக். 8.

கையளிக்கப்படவில்லை எனத் தெரிகின்றது. இந்த அறிவித்தலைச் செய்ததாக பத்திரிகைகளில் குறிப்பிடப்பட்டுள்ள புதிதாக நியமனம் பெற்ற பாராளுமன்ற விவகார அமைச்சர் இந்த ஒழுங்கீனங்களை விசாரணை செய்வதற்காக அரச பாராளுமன்ற ஆணைக்குழு ஒன்றினை நியமித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.[33] வாகனங்களின் பராமரிப்புக்கும் பாதுகாப்புக்கும் பொறுப்பாக இருக்கும் பொதுத்துறை ஊழியர் ஒருவரே இந்த வாகனங்கள் ஒவ்வொன்றிற்கும் வகைகூற வேண்டியவராக இருப்பார். தொழில்நுட்பரீதியில் இந்த வாகனங்களுக்குச் சொந்தமான திணைக்களத்தின் தலைவரே அவற்றிற்குப் பொறுப்பாக இருப்பார். இந்த வாகனங்களின் துஷ்பிரயோகத்திற்கு அவர்கள் நேரடியாக அல்லது மறைமுகமாக பொறுப்பாக இருந்தனர்.

இதே நிலைமை அரச வதிவிடங்கள் தொடர்பாகவும் எழுகிறது. அத்தகைய பல வதிவிடங்கள் அவர்களின் தேர்தல் செயலகமாக பயன்படுத்துவதற்கு கிடைத்ததாக தொடர்பு சாதனங்களில் அறிவிக்கப்பட்டது. அத்தகைய கட்டிடங்களில் ஒன்று அக்லன்ட் கவுஸ் (Ackland House) எனப்படும் இன்றைய 'விசும்பாய' ஆகும். இந்தக் கட்டிடம் இன்று கொழும்பு மாவட்டத்தின் பாராளுமன்ற அங்கத்தவராக இருக்கும் அர்ஜுன ரணதுங்காவினால் வதிவிட தேர்தல் அலுவலகமாக உபயோகிக்கப்பட்டது.

(ஆ) அதிகார அல்லது பதவி நிலையின் துஷ்பிரயோகம்

தகவற் பணிப்பாளர் திரு. ஆரிய ரூபசிங்க பாதுகாப்புத்துறை படை வீரர்களுக்கு விநியோகம் செய்வதற்காக யாழ்ப்பாணத்திற்கு விமானம் மூலம் 72,000 தேர்தற் பிரசார துண்டுப் பிரசுரங்களை அனுப்பி வைத்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்.[34] ஆளும் கட்சியின் தேர்தற் பிரசார துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதற்கு அரச விமானப் போக்குவரத்தினைப் பயன்படுததியமை ஒருவர் தனது பதவி நிலையினைத் தவறாகப் பிரயோகம் செய்த மற்றொரு சம்பவமாகும்.

தொடர்பு சாதனத்துறை பொதுச்சேவைப் பிரிவைத் தவறாகப் பிரயோகம் செய்த மற்றொரு சம்பவமும் வெளிப்படுத்தப்பட்டது. இம்முறை 2001 ஆம் ஆண்டில் வெளிநாட்டுச் சேவையில் பணிபுரிவதற்கு உத்தியோகத்தர்களைத் தெரிந்தெடுப்பதற்கு வெளிவிவகார அமைச்சினால் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் இந்தத் துஷ்பிரயோகம் இடம்பெற்றது[35] பல ஒழுங்கீனங்களைச் சுட்டிக்காட்டி முன்னைய நிருவாகத்தினால் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு

---

33 *Daily News* பத்திரிகையின் பத்திராதிபர் குறிப்பு, 20 மாசி 2002.

34 *மேற்படி*, பக். 18.

35 *டெய்லி நியூஸ்*, 21 மாசி 2002.

எதிராகப் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதன் பின்னர் பொதுச்சேவைகள் ஆணைக்குழு புதிய நேர்முகப் பரீட்சைகளை நடாத்தும்படி கட்டளையிட்டுள்ளதாக இந்த அறிக்கை மேலும் குறிப்பிடுகின்றது.[36]

பொலிஸ் திணைக்களத்துடன் சம்பந்தப்பட்ட மற்றொரு சம்பவத்தில் 34 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களை பொலிஸ் அத்தியட்சகர்களாகப் பதவி உயர்த்துவதற்கு முன்னைய நிருவாகத்தின் தீர்மானம் ஒன்றினால் 46 உதவிப் பொது அத்தியட்சகர்கள் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகக் குற்றம்சாட்டி மேல் நீதிமன்றத்தில் வழக்கும் பதிவு செய்துள்ளனர்.[37]

அரசின் வளங்களைத் தவறாகப் பிரயோகம் செய்தல் அல்லது அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்தல் போன்றவற்றில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக பொதுத்துறை ஊழியர்கள் எதுவித நடவடிக்கைகளும் எடுக்காமல் இருப்பதற்கு அரசியல்வாதிகள் மிக உயர்ந்த மட்டத்தில் தமது அதிகாரங்களைப் பயன்படுத்துவதே பிரதான காரணமாக உள்ளது. பல அமைச்சர்களும் பிரதியமைச்சர்களும் வாகனங்கள் போன்ற அரச மூலவளங்களைத் தவறாகப் பிரயோகம் செய்தல் உட்பட தமது சொந்த நலன்களுக்காகத் தன்னிச்சையாக தமது அரசியல் அதிகாரங்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

7. பொதுத்துறை ஊழியர்களின் வகைசொல் நிலைமை

வகைசொல் நிலைமை என்பது திருப்திகரமான விளக்கம் ஒன்றினை வேண்டி நிற்கின்ற உரிமையைக் கொண்டவர்களுக்கு திருப்திகரமான விளக்கம ஒன்றினை வழங்கும் நபருக்குரிய கடமைப்பாடாக வரைவிலக்கணம

---

36 *மேற்படி*

37 Editorial Note: 2002 மாசி மாதம் உயர் நீதிமன்றம் புதிய நேர்முகப் பரீட்சைகள் பொலிஸ் திணைக்களத்தினால் நடத்தப்பட வேண்டும் எனப் பணித்தது. நீதிமன்றம் இதற்குப் பொறுப்பான 52 பேர்களில் முதல் நான்கு பேர்களாகிய பொலிஸ் அதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், கலாச்சார அமைச்சின் முன்னைய செயலாளர், தபால், தொலைத்தொடர்பு அமைச்சின் முன்னைய செயலாளர், வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் (இவர்கள் யாவரும் நேர்முகப்பரீட்சைச் சபை அங்கத்தவர்கள்) ஆகியோர் நட்டஈட்டில் ஒரு பகுதியினை தனிப்பட செலுத்த வேண்டுமெனக் கட்டளையிட்டது. மேலும் நீதிமன்றம் இந்த நோக்கத்திற்காக நேர்முகப் பரீட்சைச் சபை எதிர்காலத்தில் அமரும்பொழுது இவர்கள் அதில் இடம்பெறக் கூடாது எனவும் கட்டளையிட்டது. அத்துடன் இலஞ்ச ஊழல் சட்டம் அல்லது வேறு ஏதாவது சட்ட ஏற்பாடுகளின் கீழ் தண்டிக்கப்பட முடியுமென்பதைக் கருத்திற் கொள்ளுமாறு சட்டமா அதிபர் கேட்கப்பட்டுள்ளார்.

செய்யப்படுகின்றது.[38] இந்திய நீதிபதி ரெஹ்மான் என்பவர் ஒருவரின் நடவடிக்கையினை நியாயப்படுத்தும், விளக்கும், தெரிவிக்கும் கடமைப்பாடு என வகைசொல் நிலையினை (Accountability) வரைவிலக்கணப் படுத்துகிறார். இது பொறுப்புடன் இணைந்ததொன்றாகும். ஒருவகையான பொறுப்பும் இன்றி வகைகூறுதல் என்பது இருக்க முடியாது.[39] 2001 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பொதுத்துறை ஊழியர்களின் அதிகார துஷ்பிரயோகத்தின் அளவினை ஒருவர் நோக்குவாரானால் அவர்கள் எந்தவிதமான பொறுப்போ வகைசொல் நிலையோ இன்றிச் செயற்பட்டனர் என்பதைத் தெளிவாகக் கண்டுகொள்வார்.

முன்னணிச் செய்திப் பத்திரிகையில் இடம்பெற்ற பின்வரும் கருத்துக்களினால் இந்த அபிப்பிராயம் மேலும் உறுதிப்படுத்தப்படுகிறது.

> *இறுதி ஆட்சியின் இறுதிக் கால மாதங்களின் போது நிலைமை கைகடந்து விட்டது. பத்திரிகைகள் எடுத்துக் கூறியவை புதிய அரசாங்கத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன் ஆவணப்படுத்தப்பட்டும் உள்ளன. எனினும் கடந்த அரசாங்கத்தின் வகைசொல்நிலையின் பற்றாக்குறை பற்றிய விமர்சனங்கள் வகைசொல் நிலையின் தத்துவங்களைத் தாமாகவே நன்கு விளங்கி அதனை நிச்சயப்படுத்துவதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கைகளை புதிய அரசாங்கம் எடுக்காவிட்டால் பெரிதாக எதனையும் செய்துவிட முடியாது. தாம் எதிர்க்கட்சியில் இருந்தபொழுது கூறியவற்றை தாம் பதவிக்கு வந்த பின்னர் பொதுவாகப் பின்பற்றுவதில்லை. கடந்த பல வருடங்களாக வகைசொல்லும் நிலை படிப்படியாகத் தேய்வடைந்து போனமைக்கு உண்மையில் இதுவே காரணமாகும்.*[40]

பொதுத்துறை ஊழியர்கள் தமது கடமை தொடர்பாக செயலாற்றுவதற்கு சிறப்பான செயற்பாடுகளைக் கொண்டிருக்கின்றனர். பொதுமக்களின் நன்மைக்காக, இந்தத் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு வசதியாக ஒவ்வொரு உத்தியோகத்தரும் நம்பிக்கையுடன் செயற்படுவதற்கான வளங்களை அரசாங்கம் வழங்குகின்றது. இந்த மூலவளங்கள் என்ன

---

38 *Administrative Accountability* by Justice Rehman (1987) Mimico Unpublished, Islamabad, quoted by Somasunderam, *supra* n 20, p. 375.

39 *மேற்படி*

40 Special Report by *Sunday Times* Economic Analysis, 24th February 2002, p. 10.

நோக்கத்திற்காக வழங்கப்பட்டனவோ அதன் பொருட்டு உபயோகித்தலும், அவற்றை மிகவும் கவனமாக உபயோகித்தலும் ஒவ்வொரு பொதுத்துறை ஊழியரினதும் கடமையாகும். அத்தகைய வளங்கள் தவறான முறையில் உபயோகிக்கப்பட்டால் அதற்குப் பொறுப்பான பொதுத்துறை ஊழியரே அதற்கு வகைசொல்ல வேண்டியவராக இருப்பார். 2001 ஆம் ஆண்டு காலத்தின்போது பொதுத்துறை ஊழியர்கள் அமைச்சுக்கள் அல்லது திணைக்களங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியத்தை அவை கருத்திற் கொள்ளாத பல நோக்கங்களுக்காகச் செலவிட்ட பல சம்பவங்கள் காணப்படுகின்றன. எனினும் அவர்கள் இந்தத் தவறான பிரயோகத்திற்காக வகைசொல்ல வேண்டியவர்களாக்கப்படவில்லை.

2001 ஆம் ஆண்டில் பொதுத்துறையில் காணப்பட்ட வேலைப் பிரச்சினைகள் தொடர்பாக கிஷாலி பின்ரோ ஜெயவர்த்தன பின்வருமாறு தெளிவுபடுத்துகிறார்:

> *"கடந்த பல வருடங்களாக பொதுத்துறை வேலையில் வகைசொல் நிலைமை முழுமையாக முடிவடைந்து விட்டபோதிலும் அதனது உண்மையான பகட்டான நிலை அளவிடப்பட வேண்டியதாக உள்ளது. நாம் இப்பொழுது இந்தச் சீரழிவின் சில பகுதிகளை தெரிவிக்கத் தொடங்கியுள்ளோம்."*[41]

இப்பொழுது அரசாங்க மாற்றம் இடம்பெற்றுள்ளது. இத்தகைய நடவடிக்கைகளில் விசாரணை ஒன்றினை ஆரம்பிப்பதன் மூலம் எவ்வளவு தூரத்திற்கு வகைசொல்ல வேண்டிய பொதுத்துறை ஊழியர்கள் தொழில் புரிகிறார்கள் என்பதனைத் தெரிந்துகொள்ளல் பயனுடையது. அத்தகையதொரு நடவடிக்கை மூலம் எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாவண்ணம் தடுக்கக் கூடியதாக இருக்கும். அத்துடன் தமது கடமைகளை நிறைவேற்றும்போது மற்றய பல பகுதிகளில் இருப்பது போல பொதுச்சேவையிலும் பரந்து காணப்படுகின்ற தண்டனையில் இருந்து தப்பித்தல் என்ற கலாசாரத்தைத் தடைசெய்யவும் பிரயோசனமாக இருக்கும்.

பொது வகைசொல் நிலையின் அடிப்படைத் தத்துவமாக இருப்பது பாராளுமன்றத்திலிருக்கும் மக்கள் பிரதிநிதிகள் மக்கள் நன்மைக்காகத் தமது நிதியத்தைச் சரியாக ஒதுக்கிக் கட்டுப்படுத்தி வைத்திருப்பதுடன் அதனைச் சரியாகப் பயன்படுத்துவதும் ஆகும். அரசியலமைப்பு அடிப்படையில் பொது வகைசொல் நிலையினை அரசாங்கம் தேய்வடையச் செய்த வழிகளில் ஒன்றாக உண்மையாக எதிர்பார்க்கப்படுகின்ற செலவுகளை வரவு

---

41 *சண்டே ரைம்ஸ்*, 24 மாசி 2002.

செலவுத்திட்டத்தில் உள்ளடக்காது மிகைநிரப்புப் பிரேரணைகள் மூலம் மேலதிக தொகைகளைப் பெற்றுக்கொள்ளுதல் உள்ளது. வரவு செலவுத்திட்ட விவாதத்தில் நடப்பதுபோல முழுமையான விவாதமின்றி பாராளுமன்றத்திற்கூடாக இந்த மிகைநிரப்புப் பிரேரணைகள் நிறைவேற்றப்படுவது இங்கு குறிப்பிடத்தக்க காரணியாகும். அதிகளவு தொகைக்காக மேலதிக பிரேரணைகள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுதல் பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட விவாதங்களில் இடம்பெறும் துல்லியமான பரிசீலனைகளை அர்த்தமற்றதாக்குகின்றன.

8. நீதித்துறை மீளாய்வும் பொதுத்துறைச் சேவையும்

சனநாயகத்தில் பொதுத்துறை ஊழியர்களுக்கு அப்பால், நாட்டின் பிரஜைகள் நிருவாக அதிகாரிகளின் நடவடிக்கைகளுக்கு சவால் விடக்கூடியவர்களாகவும் அவற்றைப் பற்றி கேள்வி கேட்கக்கூடிய திறமை, உரிமை என்பனவற்றைக் கொண்டவர்களாகவும் இருத்த வேண்டும். அது அரசும் நிருவாக உத்தியோகத்தர்களும் அவர்களுடைய நடவடிக்கைகளுக்கு வகை கூறவேண்டியநிலை, நீதியுடன் செயற்படல் போன்றவற்றை உறுதிப்படுத்தும். எங்கெங்கு அதிகாரம் இருக்கின்றதோ அங்கெல்லாம் அதிகாரத்தை உபயோகிப்பதில் மிகை காணப்படுகின்றது என்று சொல்லப்படுகின்றது. இந்த அதிகார மிகையினைக் கட்டுப்படுத்தும் வழிகளில் ஒன்றாகவே நீதித்துறை விளங்குகின்றது.[42]

இயற்கை நீதித் தத்துவங்களை மீறுதல், தற்றுணிபு அதிகாரத்தினைத் தவறான வழியில் பிரயோகம் செய்தல், தன்னிச்சையான கட்டளைகளை வழங்குதல் போன்ற குற்றங்களை எடுத்துக்காட்டி நிருவாக நடவடிக்கைகளுக்கு எதிராக அவற்றினால் பாதிக்கப்பட்டவர்களினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பாக அண்மைக் காலங்களில் மேல் நீதிமன்றங்களினால் பல தீர்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஜெயவர்த்தன எதிர் நீதி அமைச்சின் செயலாளர்[43] *தரணி விஜயதிலக மற்றும் ஏனையோர்* வழக்கில் முன்பு கூட்டுறவுப் பரிசோதகராக இருந்து பின்பு திடீர் மரண விசாரணையாளராக மாறிய சேவைகளின் தொடர்பில் ஜே. பெர்னாண்டோ பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

---

42 Mario Gomez, *Emerging Trends in Public Law* (1998) p. 2.

43 S.C. Minutes 27.7.1995 reported in SLR 2001 Part V 132 at 139 – per Fernando J.

.... மிகவும் பலம்மிக்க அரச பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் அரசியல் அழுத்தத்தின் விளைவாக தகைமை இல்லாதவிடத்திலும் முறைப்பாட்டாளரை நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதற்கு கம்பஹா அரசாங்க அதிபர் தூண்டப்பட்டுள்ளார்.

சட்டவிதிகளுக்கான மதிப்பளிப்பு என்பது நிருவாகத்துக்கு வெளிப்படையாக நடத்தல், வகைசொல்லல், நியாயமாக நடத்தல் போன்றவற்றை வேண்டிநிற்கின்றது. இயல்பில் பொதுவானவை எனக் கருதப்படுகின்ற பதவி நியமனங்கள் பதவி விலக்கல் என்பனவற்றுடன் சம்பந்தப்படுகின்ற அதிகாரம், தொழிற்பாடுகள், கடமைகள் என்பனவற்றைக் குறித்து நிற்கின்றது அத்துடன் தீர்மானம் ஒன்றினை மேற்கொள்ளல் என்னும் செயன்முறையினை இரகசியமாக முடிவைத்தல் கூடாது.[44]

நந்ததாச எதிர் எம்.எஸ். *ஜயசிங்க, செயலாளர், நீதி, அரசியலமைப்பு விவகாரங்கள் மற்றும் ஏனையோர் வழக்கில்*[45] ஜே. பெர்னாண்டோ பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

பல்வேறு வடிவில் இலஞ்சமும் ஊழலும் மிகவும் பரந்து காணப்படுகின்றது என்பது பொதுவாக ஒவ்வொருவரும் அறிந்த விடயம். இதனடிப்படையில் ஒவ்வொருவரும் குறிப்பாக, நீதியமைச்சில் தொழில்புரியும் உத்தியோகத்தர்கள் தடுத்தல், விசாரணை, வழக்குத் தொடுத்தல், தண்டனை வழங்கல் என்ற வழிகள் மூலம் இலஞ்சத்தையும் ஊழலையும் ஒழிப்பதற்கு முயற்சிக்க வேண்டும.

இலங்கையின் நிருவாகிகள் அவர்கள் எடுத்த தீர்மானங்களுக்கு பெறுமதிமிக்க காரணங்களைக் கொண்டிருக்க வேண்டும் அல்லது வழங்க வேண்டும் என்று நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்கிய சில வழக்குகள் உள்ளன. இயற்கை நீதி இக் காரணங்கள் வழங்கப்படுவதனை வேண்டி நிற்கின்றது என உயர் நீதிமன்றம் உறுதியாகத் தெரிவித்துள்ளது.[46] நீதிமன்றத்தில் வழக்கில் இப் பிரச்சினை வரும்பொழுது, அதற்கான காரணங்களைக் கோருவதற்கு நீதிமன்றம் அருகதையுடையது என்பதனை நீதிமன்றம் எடுத்துக் காட்டியுள்ளது.

44 *மேற்படி* 134.

45 1 Sri LR 2001 at 25 - Part I

46 *Karunadasa* v. *Unique Gemstones*, S. C. Minutes of 5.12.1996 – quoted in Mario Gomez, *supra* n 42, p. 185.

மற்றொரு வழக்கில் நீதிபதி எச். டபிள்யூ. சேனாநாயக்கா பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:[47]

> "எனது அபிப்பிராயத்தின்படி நிருவாக அதிகாரங்களைப் பயன்படுத்துபவர்களினால் ஆணித்தரமான காரணங்கள் முன்வைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டினால் தீர்மானம் மேற்கொள்ளல் செயன்முறையில் பொதுமக்களின் நம்பிக்கை உயர்ந்துள்ளது."

மற்றொரு வழக்கில்[48] கற்றுணர்ந்த நீதிபதி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

> *"பொதுத்துறை ஊழியர்களின் நடவடிக்கைகள் வெளிப்படையானதாக இருக்க வேண்டும். அத்துடன் அவர்கள் அர்த்தமில்லாத கட்டளைகளை இடக்கூடாது. காரணங்களை முன்வைத்தல் என்பது நல்ல நிருவாகத்தின் அடிப்படைகளில் ஒன்றாகும்."*

2001ஆம் ஆண்டின் வழக்குகள் எடுத்துக் காட்டுவது போல இலங்கையின் பொதுச் சேவையில் பொதுவாக சில திணைக்களத் தலைவர்கள் மேலேயுள்ள வழக்குகளில் எடுத்துக் காட்டியுள்ள தீர்மானங்கள் தெரிவித்திருக்கும் விடயங்களை மீறிச் செயற்பட்டிருக்கிறார்கள் எனலாம். கடந்த பல வருடங்களாக மனித உரிமைகளின் நீதிசார் பாதுகாப்பு என்ற அத்தியாயத்தில் எடுத்துக் காட்டியிருப்பது போல இந்த முக்கியமான கோட்பாடுகளை நீதிமன்றத் தீர்மானங்கள் கட்டிக் காத்து வந்தாலும் கடந்த பல வருடங்களாக 12(1) பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டு வருகின்ற வழக்குகளின் எண்ணிக்கை பொதுத்துறை ஊழியர்களின் வரம்புமீறல்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன என்பதனைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

9. அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தம்

2001 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கையாக பாராளுமன்றத்தினால் அரசியலமைப்பிற்கான 17 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டமை விளங்குகிறது. அது சுதந்திரமான பொதுச்சேவைகள்

---

47 *Kalawana Multi-purpose Co-operative Society Ltd.* v. *Co-operative Employees Commission*, C. A. Minutes of 15.8.93 – Cited by Mario Gomez *Supra* n 42 at p. 189.

48 *Unique Gemstones* v. *Karunadasa* (1995) 2 Sri LR 357 (C.A).

ஆணைக்குழு[49] (இதன்பின் ஆணைக்குழுவெனக் குறிப்பிடப்படும்) ஒன்று நிறுவப்பட வேண்டுமென்று விதந்துரைத்தது. 2001 ஆம் ஆண்டில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களினாலும் அரசியல் கட்சிகளினாலும் கொடுக்கப்பட்ட அழுத்தமும் பொதுமக்கள் அபிப்பிராயமும் பொதுசன முன்னணி அரசாங்கத்தின் இறுதிக் காலத்தின்போது அரசியலமைப்புக்கான 17 ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்குப் பொறுப்பாக அமைந்தன. இந்த நடவடிக்கையானது தரமான பொதுத்துறைச்சேவை ஒன்றிற்கு வழிவகுக்குமா என்பது இந்த ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்படவுள்ளவர்களின் தகுதி தராதரங்களிலும் அவர்கள் எவ்வளவு தூரத்திற்கு சுயாதீனமானவர்கள் என்பதிலும் தங்கியுள்ளது. பொதுத்துறைச் சேவையின் இழக்கப்பட்ட பிரதிமையை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற உறுதிப்பாடு, நேர்மை என்பவற்றுடன் கூடிய சகல சமூகங்களையும் சேர்ந்தவர்களை இந்த ஆணைக்குழு பிரதிநிதித்துவம் செய்யுமென நம்பப்படுகிறது.

எனினும் 17 ஆவது திருத்தத்தில் உள்ள பொதுத்துறைச் சேவையுடன் தொடர்புபட்ட ஏற்பாடுகளின் துல்லியமான நோக்கு பல ஒழுங்கீனங்களை எடுத்துக் காட்டுகிறது. அரசியலமைப்பின் உறுப்புரை 55 (1) இப்பொழுது பின்வருமாறு குறிப்பிடுகிறது: *"நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்கக்கட்டுப்பாடு, பதவி நீக்கம் போன்றவை ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படும்."*

இந்த ஏற்பாட்டின் கீழ் சுயாதீனமான பொதுத்துறைச் சேவை ஆணைக்குழுவின் எதிர்பார்ப்பு நிறைவேறுவதாக இருக்கும் அதேவேளையில், உறுப்புரை 55 (3) மந்திரிசபை அமைச்சர்களுக்கு உள்ள அதிகாரத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. உறுப்புரை 55 (3) பின்வருமாறு குறிப்பிடுகிறது:

> *"இப்பிரிவின் பந்தி 1 இல் உள்ள ஏற்பாடுகள் இவ்வாறு இருந்தாலும் சகல திணைக்களத் தலைவர்களினதும் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்கக் கட்டுப்பாடு, பதவி நீக்கம் தொடர்பான அதிகாரம் கபினெட் அமைச்சுகளுக்கு ஒதுக்கப்படும். அவர்கள் இந்த அதிகாரத்தை ஆணைக்குழுவின் கருத்தினை அறிந்த பின்னர் பிரயோகிக்க முடியும்."*

ஆகவே இந்த ஏற்பாடுகள் வலது கையால் கொடுக்கப்பட்டவை இடது கையால் எடுக்கப்பட்டு விட்டன என்னும் எண்ணத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறது. திணைக்களத் தலைவர்கள் மீது அதிகாரம் செலுத்தவும் அரசியல்வாதிகளின் கெடுபிடிகளில் இருந்து அவர்களைப் பாதுகாக்கவும் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் இல்லையெனின் அத்தகைய சுயாதீனமான பொது சேவை ஆணைக்குழு ஒன்று இருப்பதன் பயன் என்ன? வேறு வார்த்தையில் கூறுவதானால் உறுப்புரை 55 (1) இன் ஏற்பாடுகள் இருந்த

பொழுதிலும் அரசியல்வாதிகளின் கைப்பிடிக்குள்ளேயே பொதுத்துறைச் சேவை தொடர்ந்து இருக்கும்போல் தெரிகிறது. "ஆணைக்குழுவின் அனுமதியுடன்" என்ற பதங்கள் உறுப்புரை 55 (3) இல் பயன்படுத்தப்பட்டிருந்தால் இந்த ஏற்பாடுகள் ஓரளவு முக்கியத்துவம் கொண்டனவாக அமைந்திருக்கும்.

1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டம் மத்திய அரசாங்கத்தின் கைகளிலிருந்து பொதுத்துறைச் சேவைகளின் மிகப்பெரிய பகுதியினை வெளியெடுத்து அதனை மாகாண அரசியல்வாதிகளின் கைகளில் ஒப்படைத்து விட்டது. 17 ஆவது திருத்தச் சட்டத்தின் உறுப்புரை 55 (2) இதனை வலியுறுத்துகின்றது. அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் அதிகாரப் பரவலாக்கத்துடன் இணைந்ததொரு விடயமாக இது இருந்தாலும் மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் கையில் பொதுத்துறைச் சேவையினைக் கையளிப்பதனை விட சுயாதீனமான பொதுச்சேவைகள் ஆணைக்குழு ஒன்றிடம் கையளிப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்திருக்க முடியும். மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழு மாகாணத்தில் சனாதிபதியின் பிரதிநிதியாகவும் முழுக்க முழுக்க அரசியல் ஆதரவாளராகவும் விளங்கும் மாகாண ஆளுநரின் கைகளிலேயே உள்ளது.

எனினும் 17 ஆவது திருத்தத்தின் உண்மையான தாற்பரியம் இன்னும் வெளிப்படவில்லை என்றே கூறலாம். சுயாதீனமான பொதுச்சேவைகள் ஆணைக்குழு ஒன்றினை அடைவதில் நாம் வெற்றி பெற்றுள்ளோமா என்பதனைக் காலம்தான் எமக்கு எடுத்துக் காட்டும். அரசியல்ரீதியான விருப்பம் ஒன்று இருக்குமாயின் அதன் பின்னர் சட்டத்தில் உள்ள முரண்பாடுகள் பிரச்சினையாக இருக்கமாட்டாது. இது தொடர்பாக முடிவுகளை சமூக நிறுவனங்களும் எடுக்கவேண்டிய கடமைப்பாடு ஒன்றினைக் கொண்டிருக்கின்றன. அவை பொதுச்சேவையின் மறுசீரமைப்பில் துடிதுடிப்பாக ஈடுபடுவதுடன் தேவையானபொழுது குறிப்பாக நீதியின் கவனத்திற்கு மோசடிகளைக் கொண்டு வருவதற்கும் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

10. முடிவுரை

இலங்கையில் பொதுத்துறைச் சேவை அது உருவாக்கப்பட்ட நோக்கத்திற்கு ஏற்ப சேவை செய்ய வேண்டுமானால் அதனது இன்றைய நிலையிலிருந்து அதனை மீட்டெடுப்பதற்கு உண்மையான ஈடுபாட்டுடன் கூடிய பாரிய முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். முன்னரே எடுத்துக் காட்டியது போன்று பொதுத்துறைச் சேவையின் இன்றைய நிலைக்கான முக்கியமான காரணிகளில் ஒன்றாக இருப்பது தொடர்ச்சியான அரசியற் தலையீடு ஆகும். இதற்கு அப்பால் தரமான பயிற்சி இன்மை, அர்ப்பணிப்பின்மை, மோசமான ஊக்குவிப்பின்மை, பற்றாக்குறையான சம்பளம் என்பனவும் பொதுச்சேவையின் தரமிழப்புக்கு பங்களிப்புச் செய்யும் ஏனைய காரணிகளாகும்.

பொதுத்துறைச் சேவையினைச் சீரமைப்பதற்கு எடுத்துக் கூறப்படும் மற்றொரு நடவடிக்கையாக இருப்பது, சேவையிலுள்ள ஊழியர்கள் தாம் கொண்டிருக்கும் வேறுபட்ட பதவிகளில் அடையும் முன்னேற்றங்கள் அவர்களுடைய திறன்களுடன் இணைக்கப்பட வேண்டும் என்பதாகும். பொதுத்துறைச் சேவை ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டபடி பூரணமான செயல்மதிப்பீட்டு முறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அரசியல்வாதிகளின் சிபார்சுகள் பதவியுயர்வுகளிலோ அல்லது இடமாற்றங்களிலோ எந்தவித அழுத்தத்தையும் கொண்டிருக்கக்கூடாது. தவறான நடத்தை தொடர்பான சம்பவங்கள், மிகத் தரமான ஒழுக்க ஒழுங்குவிதிகள் உருவாக்குவதன் மூலம் விரைவாகவும் பயன்தருமுறையிலும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். ஒழுங்கு நடவடிக்கைகளில் அரசியல்வாதிகளின் தலையீடு முழுமையாகத் தடுக்கப்பட வேண்டும்.

நிருவாகிகள், முகாமையாளர்கள், பொறியியலாளர்கள், மருத்துவத்துறையாளர்கள், நில அளவையாளர்கள், கணக்கியலாளர் அல்லது எழுதுவினைஞர் மற்றும் ஏனைய தரத்திலுள்ள உத்தியோகத்தர்கள் எவராக இருப்பினும் பொதுத்துறைச் சேவையில் உள்ளவர்களின் திறமைகளும் அவர்களது தரமான செயற்றிறனும் கட்டாயமாகக் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். ஒருவரது கடமைச் செயற்பாடுகளில் உள்ள தகைமை, திறன் என்பதைப் பற்றிய அங்கீகாரம் அவரைக் குறிப்பிட்ட துறையில் மேலும் உயர்வடையச் செய்வதற்கான ஊக்குவிப்பாக இருக்கும்.

இந்த மாற்றங்களுடன் பொதுத்துறை ஊழியர்களின் சம்பளங்கள் கவர்ச்சிகரமானவையாக மாற்றப்படுதல் வேண்டும். அவர்கள் பணவீக்கத்தின் தாக்கத்திலிருந்து போதுமான அளவு பாதுகாக்கப்பட வேண்டும். பொதுவாகக் குறைந்த தரத்திலுள்ள ஊழியர்கள் தமது தேவைகளுக்கு முடிவினைக் கொண்டு வருவதற்கு ஊழல் நடவடிக்கைளில் ஈடுபடுவதற்கு தூண்டப்பட உயர்நிலை ஊழியர்கள் தமது பதவி அதிகாரம், செல்வம் என்பவற்றை உயர்த்துவதற்கான ஒரு வழியாகக் கொள்கின்றனர். உயர்ந்த தரம் கொண்ட ஊழியர்களை உள்வாங்கக்கூடிய முறையில் வேதன அமைப்பானது போதுமான அளவு கவர்ச்சிகரமானதாக ஆக்கப்பட வேண்டும்.

தகுதிவாய்ந்த பொதுத்துறை ஊழியர்களின் சேவைகள் மேலும் கிடைக்கத்தக்க வகையில் ஓய்வுபெறும் ஊழியர்களின் வயதினை உயர்த்தும் சாத்தியக்கூறுகளை அரசு கருத்திற் கொள்ள வேண்டும். இலங்கையில் வயது முதிர்வுக் குடித்தொகையின் அதிகரிப்பினைக் கருத்திற் கொள்கையில் மேற்கூறிய விடயம் விசேட கவனத்தினை வேண்டிநிற்கிறது.

பொதுத்துறைச் சேவையின் மறுசீரமைப்பின் ஒரு பகுதியாக தன்னிச்சையாக ஓய்வு பெறும் திட்டம், ஓய்வூதிய மறுசீரமைப்பு, அரசதுறை, தனியார்துறை ஊழியர்களைச் சமமான நிலையில் வைத்திருத்தல் ஆகியவை மிகக் கிட்டிய காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்றன.

நிறுவனரீதியான உறுதிப்பாடு, நல்லரசாட்சி என்பனவற்றின் ஊடாக பொதுத்துறைச் சீரமைப்பு என்பது இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் இடையேயுள்ள ஒப்பந்தத்தின் ஓர் அம்சமாக உள்ளது.[50]

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் விளைவாக மாகாணங்களிலும் மத்தியிலும் அரச நிறுவனங்களின் பொருட்டு அவற்றினையொத்த மாற்று நிறுவனங்களை அமைத்தல் தவிர்க்கப்பட வேண்டும். எனவே அத்தகைய நிறுவனங்கள் பலவற்றை மூடி நியாயப்படுத்துவதற்கான தேவை ஒன்று காணப்படுகின்றது. 13 ஆவது அரசியலமைப்பு அதிகாரப் பரவலாக்கத்தினை எடுத்துக் காட்டுகின்றதே ஒழிய ஒன்றுக்குப் பதிலாக மாற்று நிறுவன ஏற்பாட்டினை வற்புறுத்தவில்லை. அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட விடயங்கள், துறைசார்ந்த பொறுப்புக்களைப் பிரித்து வேறாக்கல் போன்ற தொடரான எதிர் விளைவுகளுக்கு அமைச்சர்களின் நடவடிக்கைகள் வழிவகுத்துள்ளன.

ஆசியாவில் இலங்கை மிகப் பெரிய பொதுத்துறைச் சேவைகளைக் கொண்ட நாடுகளில் ஒன்றாக உள்ளது. ஆகவே விதந்துரைக்கப்பட்ட சீர்திருத்தங்கள் பெரும் முக்கியத்துவத்தினைக் கொண்டவையாக இருக்கின்றன. ஷெல்டன் வணசிங்காவின் தலைமையின் கீழ் நிறுவப்பட்ட நிருவாக மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் சிபார்சாகிய "குறைந்த ஆளணியுடன் கூடிய பொதுத்துறைச் சேவையும், நிறைந்த சம்பளமும்" என்பதே கடைசியாக மேற்கொள்ளப்பட்ட அத்தகைய முயற்சியாகும். 1990 ஆம் ஆண்டில் தவறாக எடைபோடப்பட்ட பிரபல்யமற்ற பொதுநிருவாக சுற்றுநிருபத்தின் விளைவாக ஆற்றலுடைய, தகுதிவாய்ந்த பல பொதுத்துறை ஊழியர்கள் ஓய்வு பெற்றுள்ளனர்.[51] தனியார்துறையிற் சேரும் நோக்கத்துடன் வேலையை விட்டு விலகிய ஆற்றலும் அனுபவமும் வாய்ந்த உத்தியோகத்தர்களாக அவர்களில் பலர் இருந்தனர். இது பொதுத்துறை மேலும் சீரழிவதற்கு வழிவகுத்தது. எனவே சேவையில் உள்ள மேலதிக ஆளணியினரைக் குறைக்கும் விதமாக, நன்கு வகுக்கப்பட்ட தன்னிச்சையான இளைப்பாற்றுத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும் என நம்பப்படுகிறது. இதன்மூலம் சேவையில் மீதமாக இருப்பவர்கள் தரமான வேதன அமைப்பு ஒன்றினைக் கொண்டிருப்பதுடன் அவர்கள் நல்ல முறையில் சேவைகளை வழங்குவதற்கு ஏற்ற முறையில் போதுமான வளங்களைப் பெறுபவர்களாகவும் இருப்பர்.

---

[50] சர்வதேச நாணய நிதியம் இலங்கை நாட்டு அறிக்கை, இல. 1/71, இணையப் பதிப்பு, வைகாசி 2001, எம். சர்வானந்தாவினால் *Pravada* வில் குறிப்பிடப்பட்டது. Vol. 7, இல. 4, பக். 11.

[51] 1990 இன் 44 ஆம் இலக்கம்.

பொதுத்துறைச் சேவையினைத் திருத்துவதற்கு ஒருவர் எத்தகைய நடவடிக்கையினை எடுத்த போதிலும் நல்லரசாட்சியாளர்களையும் சீரான குடியியற் சமூகத்தினரையும் கொண்டிருக்கும் பொழுதுதான் நல்லரசாட்சி என்பது அதன் உண்மை நிலையை வெளிப்படுத்தும். 2001 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் நல்லரசாட்சியாளர்களை கொண்டு வந்துள்ளதா என்பது இன்னும் அறியப்படவில்லை.

அட்டவணை I

2001 ஆம் ஆண்டு மார்கழி 31 இல் இலங்கையினால் கையொப்பமிடப்பட்ட, பின்னுறுதிப்படுத்தப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட பயங்கரவாதம் மீதான சர்வதேச சமவாயங்களும், மனித உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகள் சமவாயங்களும**

- இன அழிப்புக் குற்றத்துக்கான தண்டனையும் தடுத்தலும் பற்றிய சமவாயம். 1950 புரட்டாதி 12 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் பற்றிய சர்வதேசக் கட்டுறுத்து. 1980 ஆனி 11 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேசக் கட்டுறுத்து, 1980 ஆனி 11 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- பெண்களுக்கெதிரான அனைத்து வடிவிலான பாரபட்சங்கள் பற்றிய சமவாயம். 1981 ஐப்பசி 5 இல் பின்னுறுதிப்படுத்தப்பட்டது.

---

* ஓர் அரசினுடைய ஓர் ஒப்பந்தத்திற்கான சம்மதம் அவ்வரசின் பிரதிநிதியினுடைய கையொப்பத்தினால் வெளிப்படுத்தப்படுகின்றது. அச்சந்தர்ப்பத்தில் அவ்வொப்பந்தமானது அத்தகைய கையொப்பம் இச் சம்மதத்தை உறுதி செய்வதாக அதற்கான ஏற்பாட்டைக் கொண்டிருத்தல் வேண்டும். பல சந்தர்ப்பங்களில் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் தரப்பினர் ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தில் சம்மதம் தெரிவித்திருக்க அல்லது அவ்வொப்பந்த சரத்தைத் தயாரிக்கும் போது நடைபெறும் பேச்சுவார்த்தைகளின் போது சம்மதத்தைத் தெரிவித்திருப்பார். இத்தகைய சந்தர்ப்பங்களில் கையொப்பம் மட்டும் போதாது. சம்மதத்தைக் குறிக்கும் முகமாக மற்றொரு நடவடிக்கை தேவைப்படுகின்றது. இதனைப் பின்னுறுதிப்படுத்தல் என்பர். இந்த அணுகுமுறையைப் பின்பற்றும் ஒப்பந்தங்கள், கையொப்பமானது ஒப்பந்தத்தின் வாசகத்தை உறுதி செய்வதாகக் கருதப்படும். பின்னுறுதிப்படுத்தலுக்கு மற்றொரு நோக்கமும் உண்டு. சம்பந்தப்பட்ட அரசாங்கங்கள் ஒப்பந்தத்திற்குக் கட்டுப்படுகின்றார்களா இல்லையா என்பதைத் தெளிவாக்க இதனால் இவ்வரசாங்கங்களுக்கு மற்றொரு சந்தர்ப்பமும் வழங்கப்படுகின்றது. ஆரம்பப் பேச்சுவாத்தைகளில் கலந்துகொண்ட அரசாங்கங்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாமல் ஒப்பந்தத்தோடு சம்பந்தப்பட்ட தரப்பினராக விரும்பும்போது அதனை ஒப்பந்தத்தை ஏற்பதாக கூறுவதன் மூலம் செய்து கொள்ளலாம். ஓர் அரசாங்கம் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு சம்பந்தப்படும் பொழுது கையெழுத்திட்டோ அல்லது பின்னுறுதிப்படுத்தியோ சம்பந்தப்படும் பிற தரப்பினர் போன்று இவ்வொப்பந்தத்தின் கீழ் சகல உரிமைகளையும் பொறுப்புக்களையும் கொண்டு விளங்கும்.

- அனைத்து வடிவிலான இனப் பாரபட்சத்தினை அகற்றுதல் பற்றிய சர்வதேச சமவாயம். 1982 மாசி 18 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- இன ஒதுக்கல் குற்றத்திற்கான (Crime of Apartheid) தண்டனையும் ஒடுக்குமுறையும் பற்றிய சர்வதேசக் கட்டுறுத்து. 1982 மாசி 18 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- இராஜதந்திர முகவர்கள் உள்ளிட்ட சர்வதேசரீதியாகப் பாதுகாக்கப்பட்ட நபர்களுக்கெதிரான குற்றங்களின் தண்டனையும், தடுத்துவைத்தலும். 1991 மாசி 27 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம். 1991 ஆடி 12 இல் பின்னுறுதிப்படுத்தப்பட்டது.

- சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது தரக்குறைவான நடத்துகை அல்லது தண்டனைக்கு எதிரான சமவாயம். 1994 தை 3 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- எல்லா புலம்பெயர்ந்த வேலையாட்கள் மற்றும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களினதும் உரிமைகளைப் பாதுகாத்தல் பறறிய சர்வதேச சமவாயம். 1996 பங்குனி 11 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேசக் கட்டுறுத்துக்கான விருப்புரிமைப் பின்னேற்பாடு I. 1997 ஐப்பசி 3 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- பயங்கரவாதிகளின் குண்டுத் தாக்குதலை ஒடுக்குவதற்கான சர்வதேச சமவாயம். 1999 பங்குனி 23 இல் பின்னுறுதிப்படுத்தப்பட்டது.

- ஆயுதப் பிணக்குகளில் ஈடுபடும் சிறுவர்கள் பற்றிய சிறுவர் உரிமைகள் மீதான சமவாயத்துக்கான விருப்புரிமைப் பின்னேடு. 2000 புரட்டாதி 6 இல் பின்னுறுதிப்படுத்தப்பட்டது.

- பணயக் கைதிகளாக வைத்திருப்பதற்கு எதிரான சர்வதேச சமவாயம். 2000 புரட்டாதி 6 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கரையோரப் போக்குவரத்துப் பாதுகாப்புக்கு (Safety of Maritime Navigation) எதிரான சட்டரீதியற்ற நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கான சமவாயம். 2000 புரட்டாதி 6 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- பயங்கரவாதத்துக்கு நிதி வழங்கலைக் கட்டுப்படுத்துவதற்கான சர்வதேச சமவாயம். 2000 மார்கழி 15 இல் ஒப்பமிடப்பட்டது.

- ஆட்களை விசேடமாக பெண்கள் மற்றும் சிறுவர்களைக் கடத்துதலைத் தடைசெய்தல், கட்டுப்படுத்தல், தண்டனை வழங்கல் ஆகியவற்றுக்கான பின்னேற்பாடு – சர்வதேசரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்துக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் பிற்சேர்க்கை. 2000 மார்கழி 15 இல் ஒப்பமிடப்பட்டது.

- தரை, கடல், வான் வழியாக புலப்பெயர்வாளர்களைக் கடத்துவதற்கு எதிரான பின்னேடு – சர்வதேசரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்துக்கு எதிரான ஐக்கிய சாடுகள் சமவாயத்தின் பிற்சேர்க்கை. 2000 மார்கழி 15 ஒப்பமிடப்பட்டது.

- சிறுவர்களை விற்றல், சிறுவர் விபச்சாரம், ஆபாசப்படம் எடுத்தல் மீதான சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்துக்கான விருப்புரிமைப் பின்னேடு. 2002 வைகாசி 8 இல் ஒப்பமிடப்பட்டது.

இலங்கையினால் பின்னுறுதிப்படுத்தப்பட்ட சர்வதேச தொழிலாளர் நிறுவன (ILO) சமவாயங்கள்

சம. இல.	பெயர்	பின்னுறுதிப்படுத்திய திகதி	தற்போதைய நிலை
C4	இரவில் பணிபுரிதல் (பெண்கள்) சமவாயம் 1919	8.10.1951	கைவிடப்பட்டது
C5	ஆகக் குறைந்த வயது (கைத்தொழில்) சமவாயம் 1919	27.9.1950	கைவிடப்பட்டது
C6	இளவயது நபர்கள் இரவில் பணிபுரிதல் (கைத்தொழில்) சமவாயம் 1919	26.10.1950	கைவிடப்பட்டது
C7	ஆகக் குறைந்த வயது (கடல்) சமவாயம் 1920	2.9.1958	கைவிடப்பட்டது
C8	வேலையின்மை இழப்பீட்டுச் சமவாயம் 1920	25.4.1951	
C10	ஆகக்குறைந்த வயது (விவசாயம்) சமவாயம் 1921	29.11.1991	கைவிடப்பட்டது
C11	சங்கத்தின் உரிமை (விவசாயம்) சமவாயம் 1921	25.8.1952	
C15	ஆகக்குறைந்த வயது (Trimmerst stockers) சமவாயம் 1921	25.4.1951	கைவிடப்பட்டது
C16	இளம் ஆட்களின் மருத்துவப் பரிசோதனை (கடல்) சமவாயம் 1921	25.4.1950	
C18	பணியாளர்களின் நஷ்டஈடு (தொழில்சார்ந்த நோய்கள்) சமவாயம் 1925	17.5.1952	

C26	ஆகக்குறைந்த வேதனம் (இயந்திரம் பொருத்தல்) சமவாயம் 1928	9.6.1961	
C29	கட்டாய ஊழியம் சமவாயம் 1930	5.4.1950	
C41	இரவு வேலை (பெண்கள்) சமவாயம் (திருத்தப்பட்டது) 1934	2.9.1950	D
C45	நிலத்தின் கீழ் வேலை (பெண்கள்) சமவாயம் 1935	20.12.1950	
C58	ஆகக்குறைந்த வயது (கடல்) சமவாயம் (திருத்தப்பட்டது) 1936	18.5.1959	
C63	வேதனங்கள் மற்றும் வேலைநேரப் புள்ளிவிபரங்கள் தொடர்பான சமவாயம் 1938	25.8.1952	
C80	இறுதி உறுப்புரைகளின் திருத்தம் சமவாயம் 1946	10.9.1950	
C81	தொலில் பரிசோதனை (Labour Inspection) சமவாயம் 1947	3.4.1950	
C87	சங்கத்தின் சுதங்திரம் ஒழுங்குபடுத்துவதற்கான பாதுகாப்பு உரிமை சமவாயம் 1948	15.11.1995	
C89	இரவு வேலை (பெண்கள்) சமவாயம் (திருத்தப்பட்டது) 1945	31.3.1966	D
C90	இளம் ஆட்களின் இரவு வேலை (கைத்தொழில்) சமவாயம் (திருத்தப்பட்டது) 1948	18.5.1959	
C95	வேதனங்களின் பாதுகாப்பு சமவாயம் 1949	27.10.1983	

C96	முன்கட்டணம் அறவிடும் வேலைவாய்ப்பு முகவரகங்கள் சமவாயம் (திருத்தப்பட்டது) 1949	30.4.1958
C98	ஒழுங்குபடுத்தல் கூட்டாகப் பேரம்பேசுதலுக்கான உரிமை சமவாயம் 1949	13.12.1972
C99	இயந்திரத்தைப் பொருத்துவதற்கான ஆகக் குறைந்த வேதனம் (விவசாயம்) சமவாயம் 1951	5.4.1954
C100	சம ஊதியச் சமவாயம் 1951	1.4.1993
C103	பிரசவ பாதுகாப்பு சமவாயம் (திருத்தப்பட்டது) 1952	1.4.1993
C106	வாராந்த ஓய்வு (வர்த்தக மற்றும் அலுவலகங்கள்) சமவாயம் 1957	27.10.1983
C108	Seatarers அடையாளப் பத்திரங்கள் சமவாயம் 1958	24.11.1995
C110	பெருந்தோட்ட வேலையாட்களின் தொழில் நிலைமைகள் சமவாயம் 1958	24.4.1995
C111	பாரபட்சம் (தொழில் மற்றும் வேலை) சமவாயம் 1958	27.11.1998
C115	கதிர்வீச்சுப் பாதுகாப்பு சமவாயம் 1960	18.6.1986
C116	இறுதிக் கட்டுரைகளின் திருத்தம் சமவாயம் 1961	26.4.1974

C131	ஆகக்குறைந்த வேதன நிர்ணயம் சமவாயம் 1970	17.3.1975
C135	தொழிலாளர் பிரதிநிதிகள் சமவாயம் 1971	16.11.1976
C138	தொழில் அனுமதிக்கான ஆகக் குறைந்த வயது 1973	11.2.2000
C144	உலக தொழிலாளர் ஸ்தாபனத்தின் (ILO) சமவாயத்தினை மேம்படுத்துவதற்கான மூவரிடையிலான ஆலோசனைகள் 1976	17.3.1994
C160	தொழிலாளர் புள்ளிவிபரங்கள் சமவாயம் 1985	1.4.1993

இலங்கையினால் பின்னுறுதிப்படுத்தப்பட்ட மனிதாபிமான சட்ட சமவாயங்கள்

களத்தில் காயமடைந்திருக்கும், நோய்வாய்ப்புற்றிருக்கும் ஆயுதப்படைகளின் நிலைமைகளைச் சீர்ப்படுத்தலுக்கான ஜெனிவா பிரகடனம் 1949.
1959 மாசி 28 இல் பின்னுறுதிப்படுத்தப்பட்டது.

கடலில் ஆயுதப்படை அங்கத்தவர்கள் காயமடைந்தல், நோய்வாய்ப்படுதல், கப்பல் உடைவுக்குட்படல் நிலைமைகளை சீர்ப்படுத்துவதற்கான (Amelioration) ஜெனிவா சமவாயம் 1949.
1959 மாசி 28 இல் பின்னுறுதிப்படுத்தப்பட்டது.

யுத்தக்கைதிகளைப் பராமரிப்பது தொடர்பான ஜெனிவா சமவாயம் 1949.
1959 மாசி 28 இல் பின்னுறுதிப்படுத்தப்பட்டது.

யுத்த காலத்தில் பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பான ஜெனிவா சமவாயம் 1949.
1959 மாசி 28 இல் பின்னுறுதிப்படுத்தப்பட்டது.

அட்டவணை II

இலங்கையினால் பின்னுறுதிப்படுத்தப்படாத சில மனித உரிமைச் சாதனங்கள்

- குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேசக் கட்டுறுத்துக்கான விருப்புரிமைப் பின்னேடு II
- மனிதத்தன்மைக்கு எதிரான குற்றங்கள் மற்றும் யுத்தக் குற்றங்களுக்கான பிரயோகத் தன்மையற்ற சட்டரீதியான வரையறைகள் பற்றிய சமவாயம்.
- கட்டாய ஊழியத்தினை ஒழித்தல் தொடர்பான ஐ.எல்.ஓ (ILO) சமவாயம் (இல.105).
- மேலே கூறப்பட்ட உறுப்புரை 21 தொடர்பான பிரகடனம் (அரச தரப்பொன்று இன்னொன்றுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் புகார்கள் தொடர்பானது)
- மேலே கூறப்பட்ட உறுப்புரை 22 தொடர்பான பிரகடனம் (தனிநபர்களினால் மேற்கொள்ளப்படும் புகார்கள் தொடர்பானது)
- சமூகப் பாதுகாப்பின் ஆகக் குறைந்த நியமங்கள் தொடர்பான ஐ.எல்.ஓ (ILO) சமவாயம் (இல. 102).
- புலம்பெயர் தொழிலாளர்களைப் பராமரித்தல் மற்றும் சமசந்தர்ப்பத்தை மேம்படுத்தல் மற்றும் மோசமான நிலைமைகளில் உள்ள புலப்பெயர்வாளர்கள் தொடர்பான ஐ.எல்.ஓ (ILO) சமவாயம் (இல. 143).
- தொழிற் கொள்கை தொடர்பான ஐ.எல்.ஓ (ILO) சமவாயம் (இல. 122).
- கிராம தொழிலாளர்களின் நிறுவனங்கள் மற்றும் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் அவர்களின் வகிபங்கு தொடர்பான ஐ.எல்.ஓ (ILO) சமவாயம் (இல.141).

- பொதுத்துறைச் சேவையில் தொழில் நிலைமைகளை நிர்ணயிப்பதற்கான நடைமுறைகள் மற்றும் ஒழுங்கமைப்பதற்கான பாதுகாத்தல் உரிமை தொடர்பான ஐ.எல்.ஓ (ILO) சமவாயம் (இல.151).

- அகதிகளின் நிலைமை தொடர்பன சமவாயம் 1951

- 1951 அகதிகள் சமவாயதிதுக்கான பின்னேடு 1967

- சர்வதேச ஆயுதப் பிணக்குகளினால் பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்புடன் (பின்னேடு I) தொடர்புபடுத்துகின்ற 1949 ஆவணி 12 ஆம் திகதி ஜெனிவா சமவாயத்துக்கு மேலதிகமான பின்னேடு.

- சர்வதேசரீதியில் அல்லாத ஆயுதப் பிணக்குகளினால் பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்புடன் (பின்னேடு II) தொடர்புபடுத்துகின்ற 1949 ஆவணி 12 ஆம் திகதி ஜெனிவா சமவாயத்துக்கு மேலதிகமான பின்னேடு.

அட்டவணை III

2001 இல் தீர்ப்பு வழங்கப்பட்ட அடிப்படை மனித உரிமை வழக்குகள்

உறுப்புரை 11
நேசர்ராசா சிவகுமார எதிர் பொறுப்பதிகாரி, விசேட அதிரடிப்படை முகாம், செட்டிபாளயம் மற்றும் ஏனையோர், உ.நீ. விண்ணப்ப இல. 363/2000, உ.நீ. அறிக்கைகள் 01/10/2001.

பிரியலால்குமார லியனாராச்சி எதிர் *ஓ.ஐ.சி ரேமண்ட்பிறிசன், எம்பிலிப்பிட்டிய மற்றும் ஏனையோர்*, உ.நீ. விண்ணப்ப இல. 971/99, உ.நீ. அறிக்கைகள் 19/01/2001.

உறுப்புரை 11, 12(1), 13
சமிந்த கல்தேரா மற்றும் ஏனையோர் எதிர் *ஓ.ஐ.சி, பொலிஸ் நிலையம், சீதுவை மற்றும் ஏனையோர்*, உ.நீ. விண்ணப்ப இல. 62-63/99, உ.நீ. அறிக்கைகள் 06/02/2001.

உறுப்புரை 11, 13(1)
புஷ்பா பிரியந்த டயஸ் அபேசேகர ஜெயவர்த்தன எதிர் *ஏக்கநாயக்க மற்றும் ஏனையோர*, உ.நீ. விண்ணப்ப இல. 860/99, உ.நீ. அறிக்கைகள் 27/03/ 2001.

உறுப்புரை 11, 13(1) & 13(2)
மொகமட் ஹனிபா சித்தி மறிலியா எதிர் *ஓ.ஐ.சி பொலிஸ் நிலையம், நிட்டம்புவ மற்றும் ஏனையோர*, உ.நீ. விண்ணப்ப இல. 293/99, உ.நீ. அறிக்கைகள் 21/09/2001.

எம். எம் சரத் எதிர் *ஓ.ஐ.சி பொலிஸ் நிலையம், பூகொட மற்றும் ஏனையோர்*, உ.நீ. விண்ணப்ப இல. 586/2000, உ.நீ. அறிக்கைகள் 18/05/2001.

உபேசிங்க வீரபத்தன ஆராச்சிகே நீல் அஜந்த மற்றும் ஏனையோர் எதிர் *பொலிஸ் நிலைய அத்தியட்சகர், வத்தளை மற்றும் ஏனையோர*, உ.நீ. விண்ணப்ப இல. 967-968/97, உ.நீ. அறிக்கைகள் 01/10/2001.

உறுப்புரை 12, 13 & 14

கலாநிதி மரியோ கோமஸ் எதிர் கொழும்புப் பல்கலைக்கழகம் மற்றும் ஏனையோர், உ.நீ. விண்ணப்ப இல. 833/99, உ.நீ. அறிக்கைகள் 25/05/2001.

உறுப்புரை 12(1)

டொன் ரவி அலோசியஸ் சிறிகுமார ஜயக்கொடி எதிர் இலங்கை காப்புறுதி மற்றும் றொபின்சன் ஹொட்டல் கோ-லிமிட்டட் மற்றும் ஏனையோர், உ.நீ. விண்ணப்ப இல. 769/98, உ.நீ. அறிக்கைகள் 13/07/2001.

லியோ சாம்சன் எதிர் ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் லிமிட்டட் மற்றும் ஏனையோர், உ.நீ. விண்ணப்ப இல. 791/98, உ.நீ. அறிக்கைகள் 11/01/2001.

விக்ரமதுங்க மற்றும் ஏனையோர் எதிர் எச்.ஆர். டீ சில்வா மற்றும் ஏனையோர், உ.நீ. விண்ணப்ப இல. 551/98, உ.நீ. அறிக்கைகள் 31/08/2001.

கனகசபை இராஜபுவனேஸ்வரன் மற்றும் ஏனையோர் எதிர் இலங்கை வங்கி மற்றும் ஏனையோர், உ.நீ. விண்ணப்ப இல. 869/99, உ.நீ. அறிக்கைகள் 11/12/2001.

சந்தரன்ன காமன்ஸ் பிரைவட் லிமிட்டட் எதிர் புடவை கிடைப்புப் பங்குச் சபை மற்றும் ஏனையோர, உ.நீ. விண்ணப்ப இல. 298/99, உ.நீ. அறிக்கைகள் 11/12/2001.

ரத்நாயக்க முதியான்செலாகே ரஞ்சித் சூல பண்டார எதிர் நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் ஏனையோர, உ.நீ. விண்ணப்ப இல. 968/2000, உ.நீ. அறிக்கைகள் 28/11/2001.

சுனில் லக்ஸ்மன் சிறிசேன எதிர் இலங்கை வங்கி மற்றும் ஏனையோர. உ.நீ. விண்ணப்ப இல. 981/97, உ.நீ. அறிக்கைகள் 11/06/2001.

வை.ரி. துஷாங்க எதிர் கொழும்புப் பல்கலைக்கழகம் மற்றும் ஏனையோர், உ.நீ. விண்ணப்ப இல. 804/99, உ.நீ. அறிக்கைகள் 11/05/2001.

ஹெரத் எதிர் எயர் கொமாண்டர் மற்றும் ஏனையோர, உ.நீ. விண்ணப்ப இல. 760/99, உ.நீ. அறிக்கைகள் 24/05/2001.

உறுப்புரை 12(1), 13(1), 13(2)
மதனி சாஹீப் தாஜுடீன் எதிர் ஜயவிக்ரம மற்றும் ஏனையோர், உ.நீ. விண்ணப்ப இல. 216/2000, உ.நீ. அறிக்கைகள் 22/05/2001.

உறுப்புரை 12(1) & 14(2) (a)
எகொடவெல மற்றும் ஏனையோர் எதிர் தயாநந்த திஸாநாயக்க மற்றும் ஏனையோர, உ.நீ. விண்ணப்ப இல. 412/99, உ.நீ. அறிக்கைகள் 03/04/2001.

உறுப்புரை 12(1), 14(1) (a), 14(1) (g)
உதய பிரசன்ன விதானகே எதிர் சரத் அமுனுகம மற்றும் ஏனையோர், உ.நீ. விண்ணப்ப இல. 516/2000, உ.நீ. அறிக்கைகள் 02/08/2001.

விக்டர் ஐவன் எதிர் கௌரவ சரத் என். சில்வா மற்றும் ஏனையோரும், உ.நீ. விண்ணப்ப இல. 898-901/99, உ.நீ. அறிக்கைகள் 28/02/2001.

உறுப்புரை 13(1), 13(2)
எமில் பிராங்கிளின் குரோனம்பேர்க் எதிர் சிரேஷ்ட பொலிஸ் சுப்பிரின்டன், கொழும்பு மோசடி புலனாய்வுப் பணியகம் மற்றும் ஏனையோர, உ.நீ. விண்ணப்ப இல. 58/99, உ.நீ. அறிக்கைகள் 11/06/2001.

நயனா குமுதினி லசந்தி விதானகே எதிர் உதயா செனவிரத்னே (பொலிஸ் அத்தியட்சகர்) மற்றும் ஏனையோர, உ.நீ. விண்ணப்ப இல. 148/99, உ.நீ. அறிக்கைகள் 26/09/2001.

வழக்குகள் அட்டவணை

ஏ. எச். விக்ரமதுங்கே மற்றும் மூன்று ஏனையோர எதிர் எச்.ஆர் டீ சில்வா, பிரதம மதிப்பீட்டாளர், மதிப்பீட்டுத் திணைக்களம் மற்றும் 14 ஏனையோர், உ. நீ. விண்ணப்ப இல. 551/98, உ. நீ. அறிக்கைகள் 31/08/2001.

அபேசின் பண்டா எதிர் குணரத்னே (1995) 1 Sri LR 244

அஜய் ஹசியா எதிர் கலிட் மிஜிப A.I.R 1981 S.C 487

அமல் சுதத் சில்வா எதிர் கொடிதுவக்கு, பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் ஏனையோர் (1987 2 Sri LR 119

அர்கன்சாஸ் காஸ் கம்பனி எதிர் ரயில்வே ஆணைக்குழு 261 U.S 379 at 384

பண்டார எதிர் பிரேமச்சந்திர 1994) 1 Sri LR 301

டி.ஏ. நீதாசிங்க எதிர் ரத்னசிறி விக்ரமநாயக்க, பொதுநிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் நான்கு ஏனையோர, உ.நீ. விண்ணப்ப இல. 770/99, உ.நீ. அறிக்கைகள் 13/07/2001.

டி.ஆர்.ஏ. சிறிகுமார் ஜயகொடி எதிர் ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் மற்றும றொபின்சன் ஹொட்டல் கோ லிமிட்டட் மற்றும் 11 ஏனையோர, உ.நீ. விண்ணப்ப இல. 769/98, உ.நீ. அறிக்கைகள் 13/07/2001.

கலாநிதி ராஜித சேனார்த்ன, திரு. பி. சந்திரசேகரன், மற்றும் திரு சேகு இசாதீன் எதிர் அமைச்சர் திசாநாயக்கே இல. 1/2000

எகொடவெல மற்றும் ஏனையோர எதிர் திசாநாயக்க மற்றும் ஏனையோர், உ.நீ. விண்ணப்ப இல. 412/99, உ.நீ. அறிக்கைகள் 03/04/2001.

காமினி அதுகோறல மற்றும் ஏனையோர் எதிர் சட்டமா அதிபர் உ.நீ (S.D) 1/97 – 15/97 S.C.M. 55.97

In re அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தச் சட்டமூலம் மற்றும் மாகாணசபைகள் சட்டமூலம் (1987) 2 Sri. LR. 312

ஜயவர்தன எதிர் தாரணி விஜயதிலக்க, நீதியமைச்சின் செயலயளர் மற்றும் ஏனையோர, (2000) 1 Sri LR 132

ஜோசெப் பெரேரா எதிர் சட்டமா அதிபர் (1992) 1 Sri LR 199

கலவான மல்ரிபேப்பஸ் கோ-ஒபறேற்றிவ் லிமிட்டட் எதிர் கோ-ஒபறேற்றிவ் தொழிலாளர் ஆணைக்குழுஇ மேன்முறையீட்டு அறிக்கைகள் 15.:.08.:.1993

கருணாதாச எதிர் யுனிக் ஜெம்ஸ்ரோன்ஸ(1997) 1 Sri LR 256

கருணாதிலக எதிர் தயானந்த திசாநாயக்க, தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் ஏனையோர் (1999) 1 Sri LR 157

கிங்க் எதிர் கொடிசிங்கோ 16 N.L.R. 16

லால் பிரியந்த லியனகே எதிர் றிச்சார்ட் பத்திரண, உ.நீ. விண்ணப்ப இல. 441/97

லீடர் பப்ளிகேசன்ஸ் எதிர் ரூபசிங்க, உ.நீ. விண்ணப்ப இல. 362/2000, உ.நீ. அறிக்கைகள் 30/06/2000.

எம்.எச். சித்தி மர்லியா எதிர் ஆர். மல்லவ குமார, சிறு குற்றங்கள் பிரிவு பொறுப்பதிகாரி, பொலிஸ் நிலையம், நிட்டம்புவ மற்றும் ஏழு ஏனையோர, உ.நீ. விண்ணப்ப இல. 293/99, உ.நீ. அறிக்கைகள் 21/09/2001.

மரியோ கோமஸ் எதிர் கொழும்புப் பல்கலைக்கழகம் மற்றும் இரண்டு ஏனையோர, உ.நீ. விண்ணப்ப இல. 833/99, உ.நீ. அறிக்கைகள் 25/05/2001.

மெற்றோபொலிரன் ப்ரெபெர்ரீஸ் கோ எதிர் லனொன் 1969 1 QB 577

மொகிந்தர் சிங் கில் எதிர் பிரதம தேர்தல்கள் ஆணையாளர, A.I.R. 1978 SC 851

என். சிவகுமார் ஏதிர் பொறுப்பதிகாரி, விசேட அதிரடிப்படை முகாம், செட்டிபாளயம் மற்றும் ஐந்து ஏனையோர் உ.நீ. விண்ணப்ப இல. 363/2000, உ.நீ. அறிக்கைகள் 01.10.2001

என்.கே.எல் விதானகே எதிர் உதயா செனவிரத்ன, பொலிஸ் அத்தியட்சகர், மீலியகொட மற்றும் இரண்டு ஏனையோரும், உ.நீ. விண்ணப்ப இல. 149/99, உ.நீ. அறிக்கைகள் 26.09.2001

நந்ததாச எதிர் எம்.எஸ் ஜயசிங்க, செயலாளர், நீதியமைச்சு மற்றும் அரசியலமைப்பு அலுவல்கள் (2001) 1 Sri L.R. 25

பி.கே. லியனாராச்சி எதிர் *பொறுப்பதிகாரி, தடுப்புக்காவல் சிறைச்சாலை, எம்பிலிப்பிட்டிய மற்றும் ஆறு ஏனையோரும்,* உ.நீ. விண்ணப்ப இல. 971/99 உ.நீ. அறிக்கைகள் 19.01.2001

லியோ சாம்சன எதிர் *ஸ்ரீ லங்கா எயார்லைன்ஸ் லிமிட்டட் மற்றும் ஐந்து ஏனையோரும,* உ.நீ. விண்ணப்ப இல. 971/98 உ.நீ. அறிக்கைகள் 11.01.2001

புஷ்பா பிரியந்த டயஸ எதிர் *ஏக்கநாயக்க, பொலிஸ் நிலையம், பொல்பிதிகம மற்றும் மூன்று ஏனையோரும,* உ.நீ. விண்ணப்ப இல. 860/99 உ.நீ. அறிக்கைகள் 27.03.2001

ஆர எதிர் *கோஜ்* (1993) மேன்முறையீட்டு நீதிமன்றம் 646

ராஜரத்ன எதிர் *எயர் லங்கா* (1987) 2 Sri L.R 128

ராஜ்பால் அபேநாயக்க எதிர் *கௌரவ சரத் என். சில்வா அவர்களும் மற்றும் இரண்டு ஏனையோரும்,* உ.நீ. விண்ணப்ப இல. 90/99 உ.நீ. அறிக்கைகள் 28.02.2001

இராமுப்பிள்ளை எதிர் *பெஸ்ரஸ் பெரேரா* (1991) 1 Sri L.R 11

In Re ரத்னகோபால 70 N.L.R 409

சமன் லீலாதாச மற்றும் வேறொருவர், உ.நீ. விண்ணப்ப இல. 4/88 உ.நீ. அறிக்கைகள் 06/07.10.1988

சாந்ததன்ன காமன்ற் பிரைவேட் லிமிட்டட எதிர் *புடவை கிடைப்புப் பங்குச்சபை மற்றும் நான்கு ஏனையோரும்,* உ.நீ. விண்ணப்ப இல. 869/99 உ.நீ. அறிக்கைகள் 11.12.2001

செனவிரத்ன மற்றும் வேறொருவர எதிர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் ஒருவர் (1978-79-80) 1 Sri L.R 182

செனவிரத்னே எதிர் *புன்யா டீ சில்வா* (1995) 1 Sri L.R. 27

செரீவ்டீன் மற்றும் இரண்டு ஏனையோரும எதிர் *செயலாளர், பொதுச்சேவைகள் ஆணைக்குழு மற்றும் 17 ஏனையோரும*, உ.நீ. விண்ணப்ப இல. 249/96, உ.நீ. அறிக்கைகள் 19.11.1998

சில்வா எதிர் *பண்டாரநாயக்க* (1997) 1 Sri L.R. 92

சிமொன் எதிர் *தேசிய வீடமைப்பு ஆணையாளர* 75 N.L.R. 471

சிறிமால் குணரத்ன எதிர் *மக்கள் வங்கி மற்றும் 11 ஏனையோர்*, உ.நீ. விண்ணப்ப இல. 514/99, உ.நீ. அறிக்கைகள் 25.07.2001

சுக்தர் சிங் எதிர் *பகட்ராம* A.IR 1975 உ.நீ 1331

சுனிலா அபேசேகர எதிர் *ருபசிங்க* (2000) 1 Sri L.R. 314

டிகிறி பண்டா புலன்குலம மற்றும் ஏனையோர் எதிர் *செயலாளர், கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு மற்றும் ஏனையோர* (2000) 3 Sri L.R. 243

யுனிக் ஜெம்ஸ்ரோன்ஸ் எதிர் *கருணாதாச* (1995) 2 Sri L.R. 357

விக்டர் ஐவன எதிர் *கௌரவ சரத் என். சில்வா மற்றும் இரண்டு ஏனையோர*, உ.நீ. விண்ணப்ப இல. 898/99, உ.நீ. அறிக்கைகள் 28.02.2001

விசுவலிங்கம் எதிர் *லியனகே* (1984) 2 Sri L.R 123

விதானகே டொன் சுனில் குணரத்ன எதிர் *கோமாகம பிரதேச சபை மற்றும் ஏனையோர்*, உ.நீ. விண்ணப்ப இல. 210/97 உ.நீ. அறிக்கைகள் 03.04.1998

ஜயசேகர எதிர் *கௌரவ சரத் என். சில்வா மற்றும் ஏனையோர்*, உ.நீ. விண்ணப்ப இல. 902/99, உ.நீ. அறிக்கைகள் 28.02.2001

விமல் பெர்னாண்டோ எதிர் *இலங்கை ஒலிபரப்பு அதிகாரசபை* (1996) 1 Sri L.R. 157

உசாத்துணைகள்

2001 Country Reports on Human Rights Practices, U.S. Department of State, Sri lanka.

Amarathunga, K., "Phosphate Mining at Eppawala: Some Salient Features of the Judgement", in *Moot Point, Legal Review 2000*, Volume 4 (Center for Policy Alternatives, Colombo, December 2000).

Amerasinghe, A.R.B., in "Our Fundamental Rights of Personal Security and Physical Liberty".

Amerasinghe, A.R.B., in "Relief and Remedies for the Infringement of the Rights of Personal Security and Physical Liberty in Sri Lanka", Developing Human Rights Jurisprudence, Interrights, Vol. 8.

Amnesty International News Report 11.10.2001.

Atapattu, Sumudu, "Judicial Protection of human Rights", in *Sri Lanka: State of Human Rights 2000.*

Barnett, H., *Constitutional and Administrative Law*, 1995.

Beijing Statement of Principles of the Independence of the Judiciary in the LAWASIA Region.

C.M.E.V. 2001 General Elections Reports.

C.M.E.V. Press Release of 25th November 2001.

C.M.E.V. Press Release 3rd December 2001.

Central Bank of Sri Lanka Annual Report 2001, Central Bank Printing Press, Colombo, Sri Lanka, 2002.

Columbia Journalism Review, July/August 1998.

Daily Mirror, 24th April 2001.

Daily Mirror, 7th May 2001.

Daily News, 21th February 2002.

Dattatreya, C.S., *The Proposal for a Constitutional Council, The Draft Constitution of Sri Lanka*, Panditaratne, D., And Ratnam, P., (eds), (The Law & Society Trust, Colombo, 1998).

De. Silva, S.R., "Investing in Sustainable Development; Judgements of the Supreme Court of Sri Lanka and International Court of Justice", in *Moot Point, Legal Review 1999*, Volume 3 (Centre for Policy Alternatives, Colombo, December, 1999).

Declaration of the United Nations Conference (Stockholm, 16th June, 1972.)

Final Report of the European Unions Observation Mission to Sri Lanka, December, 5th 2001 Parliamentary Elections.

Ginther, K., Denters, E and de Wart, P.J.I.M., (eds.), *Sustainable Development and Good Governance* (Martinnus Nijhoff Pulishers, The Netherlands: 1995)

Gomez, Mario, *Emerging Trends in Public Law*, (1998).

Hansard Vol. 135, No. 14, Column 2348.

Hayley, F.A., *A Treatise on the Laws and Customs of the Sinhalese* (1923).

Jayawardene, Kishali P., "Freedom of Expression and Media Freedom", in *Sri Lanka: State of Human Rights 2001,* (Law & Society Trust, Colombo, 2001)

Jinadasa, J., *Social Impact of Power Crisis.*

Judges Journal of June 1991.

Kodikara, C., "Quotas for Women", *Voice of Women*, April 2002.

Nadarajah S., *Evolution of Administrative Reforms.*
Parliamentary Debates (Hansard) Vol. 121, No. 3, 23 rd November 1998.

Presidential election 1999, Peoples Choice? A Report on the Presidential Election of Sri Lanka, (Law & Society Trust, Colombo, 1999)

Ranatunga, D.C., *The Twelve Parliaments of Sri Lanka,* Colombo, Sarasavi Publishers, 2002.

Report of the Select Committee on the abuse of Public Resources., Institute of Human Rights, December 2001.

Report of the Select Committe, Parliamentary Series No. 71 of 1984.

Report of the United Nations Committee for Development Planning, *Poverty Alleviation and Sustainable Development: Goals in Conflict?* (1992).

Samuel, Kumudini, "Right to Franchise: The Parliamentary Election of October", in *Sri Lanka: the State of Human Rights 2001* (Law & Society Trust, Colombo, 2001).

Satkunanathan, A., "State Interference with Public Institutions: A Case Study of Bribery Commission", in *Sri Lanka: State of Human Rights 2000*, (Law & Society Trust, Colombo, 2000).

Somasunderam M., *The Third Wave – Governance and Public Administration in Srilanka*, (1997), ICES Publication.

Sri Lanka: State of Economy 2001, Institute of Policy Studies.

Sri Lanka: State of Human Rights Reports, Integrity of the Person.

Sri Lanka: Failing to Protect the Rule of Law and the Independence of the Judiciary, Report of the International Bar Association, November 2001.

Standing Orders of Parliament of the Democratic Socialist Republic of Sri Lanka.

Sunday Leader, 9th April 2000.

Sunday Leader, 13th may 2001.

Sunday Leader, 10th June 2001.

Sunday Times, 6th April 1997.

Sunday Times, 8th July 2001.

Sunday Times, 3th February 2002.

Sunday Times, 17th February 2002.

Sunday Times, 24th February 2002.

Sunday Times, 24th June 2002.

The Island, 2nd July 2001.

The Island, 5th September 2001.

The Island, 6th September 2001.

The Island, 21st September 2001.

The Island, 11th October 2001.

Udagama, D., "Fundamental Rights Jurisprudence" in *Sri Lanka: State of Human Rights 2001*, (Law & Society Trust, Colombo, 2001)

UNICEF Press Release 24.01.2001 Ststement Attributable to Carol Bellamy.

Weekend Express, 6th May 2001.

Wickremaratne, J., *Fundamental Rights in Sri Lanka,* (Navarang, Booksellers and Publishers, India. 1998).

இலங்கை:
மனித உரிமைகள் நிலை 2002

இவ்வறிக்கை 2001 இல் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் தொடர்பான நிகழ்வுகளை விபரமாக அடக்கியுள்ள ஆங்கில மூல அறிக்கையின் தமிழாக்கமாக உள்ளது.

இவ்வறிக்கையில் அரசியலமைப்புக்கான 17 ஆவது திருத்தம், 2001 இல் நீதித்துறை, சமூக, பொருளாதார உரிமைகள் மீது மின்சக்தி நெருக்கடியின் தாக்கமும் நிலைபேண் அபிவிருத்தியும், மனித உரிமைகளுக்கான நீதிமுறைப் பாதுகாப்பு, இலங்கையில் பொதுத்துறைச் சேவை ஆகிய விடயங்கள் ஆராயப்படுகின்றன. இதனால் இவ்வறிக்கை இலங்கையிலுள்ள மனித உரிமைகள் இயக்கத்தின் ஒரு முக்கிய மைல் கல்லாக விளங்குகின்றது.

சட்டத்துக்கும் சமூகத்துக்குமான அறநிலையம்
3, கின்சி ரெறஸ், கொழும்பு 8
இலங்கை

Tel: 691228, 684845; Tele fax: 686843
E-mail: lst @ eureka.lk
Website: http:// www.Lawardsocietvtrust.org

ISBN 955-9062-82-4

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO - 13. TEL.: 330195.